

# வெண்கடல்

ஜெயமோகன்

| | | |
|---|---|---|
| 1 | பிழை | 1 |
| 2 | கைதிகள் | 18 |
| 3 | அம்மையப்பம் | 51 |
| 4 | கிடா | 69 |
| 5 | தீபம் | 85 |
| 6 | வெறும்முள் | 90 |
| 7 | குருதி | 111 |
| 8 | நிலம் | 125 |
| 9 | நீரும் நெருப்பும் | 143 |
| 10 | வெண்கடல் | 159 |
| 11 | விருது | 175 |

# (1) பிழை

”சகோதரா, சின்ன விஷயங்களில் என்னதான் கிடைத்தாலும் பெரிய விஷயங்களுக்குப் பக்கத்திலே இருந்துகொண்டிரு. அதுதான் வாழ்க்கை” லட்சுமண் ரானே சொன்னார். காசியில் அவரும்தான் தாடி மீசையுடன் பிச்சை எடுத்து கஞ்சா இழுத்து படிக்கட்டில் தூங்கி வாழ்ந்தார். ஆனால் அவர் சுவாமி மகராஜ் கிடையாது. ஏனென்றால் அவருக்குக் காவி இல்லை. பிடிவாதமாக அதைக் கட்ட மறுத்துவிட்டார். கும்பிடுகள் விழுவதுடன் சில்லறையும் அதிகம் கிடைக்கும். அவ்வப்போது சகசாமியார்களிடமே கையேந்தவேண்டியிருக்காது. ஆனால் லட்சுமண் ரானே தன்னை எப்போதும் ” என் பெயர் லட்சுமன் ரானே ’ என்றுதான் அறிமுகம் செய்வார்.

சட்டென்று அவர் பொன்மொழியைச் சொன்னது எனக்கு ஆச்சரியமாக இருக்கவில்லை. காசியில் அலைபவர்கள் எல்லாருமே வாழ்க்கையில் இருக்கும் கண்காணாக் கோடு ஒன்றுக்கு இப்பால் வந்துவிட்டவர்கள். வாழ்க்கை அவர்களுக்கு வெகுவாகத் தள்ளி எங்கோ இருந்தது. மண்ணில் புதைந்தோ வானில் பறந்து விலகியோ. ஆகவே அதை ரத்தினச்சுருக்கமாக தொகுத்துச் சொல்ல பழகியிருப்பார்கள். கொஞ்சநாள் மண்ணைத்தின்போம் பிறகு மண் நம்மைத்தின்னும் என்ற புகழ்பெற்ற வரியாக தன் அறுபது வயது வாழ்க்கையைச் சொல்லும் பாபா கோவிந்த தாஸ் பக்கத்தில் கஞ்சாபோதையில் எச்சில் கடைவாயில் வழிந்து கல்படியில் சொட்ட தூங்கிக்கொண்டிருந்தார். கட்ச் பகுதியின் பூகம்பத்தில் எட்டுபிள்ளைகள் மனைவி வீடு மாடு கன்று எல்லாவற்றையும் இழந்தவர் என்று சொல்வார்கள்.

நான் லட்சுமண் ரானேவை இமை அசையாமல் பார்த்தேன். ‘அதாவது சகோதரா, சின்ன விஷயங்களில்தான் நமக்கு உடனடி வெற்றிகள் கிடைக்கும். சின்ன விஷயங்களில் உள்ள சின்னச்சின்ன சந்தோஷங்கள் நமக்கு மட்டுமே உரியவை. அவைதான் நமக்கு அன்றாடம் ருசிக்கத்தக்கவையாக இருக்கும். பெரிய விஷயங்கள் மலைகளைப்போல பக்கத்தில் இருந்தாலும் நாம் நெருங்கநெருங்க விலகிவிலகிச் செல்லக்கூடியவை. அவற்றை நெருங்கியதும் நாம் மிகமிகச் சிறியவர்களாக

ஆகி மறைந்துவிடுவோம். பெரியவிஷயங்களில் உள்ள துன்பமும் ஏமாற்றமும் பிரம்மாண்டமானவை. அவற்றில் உள்ள வெற்றியும் மகிழ்ச்சியும் பல்லாயிரம்பேரால் பகிர்ந்துகொள்ளப்படும். நம்முடைய விரல்நுனியில் கொஞ்சம் ஈரம்மட்டுமே எஞ்சும், நக்குவதற்கு…"

லட்சுமண் ரானேயின் கண்கள் கங்கைக் கரையில் உள்ள சிறிய நத்தைகள் போன்றவை. அவற்றில் மெல்லிய ஈரம் இருந்துகொண்டிருக்கும், கஞ்சா இழுத்தால் எல்லாக் கண்களிலுமே கொஞ்சம் சோகம் காணப்படும்.

"…ஆனாலும் பெரியவிஷயங்களை நோக்கிச் செல் என்றே நான் சொல்வேன். பெரியவிஷயங்களைச் செய். அல்லது பெரிய விஷயங்களுக்குப் பக்கத்திலே இரு. ஏனென்றால் அவைதான் சரித்திரம்…சரித்திரத்திலே பங்கெடுக்காத வாழ்க்கைக்கு அர்த்தமே இல்லை. அப்படி வாழ்ந்து சாகிறவர்கள்தான் கோடிக்கணக்கானவர்கள். அவர்களெல்லாம் இதோ இந்த கங்கையில் வெடித்து அழியும் குமிழிகள்… நாமெல்லாம் போய் மறைவோம். சரித்திரம் மட்டும் எஞ்சும். ஆகவே.."

மீண்டும் பழைய வரி. ஆனால் கடைசியாக ஒரு புதுவரி சேர்த்துக்கொண்டார். "…சரித்திரம் உருவாகும் இடத்திலே ஒரு ஈ பறந்தால் கூட அதுவும் சரித்திரத்தின் அம்சம்தான்….' நான் அவரிடமிருந்த கஞ்சாவை வாங்கி மெல்லிதாக ஓர் இழுப்பு இழுத்தேன். உள்ளே நிறைக்க பயம்.அப்படியே ஊதி வெளியேவிட்டேன்.

லட்சுமண் ரானே சிரித்தார் " முட்டாள்…ஒரு மிடறு கஞ்சாவை வீணாக்கி விட்டாய். கஞ்சா நெஞ்சுக்குள் போய் ஆன்மாவைத் தொடவேண்டும்…ஆன்மா என்றால் ஒரு பெரிய தேனீக்கூடு. புகை பட்டதும் தேனீக்கள் கலைந்து பறக்க ஆரம்பிக்கும். பும்ம்ம்ம்…" கையைக் காட்டினார் "சுற்றிச்சுற்றிவந்து பறக்கும். ரீஈஈஈஈஈ சில தேனீக்கள் கொட்டும். சதை துடிதுடிக்க வலிக்கும். ஆனால் தேனீக்கள் விலகியபிறகுதான் தேன்கூடு தெரியும். அப்படியே இனிமை சொட்டி வழியும் தேன்…சப் சப் சப்" நாக்கால் கரிய உதடுகளை நக்கி ஒலியெழுப்பினார். "நீ கோழை. உனக்கு அங்கே கரையில் வாழவும் பிடிக்கவில்லை. கங்கையில் நீந்தவும் தைரியமில்லை. கரையோரச் சேற்றில் இறங்கி நிற்கிறாய். நீ–"

அவரை திசை திருப்பவேண்டும் என்று உடனே கணக்கிட்டேன். எனக்கு அறிவுரைகள் ஏராளமாக சொல்லப்பட்டுவிட்டன. தொன்னையில் இட்டிலி

விற்கும் சோட்டுப்பயல்கூட ” மலையாளிபாபா ஊருக்குப்போ,அதுதான் உனக்கு நல்லது” என்கிறான். நான் சிலும்பியைத் திரும்பிக்கொடுத்தபடி ” …அப்படியென்றால் நீங்கள் சரித்திரத்தின் மேலே ஈயாகப் பறந்தீர்களா? என்றேன்.

” அஹ்ஹஹ்ஹா! சரியாகச் சொன்னாய். சரித்திரத்தின் மீது ஈ….அருமையான கற்பனை. அருமை…” என ஆழ இழுத்தார்.

“நீங்கள் சொன்னதுதான் என்றேன்.

“அப்படியா? என்று தலையை ஆட்டினார். ” ஆமாம், சரித்திரத்தில் ஈ. அதனால் ஒன்றும் செய்வதற்கில்லை. ஆகவே எல்லாவற்றிலும் பறந்து பறந்து உட்காரும். ஆயிரம் கண்களால் உருட்டி உருட்டிப் பார்க்கும். எவ்வளவு துரத்தினாலும் போகாது. அடாடா, நீ கவிஞனப்பா…எவ்வளவு அருமையாகச் சொல்லிவிட்டாய்”

நான் புன்னகைசெய்தேன்

“காந்தி ஒரே ஒரு சினிமாதான் பார்த்திருக்கிறார், தெரியுமா?” என்றார் லட்சுமண் ரானே.

” அப்படியா? என்றேன்

”ஆமாம்.1943இல் வெளிவந்த படம். ஸ்ரீராமராஜ்யம். அற்புதமான படம்…”

“ஓகோ என்றேன்

“1944 ல் காந்தி மும்பையில் ஜுஹு கடற்கரையில் தங்கியிருந்தார். சரியாகச் சொல்லப்போனால் ஜூன் இரண்டாம் தேதி. படத்தின் தயாரிப்பாளரும் இயக்குநருமான விஜய் பட் காந்தியைப் படம் பார்க்க வைப்பதற்காக ஒருமாதம் முயற்சிசெய்தார். கடைசியாக பியாரிலால் வழியாக காந்தியிடம் தகவலைக் கொண்டுபோனார். காந்தி தனக்கு சினிமா பார்க்குமளவுக்குப் பொறுமை இல்லை என்று தெரிவித்தார். விஜய்பட் ஒரு உத்தி செய்தார். படத்தின் பாடல்களை ஒரு உள்ளூர்ப் பாடகியைக்கொண்டு காந்தியின் முன் பாடவைத்தார். காந்தி பாடல்களைக்கேட்டுக் கைகளைக்கூப்பியபடி கண்ணீர்மல்க அமர்ந்திருந்தார். மறுநாளே படம்பார்க்க வருவதாக ஒத்துக்கொண்டார்…அவருக்காக சிறப்புக்காட்சி திரையிடப்பட்டது. அவருடன் பட்டேலும் படம் பார்த்தார். காந்தி விஜய் பட்டை அழைத்து நல்ல

படம் என்று சுருக்கமாகச் சொல்லி அவரே நூற்ற ஒரு கதர்நூல்சுருளைப் பரிசாக அளித்தார். அது நீண்டநாள் விஜய்பட் குடும்பத்தில் இருந்தது…இப்போதுகூட அவரது வாரிசுகளிடம் இருக்கலாம்

சிலும்பியை ஆழ இழுத்துப் புகைவிட்டபடி லட்சுமண் ரானே சொன்னார் "சகோதரா, அந்தப்படத்தில் நான் பணியாற்றினேன். காந்தி படம்பார்க்கும்போது விஜய் பட்டின் தோல்பையை வைத்துக்கொண்டு நான் சுவரோரமாக நின்றேன். திரையின் ஒளியில் தெரிந்த காந்தியின் முகத்தில் உணர்ச்சிகள் மாறிக்கொண்டே இருப்பதை இரண்டரை மணிநேரம் கண்களை அசைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தேன்…'

நான் பிரமிப்புடன் அவரையே பார்த்தேன்

"எல்லா மனிதர்களுக்கும் வாழ்க்கையில் ஒருமுறை கடவுள் காட்சியளிப்பார். அது எந்தவடிவில் எப்படி என்று எவராலும் சொல்லமுடியாது. ஒரு தருணம் அது. அதை அடையாளம் காண்பதற்குரிய விவேகம் நமக்கிருந்தால் நாம் கடவுளைக் காண்போம். இல்லாவிட்டால் அது அப்படியே கங்கையில் அலைபோல வந்த தடமில்லாமல் சென்றுவிடும்… லட்சுமண் ரானே சொன்னார் " எனக்குக் கடவுள் காட்சியளித்த தருணம் அது. அதை மேலும் முப்பது வருடம் கழித்துத்தான் புரிந்துகொண்டேன்'

" காந்தி அழுதாரா? 'என்றேன்

" இல்லை. ஆனால் காந்தி ஏன் மகாத்மாவாக ஆனார் என்று அப்போது தெரிந்தது. அவருக்கு எழுபது வயது தாண்டியிருக்கும். சட்டைபோடாத ஒட்டி உலர்ந்த கரிய உடம்பு. முன்வாயில் பல் இல்லாததனால் உதடு விசித்திரமாக நெளியும். எந்த ஒரு குஜராத்திக் கிழட்டு விவசாயியையும்போலத்தான் அவரும் இருந்தார். ஆனால் அவரது கண்கள். அவை எழுபது வருடம் சரித்திரத்தின் சுழிமையத்தில் வாழ்ந்த மனிதனின் கண்கள் இல்லை. எத்தனையோ உணர்ச்சிகளை, நம்பிக்கைகளை, ஏமாற்றங்களை, பிரியங்களை, துரோகங்களை ,துதிகளை ,வசைகளைக் கண்ட ஒருவரின் கண்கள் அல்ல அவை. அப்போதுதான் குஜராத்தின் உள்கிராமம் ஒன்றில் இருந்து கூட்டிவரப்பட்டு திரைமுன் அமரச்செய்யப்பட்ட ஏழுவயதுப்பையனின் கண்கள்…முதலில் அப்படி ஒரு ஆச்சரியம், பிரமிப்பு. அதன்பின் கதைக்குள் போய்விட்டார். கண்கள் ஈரமாக மின்னிக்கொண்டே

இருந்தன. ராமன் திரையில் வரும்போது இரு கைகளும் மார்பில் இணைந்து கும்பிட்டபடி இருந்தன…”

” பெரிய வாய்ப்புதான்” என்றேன்

“1934இல் எனக்கு அந்தப்படத்தில் பணியாற்ற வாய்ப்புகிடைத்தது. நான் உண்மையில் கிழக்குஅந்தேரியில் இருந்த விஜய்பட்டின் அலுவலகத்தைச் சுத்தம்செய்யும் வேலைக்காகத்தான் சேர்ந்தேன். அப்போது எனக்கு வயது பன்னிரண்டு.சாப்பாட்டுக்குப் பஞ்சமில்லை. அலுவலகத்திலேயே இரவு தங்குவேன்.மாதம்தோறும் ஊருக்குப் பணமும் அனுப்பமுடியும். அந்த சில நாணயங்களைக்கொண்டு பூனே அருகில் என் சொந்த கிராமமானான கொண்டேகாவ்னில் எட்டுபேர் பட்டினி இல்லாமல் வாழமுடிந்தது. நான் மிக உற்சாகமானவனாக வாழ்க்கையில் நீந்தித்திளைத்த நாட்கள். கிழக்குஅந்தேரியில் விஜய்பட் பிரகாஷ் ஸ்டுடியோவைக் கட்டிக்கொண்டிருந்தார். அவர் ஒரு குஜராத்தி பிராமணர். குஜராத்தில் பலிதானா என்று ஒரு பெரிய சமணத்தலம் உண்டு. அங்கே பிறந்தவர்’

” ஆமாம்…மலைமேல் ஆயிரம் கோயில் இருக்கும் என்பார்களே

” அதே இடம்தான்… என்றார் லட்சுமண் ரானே “விஜய் பட் ஒரு ரயில்வே ஊழியரின் மகன். இங்கே மும்பையில்தான் படித்தார். படிக்கும்காலகட்டத்திலேயே நாடகங்கள் எழுத ஆரம்பித்தார். அதில் பணம் சம்பாதித்து அதைக்கொண்டு மும்பையில் ஒரு சிறிய ஸ்டுடியோவை அமைத்து சிறிய ஊமைப்படங்களை எடுத்தார். அன்றெல்லாம் எல்லாப் படங்களுமே லாபம்தான். அவர் அதுவரை ராயல் தியேட்டர்ஸ் என்ற நிறுவனத்தின் பங்குதாரராக இருந்தார். அதில் இருந்து விலகி பிரகாஷ் ஸ்டுடியோஸைக் கட்டினார். அந்தக்காலத்தில் மும்பையில் அது ஒரு பெரிய ஸ்டுடியோ. எட்டு ஃப்ளோர். ரெக்கார்டிங் ஸ்டுடியோ, லேப் எல்லாம் உண்டு. அலுவலகங்கள்,தொழிலாளர் குடியிருப்புகள் எல்லாமாகச் சேர்ந்து அது ஒரு குட்டிநகரம் போல… பிரகாஷ் ஸ்டுடியோவில் பம்பாய் கி மோஹினி என்று ஒரு படம் எடுத்தார்கள். விஜய்பட்டே அதை இயக்கினார். பன்னா ராணிதான் பம்பாய்மோஹினியாக நடித்தார். நான் விஜய்பட்டின் வீட்டில் இருந்து அவருக்குத் தேவையான சிகரெட், ஃபைல்கள் எல்லாவற்றுடன் தினமும் காரில் ஸ்டுடியோவுக்குப் போவேன். அங்கே ஒரு பெரிய சந்தையோ திருவிழாவோ நடந்துகொண்டிருப்பதுபோல தோன்றும். அந்தவயதில் நான் ஒரு விஷயத்தைப் புரிந்துகொண்டேன். சினிமா என்பது ஒரு முடிவே

இல்லாத திருவிழா… எப்படி அதிலிருந்து விடுபடமுடியும்…? கொஞ்சம் கொஞ்சமாக நானும் சினிமாவுக்குள் விழுந்தேன்…’

நான் ஆர்வத்துடன் ” சினிமாவில் என்னவாக இருந்தீர்கள்?’ என்றேன்

” சொன்னேனே…ஈயாக என்றார் லட்சுமண் ரானே அவரது காவிநிறப்பற்களைக் காட்டிச் சிரித்தபடி. ” அன்றெல்லாம் சினிமாவை எளிதாகக் கற்றுக்கொள்ளமுடியாது. பிரகாஷ் ஸ்டுடியோவில் கதை இலாகா இருந்தது. அதில் மகாராஷ்டிரத்திலும் குஜராத்திலும் உள்ள பெரிய பெரிய எழுத்தாளர்கள் எல்லாம் வந்து அமர்ந்திருப்பார்கள். ஒளிப்பதிவு பகுதி ஈரானிகளின் உலகம். எனக்கு பிடித்திருந்தது எடிட்டிங்தான். தினமும் காலையில் விஜய் பட் வந்து அன்று ப்ரிண்ட் ஆகிவந்த நெகட்டிவ்களைப் பார்ப்பார். நான் ஆர்வமாக இருப்பதைக் கண்டு என்னிடம் நெகட்டிவ் எண்களைக் குறித்துவைக்கச் சொன்னார். அன்றுமுதல் நான் எடிட்டிங்கில் வேலைசெய்ய ஆரம்பித்தேன்….நாற்பது வருடம்’

” சினிமா எடிட்டிங் செய்திருக்கிறீர்களா?

” ஆமாம், ஆனால் சொல்லிக்கொள்ளும்படி எதையும் செய்யவில்லை. சரி, அது எதற்கு? நான் என்ன சொல்லவந்தேன்? அப்போதுதான் பிரகாஷ் ஸ்டுடியோவில் ராமராஜ்யா எடுக்க ஆரம்பித்தார்கள். பிரகாஷ் ஸ்டுடியோவின் பூக்காலம் என்றால் அதுதான். ராமராஜா…அது என்ன ஒரு படம்….சினிமாவின் பொற்காலமே அதுதான்’

” அப்போதுதானே சினிமாவே ஆரம்பமாகியது?’ என்றேன்

” ஆமாம்… ஆனால் எந்த ஒரு கலைக்கும் அது ஆரம்பிக்கும் காலம்தான் பொற்காலம். மனிதனின் தேடல் அந்தக் கலையில் உள்ள புதியபுதிய வழிகளை எல்லாம் ஆவேசத்துடன் கண்டுபிடிக்கிறது. அந்த ஒவ்வொரு கண்டுபிடிப்பும் பெரிய பரவசம். அதன்பின் அந்த கலைக்கு ஒரு பொதுப்போக்கு உருவாகிவிடுகிறது. அந்தபோக்கில் ஏதாவது கொஞ்சம் புதியதாகச் செய்யலாம். அல்லது அந்தப்போக்குக்கு நேர்எதிராக எதையாவது சோதனைசெய்து பார்க்கலாம். அந்த ஆரம்பகட்டப் பாய்ச்சல் சாத்தியமே இல்லை’

நான் விவாதிக்க விரும்பாமல் தலையசைத்தேன்

” ராமராஜ்யாவில் பிரேம் அதிப் ராமராக நடித்தார். அவர் அதற்கு முன்னால் குஜராத்தி மேடைகளில் ராமனாக நடித்துப் புகழ்பெற்றவர். ராமன் என்றதும் நம் மனதில் வரக்கூடிய கம்பீரமும் அமைதியும் சோகமும் கொண்ட ஒரு முகம் அவருடையது. அவர் அதற்கு முன்னாலேயே இரண்டுபடங்களில் ராமனாக நடித்திருந்தார். மக்கள் அவரை ராமனாகவே நினைத்தார்கள். அவரை நேரில் பார்த்தார் வயதானவர்கள் கூட அப்படியே காலில் விழுந்து வணங்குவார்கள். அவர் படப்பிடிப்பரங்குக்கு வரும்போது ஏராளமானவர்கள் வரிசையாக நின்று காலில் விழுவதை நானே கண்டிருக்கிறேன். அவர் கூப்பிய கைகளுடன் கண்களை மூடிக்கொண்டு ராம்சரண் ராம்சரண் என்று சொல்லிக்கொண்டே போய்விடுவார். அவர்களின் வணக்கம் தனக்கு வரக்கூடாது ராமனுக்குச் செல்லவேண்டும் என்பதற்காக. அப்படிப்பட்ட மனிதர் அவர்…’

லட்சுமண் ரானே தொடர்ந்தா ‘சீதையாக நடித்தவர் சோபனா சமர்த். கேள்விப்பட்டிருக்க மாட்டாய். பெரிய குடும்பத்தைச்சேர்ந்த பெண். மகாராணி மாதிரி இருப்பார் பார்ப்பதற்கு. அவரது பெண்களை உனக்குத் தெரிந்திருக்கும். பின்னாளில் பெரிய நடிகைகள், நூதனும் தனுஜாவும்’

“தெரியாது’ என்றேன்

லட்சுமண் ரானே ‘ ஓ ‘ என்றார் சிலும்பியைத் தட்டி சாம்பலை உதிர்த்துவிட்டு அதன் கருகிய உட்பக்கத்தை ஒரு சிறு கம்பியால் குத்தி சுத்தம்செய்ய ஆரம்பித்தார்

“படம் எவ்வளவுநாளில் எடுத்தார்கள்’ என்றேன்

“அன்றெல்லாம் படங்களை வருடக்கணக்கில் எடுப்பார்கள். ராம்ராஜ்யா எடுத்துமுடிக்க ஒன்றரை வருடம் ஆகியது. அப்போதுள்ள ஃபிலிமுக்கு நிறைய வெளிச்சம் தேவை. ஸ்டுடியோக்களில் மேல் கூரை இருக்காது. மதியவெயில் நேரடியாக உள்ளே அடிக்கும்படி கட்டியிருப்பார்கள். அந்த வெயிலில் நடிகர்களை வைத்து எடுப்பார்கள். நடிகர்களின் முகம் இருட்டாகத் தெரியக்கூடாது என்பதற்காக பெரிய ரிஃப்ளெக்டர்களால் வெயிலை அடிப்பார்கள். அதற்குமேல் பேபிலைட்களைக்கொண்டு வெளிச்சம் போடுவதும் உண்டு…வெயில் எப்போது மங்கும் என்று சொல்லமுடியாது. பிரகாஷ் ஸ்டுடியோவில்தான் முழுக்கமுழுக்க லைட் போட்டுப் படங்களை எடுத்தோம். ஒவ்வொரு லைட்டும் ஒரு ஆள்

உயரத்துக்கு இருக்கும்... உடம்புக்கு மினிலைட். முகத்துக்கு பேபிலைட் .இரண்டையும் சரியாக வாங்கி நடிக்கவேண்டும். முகத்தில்வெளிச்சமிருந்தால் உடம்பு இருட்டாக இருக்கும். இவை இரண்டும் சரியாக இருந்தால் நிழல் பெரிதாக பின்னால் நிற்கும்... அல்லது கையின் நிழல் மார்பில் விழும்...ஒருநாளில் நாலைந்து ஷாட் கூட தேறாது. வாராவாரம் கழுவி பிரிண்ட் போட்டுப் பார்ப்போம்.சிலசமயம் ஒரு வாரம் முழுக்க எடுத்த காட்சிகளில் ஒரு ஃப்ரேம்கூடப் பயன்படாது. திருப்பித்திருப்பி எடுப்போம்...” லட்சுமண் ரானே சொன்னார் ”சொன்னேனே, அன்றெல்லாம் சினிமா என்றால் ஒரு பெரிய கொண்டாட்டம்”

”ராமராஜ்யா ஹிட்டா? ”என்றேன்.

“ஹிட்டா? நல்ல கதை. அந்த படத்தின் லாபத்தைக் கணக்குப்போட்டுப் பார்த்தால் ஷோலே எல்லாம் ஒன்றுமே இல்லை. இந்தியாவே வெறிபிடித்து அந்தப்படத்தைப் பார்த்தது. பணம் கொட்டிக்கொண்டே இருந்தது. பிரகாஷ் ஸ்டுடியோ கட்டிய எல்லாக் கடன்களையும் விஜய் பட் அடைத்தார். வீடுகள் வாங்கினார். சுதந்திரப்போராட்டத்துக்கு நன்கொடைகளை அள்ளிக்கொடுத்தார்....அதன்பிறகும் பணம் மிச்சம். என்னசெய்வதென்றே தெரியாமல் திணறினார். இப்போதுகூட வட இந்தியாவில் ஏதாவது உள்கிராமத்தில் அந்த ராமராஜ்யா ஓடிக்கொண்டுதான் இருக்கும். அப்படி ஒரு படம்...’

மீண்டும் கஞ்சாவைப் பற்றவைத்தார் லட்சுமண் ரானே . ஆழ இழுத்தபடி ‘ராமராஜ்யா அந்த அளவுக்கு வெற்றிபெற்றதற்குக் காரணம் அதன் பாட்டுகள்தான். சங்கர்ராவ் வியாஸ் இசை. கேள்விப்பட்டிருக்க மாட்டாய்...அவர் இசையமைப்பாளர் நாராயண்ராவ் வியாஸின் அண்ணா.’ என் கண்களை கவனித்தபின் ‘....இருவரையுமே தெரியாதா? சரிதான்.குவாலியர் கரானாவைச் சேர்ந்தவர்கள். விஷ்ணு திகம்பர் பாலுஸ்கரின் மாணவர்கள். அவர் யாரென்று கேட்டால் நான் உன்னை உதைப்பேன்’

” இல்லை”என்றேன்

” நீ என்ன கண்டாய்...காந்திக்குப் பிரியமான ரகுபதி ராகவ ராஜாராம் பாட்டுக்கு மெட்டு போட்டவர் அவர்தான்... சங்கர்ராவ் வியாஸ் அன்றைக்கு பெரிய பாடகர்... ராமராஜ்யாவுக்குப்பின்னர் அவர்தான் இந்தியாவின் முதல்

நட்சத்திர இசையமைப்பாளர்...என்ன பாடல்கள்...ஆகா...இந்தியாவே அந்தப்பாடல்களில் மயங்கிக் கிடந்தது. இருபது வருடம்...ஆமாம்..இருபது வருடம் அந்தப்படத்தின் பிளேட்டுகள் விற்றுக்கொண்டே இருந்தன. அதில் ஒரு பாட்டு. பீனா மதுர் மதுர் கச்போல்..” லட்சுமண் ரானே அதைப்பாடினார்

“இதே மெட்டில் மலையாளத்தில்கூட ஒரு பாட்டு இருக்கிறது. வீணே பாடுக பிரியதரமாய்” என்றேன்

“எல்லா மொழிகளிலும் இந்த மெட்டைப் போட்டிருக்கிறார்கள்...’ என்றார் லட்சுமண் ரானே “பீம்பிளாஸி ராகம். உங்களூரில் ஆபேரி என்பீர்கள். உயிரை உருக்கும் ராகம் அது. இந்தப்பாட்டு பிரிவாற்றாமையைப்பற்றிய பாட்டு. அப்படியே கொதிக்கும்... உருகிய ஈயம் வந்து இதயத்தில் விழுந்ததுபோலிருக்கும்” அந்த மெட்டை சற்றுநேரம் முனகியபடி தனக்குள் ஆழ்ந்து லட்சுமண் ரானே கஞ்சாவை இழுத்தார். பின்பு சிவந்த கண்களுடன் என்னைப்பார்த்து “...அப்படி ஒரு பாட்டு. அதைப்பாடியவர் சரஸ்வதி ரானே..’

“உங்களுக்குச் சொந்தமா?’ என்றேன்

”செருப்பாலடிப்பேன்...சரஸ்வதி ரானேயைக்கூட கேள்விப்பட்டிருக்காவிட்டால் நீ என்ன மனிதன்?’

“ எனக்கு இசை தெரியாது”

லட்சுமண் ரானே சற்று குளிர்ந்தார் “ சரஸ்வதி ரானே அன்றைக்கு மிகப்பெரிய பாடகி. ....இந்துஸ்தானி இசையின் சக்கரவர்த்தி உஸ்தாத் அப்துல் கரீம்கானின் மகள். பிறக்கும்போது சஹினா என்று பெயர். அவரது அம்மா உஸ்தாதைப் பிரிந்தபோது குழந்தைகளுடன் இந்துமதத்துக்குத் திரும்பி வந்தார். சாஹினாவை சரஸ்வதியாக மாற்றினார். ஏழுவயதிலேயே சரஸ்வதி பாட ஆரம்பித்துவிட்டார். அன்று ஒரு கச்சேரிக்கு இருநூறு ரூபாய் வாங்கினார். இருநூறு ரூபாயில் அன்று பம்பாயில் ஒரு வீடு வாங்கலாம்...எங்கள் படத்துக்கு அவர் பாடவரும்போது ஏற்கனவே பல பாட்டுகள் பிரபலமாக ஆகி பிளேட்டுகள் பரபரப்பாக விற்றுக்கொண்டிருந்தன”

“அந்தப் பாட்டு உருவான ஒவ்வொருநாளும் நான் கூடவே இருந்தேன்” என்று லட்சுமண் ரானே முகம் மலரச் சொன்னார். “ஒரு கருப்புநிறமான கார். ஒரு பெரிய காராமணிப் பயறு உருண்டு வருவதுபோல அது வந்தது. ஒரு ஆழமான தடாகம் போல நிழல்கள் ஆட வந்து எங்கள் அலுவலகம் முன்னால்

நின்றது. அலுவலகம் முழுக்க ஒரே பரபரப்பு. ஒரு மெலிந்த பெண் இறங்கி உள்ளே போனார். பொற்சரிகை போட்ட வெள்ளைநிறமான பட்டுச்சேலை அணிந்திருந்தார். கழுத்திலும் காதிலும் வைரங்கள் மின்னின. நீளமான முகம் பளிங்கில் செதுக்கப்பட்டது போலிருந்தது. கூர்மையான நீளமூக்கு. சரஸ்வதிக்கு அப்போது பதினெட்டு வயது. அவர் நடிக்கப்போகிறார் என்றுதான் நான் நினைத்தேன். இல்லை, பாட்டுதான் பாடப்போகிறார் என்று சொன்னார்கள். நான் அதுவரை அவரது பாட்டைக் கேட்டதே இல்லை. அன்று ஒப்பந்தம் கையெழுத்தாகி அவர் கிளம்பிப்போனார்...அவரது மென்மையான கால்கள் மிதித்துச் சென்ற தரையில் கால்வைக்கவே நாங்களெல்லாம் கூசினோம். அலுவகம் முழுக்க இரண்டுநாட்கள் கூரையில் இருந்து தேன்சொட்டுவதுபோலிருந்தது. வழுக்கி வழுக்கி நாங்களெல்லாம் நடமாடினோம்"

"பாட்டு உருவான அறையில் நான் இருந்தேன்...எடுபிடிப்பையனாக" என்றார் லட்சுமண் ரானே "... ரெக்கார்டிங் ஸ்டுடியோ அருகே உள்ள பெரிய அறை. அதற்குள் மெத்தை விரிக்கப்பட்டு திண்டுகள் போடப்பட்டிருந்தன. ஏற்கனவே விஜய்பட் வந்து அமர்ந்திருந்தார். நான் அருகே அவரது பையுடன் நின்றேன். வியாஸ் வந்தார். அவருடைய தம்பி ஆர்மோனியத்துடன் பின்னால் வந்தார். பாடலாசிரியர் ரமேஷ் குப்தா இன்னொரு அறையில் இருந்தார். பாட்டை நாலைந்து பிரதிகள் எடுத்திருந்தார்கள். அதை வியாஸுக்கும் அவரது தம்பிக்கும் விஜய்பட்டுக்கும் கொடுத்தார். அவர்கள் பாட்டை முணுமுணுவென்று வாசித்தார்கள். அறையில் அவ்வப்போது வந்த கனைப்பு மூச்சு தவிர வேறுசத்தமே இல்லை. வியாஸ் ஆர்மோனியத்தில் கைவைத்தார். கண்களை மூடிக்கொண்டு சற்றுநேரம் அமர்ந்திருந்தார். அவரது இமை அசைவதை மட்டும் நான் பார்த்துக்கொண்டிருந்தேன். பிறகு கண்களைத் திறந்து பையனிடம் பீடா கேட்டார். பீடாவை மென்றபடி ஆர்மோனியத்தை வருடிக்கொண்டே இருந்தார். சட்டென்று ஆர்மோனியம் எதிர்காலத்தில் இந்தியாவே அரற்றப்போகும் மெட்டைப் பாடியது. தானா தனன தன தனனா...கேட்டதுமே என் மனம் மலர்ந்தது. பீம்பளாஸ் எனக்கு எப்போதுமே பிடித்த ராகம்"

"சரஸ்வதி ரானே வந்தபோது மெட்டு கிட்டத்தட்ட முழுமையாக இருந்தது. அவர் சொந்த வீணையுடன் வந்தார். உண்மையில் சரஸ்வதி வீணைக்கலைஞராகவேண்டும் என்றுதான் நினைத்திருந்தார். எப்படியோ

வாய்ப்பாட்டுக்கு வந்துவிட்டார். அவரது குரல் இனிமையானதே அல்ல. கனமான குரல். மயில் அகவுவதுபோன்ற குரல் அது. அதனால்தான் வீணையில் கவனம்செலுத்தினார். ஆனால் பாட ஆரம்பித்தபோது மக்கள் அந்தக் குரலுக்கு அடிமையானார்கள்...வீணையைக் கொஞ்சநாளில் மறக்கவேண்டியிருந்தது...ஏன் தெரியுமா? அவரது குரலில் அவரது ஆன்மா இருக்கும். அவர் எல்லாப் பாட்டுக்குள்ளும் தன்னுடைய உயிரையும் உணர்ச்சிகளையும் செலுத்திவிடுவார். அவர்பாடிய ஒரு பாட்டு வெறும்பாட்டாக இருக்காது. ஒரு வாழ்க்கைத்தருணமாக இருக்கும். அப்பட்டமான ஓர் உணர்ச்சியாக இருக்கும்... அதுதான் இசை. குரலிலும் வித்தையிலும் என்ன இருக்கிறது?'

"சரஸ்வதி வந்து அமர்ந்து வீணையை எடுத்து மடியில் வைத்துக்கொண்டார். வியாஸ் மெட்டை அவரே பாடிக்காட்டினார். வீணைக்கான நோட்டுகளை வாயாலேயே முனகினார். சரஸ்வதி கண்களை மூடி சற்றுநேரம் அமர்ந்திருந்தபின் பாட்டுவரிகளை மீண்டும் வாங்கி நாலைந்துமுறை வாசித்தார். அப்போதெல்லாம் அவரது கட்டுப்பாட்டில் இல்லாமல் வீணைமேல் கைவிரல்கள் ஓடிக்கொண்டே இருந்தன. உண்மையில் வீணைதான் மெட்டை முனகுகிறதா இல்லை நம் மனம் முனகுவது அப்படிக் கேட்கிறதா என்றே சந்தேகமாக இருந்தது.... நான் சொல்வதை மிகை என்றுதான் நினைப்பாய். அந்தப்பாட்டு எப்படி முடியும் தெரியுமா? விரகவேதனை பேருருவம்கொள்கிறதே என்று. அந்த அதி உக்கிரமான விரகவேதனையை நான் அவர் முகத்தில் கண்டேன். உலகத்திலுள்ள எல்லா துக்கங்களும் அந்தக் கண்களில் தெரிந்தன. ஆயிரம் ஜென்மங்கள் பெண்ணாகப்பிறந்து ஊர்மிளை அனுபவித்த பிரிவுத்துயரை அறிந்திருந்தால்மட்டுமே அப்படி ஒரு பாவம் கண்களில் வரமுடியும். வீணையை எடுத்து மடியில் வைத்துக்கொண்டார். சுருதி பார்க்கவில்லை. நேராகவே பாட்டுக்குள் போய்விட்டார். பீனா மதுர் மதுர் கச்சுபோல்...'

லட்சுமண் ரானே கழுத்தில் மயிர்க்கால்கள் சிலிர்ப்பதைக் கண்டேன்

" எனக்கு இப்போதும் புல்லரிக்கிறது. மகாத்மா காந்தி குழந்தையாகப் பிறக்கும்போது அவரைப்பார்த்த ஒருத்திக்குப் பின்னாளில் அவரைப்பற்றி நினைத்தால் எப்படி இருக்கும், அதைப்போல் இருக்கிறது. என்ன ஒரு பாட்டு! மகத்தான பாட்டு..'

பின்பு கொஞ்சநேரம் அவர் தன் உணர்ச்சிகளுக்குள் மூழ்கி இருந்தார்.

” அதை எங்கே பதிவுசெய்தார்கள்? என்றேன்

“அங்கேதான்…ஆனால் அது பதிவாக நான்குமாதமாகியது. படம் வெளிவருவதற்குள்ளேயே பாட்டு பிளேட்டாக வந்து ஆயிரக்கணக்கில் விற்றுவிட்டது. காலையில் அந்தப்பாட்டின் படப்பிடிப்புக்காக சைக்கிளில் போகும்போது சாலை முழுக்க அந்தப்பாட்டுதான் கேட்டுக்கொண்டிருக்கும். அந்தப்பாட்டு வழியாக நான் எங்கெங்கோ போய்விட்டேன். ஆகவே அந்தப்பாட்டின் உக்கிரத்தைக் காட்சிகள் தொடவே முடியாது என்றுதான் நான் நினைத்தேன். ஆனால் எடிட்டிங் டேபிளுக்குப் படத்தின் நெகட்டிவ் வந்தபோது எனக்குப் பெரிய ஆச்சரியம். அந்தப்பாட்டு அப்படியே காட்சியாக இருந்தது…நீ,இன்றும்கூடக் கொஞ்சம் தேடினால் அந்தப்பாட்டைப் பார்க்கமுடியும். அதைப்போல அவ்வளவு அற்புதமாக அதற்குப்பிறகு எத்தனை பாட்டுகள் படமாக்கப்பட்டிருக்கின்றன என்று தேடிப்பார்…

”அப்படியா?” என்றேன்

“நீ நம்பவில்லை. தெரிகிறது. ஒன்று தெரிந்துகொள். அன்றைக்கு காமிரா அதிகம் நகராது. ஒவ்வொரு ஷாட்டுக்கும் மிகவிரிவாக லைட் போடவேண்டும். ஆகவே சும்மா ஒரு சிறிய இடத்துக்குள் பாட்டை முடித்துவிடுவார்கள். அதனால்தான் அன்றைக்குப் பாட்டுகளைக் கெடுக்காமல் எடுக்க முடிந்தது. எப்போது பாட்டை இயக்குநர் காட்சிகளாக விளக்க ஆரம்பித்தாரோ அன்றே சினிமாவில் பாட்டு செத்துவிட்டது…ஒரு பாட்டைக்கேட்கும்போது நமக்கு என்னென்னவோ தோன்றும். ஆயிரக்கணக்கில் பிம்பங்கள் மனதில் ஓடும். அந்த இயக்குநர் அவருக்கு என்ன தோன்றுகிறதோ அதைக் காட்டினாரென்றால் என்னுடைய கற்பனைக்கு என்ன இடம்? ஒரு ஆலாபனையைக் கேட்கும்போது எனக்கு வானில் பறக்கும் புள் தோன்றுகிறது. இயக்குநர் ஒரு ஓடையைக் காட்டினால் எரிச்சல்தானே வரும்? அன்றைக்கு அப்படி இல்லை. ராமராஜ்யாவில் பார். ஊர்மிளாதேவி வீணையைக் கொண்டுவந்து அமர்ந்து அதைநோக்கிப் பாட ஆரம்பிப்பாள். வீணையை வாசித்தபடி மனமுருகிப் பாடிப்பாடி உடைந்துபோய் நிறுத்திக்கொள்வாள். சீதை ஒரு மஞ்சத்தில் கண்ணீருடன் படுத்து மெல்ல ஆடிக்கொண்டிருப்பாள். பக்கத்து அறைகளில் ராமன் அந்தப்பாடலைத் தாளமுடியாத துக்கத்துடன் கேட்டுக்கொண்டிருப்பார்.

அவ்வளவுதான். நான் அந்தப்பாட்டை ஆயிரம்முறைகூட சலிக்காமல் பார்ப்பேன். உண்மையில் எடிட்டிங் டேபிளில் நான் ஐநூறுமுறையாவது பார்த்திருப்பேன். ஒரு கணம்கூட சலிக்கவில்லை"

"ஏன் தெரியுமா? என்றார் லட்சுமன் ரானே " அந்தப்பாட்டு அதில் நடித்தவர்களை அப்படியே சுருட்டி உள்ளே இழுத்துக்கொண்டது. அதைபோட்டுப்போட்டுப் பாட்டைப் படம்பிடித்துக்கொண்டே இருந்தார்கள். ஒருகட்டத்தில் அந்தப்பாட்டைப் போட்டதுமே அனைவரும் கண்ணீர்விட ஆரம்பித்தார்கள். யாரும் நடிக்கவில்லை. எல்லாரும் அந்தப்பாட்டுக்குள் இருந்த மானுட துக்கத்தில் திளைத்தார்கள்...அப்படித்தான் மகத்தான பாட்டுகள் அமைகின்றன"

"பார்க்கவேண்டும்" என்றேன்

"ஆனால் அந்தப்பாட்டில் ஒரு தவறு நிகழ்ந்தது" என்றார் லட்சுமன் ரானே . "மொத்தப்பாட்டையும் ஏறத்தாழ சரிசெய்தபிறகுதான் விஜய் பட்டிடம் உதவியாளர் சொன்னார், கடைசியாக ராமனின் எதிர்வினை இல்லை என்று. தாளமுடியாத அந்த வேதனையை ராமனும் உணரவேண்டும், அது காட்டப்படவில்லை. விஜய்பட் அது தேவை என்று முடிவுசெய்தார். திருப்பி எடுக்க மீண்டும் பிரேம் அதிப்பைக் கூப்பிட்டார். அவர் அதற்குள் விக்ரமாதித்தனாக நடிக்க ஒரு நாடகத்தில் ஒப்பந்தமாகியிருந்தார். அந்தேரியிலேயே ஒத்திகை நடந்துகொண்டிருந்தது. அவர் எல்லாரும் அவரை ராமனாகவே நினைப்பதில் சலிப்படைந்திருந்தார். விக்ரமாதித்தனாக நடித்து அந்த பிம்பத்தை மாற்றலாம் என்று நினைத்தார். ராமனின் நிதானமும் சோகமும் இல்லாத கதாபாத்திரம் விக்ரமாதித்தன். துடுக்கான பெண்பித்தரான அரசர் அவர். பிரேம் அதிப் திரும்பி வந்து நடித்தபோது அந்தப் பழைய உணர்ச்சிகள் அவரிடம் உருவாகவே இல்லை"

" ஒருவாரம் விஜய் பட் பிரேம் அதிப்பை வைத்து விதவிதமாக எடுத்துப்பார்த்தார். ஊர்மிளையின் விரகவேதனையைக் கேட்டு ராமன் தாளமுடியாதவனாகத் தவிக்கும் ஒரே ஒரு ஷாட் போதும். எதுவுமே அமையவில்லை. கடைசியில் இருப்பதில் பரவாயில்லை என்று தோன்றிய ஒரு ஷாட்டைப் பாட்டின் கடைசியில் விஜய் பட் சேர்த்தார். ஊர்மிளா வீணை யுடன் கதறுகிறாள். துயரத்தில் தீப்பட்டவள்போல சீதை மஞ்சத்தில் புரள்கிறாள். ராமனும் தவிக்கவேண்டும். ஆனால் ராமன் வரும் அந்த ஷாட்டில் அவர் வேண்டாம் வேண்டாம் என்பது போலவோ மாட்டேன்

மாட்டேன் என்பதுபோலவோ தலையை அசைப்பதுபோலத் தோன்றியது. அவர் நடிப்பது போலவே இருந்தது. உண்மையான வேதனை அவர் முகத்தில் இல்லை"

"அதை அப்போதே உணர்ந்தீர்களா?"

"ஆமாம்...எனக்கு வைரங்கள் நடுவே ஒரு கூழாங்கல்போல இருந்தது அது. ஆனால் அதைச் சொல்லக்கூடிய இடத்தில் நான் இருக்கவில்லை. எடுபிடிப்பையனுக்கு அன்று குரலே இல்லை. அந்த ஷாட் வரும்போதெல்லாம் கண்களை மூடிக்கொள்வேன்...ஆனால் அந்த சிறிய பிழையை என்னால் மறக்கவேமுடியவில்லை. அந்த விஷயம் என் மனதில் எப்படியெல்லாம் மாறியது என்று நினைத்துப்பார்த்தால் ஆச்சரியம். முதலில் அந்தப் பிசிறு எனக்குப் பெரிய சிக்கலாக இருந்தது. அந்த ஷாட்டைப் பார்க்கவே முடியாது. ஆனால் பார்க்காவிட்டாலும் அது என் கண்ணுக்குள் துல்லியமாக ஓடும். பிறகு அந்தப்பாட்டைக் கேட்டாலே அந்த ஷாட் மட்டும்தான் நினைவுக்கு வர ஆரம்பித்தது.கொஞ்சநாளில் அந்த ஷாட்டை நான் விரும்ப ஆரம்பித்தேன். அழகான பெண்ணின் கன்னத்தில் ஒரு மரு இருந்தால் நமக்கு அவள் அழகு கூடுகிறது என்று தோன்றுமே அதுபோல"

நான் சிரித்தேன்

"மனதின் நாடகங்கள் மிகவிசித்திரமானவை" என்றார் லட்சுமன் ரானே. " நான் அதன்பிறகு எங்கே எந்த தியேட்டரில் ராமராஜ்யா ஓடினாலும் போய்ப்பார்ப்பேன். அதில் அந்தப்பாட்டுவரும்போதே என் கைகால்கள் அதிர ஆரம்பிக்கும். அந்தத் தப்பான ஷாட் வந்ததும் ஒரு வகை உச்சம். பிறகு ஒரு மெல்லிய நிம்மதி. இருபது வருடங்கள் படம் தியேட்டரில் இருந்தது. நான் நூற்றுக்கணக்கான முறை பார்த்திருப்பேன்"

"ஆமாம்,ஒரு மனச்சிக்கல்தான்" என்றேன்

"இல்லை...இது என் பிரச்சினை இல்லை. ஏன் தெரியுமா? நாற்பத்திமூன்றுக்குப்பிறகு அந்தப்பாட்டு இல்லாத ராம்லீலா நாடகங்களே இல்லை. எந்த மேடையிலும் அந்தப்பாட்டுக்கு ராமனாக நடிப்பவர் அந்த வரி வரும்போது அச்சு அசலாக அதே மாதிரி தலையை ஆட்டுவார். மற்ற எல்லா நடிப்புகளும் கொஞ்சம் முன்பின்னாக மாறித்தான் இருக்கும். இந்தத் தப்பான ஷாட் மட்டும் எப்படி மொத்த இந்தியாவிலும் ஒரேபோல

அத்தனைபேர் மனதிலும் பதிந்தது?" என்றார் லட்சுமன் ரானே " நான் எப்படியும் ஐம்பது மேடைகளில் இந்தப்பாட்டைப் பார்த்திருப்பேன். அதே தலையசைப்பு…"

"ஆச்சரியம்" என்றேன். எனக்கு அதை நம்பமுடியவில்லை என்பதுதான் உண்மை

"அதன்பின் அதே ராமராஜ்யத்தை விஜய் பட்டே மீண்டும் சினிமாவாக எடுத்தார்." என்றார் லட்சுமன் ரானே " இருபத்தைந்து வருடம் கழித்து….1967இல் வெளிவந்தபடம். பீனாராய் சீதாவாக நடித்திருந்தார். பத்ரி பிரசாத் ராமன்.வசந்த் தேசாய் இசையமைத்திருந்தார். கிட்டத்தட்ட பழைய படத்தை அப்படியே வண்ணத்தில் திருப்பி எடுத்திருந்தார்கள். பழையபடத்தில் இருந்த உணர்ச்சிவேகத்தில் கால்வாசிக்கூட இல்லாத படம். அந்தப்படத்தில் அதே காட்சிக்கு வசந்த் தேசாய் அதே பீம்பளாசியில் ஒரு பாட்டு போட்டிருந்தார். ரெய்ன் ஃபாய் சோஜாரே பஞ்சி என்று ஒருபாட்டு. நல்ல ராகம். லதா மங்கேஷ்கர் நன்றாகவே பாடியிருந்தார். ஆனால் அந்தப்பாட்டை பீனா மதுர் மதுர் கச்சுபோலுடன் ஒப்பிட்டால் சேடிப்பெண்ணை சக்கரவர்த்தினி பக்கத்தில் நிறுத்தியது போல இருந்தது…"

"லதா நல்ல பாட்டுகளைப் பாடியிருக்கிறாரே" என்றேன்

லட்சுமன் ரானே அதைப் பொருட்படுத்தவில்லை "அந்த இரண்டாவது படம் வரும்போது நான் சினிமாவில் இல்லை. என் மனைவி இறந்துபோய் எதிலும் ஈடுபாடில்லாமல் அலைந்துகொண்டிருந்தேன். பெர்ஹாம்பூரில் ஒரு பழைய தியேட்டரில் நான் அந்தப்படத்தைப் பார்த்தேன். அந்தப்படத்தைப் பார்க்கக்கூடாதென்றே நினைத்தேன். ஆனால் பார்க்காமலும் இருக்கமுடியவில்லை. அந்தப்பாட்டுக்காக என்னுடைய நரம்புகள் எல்லாம் இறுகி உடம்பே முறுக்கப்பட்ட வில் போல இருந்தது. பாட்டு வந்ததும் என்னால் கவனிக்கவே முடியவில்லை. நான் அந்தத் தலையசைவுக்காகக் காத்திருந்தேன். அது வரவில்லை.விஜய்பட் அந்த பிழையை அவரும் கவனித்திருந்தார். அதை மிகச்சிறப்பாகச் சரிசெய்துவிட்டிருந்தார்…. இம்முறை ராமன் கண்ணீர் வழியும் கண்களுடன் பாட்டைக் கேட்டபின் மயங்கிச் சரிகிறான். ஏமாற்றம் தாளாமல் நாண் அறுந்த வில் போல நான் தளர்ந்தேன். அப்படியே சீட்டில் மல்லாந்து கிடந்தேன். சற்று நேரம் கழித்துப்பார்த்தால் நான் தாரை தாரையாகக் கண்ணீர் விட்டுக்கொண்டிருப்பதை உணர்ந்தேன். அப்படியே எழுந்து வெளியே

கொட்டுகிற மழையில் இறங்கி நடந்தேன். உடனே செத்துவிடவேண்டும் என்றுதான் என் மனம் ஆசைப்பட்டது. நான் வாழ்ந்த உலகம் அப்படியே காணாமலாகிவிட்டது என்று தோன்றிவிட்டது. அசட்டுத்தனமான அர்த்தமற்ற ஓர் உலகம் என்னைச்சூழ்ந்து இயங்கிக்கொண்டிருந்தது"

"மறுநாளே கிளம்பி பிகார் சென்றேன். சின்னச்சின்ன ஊர்களாகத் தேடி அலைந்தேன். எங்காவது பழைய ராமராஜ்யா ஓடுகிறதா என்று பார்த்தேன். சூரஜ்பூர் என்ற ஊரில் ஒரு தகரக்கொட்டகையில் ஓடிக்கொண்டிருந்தது. பஸ்ஸில் போகும்போது அந்த போஸ்டரைப் பார்த்தேன். நிறுத்து வண்டியை நிறுத்து என்று கூவினேன். வண்டி நிற்பதற்குள் இறங்கி ஓடினேன். படம் போட மேலும் இரண்டு மணிநேரம் இருந்தது. நான் அந்தக் கொட்டகைவாசலிலேயே கொளுத்தும் வெயிலில் அமர்ந்திருந்தேன். என்னைக் கிறுக்கனாகவே எல்லாரும் நினைத்திருப்பார்கள். இருக்கட்டும், கிறுக்கன்தானே என்று நினைத்துக்கொண்டேன்"

"படம்போட்டதும் உள்ளே போய்க் கைகூப்பியபடி அமர்ந்துகொண்டேன். ராமா வா, வந்து என்னை ஆட்கொள் என்று வேண்டிக்கொண்டேன். ராம்சரண் ராம்சரண் என்று என் உதடுகள் சொல்லிக்கொண்டே இருந்தன. அந்தப்பாடல் வந்தது. அது யானை தும்பிக்கையால் தூக்குவதுபோல என்னை வளைத்து அள்ளிக்கொண்டது. காட்டருவி போலக் கொண்டுசென்றது. அந்தக் கணத்தை நோக்கி. ராமன் தலையை ஆட்டினான். நான் ராமா என்று கதறியபடி மூர்ச்சையானேன்"

மீண்டும் கஞ்சாவை நிறைக்கும் லட்சுமன் ரானேவை நான் உற்றுப்பார்த்திருந்தேன். அவர் என்ன சொல்கிறார் என்றே எனக்குப்புரியவில்லை.விசித்திரமான ஒரு கிறுக்குத்தனம். கங்கைக்கரைக்கு வந்துசேர்பவர்கள் எல்லாருமே ஒருவகை கிறுக்கர்கள்தான். நானும்.

லட்சுமன் ரானே என்னை நிமிர்ந்துபார்த்து "அதன்பிறகு நான் சினிமாவே பார்க்கவில்லை. காசிக்குவந்துவிட்டேன்" என்றார்

"சரி, என்னதான் சொல்லவருகிறீர்கள்? என்றேன்

"நீ சரித்திரம் உருவாகும் இடத்தில் இருக்கவேண்டும் என்றுதான்...சரஸ்வதி ரானே, விஜய்பட, வியாஸ்,பிரேம் அதிப் பிறகு காந்தி...எவ்வளவு பெரிய ஒரு வரலாற்றுத்தருணம்..."

“நீங்கள் வேறென்னவோ சொன்னீர்கள்...சம்பந்தமில்லாமல்” என்றேன். ஏன் அவர் சொன்னது என்னை நிலைகுலையச்செய்கிறது என்று புரியவில்லை

“ நான் சொல்லவந்தது என்னவென்றால் அதாவது–” என்றார் லட்சுமன் ரானே “ என்னால் சரியாகச் சொல்லமுடியவில்லை. தோராயமாக இப்படிச் சொல்கிறேன். மனிதர்களை வைத்து கடவுள் அவரது கலையை உருவாக்குகிறார் இல்லையா? அல்லது இப்படிச் சொல்கிறேன். இலக்கியநயமாக இருக்கும். மனிதர்களின் ஞானத்தையும் அஞ்ஞானத்தையும் பின்னி கடவுள் அவரது கலையை உருவாக்குகிறார்.சரியாக இல்லையோ?”

“நீங்கள் சொன்னதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? ” என்றேன்

“சரி விடு” என்றார் லட்சுமன் ரானே ”ஏதோ சொல்லத்தோன்றியது சொன்னேன்” அவர் பாலிதீன் பொட்டலத்தில் இருந்து ஒரு லட்டு எடுத்துப் பிய்த்து பாதியை எனக்குத் தந்தார். மிச்சத்தை ருசித்து சாப்பிட ஆரம்பித்தார். கஞ்சாவுக்குப்பின் இனிப்புசாப்பிடுவதை அனேகமாக எல்லாருமே விரும்புவதைக் காசியில் கண்டிருந்தேன். சிலகணங்கள் அவரைப்பார்த்தபின் நான் லட்டுவை அந்த மெட்டை முனகியபடி சாப்பிட ஆரம்பித்தேன்

## (2) கைதிகள்

எட்டாவது குழுவில் முதலில் கண்விழித்தது நான். ஆகவே முதலில் நான்தான் செய்தியைத் தெரிந்துகொண்டேன். கரகரத்த குரலில் எங்கோ யாரிடமோ பேசிக்கொண்டிருப்பதை வயர்லெஸ் ரேடியோ சொல்லிக்கொண்டிருந்தது. குழூக்குறி என் மண்டைக்குள் சென்று தீண்ட ஒரு நிமிடம் ஆகியது.

'…நரி மாட்டிக்கொண்டு விட்டது'

நான் பரபரப்புடன் ஓடிப்போய் தரையில் கம்பிளிக்குவியலுக்குள் படுத்திருந்த நாராயணனை ஓங்கி உதைத்தேன். 'ஆ!' என்று அலறியபடி அவன் கண்விழித்து எழுந்து அமர்ந்து மணல்பையைக் குத்துவது போலக் கைகளை ஆட்டியபடி 'போ போ போ' என்று கத்தினான். இந்த முகாமில் ஒவ்வொருவரும் பொந்துக்குள் அஞ்சி ஒடுங்கி ஒளிந்திருக்கும் காட்டுமிருகம் போலத்தான் இருக்கிறார்கள்.

'டேய்…நாந்தாண்டா..டேய் நாராயணா'

அவன் வாயைத் துடைத்துக்கொண்டு ''ஏண்டா?' என்று சலித்தபின் மீண்டும் படுக்கப்போனான்.

'டேய் அவன் மாட்டியாச்சுடா…'

'யாரு?' என்றான்.

'உங்க அப்பன் தெரவியம்..டேய் அவன்…நரி'

நாராயணன் வாய் திறந்தபடி நின்றுவிட்டது. 'எப்ப?' என்றான்.

'தெரியல்லை. ராத்திரின்னு நெனைக்கறேன்..இப்பதான் மைக்ல கேட்டேன். யாரோ எங்கேயோ சொல்லிட்டிருக்காங்க'

நாராயணன் 'சும்மா எதையாவது கேட்டிருப்பே.அவன் அப்டி மாட்டிக்கமாட்டாண்டா…' என்றான்

எரிச்சலுடன் 'போடா' என்றபின் எனக்கே சந்தேகம் வந்தது. மீண்டும் வயர்லெஸ் அருகே சென்று அந்த ஒலியைக் கூட்டி வைத்தேன். பரபரப்பான பேச்சொலிகள் ஒரு நெடுஞ்சாலை ஊர்வலம் போல ஓடிக்கொண்டிருந்தன. அந்தப் பரபரப்பே அதற்கான ஆதாரம் என்று தோன்றியது.

நாராயணனுக்கும் அதுவே தோன்றிருக்கலாம், அவன் எழுந்து லுங்கியைக் கட்டியபடி வந்து வயர்லெஸ் அருகே இரும்புநாற்காலியில் அமர்ந்துகொண்டான்.

சிலகணங்களில் அந்தச் சொற்கள் மீண்டும் வந்தன. 'நரிகளைப் பற்றி டேவ் விசாரித்தார். அவர் நரியின் ஆரோக்கியம் பற்றி அறிந்துகொள்ள ஆவலாக இருக்கிறார்...'

நாராயணன் பெருமூச்சுடன் 'அதாண்டா, நூஸ் உண்மைதான்' என்றான். மீண்டும் பெருமூச்சுவிட்டு 'பாவண்டா' என்றான்.

நான் அவனை பார்த்தேன். 'பெருமாள எழுப்புடா...' என்றான் நாராயணன்

நான் காம்ப் கட்டிலில் படுத்திருந்த பெருமாளைத் தோளைப்பிடித்து உசுப்பினேன். ரத்தம்போன்ற கண்களால் பார்த்து 'ம்?' என்றான்

'அவன் மாட்டியாச்சுடா..மைக்ல சொல்றான்' பெருமாள் ஒன்றுமே சொல்லாமல் எழுந்து லுங்கியைக் கட்டிக்கொண்டு வெளியே சென்று கூடாரத்துக்கு வெளியே நின்ற பெரிய கருவேலமரத்துக்கு அடியில் ஒன்றுக்கிருந்தான்.

'இங்கதான் புடிச்சிருக்கானுக' என்றான் நாராயணன். 'நேரா தர்மபுரிக்குக் கொண்டுபோய்ட்டிருக்காங்க. அங்க வெண்ணாம்பட்டி பங்களாவுக்குக் கொண்டு போவாங்கன்னு நெனைக்கறேன். கலெக்டரும் டிஎஸ்பியும் பாக்கணும்ல...'

பெருமாள் உள்ளே வந்து 'எப்பல புடிச்சானுக?' .

'ராத்திரி'.

'ஃபைட் உண்டோ?, எப்டியும் கன் வச்சிருப்பான்' என்றான்.

'தெரியல்ல...காயம்னு சொன்னாங்க...' என்றேன்.

பெருமாள் சோம்பல் முறித்துக் கைகளை நீட்டி முதுகை நெளித்தான். 'எளவெடுத்தவனுகள சுட்டுத்தள்ளினா நாம் நிம்மதியா வீடுகளுக்குப் போய்ப் பிள்ளைய மூஞ்சிகளப் பாக்கலாம். என்னெங்கியே?' என்றான். நானே பலமுறை அந்த வார்த்தைகளைச் சொன்னவன்தான். ஆனால் அப்போது எனக்கு அது கசப்பை அளித்தது.

'தேவசகாயம் வருவாரோ?'.

'அனேகமா கெளம்பியிருப்பாரு...மத்தியான்னம் ரயிலு சேலத்துக்கு வந்திரும்...மூணுமணிக்கெல்லாம் அவரு நரியப் பாத்திருவாரு'

'பாவம்டே' என்றான் நாராயணன்.

'என்னலே பாவம்? சும்மா கெடக்காம குண்டிக்கொளுப்பிலே சர்க்காருக்க மேலே துப்பாக்கி தூக்கினானுவள்ல? கண்ட புஸ்தகத்தையும் படிச்சுகிட்டு சூத்து எளகி சாடினா இந்த மட்டும் நடக்கும்...என்ன வெளையாட்டா? சர்க்காராக்கும்...பின்ன மயித்துகதுக்காடே சர்க்காரு தோக்கும் குந்தமுமா நம்மள மாதிரி லெச்சம்பேருக்கு சம்பளம் குடுத்து வச்சிருக்கு..? இல்ல கேக்கேன்'

நான் அவனிடம் விவாதிக்க விரும்பவில்லை. பெருமாள் எப்போதுமே முரட்டுத்தனமானவன். தன்னுடைய சாப்பாடு தூக்கம் வேலை சம்பளம் தவிர வேறு நினைப்பே இல்லாதவன். அவனிடம் வாங்கும் பீடிக்குக் கூட அவனிடம் கணக்கு இருக்கும். 'இது நாலாவது பீடியாக்கும் கேட்டுக்க. சும்மா. ஒரு இதுக்காக சொன்னேன். தெரிஞ்சிருக்கணும்லா?' என்பான். பெருமாள் தன் பெட்டியில் இருந்து ஒரு பீடிக்கட்டை எடுத்து ஒரு பீடியை உருவியபின் திரும்பப் பெட்டிக்குள் வைத்து மூடிவிட்டு அதைப் பற்றவைத்துக்கொண்டான்

நாராயணன் 'நார் நாரா வகுந்திருவானுக நாயிங்க...அதுக்குன்னே சிலபேரு இருக்கானுக முருகேசா.. ரசிச்சு ரசிச்சு செய்வானுக பாத்துக்க. ஒருநாளைக்கு தேர்ட்கேம்புக்கு போறேன். ரெண்டு சின்ன பொண்ணுகளப் போட்டுக் கிளிக்கானுக. அதுக ரெண்டும் களுத்து வெட்டுத ஆடுகள மாதிரி கெடந்து கூவி விளிக்குதுக பாரு...எனக்கு மூத்திரம் வந்து நின்னுட்டுது. காலும் கையும் நடுங்குது. நேரா பாத்ரூமுக்குப் போய் வாந்தி எடுத்தேன்...' என்றான்

'செரி அத விடு' என்றேன். என்னால் அந்த நினைப்புகளை அந்த நேரத்தில் நீட்டிக்க முடியவில்லை. 'ரேடியோவப் போடுடே..பாட்ட கீட்டைக் கேப்போம்..'

'இப்பம் இங்க என்ன மயிரு பாட்டு கேக்குதது? கன்னடப்பாட்டு கிட்டினா யோகம்' என்றான் பெருமாள். ரேடியோவை எடுத்து வைத்துக்கொண்டு அதை உருட்ட ஆரம்பித்தான். அது விதவிதமாக ஓசையிட்டு உளறி முனகி ஒரு கன்னடப்பாட்டின் நுனியைப் பற்றிக்கொண்டது. ராஜ்குமார் பாடிக்கொண்டிருந்தார்.

'ராஜ்குமார் பாட்டுடா. வை' என்றேன்.

'நம்ம பாட்டு மாதிரி இருக்கு' என்றான் பெருமாள்.

'நம்ம பாட்டுதான்.. பாஷைதான் கன்னடம்'

பெருமாள் என்னைவிட முன்னதாகவே கர்நாடக எல்லைக்கு வந்துவிட்டவன், ஆனால் கன்னடம் சுத்தமாகப் புரியாது. முகாமிலேயே நான் ஒருவன் மட்டும்தான் கன்னடம் தெரிந்தவன்.

பெருமாள் எழுந்து தன் பெட்டிக்குள் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக, அதிகமாகப் போகாமல் பார்த்து ,கோபால் பல்பொடியைக் கையில் கொட்டிவிட்டு அந்தப் பொட்டலத்தைத் திரும்பப் பெட்டிக்குள் வைத்தான். மண்சட்டிச் சில்லு போல ஆகியிருந்த சிறிய லைபாய் சோப்புத்துண்டை எடுத்துக்கொண்டு வெளியே சென்றான். நான் நூதன் ஸ்டவ்வைப் பற்றவைத்தேன். திரிகளில் இரண்டு இறங்கி இருந்தமையால் ஒருபக்கமாக சிவப்பாக எரிந்தது. துடைப்பக்குச்சியை எடுத்து ஒடித்து ஸ்டவ்வின் மண்ணெண்ணை டேங்கில் விட்டு எடுத்து அதைக் கொளுத்தித் தாழ்ந்திருந்த திரிகளைப் பற்றவைத்தேன். சுடர் மீது அலுமினியப் பாத்திரத்தை வைத்து மூன்று டம்ளர் தண்ணீரை விட்டேன். சுடர் நீலமாக ஆகிறதா என்று குனிந்து பார்த்தேன். பாத்திரத்தில் கரி படிந்திருந்தது.

'மாதையன் வாறப்ப ஒரு ஸ்டவ்வுத் திரிக்குச் சொல்லச் சொன்னேனே' என்றான் நாராயணன்.

'மறந்துடுது' என்றேன்

'செரி, இனி என்ன ஒருவேளை நாளைக்கேகூட நம்மளத் திருப்பிக் கூப்பிட்டாலும் ஆச்சு' என்றான் அவன்.

'ஆனா காம்பு கொஞ்சநாள் இருக்குமுன்னு நினைக்கிறேன். அவனுக ஆளுங்க இன்னும் சிலபேரு இருப்பாங்கள்ல?'

'எங்க? இந்த மீனு சிக்கினா அப்டியே செதைஞ்சிருவாங்க'

'பழிக்குப்பழின்னு என்னமாம் ஆரம்பிப்பானுகளா? இவன் அவனுகளுக்க மாநிலக்கமிட்டி உறுப்பினராக்குமே'.

'தெரியலை...அதுக்கெல்லாம் அவனுகளுக்கு சக்தி இருக்காது. இப்பமே வெதைய உடைச்சாச்சு...' என்றான் . ஆனால் அவன்

அமைதியானதைப்பார்த்தால் அவன் அதைப்பற்றித்தான் நினைக்கிறான் என்று தெரிந்தது.

'காப்பி போட்டச்சா?' என்று பெருமாள் உள்ளே வந்தான். முகத்தை அவனுடைய சிவப்புத்துண்டை எடுத்துத் துடைத்துக்கொண்டு ' குளிரு நல்லா இருக்குடே..மணி என்ன ஆச்சு இப்ப?' என்றான்

'ஆறு' என்றேன். அவனுடைய நாகர்கோயில் பக்கம் டீயையும் காப்பி என்றே சொல்வார்கள். பால்பௌடர் டப்பாவில் இருந்து இரண்டு ஸ்பூன் அள்ளி சின்ன டம்ளரில் போட்டுக் கொஞ்சமாகத் தண்ணீர் ஊற்றிப் பசையாக ஆக்கியபின் அதனுடன் டீயைக் கலந்தேன். பெருமாள் அவனே ஒரு டம்ளரை எடுத்துக்கொண்டான்.

நாராயணன் கைகளைத் தூக்கி சோம்பல் முறித்து 'வாய் கழுவலைடா மச்சான்' என்றான்.

'அதை இப்ப சொல்லு...ஸ்டவ்வ அணைச்சாச்சு. டீ ஆறினா சூடுபண்ண முடியாது' என்றேன்

நாராயணன் வெளியே போய் அதேவேகத்தில் கழுவிவிட்டு வந்து கோப்பையை எடுத்துக்கொண்டான். மூவரும் அவரவர் சிந்தனைகளில் மூழ்கி டீயை உறிஞ்சிக்கொண்டிருந்தோம். வயர்லெஸ்ஸில் ஏதேதோ குரல்கள். மேலும்மேலும் பரபரப்பு ஓடிக்கொண்டிருந்தது. 'கிண்டிக் கௌங்குகள எடுத்துப்போடுவானுகள்லா' என்றான் பெருமாள். அவன் அதைப்பற்றித்தான் நினைத்துக்கொண்டிருக்கிறான் என எனக்குத் தெரிந்திருந்தது.

நான் 'இவன இன்னும் போட்டு அடிச்சு என்ன செய்ய? இதுக்குமேலே யாரையும் பிடிக்கவேண்டியதில்லைன்னுதானே சொன்னாங்க' என்றேன்.

'வடக்க பெரியதலைகளை எல்லாம் பிடிச்சாச்சு... இங்க கோதண்டராமனைப் பிடிச்சாச்சு... கிளைமாக்ஸ் முடிஞ்சாச்சுடா'

'ஆந்திராவிலெ இன்னும் இருக்கானுக. கொண்டப்பள்ளி சீதாராமையா காட்டுக்குள்ளதான் இருக்கான். கம்மம் பக்கமா நல்ல டீம் சேந்திருக்குன்னு சொல்லுதானுக, கணக்குக்குத் துப்பாக்கியும் வச்சிருக்கானாம்' என்றான் பெருமாள்

'அதைப்பத்தி இவனுக்கெல்லாம் ஒண்ணுமே தெரிஞ்சிருக்காது. தெரிஞ்சாலும் அது பெரிசா ஒண்ணும் இருக்காது. சும்மா போட்டு அடிச்சு சந்தோசப்படலாம்' என்றேன்.'

'இல்லடா, இவங்க தர்மபுரிய தேர்ந்தெடுத்ததே ஆந்திராவுக்கும் கர்நாடகாவுக்கும் பார்டரிலே இருக்குங்கிறதனாலத்தான். இங்க நடந்தது முழுக்க ஆந்திராவிலே இருந்து வந்ததுதான்..'

'என்ன எளவோ' என்றேன் சலிப்புடன்

'கொட்டைய ஒடைக்கணும் நாயிங்களை' என்றான் பெருமாள்.

'டேய் நீ இங்க இரு.. நாங்க ஓடைப்பக்கம் போயிட்டு வாறம்' என்றேன்.

'ஒடனே வரணும்...நானும் முட்டிக்கிட்டுதான் இருக்கேன். அங்க நிண்ணு கதைபேசப்படாது' என்றான் பெருமாள். 'மணி ஏளாச்சு, இன்னும் இங்க விடியல்லை.நாறச்சனி பிடிச்ச காடு. நாசமாபோறதுக்கு'

பெருமாள் வசைபாட ஆரம்பித்தால் அதன்பின் வெகுநேரம் ஓயமாட்டான். இங்கே முகாம்களில் மனம் நிலையாக இருக்கும் போலீஸ்காரர்கள் சிலர்தான். பல முகாம்களில் பயங்கரமான சண்டைகள் வெடிக்கும். அடிதடியில் ரத்தம் கொட்டும், எலும்புகள் முறியும். இரண்டு வருடங்களில் எட்டு முறை கொலை நடந்திருக்கிறது. ஏழு கொலை துப்பாக்கியால் சுட்டுத்தான். எல்லாம் நக்சலைட் கணக்கில் ஏறிவிடும்.

ஒகேனேக்கல் பகுதிக்காடுகளில் பெரும்பாலும் அடர்த்தியான முட்புதர்கள்தான். மலைச்சரிவெல்லாம் கருவேலமரங்கள் பச்சைக்குடைகள் போல பரவி நின்றிருக்க தரைமுழுக்க சீமைக்கருவேலம் அலுமினியமுட்களுடன் பின்னிப்பிணைந்து படர்ந்திருக்கும். சில இடங்களில் மெல்ல முறுங்கிய பெரும் பட்டை இலைகளை விரித்து நிற்கும் சாம்பல்பூத்த பேய்க்கற்றாழைகள் கெட்டகனவில் வரும் ராட்சதப்பூக்கள் மாதிரி மலர்ந்திருக்கும்.

மலைச்சரிவுகளில் பன்றிகளால் பட்டை சிதைக்கப்பட்ட பழமையான வேங்கைமரங்கள். பெரும்பாலான மரங்களுக்குப் பெயர் தெரியாது. எல்லா மரங்களுக்கும் இலைகள் புளியமர இலைகள் அளவுக்கு சிறியவை. எனவே காட்டுக்குள் சருகுகளே கிடையாது. கூழாங்கற்களும் செம்மண்ணும் கலந்த வெந்து வறண்ட மண்தான் எங்கும் விரிந்து விரிந்து கிடக்கும். இங்கே முள்

இல்லாத மரங்களைப் பார்ப்பதே அரிது. மொத்தக்காட்டிலும் இலைகளை விட முட்களே அதிகம் என்று எனக்கு ஒருமுறை தோன்றியது

மலைகளின் நடுவே ஆழமான இடுக்குகளில் சன்னமாக வழிந்தோடும் ஓடைகள்தான் காட்டின் ஒரே நீராதாரம். மலைச்சரிவில் கூடாரமடித்திருக்கும் எங்களுக்கும் இந்தக்காட்டின் பிரதான மிருகமான காட்டுப் பன்றிகளுக்கும், மிகத்தற்செயலாகக் கண்ணில்படும் கேழைமான்களுக்கும், மலையிறங்கி வந்து திரும்பி மலைக்குச் சென்றுவிடும் செந்நாய்களுக்கும், எப்போதாவது அவ்வழியாகக் கடந்துசெல்லும் வறண்டு ஒடுங்கிய சிறிய யானைக்கூட்டங்களுக்கும் எல்லாம் அதுவே குடிநீர். நாங்கள் தண்ணீரை அள்ளிக் கொண்டுவந்து மணல் பெட்டியால் வடிகட்டி நன்றாகக் காய்ச்சிக் குடிப்போம்.

பிளாஸ்டிக் குடங்களுடன் நானும் கையில் ரைஃபிளுடன் நாராயணனும் மலை இறங்கிச் சென்றோம். முள்ளை வெட்டி ஒதுக்கி நாங்கள் உருவாக்கிய வழி தவிர வேறு வழியில் நடமாடவே முடியாதென்பதனால் இந்தக் காட்டில் வழிதவறுவதென்ற பேச்சுக்கே இடமில்லை. பூட்ஸ் அணியாமல் காட்டில் எங்கும் நடக்க முடியாது. தரையில் கிடக்கும் முட்களின் பூசணம் மிக அபாயகரமான விஷம். மரத்தில் நிற்கும் நுனிசிவந்த முள் குத்தினால் ரத்தக் காயத்தோடு சரி.

மலைப்பிளவுக்குள் கரும்பாறையின் வெடிப்பு வழியாக நீர் சன்னமாகக் கொட்டும் ஒலி கேட்டது. கரிய பாறைப்பிளவைப் பார்க்கையில் அதைப் பெண்யானையின் பின்பக்கம் என்று நினைப்பதை என்னால் தடுக்க முடியாது. 'ஆனைமூத்திரத்தை நம்பி கெட்டுச்சோத்த அவுத்துட்டேம்ல' என்று பெருமாள் சொன்ன பழமொழியும் நினைவுக்கு வரும். மலையின் மிக அந்தரங்கமான ஓர் இடம் அது. மேலே மலையின் எந்த சரிவிலிருந்து பார்த்தாலும் அதைக் கண்டுபிடிக்க முடியாது. எங்கள் முகாம் அமைந்திருப்பதே அந்த ஊற்றைக் கண்காணிப்பதற்காகத்தான்.

ஓடையின் இருபக்கமும் ஈரமான செம்மண்ணில் பன்றிகளின் கூர்மையான குளம்புகள் நிறைந்திருந்தன. சில மான்சுவடுகளையும் கண்டேன். அங்கே வந்த ஒன்பது மாதங்களில் ஒரே ஒருமுறை சிறுத்தையின் காலடியைக் கண்டிருக்கிறேன். கருவேலங்குச்சியைக் கத்தியால் வெட்டிப் பல் தேய்த்துக்கொண்டு காட்டுக்குள் அமர்ந்துகொண்டோம். தூரத்தில்

நாராயணன் தலை தெரிந்தது. 'என்ன பண்ணுவாங்கன்னு நெனைக்கறே?' என்றேன்.

'முடிச்சிருவாங்க…விட்டு வச்சா வம்புல்லா?' என்றான் நாராயணன்.

'கொல்லுற அளவுக்கு என்னடா பண்ணினான்?' என்றேன்.

'அவன்மேல எட்டு கொலை வழக்கு இருக்கு'

'அதெல்லாம் சும்மான்னு உனக்கும் தெரியும் எனக்கும் தெரியும்'

நாராயணன் துப்பிவிட்டு 'அப்டிப்பாத்தா செயிலுக்கு போறவன், தூக்குல தொங்குறவன்ல நாலிலே ஒருத்தன் ஒண்ணும்தெரியாதவனாக்கும். அதை நினைச்சா நீ தொப்பிய களட்டிட்டு ஊருக்குப் போயி வெள்ளாமைய பாக்கணும், நான் ஆலமரத்தடியிலே ஒக்காந்து கண்டவனுக்க அக்குள வழிக்கணும்' என்றான்.

நான் பெருமூச்சு விட்டேன். 'என்ன இருந்தாலும் கொல்லுறது தப்பாக்கும்' என்றேன்.

'தப்பும் சரியும் பாக்கறவன் என்ன மயுத்துக்கு தொப்பிபோடவந்தே? வக்காளி, உனக்கெல்லாம் சர்க்காரு மாசாமாசம் குடுக்குத சம்பளம் தெண்டம்' .

ஒரு காற்று முட்கள் வழியாகச் சென்றது. மெல்லிய துணி ஒன்று முட்களால் கிழிபடும் ஒலி கேட்டது. அது மலை மெல்ல பெருமூச்சுவிடும் சத்தம் என்று எண்ணிக்கொண்டேன்.

'சாவுறதுக்காகத்தானே அவனுக எறங்கினானுக…விடு' என்றான் நாராயணன்.

இதையெல்லாம் ஏன் பேசிக்கொள்கிறோம் என்ற எண்ணம் ஏற்பட்டது. பேசிப்பேசி எல்லாவற்றையும் கொஞ்சம் இலகுவாக ஆக்கிக்கொள்கிறோமா? நான் கீழே சென்று கழுவிக்கொண்டேன். மேலேறும்போது நாராயணன் கழுவிக்கொள்ள இறங்கினான்.

நான் மேலே நின்றபடி 'படிச்ச பையன்ல?' என்றேன்.

'படிப்பாக்குமே கெடுக்குறது' என்று சொல்லி நாராயணன் எழுந்து மேலே வந்தான்.

நான் சட்டையையும் லுங்கியையும் கழட்டிவிட்டுத் துண்டைக் கட்டிக்கொண்டு நீரில் இறங்கினேன். கரையில் நாராயணன் நின்றுகொண்டான். ரைஃபிளை மடியில் வைத்துக்கொண்டான்

குடத்தில் நீரை அள்ளித் தலையில் விட்டுக்கொண்டேன். நீர் குளிர்ந்து விரைக்கச்செய்யும்படி இருந்தது. உதடுகள் நடுங்க ஆரம்பித்தன. இந்த நீரில் சோப்பு நன்றாக நுரைக்காது. மீண்டும் நீரை விட்டுக்கொள்ளும்போது எனக்கு அவன் பெயர் நினைவுக்கு வந்தது. நரி என்றுதான் பல மாதங்களாகச் சொல்லி , நினைத்து வருகிறோம். பெயர் மறந்துவிட்டது. 'அப்பு' இந்தப்பக்கம் அப்படி பெயர்கள் பொதுவாகக் கிடையாது. மாது, ராசு என்றுதான் இருக்கும்.

நான் நாராயணனிடம் 'அவன் பேரு என்ன சொல்லு பாப்பம்' .

'சுப்பு இல்ல?'

நான் சிரித்து 'நல்ல போலீஸு வேலை. டேய், அவன் பேரு அப்பு' என்றேன்.

'பேர எங்க சொல்றது?' என்றான் நாராயணன். 'படிச்சிருக்கான்லே...பேசாம எங்கயாம் போயி ஒரு வாத்தியார் வேலைய பாத்துட்டு, ஒரு நல்ல குட்டியக் கெட்டிகிட்டு இருந்திரலாம்ணு தோணியிருக்கா பாரு' என்றான்

'இவன் பெரிய பகத்சிங்குல்ல...மீசையக்கூட அப்டித்தான் வச்சிருப்பானாம்...' என்றேன்

நான் குடத்தில் நீர் அள்ளிக்கொண்டு காவடிபோல மூங்கிலில் மாட்டி இரு தோளிலும் எடுத்துக்கொண்டு மேலேறினேன்.

நாராயணன் என் பின்னால் வந்தான். 'இந்த நாசமாப்போன ஊரிலே இவனுக இப்டி கௌம்பலைன்னாத்தான் ஆச்சரியம். பாத்தியா, ஒருத்தனுக்காவது சோறுதிங்குற களை இருக்கான்னு. பேய்கள மாதிரி இருக்கானுக. இந்த முள்ளுக்காட்டிலே எதை நம்பி உயிரோட இருக்கானுகன்னே தெரியல்லை...' என்றான். நான் மூச்சு இறுக எடை சுமந்ததனால் பதில் சொல்லவில்லை

'இதில அடிமைத்தனம் வேற. பெண்ணாகரத்திலே ஒருத்தன் இருக்கான். என்னமோ ஒரு நாயுடு. எழுநூறு ஏக்கர் நெலம் வச்சிருக்கானாம். அவன் பண்ணையில மட்டும் நாநூறுபேர் வேலைபாக்கானுக. சம்பளம் கூலின்னு ஒண்ணும் கெடையாது. மத்தியான்னம் கேப்பக்களியும் கொழம்பும் உண்டு. வெலமுடிஞ்சு போறப்ப கேப்பையோ சோளமோ அப்ப எது தோணுதோ அது

கொஞ்சம் குடுப்பாங்க. சிலசமயம் புளியங்கொட்டை. அதை வறுத்து ஊறவச்சுத் திங்கானுக. அதுக்கு மொதலாளி மொதலாளின்னு அவன் பண்ணையிலே போயிக் காவல் கெடக்கானுக. அந்தாளு எட்டு குதிர வச்சிருக்கான். நல்ல அசல் குதிர. மாந்தளிர் நெறம். பளபளன்னு அது நிக்கிறதப் பாத்தாலே அழகா இருக்கும். அதிலே ஏறி அவன் போறதப்பாத்தா மகாராஜா கெட்டான்'

'ஏ, அங்க என்னடே செய்தீய?' என்று மேலே பெருமாள் குரல் கேட்டது.

'இவன் ஒருத்தன் மாக்கான்' என்றான் நாராயணன். 'ஒரு விவரமோ முறையோ இல்ல'

நான் 'அவன் கஷ்டப்பட்டு மேல வந்தவன்டா' என்றேன்.

'மேல எங்க ? இப்டிக் காட்டுல துப்பாக்கியோட நிக்குறதுக்கா?' என்றான் நாராயணன்.

'அந்த அன்னக்காவடிங்கள மாதிரி கம்புக்கும் சோளத்துக்கும் அடிம வேல பாக்கறதவிட இது மேலத்தானே? எங்க அப்பாவும் பண்ணைக்கூலியா வேலை பாத்தவருதான்..இப்பதான் ரெண்டேக்கர் குத்தகைக்கு எடுத்துக் குடுத்திருக்கேன்'

'கரும்பா?'

'கொஞ்சம் நெல்லு...மிச்சத்துக்குக் கரும்பு' '

'இந்தப் பண்ணையாரு நாயிடு போனவருசம் ஒரு பொம்புளயக் கொதிக்கிற வெல்லப்பாகிலே போட்டுட்டான் தெரியுமா?'

'அய்யோ' என்று நின்றுவிட்டேன்.

'கரும்பு காய்ச்சுற ஆளோட பொஞ்சாதிதான். அவன் காய்ச்சிட்டு இருக்கிறப்ப இவ அவன் ஒண்ணுக்குப் போன நேரமா பாத்து கஞ்சிச் சட்டியிலே வெல்லப்பாக அள்ளியிருக்கா. பண்ணை பாத்துட்டு வந்திருக்கான். ஏற்கனவே அவனுக்கு சந்தேகம் இருந்திருக்கு. நேரா வந்தவன் 'தேவ்டியா நாயே'ன்னு கத்திட்டு ஓடிவந்து எட்டி ஒரு ஒதை விட்டிருக்கான். அப்டியே உள்ள விழுந்திட்டா...

எனக்கு மூச்சு கெட்டியாக உள்ளேயே இருந்தது. அந்த மேடு செங்குத்தானது.

'எடுத்துப் போட்டிருக்கிறத நான் பாத்தேன். தீயிலே வாட்டின கோளி மாதிரி உருகி உடைஞ்சு கெடக்கா. தூக்கி மண்ணிலே போட்டிருக்கானுக. முகம் முலை கையி காலுண்ணு ஒண்ணும் இல்ல... மொத்தமா கொழமொழன்னு ஆயாச்சு. ஆனா எங்கியோ உசிர் இருக்கு. 'சக்கர சக்கரன்னு' சத்தம் போட்டுட்டு தலைய ஆட்டுறா. அவளோட பையனுக்கு செல்லப்பேரு சக்கரையாம். அவ புருஷன் கையெல்லாம் வெல்லப்பாகுபட்டு வெந்து அந்தப்பக்கம் கெடக்கிறான். அவன் தான் ஓடிவந்து தூக்கினானாம்

'அப்றம்?' .

'என்ன, கொஞ்ச நேரத்திலே செத்துட்டா. கேஸூம் கெடையாது ஒண்ணும் கெடையாது. இன்ஸ்பெக்டரய்யாவுக்கும் ஸ்டேஷனுக்கும் சில்லறை விழுந்திருக்கும், வேற என்ன? அந்த ஆளுங்கதான் நடந்தத சொன்னாங்க...ஏழெட்டுபேர் பாத்திருக்காங்க உதைக்கிறத. எங்கிட்டு போயி சொல்றது? 'சாமி சோறு இருக்கறவனுக்குதானே நாயம்'னு சொல்லுறான். சரிதானே? உனக்கும் எனக்கும் என்ன நியாயம் இருக்கு? மேல உள்ளவன் நக்கச்சொன்னா 'சார் இம்பிடு சக்கர கெடைக்குமா'ன்னு கேக்கணும் நாம...' நாராயணன் சொன்னான். 'டேய் அவ விழுந்த அந்த சக்கரப்பாகைக்கூட வீணாக்காம வெல்லமாக்கிட்டானாம். அதை எவனோ சாமிக்குப் பாயசமா பொங்கிப் படையல் போட்டிருப்பான். சாமியும் கண்ணமூடிட்டு அருள் புரிஞ்சிருக்கும்...என்ன சொல்லுறே?'

பெருமாள் அவனே பாய்ந்து கீழே வந்து துப்பாக்கியை வாங்கிக்கொண்டு கீழே சென்றான். நான் தண்ணீரை இறக்கி வைத்தேன். சப்பாத்தி மாவை எடுத்துப் பிசைய ஆரம்பித்தேன். நாலைந்து உருளைக்கிழங்கும் வெங்காயமும் இருந்தன. மாவை ஊறவைத்துவிட்டு வெங்காயத்தை நறுக்கினேன்.

நாராயணன் கட்டிலில் அமர்ந்துகொண்டான். 'காலாகாலமா இப்டித்தான் இருக்கானுக. மானம் மரியாத ஈன ரோஷம் ஒண்ணும் இவனுகளுக்கு இல்ல. அந்த செத்துப்போன குட்டியக்கூடப் பண்ணைதான் கொஞ்சநாள் வச்சிருந்தானாம். பிறகுதான் இவனுக்குக் கட்டி வச்சிருக்கான். என்னத்தச் சொல்ல?'

'நம்மூரிலயும் எல்லாம் இருவத்தஞ்சு வருசம் முன்னாடி இதே கதைதானே... ' என்றேன். சப்பாத்தியைப் பரப்ப நாராயணன் உதவிசெய்தான். அதன்பின்

அவன் மேலே பேசாமல் தனக்குள் ஆழ்ந்துவிட்டான். நான் விறகடுப்பைப் பொருத்தி சின்னத் தாளால் வீசி வீசி எரியச்செய்தேன். உருளைக்கிழங்கைக் கம்பியில் குத்தித் தீயில் சுட்டேன். தோல் வெந்த கிழங்கு சட்டென்று ஒரு அதிர்ச்சியை அளித்தது. அதைத் தொட முடியவில்லை. அப்படியே நீரில் முக்கி கொஞ்ச நேரம் அமர்ந்திருந்தேன். பின் தோலை வழித்துவிட்டு அதை நசுக்கி மாவாக்கினேன்.

'முருகேசு' என்றான் நாராயணன் 'ஒருவேள இவனும் பகத்சிங்கு மாதிரித்தானோ. நாம என்னத்தைக் கண்டோம்?'

வெங்காயத்தையும் நசுக்கிய உருளைக்கிழங்கையும் உப்பு பச்சைமிளகாயுடன் வாணலியில் போட்டு நன்றாகக் கடைந்து சூடாக்கி வேக விட்டேன். அதன்மீது கொஞ்சம் கடுகு தாளித்துக்கொட்டி இறக்கி வைத்தபின் அந்தத் தீயைக் கனலாக்கி அதிலேயே சப்பாத்தியை வாட்டி எடுத்தேன். ஆளுக்கு ஆறு சப்பாத்தி வரைக்கும் சாப்பிடுவோம். ஆனால் எனக்கு சாப்பிடத்தோன்றவில்லை. நாராயணன் அவனுக்கும் இரண்டு போதும் என்று சொன்னான். பெருமாள் மட்டும்தான் வழக்கம்போலச் சாப்பிட்டான்.

நான் என் ரைஃபிளுடனும் வயர்லெஸ் கருவியுடனும் சென்று வழக்கமான பாறை உச்சியில் அமர்ந்துகொண்டேன். அங்கே ஒரு பெரிய புளியமரம் தனியாக நின்றது. அதன் கீழே தார்ப்பாயால் ஒரு சிறிய மறைப்பு. இருபதடி தூரத்தில் நின்றால்கூட பாறை என்றுதான் தோன்றும். அதன் நிழலில் அமர்ந்துகொண்டு கீழே விரிந்துகிடந்த காட்டைப் பார்த்தேன். பிரம்மாண்டமான பன்றிகள் கிடப்பதுபோல இருபது முப்பது மலைகள் அலையலையாக தூரத்து நீலமலையடுக்குகள் வரை தெரிந்தன. பன்றிகளின் உடலில் மயிர் போல உதிரி மரங்கள்.

அந்த நிலத்தை நான் அங்கே அமர்ந்து நாள் முழுக்கப் பார்க்க ஆரம்பித்து எட்டு மாதமாகிறது. அந்தக்காட்சியை வெறுமை என்ற ஒரே சொல்லில் சொல்லிவிடலாம். காடு என்று சொல்லும்போது நினைவுக்கு வரும் எதுவுமே இல்லை. ஓங்கிய மரங்கள், பசுமை, இருட்டு, ஈரம் ஒன்றும் இல்லை. பெரிய முள்வெளி. உயிரசைவே நிகழாமல் விரிந்து கிடக்கும் நிலம். காலையில் கொஞ்சம் பரவாயில்லாமல் இருக்கும். பத்துமணி வாக்கில் பனி விலகி வெற்று வானத்தில் இருந்து வெயில் கொட்ட ஆரம்பித்ததும் வெறுமை பெருகியபடியே செல்லும்.

மதியத்தில் வானும் பூமியும் சேர்ந்து உருகிக் கண்ணாடிக்குழம்பாகக் கண்கூச ஒளிவிட்டுக்கொண்டிருக்கும். பின்மதியத்தில் நிலம் வெந்த வாசனை காற்றில் எழுந்து வரும். மேமாதம் என்றால் எங்காவது தீப்பிடித்து எரிந்து எரிவாடையும் புகையும் சாம்பல்துகள்களும் காற்றிலேறி வரும். பாறைப்பரப்புகளின் மீது ஈரமாக கானல் அலைபாயும். மாலையில் மெல்ல மெல்ல வானம் சிவந்து பழுத்து தீக்கனல்வெளியாகும். தூரத்தில் மாதேஸ்வரன்மலையடுக்குகள் நீலநிறம் கொள்ளும். நீலம் மேலும் மேலும் அடர்ந்து வரும். காற்றில் குளிர் கலக்கும். பின்பக்கமிருந்து காட்டை நோக்கிப் பறவைக்கூட்டங்கள் பறக்கும் காகிதக்குப்பைகள் போல மிதந்து செல்லும். பின்பு தீனமான பறவைக்குரல்களினாலான அந்தி. இருள் பரவியதும் காட்டின் ரீங்காரம் ஆரம்பிக்கும். அந்த ஒலியே காடாக ஆகி இரவெல்லாம் இருளுக்குள் கூடவே இருக்கும்.

அன்று என்னால் அமர முடியவில்லை. நிலைகொள்ளாமையுடன் கற்களைப் பொறுக்கிப் பள்ளத்தில் வீசிக்கொண்டிருந்தேன். கற்கள் எங்கோ உருண்டு உருண்டு விழும் ஒலி. கொஞ்சநேரம் தூரநோக்கியால் பள்ளத்தாக்கை ஆராய்ந்தேன். என் பக்கவாட்டில் புதரில் இருந்து ஒரு கீரி சாம்பல்நிறமான வாலை விடைத்தபடி இன்னொரு புதருக்குள் ஓடி மறைந்தது. நான் என் சிந்தனைகளை கொஞ்சமும் கவனிக்காமல் இருக்கப் பழகிவிட்டேன். எனக்குள் ஒயர்லெஸ் ஒலிப்பது போல யாரோ யாரிடமோ என ஏதோ உரையாடல் ஓடிக்கொண்டிருக்கும், முற்றிலும் கவனிக்கப்படாமல்.

டப்டப்டப் என்று தூரத்தில் எஸ்டி பைக் ஒலித்தது. கருப்பையாசார் என்று அந்த ஒலி சொன்னது. ஆம், நான் அவரை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். ஏதோ நடக்கப்போகிறது என்று என்னுடைய உள்மனம் சொல்லிக்கொண்டிருந்தது. எழுந்து தூரநோக்கியால் பார்த்தேன். பைக் வளைவில் திரும்புவது தெரிந்தது. அதில் சீருடையும் கறுப்புக்கண்ணாடியுமாக கருப்பையா வந்துகொண்டிருந்தார். நீலப்புகை அவர் வந்த வழிகளில் தேங்கி நின்று நீரில் துப்பிய பற்பசைநுரை போல மெல்லப் பிரிந்தது.

நான் கூடார வாசலுக்குச் சென்றபோது கருப்பையா வந்து சேர்ந்திருந்தார். நாராயணனும் பெருமாளும் அவரை உள்ளே அழைத்துச்சென்றார்கள். மடியில் கிளிப் விடுவித்து வைத்திருந்த துப்பாக்கியைப் பூட்டி இடுப்பில்

செருகியபின் அவர் கட்டிலில் அமர்ந்து கொண்டார். அவரது உடல் அளவுக்கு நாற்காலி போதாது.

நான் வாசலில் நின்றதும் ‘வாடா...எப்டிரா இருக்கே?’ என்றார்.

‘இருக்கேன் சார்’ என்றேன்.

கரிய முகத்தில் பெரிய வெண்ணிறப் பற்கள் தெரிய சிரித்து ‘நீ இருக்கேன்னு உன்னையப்பாத்தாலே தெரியுதுடா நாயே...’ என்றார்.

நான் நாற்காலியில் அமர்ந்துகொண்டேன். நூற்றுக்கணக்கான சிறு மருக்களும் பாலுண்ணிகளும் நிறைந்த கழுத்தும் முகமும், நெற்றியே இல்லாமல் நெருங்கி வந்த அடர்ந்த முள்ளம்பன்றி மயிரும் பரந்த மூக்கும் இருந்தாலும் கருப்பையா முகம் ஏதோ ஒரு களையைக் காட்டக்கூடியது. அவருக்கு நம்மை உண்மையிலேயே பிடிக்கும் என்பதனால் இருக்கலாம்.

‘டீ சாப்பிடுங்க சார்’ என்றேன்.

‘போடு’ என்றார்.

நாராயணன் ஸ்டவ்வை மூட்டி டீ போட ஆரம்பித்தான்.

‘என்னசார் செய்தி?’ என்றேன்.

‘வக்காளி, அப்ப நீ மைக்க கேக்கலியா?’

‘கேட்டேன்’

‘பின்ன?’

‘அதிலே மேக்கொண்டு என்ன?’

‘மேக்கொண்டு என்ன, பொலிதான்’

நான் பேசாமல் இருந்தேன்

‘என்ன?’

‘இல்ல சார்...’

‘என்ன இல்ல?டேய் அவனுக நம்மாளப் போட்டிருக்கானுகடா’

‘எத்தனை பேர சார்?’

‘ஏன் திருப்பத்தூரிலே வில்சனை குண்டுவீசி கொல்லலை?’

‘மொத்தம் இதுவரை மூணுபேரு...நாம இருபது முப்பதுபேர கொன்னாச்சே’

‘டேய் அந்தக்கணக்கப் போட்டிட்டிருந்தா வேலைக்காவாது. நாம அடிச்சாத்தான் நமக்கு அடிவிளாது, கேட்டியா?’

நான் ஒன்றும் சொல்லவில்லை. கருப்பையா மிக எளிமையான மனம் கொண்டவர். அவருக்கு என்ன சொல்லப்படுகிறதோ அதை முழுக்க நம்பி அதாகவே ஆகிவிடுபவர். அவரைப்போன்றவர்கள்தான் போலீஸுக்குத் தேவை போல.

‘சண்டை உண்டா சார்?’ என்றான் பெருமாள்.

‘சண்டையெல்லாம் இல்லடா. அவனே வந்து சரண்டர் ஆயிட்டான்’

‘உண்மையா?’

‘ஆமா...ஆனா சும்மா சரண்டர் ஆயிடுவானா? ஆக வச்சோம்ல? தாளிய தேட ஆரம்பிச்சு எட்டுமாசமாகுது. எப்டியும் முந்நூறுபேர இண்டராகேட் பண்ணியாச்சு. ஒருத்தன்கூட மூச்சு விடலை. டேவ் எங்கள போட்டு வையறார். காதுகுடுத்துக் கேக்கமுடியாது. என்ன பண்றது? இனிமே பண்றதுக்கு ஒண்ணுமில்ல... இந்த சனியனுங்களோட ஆசனவாயிலயும் பொச்சிலயும் போடுறதுக்கு வாங்கின மொளகாப்பொடிக்கு தனி பில்லு எளுதணும்னு மாதையன் அண்ணைக்கு சொல்லி ஒரே சிரிப்பு பாத்துக்க... அடி, ஒதை, கொல்லு, நகத்த பிடுங்கு, சுண்ணியிலே ஈக்குச்சிய விட்டு சொளட்டு . என்ன பண்ணினாலும் ஒரு வார்த்தை சொல்லமாட்டானுக. சில கல்லுளிப்பயக்க ‘சொல்ல மாட்டேன் சாமி. அவரு எங்க கொலதெய்வம் முனியப்பசாமியாக்கும்னு நம்மகிட்டயே சொல்றான்...’

பெருமாள் ‘திமிரு’ என்றான்.‘சர்க்காருண்ணாக்க வெளையாட்டா நினைச்சுக்கிட்டானுக’.

கருப்பையா ‘அப்பதான் மெட்ராஸிலே இருந்து மோகன்ராஜ்சார் காம்புக்கு வந்தார். இப்டி ஒரு பேரு அவனுக்கு இருக்குன்னா அவனுக்கும் இதே மாதிரி ஒரு பிரியம் இவங்கமேலே இருக்கணும்டா...ஒரு வழி இருக்கு. அதுக்கு ஆப்பரேஷன் ஸ்மோக்குன்னு பேருன்னார். பாம்ப புடிக்கறதுக்கு இருளர் பயக்க பொந்திலே பொகை போடுவானுங்க இல்ல, அதே டெக்னிக்கு. நேரா நாலு நியூஸ் பயக்கள வரச்சொல்லி பேப்பரிலே தெனமும் வகை வகையா எளுதவச்சாரு. போலீஸ் கொடுமை, போலீஸ் சித்திரவதை. அப்புவத் தேடி

போலீஸ் கிராமவாசிகளை அடிச்சு கொன்னிட்டிருக்காங்க... பொம்புளப்புள்ளைகளக் கொண்டு போயிக் கற்பழிக்கிறாங்க. பொச்சில ஆசிட்ட விடுறாங்க...தெனம் நியூஸுதான். பத்தே நாளு. நேரா வந்து நிக்கிறான்...'

'எங்க?'

'இங்க இல்ல. மாரண்டஹள்ளி ஸ்டேஷனிலே... சவத்துப்பய கொள்ளேகால், ராம்நகர் பக்கம் அலைஞ்சிட்டிருந்திருக்கான். நேத்து மத்தியான்னம் மூணு மூணரை மணிக்கு ஸ்டேஷனிலே ஒரு ஜோல்னாபையோட வந்து நின்னிட்டிருக்கான். நான்தான் அப்புன்னு சொன்னான். அங்க இருந்தது ராஜப்பாவும் முருகேசனும். அதான்யா மீசக்காரரு. அவருக்கு சந்தேகம். புடிச்சு வச்சுட்டுத் தகவல் குடுத்தாரு. கோபால் போயி பாத்ததும் தெரிஞ்சுட்டுது. எழுவத்தேழிலே அவனை இவுருதான் முதல்ல ஒரு சின்ன கேஸுக்கு இண்டராகேட் பண்ணியிருக்காரு... நான் சரண்டர் ஆயாச்சு. எங்க ஊர்க்காரங்கள விட்டிருங்க. அவங்கள ஒண்ணும் பண்ணாதீங்கன்னு சொன்னானாம். நேரா தர்மபுரிக்குக் கொண்டு போய்ட்டாங்க. அங்க டிஎஸ்பி வந்து பாத்தாரு. அவருகிட்டயும் அதைத்தான் சொல்லியிருக்கான். கலெக்டர் வந்து பாத்தப்பவும் அதேதான். வேற ஒண்ணுமே சொல்லலை. 'உங்களுக்கு என்னைத்தானே வேணும். எங்க சனங்கள ஒண்ணும் பண்ணாதீங்க' பாத்தியாடா திருட்டுநாயிக்கு அவன் சனங்க மேலே என்ன ஒரு இதுண்ணு? நம்ம தலைவனுங்க இருக்கானுங்களே'

'டேவ் வந்தாச்சா?' என்றான் நாராயணன்.

டீயை வாங்கி உறிஞ்சியபடி 'அவரு சேலத்திலேதான் இருந்திருக்காரு. நேத்து சாயங்காலமே வந்தாச்சு. அவரு ஒரு நாலுமணிநேரம் இண்டராகேட் பண்ணியிருக்காரு. கொட்டைய உடைச்சாச்சு. 'எங்காளுகள விட்டிருங்க...எனக்கு வேற ஒண்ணும் தெரியாது' ரெண்டு வரிதான். விடியக்காலையிலே மோகன்ராஜ் சார் மெட்ராஸிலே இருந்து வந்திருக்காரு. அவரு ஒரு மணிநேரம் உக்காந்து பேசியிருக்காரு. வெளிய வந்து 'வைப் அவுட் ஹிம்'னு சொல்லிட்டுக் காலையிலேயே சேலம் போயிட்டாரு.'

'அப்ப அவ்ளவுதானா?'

'பின்ன? டேய் இதோட இங்க இவனுகளுக்க கதை முடியுது. இன்னும் ஒரு ஏழெட்டுப் பேரு இருக்கானுக. லிஸ்டு போட்டாச்சுன்னு பேச்சு.

இவன்கூட்டாளி பாலன்னு ஒருத்தன், அவன் ராயப்பேட்டையிலே இருக்கிறதா சொல்றாங்க. அவனை ஃபாலோ பண்ணிட்டிருக்காங்க. அப்டியே கொத்தா தூக்கிருவாங்க' டம்ளரைத் திருப்பிக்கொடுத்துக் கருப்பையா மீசையை முறுக்கினார். 'இங்க வந்து ஏற்பாடுகள் செய்றதுக்கு ஆர்டர் வந்திருக்குடா'

என் வயிறு தோல்பறைபோல அதிர்ந்தது. 'இங்கியா?'

'பின்ன? நம்ம டிஸ்டிரிக்டிலே வேற எங்க இந்த மாதிரி எடமிருக்கு? இங்கதான். நடுராத்திரியிலே கெளம்பி நாளைக்கு விடிகாலையில வந்திருவாங்க. அதுக்குள்ள செய்ய வேண்டியத செய்யணும்.'என்றார்

நான் பேசாமலேயே அமர்ந்திருந்தேன்

'என்ன?'

'எஸ் சார்'

கருப்பையா நாராயணனிடம் 'நீயும் கூட போடா...சீக்கிரம். இங்க அவனுக வந்து சேரறதுக்கு சாயங்காலமாயிடும். காலையிலே குழி ரெடியா இருக்கணும்'

நான் 'எஸ் சர்' என்றேன்.

'நான் இங்கியே இருக்கேன். பெருமாள் உங்கிட்ட சரக்கு இருக்குல்ல?'

'இருக்கு சார்'

'பொறிகிறி வச்சு காட்டுகோளி காடை கௌதாரி எதுனா போடுவீங்களாடா?'

'சிக்குறதில்ல சார். இங்க பறவைகளே கம்மி'

'என்னத்த காடோ என்ன எளவோ. மசிரு, சஹாராபாலைவனம் கெட்ட கேடாட்டுல்லடா இருக்கு'

நானும் நாராயணனும் மண்வெட்டிகளை எடுத்துக்கொண்டோம். பெருமாள் பிகாக்ஸை. 'குடிக்கத் தண்ணிய எடுத்துக்குங்கடா' என்றார் கருப்பையா.

நாங்கள் இருபக்கமும் முட்கள் நீட்டி நின்ற இடுங்கிய பாதை வழியாக நடந்தோம்.

'டேய், இதென்ன கட்டப்பாறை மாதிரில்லடே இருக்கு தரை....பன்னண்டடி ஆழம் வேணும்னு சொல்றானே நம்மாளு?' என்றார் கருப்பையா.

‘பன்னண்டடியா? என்னது கெணறா வெட்டச்சொல்லுதாரு?’ என்றான் பெருமாள்

‘இல்லடே....காடுல்ல...ஏதுனா நாயோ நரியோ வந்து இளுத்துப்போட்டுட்டா வம்பாப்போயிரும்...அதான்..’

‘இங்க பன்னிரண்டடி வெட்ட ஒரு வாரமாவும் சார்’

‘வெட்டுங்கடே..நானும் வேணுமானா நின்னு ஒரு பிடி பிடிக்கேன்...எளவு மேலே உள்ள தெய்வங்கள்லா சொல்லுது...தொப்பிபோட்டவன் மறுத்துபேசமுடியுமாடே?’

பாறை இல்லை என்று தெரிந்த இடத்தைத் தேர்வுசெய்தோம். பெருமாள் பிக்ஆக்ஸால் நீள்சதுர வடிவத்தில் அடையாளப்படுத்திக்கொண்டான்

‘ஆரம்பிங்கடா...’ என்றார் கருப்பையா. ‘உஸ்ஸ்’ என்று அங்கே ஒரு சிறிய பாறையில் அமர்ந்துகொண்டார். ‘தண்ணிய எடுடா’ தண்ணீரைக் குடித்து கொஞ்சத்தைத் தலையில் விட்டுக்கொண்டார்.

நாராயணன் பிகாக்ஸால் எடுத்து நிலத்தை ஒருமுறை தட்டிவிட்டு, விலா எலும்புகள் தோலுக்குள் அலையலையாக ஓட தலைக்குமேல் அதை தூக்கி சட்டென்று வெட்டினான். மிகச்சரியாக நாராயணன் வரைந்த செவ்வகத்தின் கிழக்குமூலைப்புள்ளியில் வெட்டு விழுந்தது.

நாராயணன் வெட்ட பெருமாள் மண்ணை அள்ளி கொட்டினான். பின்னர் பெருமாள் வெட்ட நாராயணன் மண்ணை அள்ளிக்கொட்டினான். நான் மண்ணை அள்ளிக் குவித்தேன்.

‘சரக்க எடுடா பெருமாளு’ என்றார் கருப்பையா. அவர் வெற்றுச் சாராயமாகவே குடிக்கக்கூடியவர். மூவரும் அமர்ந்துகொண்டோம். நான் கொஞ்சம் தண்ணீர் சேர்த்துக்குடித்தேன். நாராயணனும் பெருமாளும் வேண்டாம் என்றார்கள். .

முழங்காலளவு ஆழம் வந்தபோது இருட்டிவிட்டது. நான் அரிக்கேன் விளக்கைக் கொளுத்தி மரக்கிளையில் மாட்டினேன். காட்டுக்குள் இவ்வளவு பறவைகள் இருக்கும் என்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. விளக்கொளி அவற்றை பயமுறுத்தியதனால் மரங்களுக்கு மேலே அவை கலைந்துகலைந்து எழுந்து அமர்ந்துகொண்டிருந்தன. புதர்களுக்குள் சரசரவென்று எவையோ சென்றன. பெருமாள் காகிதத்தில் சுருட்டிக்

கொண்டுவந்திருந்த சப்பாத்திகளை எதுவும் தொட்டுக்கொள்ளாமல் சாப்பிட்டோம். நாராயணன் சென்று கொஞ்சம் புளியமரத்தளிர்களைப் பறித்துக்கொண்டுவந்து அவற்றை சப்பாத்தியுடன் சேர்த்து மென்று தின்றான். இருவரும் மீண்டும் கொஞ்சம் சாராயம் குடித்துக்கொண்டார்கள்.

இடுப்பளவுக்குமேல் மண் இறுகி இருந்தது. வெட்டு விழும்போது அந்தப்பகுதி முழுக்க மண்ணின் அதிர்வு பரவியது. இரவு ஏற ஏற நன்றாகவே குளிர் அடித்தது. நாராயணன் சென்று ஒரு காய்ந்த மரத்தைத் தூக்கி வந்து பிக்ஆக்ஸாலேயே உடைத்துப் போட்டுத் தீமூட்டினான். தீயருகே நாங்கள் சூழ்ந்து அமர்ந்து கொண்டோம். பெருமாள் டீத்தூளும் சீனியும் கொண்டுவந்திருந்தான். தகரக்கோப்பையைத் தீமேல் காட்டி நீரைக் கொதிக்கச்செய்து கறுப்புடீ போட்டு நாராயணன் பெருமாள் இருவரும் குடித்தார்கள்.நான் சாராயத்தை லேசாக சூடு படுத்திக் குடித்தேன்.

கருப்பையா படுத்துவிட்டிருந்தார். என் உடல் அந்தக்குளிரிலும் கொதித்து வியர்வை வழிந்தது. மூவரும் வாயாலும் மூக்காலும் மூச்சுவிட்டுக்கொண்டிருந்தோம். என் காதுகளும் கண்களும் கூட மூச்சை சீறுவதுபோல உணர்ந்தேன்

சற்று அமர்ந்து கொண்டேன். வானத்தில் நிறைய நட்சத்திரங்கள். நான் முழக்கோல் நட்சத்திரத்தை மட்டும் அடையாளம் கண்டேன். பொட்டலில் ஆடுமேய்க்கச்சென்று பட்டி அடித்துத் தங்கும்போது அப்பச்சி நிறைய நட்சத்திரங்களுக்குப் பெயர் சொல்லித் தந்திருக்கிறார். எல்லாம் மறந்து போய்விட்டது. ஆனால் வானம் வெள்ளாட்டுக் கூட்டங்கள் மேயும் ஒரு பெரிய பொட்டல் என்று நினைப்பது மட்டும் மனதில் தங்கிவிட்டது.

‘டேய் எந்திரி…. இந்தா நாலடி ஆகல்லை… வெள்ளிமீனு இப்ப வந்திரும்’

நள்ளிரவு தாண்டியபோது குழி ஆறடிக்குக் கீழே சென்றிருந்தது. நாராயணன் இரு மரக்கிளைகளை வெட்டிக் குறுக்கே குச்சிகள் வைத்துக் கட்டி ஏணி செய்திருந்தான். கூடைகளில் நாராயணன் வெட்டித் தூக்கி வந்து கொடுத்த மண்ணைப் பெருமாள் வாங்கிக் கொட்டினான். குளிரிலும் இருவரது வெற்று உடம்புகளும் வியர்வையில் பளபளத்தன. பேச்சே இல்லாமல் இருவரும் பேய்கள் போல வேலைசெய்துகொண்டிருந்தார்கள். நான் இன்னொரு பெரிய மரத்தடியைத் தூக்கி நெருப்பில் போட்டேன்.

சட்டென்று பெருமாள் தன் கையில் இருந்த கூடையை சுழற்றி வீசினான். ஓடிப்போய்அந்தக் கூடையை அழுத்திப்பிடித்துக்கொண்டான். 'என்ன?' என்றேன்.

'முசல்' கூடையை மெல்ல இரண்டு இஞ்சு தூக்கியபோது முயல் வெளியே பாயமுயன்று காதுகளை வெளியே விட அவன் அதன் காதைப்பற்றிக்கொண்டான்.

சாம்பல்நிறமான குண்டு முயல். கைக்குழந்தைபோல கைகால்களை வைத்துக்கொண்டு பஞ்சுபோல அடிவயிற்றுடன் நெருப்பு பிரதிபலித்த சிறியமணிக்கண்களுடன் பார்த்தது. வால் வெட் வெட் என ஆடியது. பெரிய முன்பற்கள் தெரிய அது முறுவலிப்பதுபோல தோன்றியது. பெருமாள் அதைக் காலால் மிதித்துப் பிடித்துக்கொண்டு கழுத்தை வேகமாக முறுக்கி முறித்தான். கால்கள் உதறிக்கொண்டபின் அடங்கியது. அவன் இடுப்பில் இருந்து கத்தியை எடுத்து அதன் வெண்ணிறமான வயிற்றை கிழித்து குடலை கையாலேயே பிய்த்து வெளியே பிடுங்கி புதரில் வீசினான். ஒரு குச்சியை எடுத்து அதில் அதை செருகி தீயில் காட்டி சுட ஆரம்பித்தான்.

நாராயணன் மேலே ஏறி வந்தான். சாராயப்புட்டியைக் கையோடு எடுத்துவந்தான். இருவருமாக அதை மிதமான சூட்டில் சுட்டார்கள். அதன் தோல் கருகி வழிந்து கொழுப்பு தீயில் சொட்டி தீ நீலமாக வெடித்தது. சூடான முயலை வெளியே எடுத்துக் கருகிய காதுகளையும் கால்களையும் பிய்த்து முறுமுறுவென அப்பளம் வற்றல் தின்பது போலத் தின்று புட்டியில் இருந்து சாராயத்தையும் குடித்துக்கொண்டார்கள்.

கடைசித்துளி சாராயத்தையும் குடித்துவிட்டு மீண்டும் வேலையை ஆரம்பித்தார்கள். நான் எத்தனையோ காலமாக, பிறந்ததில் இருந்தே அங்கே மண்ணை வாங்கிக்கொட்டிக்கொண்டிருப்பதுபோல உணர்ந்தேன். என் உடல் வியர்வையாக உருகிச் சொட்டிக் கொண்டிருந்தது. இருட்டுக்குள் யார்யாரோ என்னைப் பார்த்துக்கொண்டிருப்பதாகத் தோன்றியது.

எங்கள் நிழல்கள் சுற்றியிருந்த இருண்ட காட்டின் திரையில் பெரிய சினிமா போல ஆடிக்கொண்டிருந்தன. பூதங்கள் போல. நடுவே தீ தழல்விட்டது. சிலசமயம் எதையோ சொல்ல வருவது போல வெடித்தது. பின்னர் எரிந்து கனன்று சாம்பல் மூடி அணைந்தது. பூனைபோல உர்ர்ர் என்று ஒலித்துக்கொண்டிருந்தது. எவ்வளவுநேரம்,எவ்வளவு மண்!

மலையிறங்கி வந்த குளிர்காற்றில் கங்கு சிவந்து சீறித் தழல் எழுந்தது. மேலே நின்ற நாராயணன் என்னிடம் 'சோலி முடிஞ்சுது' என்றான்.

நான் சென்று எட்டிப்பார்த்தேன். 'எவ்ளவு ஆழம் வரும்டா?'

அவனைவிட நான்கு அடிக்கு மேல் ஆழம் இருந்தது

'பத்தடி' என்றான்.

'பன்னிரண்டு அடிவேணும்ல?

'இன்னும் தோண்டினா நீயும்நானும் இதிலே அடங்கிருவோம்...போதும்'

'இல்ல...வந்து பாத்ததுமே வாயால பீய கக்க ஆரம்பிப்பானுக....வெட்டலாம்டா'

பெருமாள், 'ஒரு ரெண்டடிதானே...' என்றான்

'என்னடா பொழைப்பு இது...நாம யாரு? அடிமையா, வெட்டியானா?'

நான் ஒன்றும் சொல்லவில்லை. மூர்க்கமான வேகத்துடன் வெட்டிக்கொண்டிருந்தோம். ஒரு கட்டத்தில் நான் நினைவிழந்து மண்வெட்டியுடன் அப்படியே விழுந்துவிட்டேன். அவர்கள் இருவரும் உடனே அந்த வெட்டிப் போட்ட மண்ணிலேயே படுத்து உடனே தூங்கிவிட்டார்கள்.

நான் எழுந்தபோது தீ சிவந்த ஒற்றைக்கண் போல இமைத்துக்கொண்டிருந்தது. தீயைப் பார்த்துக்கொண்டே அமர்ந்திருந்தேன். தண்ணீர் குடித்தேன். எழுந்துசென்று சிறுநீர்கழிக்க அமர்ந்தபோது புதருக்குள் மெல்லிய பளபளப்புடன் அசைவைக் கண்டு எழுந்து நின்றேன். பாம்புதான். அந்த முயலின் குடலை விழுங்கிக்கொண்டிருந்தது. அதையே பார்த்தேன். உணவை மொத்த உடலாலும் வளைந்து நெளிந்து அது உள்ளே செலுத்தியது. பதற்றமா ருசியா என்று தெரியவில்லை, வால் நெளிநெளிந்தது. அது திரும்பிச் செல்லும்வரை அமர்ந்திருந்தேன்

கொஞ்சநேரத்தில் காற்று கீழிருந்து வர ஆரம்பித்தது. அப்போது குளிர் கொஞ்சம் குறைந்தது. வந்தகாற்றில் நீர் மணம் இருந்தது. ஒகேனேக்கல் அருவிகளின் ஓசை மெலிதாகக் கேட்டது. காற்று பலமாக வீசியபோது நன்றாகவே கேட்டது. காற்று நின்றதும் குளிர் கூடும் விந்தையை கவனித்தேன். கீழ்வானில் விடிவெள்ளி தெரிகிறதா என்று பார்த்தேன். கொஞ்சம் மேகம் இருக்கும்போல. தெரியவில்லை. காத்திருந்தேன். விடிவெள்ளி தெரிந்ததும் இன்னொரு கருப்பு டீ போட்டுக் குடித்தேன்.

‘டேய்,எந்திரிங்கடா...இன்னும் ஒரடி...டேய்’ என அவர்களை எழுப்பினேன்.

பெருமாள் செக்கச்சிவந்த கண்களால் என்னைப்பார்த்து ‘என்னடா?’ என்றான்

‘குழிடா...வா..’

‘என குழி?’

‘டேய் எந்திரிடா’ என்று ஓங்கி ஓர் உதை விட்டேன்

பெருமாள் குழியை அப்போதுதான் பார்த்தான். பதறி எழுந்து பிக்ஆக்ஸை எடுத்தான்.

மண் இப்போது சற்றே ஈரப்பசையுடன் , சுண்ணாம்பு மணத்துடன் இருந்தது. பெருமாள் ஒரு கல்லை எடுத்து வாயில்போட்டுக்கொண்டான்

‘என்னடா?’

‘கல்கண்டுக்கல்லுடா...குளிர்ச்சியா இருக்கும்...தேரைக்கல்லுண்ணு எங்கப்பா சொல்லுவாரு..’

பெருமாளின் சாதி தொம்பர்சாதி. தலைமுறை தலைமுறையாகக் கிணறுவெட்டுவதுதான் வேலை. இப்போது எவரும் கிணறுவெட்டுவதில்லை. கக்கூஸ்தான்.

வானத்தில் சிவப்புத்தீற்றல்கள் எழ ஆரம்பித்தன. எங்கள் கைகளில் தொடுஉணர்ச்சிகூட இல்லை.

‘பன்னிரண்டடி இருக்கும்டா’

‘அரையடி கூட்டியே வெட்டிருவோம்டா...வம்பு எதுக்கு’

குழி தயாரானபோது நிழல்களே இல்லாத மெல்லிய காலைவெளிச்சத்தில் காடு துல்லியமாக இருந்தது. ஒவ்வொரு முள்நுனியையும் துல்லியமாகப் பார்த்துவிடலாம்போலிருந்தது. காற்று அங்கேயே சுற்றிச்சுற்றி வந்தது. சின்னக்குழந்தை விளையாடுவதுபோல.

நான் புதருக்குள் சென்று சிறுநீர் கழித்துக்கொண்டிருந்தபோது ஒயர்லெஸ்ஸில் ரீங்காரத்துடன் கருப்பையாவின் எண் அழைக்கப்படுவதைக் கேட்டேன். ‘பி த்ரீ பித்ரீ டிகெ டிகெ ஓவர். பி த்ரீ பித்ரீ

டிகெ டிகெ ஓவர் கேக்குதா….பி த்ரீ பித்ரீ டிகெ டிகெ ஓவர் அய்யா பேசணும்கிறாங்க…சார். பி த்ரீ டிகே..சார்.. பி த்ரீ பித்ரீ டிகெ டிகெ ஓவர்’

நான் சென்று கருப்பையாவை எழுப்பினேன். அவர் ‘ப்போ ’ என்று குழறித் திரும்பிப்படுத்தவர் நான் மீண்டும் உசுப்புவதற்குள் சட்டென்று எழுந்து அமர்ந்து ‘கால் வந்திருக்கா?’ என்றார்.

நான் வயர்லெஸைக் கொடுத்தேன்.

‘பி த்ரீ டிகெ ஸ்பீங்கிங்…ஓவர்…’ என்றார். ‘அய்யா’ என்றார் ‘ஆமாங்கய்யா எல்லாம் ரெடி…ஆமாங்கய்யா .காட்டுக்குள்ள. இல்லீங்கய்யா ….ஆமா . மூணுபேருங்கய்யா…ஆமாங்கய்யா.. ஆமாங்கய்யா’

எழுந்து ‘மூணு மணிக்கே கெளம்பிட்டாங்கடா…இன்னும் ஒன்னவரிலே வந்திருவாங்க…போயி கக்கூஸ் கிக்கூஸ் போயி பல்லக்கில்ல வெளக்கி ரெடியா இரு…..நாம டெண்டுக்கு போவம்’ என்றார்.

நான் பெருமாளையும் நாராயணனையும் எழுப்பினேன். பெருமாள் வழக்கம் போல எழுந்து ஒன்றும் பேசாமல் சிறுநீர் கழிக்கச்சென்றான்.

நானும் கருப்பையாவும் காட்டுக்குள் நடந்து கொஞ்சம் முட்கீறல்களுடன் டெண்டுக்கு வந்து சேர்ந்தோம். கருப்பையா உள்ளே சென்று ‘துண்டு, சோப்பு இருக்காடா?’ என்றார்.

‘இருக்கு சார்’ என்று எடுத்துக்கொடுத்தேன். கீழே ஓடைக்குச் சென்று மலம்கழித்துப் பல்தேய்த்தோம்.

கருப்பையா ‘அம்மா …’ என்று வீரிட்டபடியே இருந்தார். ‘டேய், மூலம் இல்லா போலீஸ்காரன் ஒளுங்கா வேலைசெய்யலேண்ணாக்கும் அர்த்தம் கேட்டியா?’ என்று அவர் சொல்வதுண்டு.

திருப்பி ஏறும்போது கருப்பையா பலமுறை நின்று மூச்சுவாங்கினார். அவரது எடையுடன் அவர் ஏறுவதே ஆச்சரியம்தான். நான் டீ போட்டுக்கொண்டிருந்தபோது வயர்லெஸ்ஸில் ஜீப் நெருங்கிவிட்ட செய்தி வந்தது.

நான் திடீரென்று ஒன்று தோன்றி மலைப்பாதையில் மேலே சென்றேன். இரு வளைவுகள் முன்னால் சென்று நின்றேன். செம்புழுதி பின்பக்கம் சுருண்டு எழ ஒரு ஜீப்பும் வேனும் வருவதைக் கண்டேன். தூரத்துக் காட்டுக்குள் அப்போதுதான் விடிய ஆரம்பித்திருந்தது. பனிமூட்டம் விலகவில்லை.

வண்டிகள் பனியின் திரையில் இருந்து புதிதாக உருவாகி வருவது போல வந்தன.

வேனும் ஜீப்பும் முன்னால் சென்று முகாமை அணுகின. நான் பின்னால் ஓடினேன். சரிவிறங்கி அவை எட்டும் முன்னரே முகாமுக்கு முன் வந்துசேர்ந்தேன்,

ஜீப்பும் வேனும் வந்தன. அலையில் படகு போல வந்த ஜீப்பின் ஓரத்தில் டிஎஸ்பி அமர்ந்து சிரித்துக்கொண்டே என்னிடம் 'என்னய்யா?' என்றார்.

நான் புன்னகை செய்தேன். முகாமுக்கு முன்னால் ஜீப்பும் வேனும் நின்றன. கருப்பையாவும் பெருமாளும் ஓடிவந்தனர். நாராயணன் டீ போடுகிறான் என ஊகித்தேன்.

டிஎஸ்பி இறங்கிக் கைகளைத் தூக்கி சோம்பல் முறித்தார். 'என்ன கருப்பு எப்டி இருக்கே?'

'நல்லா இருக்கேங்கய்யா'

'மெலிஞ்சுபோய்ட்டியே'

கருப்பையா நெளிவது போல பாவனைசெய்து சிரித்தார்.

பின்னால் இறங்கி வந்த எஸ்ஐ கண்ணப்பன் 'நாலுவேளைக்கு மேலெ சோறு எறங்கலையாம்... வருத்தப்படுறார்' என்றார்.

டிஎஸ்பி உரக்கச்சிரித்தபின் கருப்பையா சிரித்தமுகமாக இருக்கும்போதே சட்டென்று சீரியஸாகி 'என்ன வேலை முடிஞ்சாச்சா?' என்றார்.

'முடிஞ்சாச்சு சர். ரெண்டுபேர் அங்க நிக்கிறாங்க' என்றார் கருப்பையா சிரிப்பை அணைத்து.

'அப்ப அயிட்டத்த நேரா அங்கியே கொண்டு போயிருவோம். டைமில்ல. விடிஞ்சிரும் இப்ப' என்றபின் கண்ணப்பனிடம் 'எறக்குய்யா' என்றார்.

நான் மனம் படபடக்க வேன் கதவைப் பார்த்தேன். டிஎஸ்பி கண்காட்டவும் ஜீப்டிரைவர் சாமிக்கண்ணு வேனுக்கு அருகே சென்று கதவைத் திறந்தார். சில கணங்கள் எனக்கு வெறும் உடலசைவுகள்தான் தெரிந்தன. இரு காக்கி உடைகள் வெளியே வந்தன. ஆயுதப்படைக் காவலர்கள். அவர்கள் உள்ளே இருக்கை நடுவே இரும்புத்தரையில் படுத்திருந்த ஒர் இளைஞனை சாக்குமூட்டையை இழுப்பது போல இழுத்து வெளியே போட்டார்கள். கீழே

விழுந்ததும் அவன் முனகியபடி மெல்ல அசைந்து எழுந்து அமர்ந்து வேனின் திறந்த கதவைப் பிடித்துக்கொண்டான்.

கரிய இளைஞன். இன்னும் கனக்காத பூச்சு மீசை. அடர்த்தி குறைந்த மென்மையான தலைமயிர் நெற்றிமேல் விழுந்து கிடந்தது. மெலிந்த உடல். கழுத்திலும் மார்புக் கூட்டிலும் எலும்பு தெரிந்தது. இவனா என்று தோன்றியது. தருமபுரியில் ஏதாவது கல்லூரியில் பீஏ சரித்திரம் படிக்கிறான் என்று சொல்லியிருந்தால் நம்ப முடியும்.

‘எந்திரிடா’ என்று டிஎஸ்பி அவனை உதைத்தார். அவன் கதவைப் பிடித்துத் தள்ளாடி எழுந்து நின்றான். வெள்ளை வேட்டியும் வெள்ளைச் சட்டையும் அணிந்திருந்தான். அது முழுக்க ரத்தம் காய்ந்து கரிய விழுதுகளாகிப் படிந்திருந்தது. உதடுகள் உடைந்து வீங்கி ரத்தக்கட்டி போல தொங்கின. இடதுகாதுமடல் கிழிந்து பிளந்து நின்றது. அவன் கொஞ்சம் தள்ளாடியபின் மீண்டும் விழுந்துவிட்டான். கண்ரப்பைகள் வீங்கி நீலம்பாரித்திருக்க கண்களுக்குக் கீழே நீர்ப்பைகள் தொங்கின

டிஎஸ்பி ‘டேய், அவன் நடந்துக்கிட மாட்டான்...தூக்கச் சொல்லுங்க’ என்றார். ‘அந்த வேட்டிசட்டைய அவுத்துடுங்க..டிரெஸ் ஒண்ணும் வேண்டாம்... அப்றம் அது வேற எசகுபெசகா எவிடென்ஸ் ஆயிடப்போகுது’ .

இரு ஆயுதப்படைக்காரர்களும் அவனைக் கீழே புரட்டி அவன் சட்டையையும் வேட்டியையும் கழட்டினார்கள். உள்ளாடைகள் ஏதும் இல்லை. அவன் நிர்வாணமாக மண்ணில் கிடந்தான். உடம்பு முழுக்க வரிவரியாக அடிபட்டுக் கன்றிய, தோல்கிழிந்து குருதியுடன் உலர்ந்த வடுக்கள். இடைவெளியே இல்லாமல் கால் முதல் முகம் வரை அவை பரவியிருந்தன. உடலில் ஒரு சிறைக்கூண்டு படிந்ததுபோல. பத்து கைவிரல்களும் பத்து கால்விரல்களும் நுனிகளில் ரத்தத்துடன் சதைந்து வத்தல் மிளகாய்கள் போல இருந்தன.

‘டேய் அவனுக்குத் தண்ணியோ டீயோ வேணுமானா குடு’ என்றார் டிஎஸ்பி

நான் அவனிடம் குனிந்து ’தண்ணி?’ என்றேன்

அவன் தலையசைத்தான்

‘டீ சாப்புடுறியா?’

‘ம்’

நாராயணனிடம் நான் டீ கொடுக்கச் சொன்னேன். டிஎஸ்பியும் எஸ்ஐ கண்ணப்பனும் மூங்கிலால் செய்யப்பட்ட பெஞ்சில் அமர்ந்துகொண்டார்கள். கருப்பையா அருகே கைகட்டி நின்றார். டிஎஸ்பி கண்ணப்பனிடம் மெல்லிய குரலில் ஏதோ சொல்ல அவர் தன் தோல்பையில் இருந்து ஒரு நாட்டுத்துப்பாக்கியை வெளியே எடுத்தார். கோழியின் கழுத்தை முறிப்பதுபோல அதன் குழாயைப் பெயர்த்து உள்ளே குண்டைப் போட்டார். சிறிய குச்சியால் மெழுகுத்திரவத்தைத் தொட்டுக் குழாய்க்குள் பூசினார்.

நாராயணன் கண்ணாடி டம்ளர்களில் கருப்புடீயை ஊற்றி அவர்கள் இருவருக்கும் கொண்டு சென்று கொடுத்தான். இன்னொரு டம்ளரை பெருமாள் எடுத்துச்சென்று அவனுக்குக் கொடுத்தான். அவனுடைய மணிக்கட்டு வீங்கி குழந்தையின் கைகளைப்போலிருந்தது. விரல்கள் மரத்திருந்தன. டம்ளரை அவனால் வாங்க முடியவில்லை. பெருமாள் அவனே டம்ளரைப்பற்றி அவன் வாயில் வைத்தான். மெலிந்த கழுத்தில் நரம்புகள் அசைய அவன் டீயை ஆவலுடன் குடித்தான். அடிபட்டு வீங்கிய உதடுகளில் சூடான டீ பட்டபோது அவன் சற்று முனகியபடி தலைகுனிந்தான். கையில் டீயுடன் பெருமாள் காத்து நின்றான்.

அவன் டீயை முழுக்கக் குடித்துவிட்டு மெல்லிய புன்னகையுடன் பெருமாளிடம் ஏதோ சொன்னான். பெருமாள் ஏதோ புரியாத மந்திரம் கேட்டவன்போலத் தலையை அசைத்தான். அவ்வளவு அடிபட்டு சிதிலமடைந்திருந்தபோதிலும் அந்த முகத்தில் புன்னகை வர முடிந்தது ஆச்சரியம்தான் என நினைத்துக்கொண்டேன். நாராயணன் டிரைவருக்கும் ஆயுதப்படை போலீஸ்காரர்களுக்கும் டீ கொண்டு சென்று கொடுத்துவந்தான்.

'அவனுகளுக்கு என்ன ஏது ஒண்ணும் தெரியவேண்டாம்…என்னடா?' என்றார் கண்ணப்பன். நாராயணன் தலையசைத்தான்.

டிஎஸ்பி "போலாம்டா' என்றார்

நாராயணனும் கருப்பையாவும் சேர்ந்து அவன் இரு கைகளையும் சேர்த்துக் கட்டினார்கள். பின்னர் இரு கால்களையும் சேர்த்துக் கட்டினார்கள். டிஎஸ்பி என்னிடம் 'டெண்டு குச்சி ஒண்ணை எடுய்யா' என்றார். நான் உள்ளே சென்று எடுத்துக்கொண்டு சென்று கொடுத்தேன் அவனைப் புரட்டிப்போட்டு அவன் கைகால்கள் நடுவே குச்சியை செலுத்தினார்கள். குச்சி அவன்

விதைகளில் பட்டு அவன் அலறினான். அப்போதுதான் நான் விதைகளைப் பார்த்தேன், பலூன்போல வீங்கி ஒரு பெரிய கொட்டைத்தேங்காய் அளவுக்கு சிவந்தும் நீலமோடியும் இருந்தன.

அவனை பன்றியைத் தூக்குவது போல இருவர் தூக்கிக்கொண்டார்கள். நான் டிஎஸ்பியின் பெட்டியைத் தூக்கிக்கொண்டேன். நாங்கள் காட்டுக்குள் நடக்க ஆரம்பித்தோம்

ஒவ்வொரு அசைவுக்கும் அவன் வலியுடன் முனகினான். தலை அண்ணாந்தது போல தரை நோக்கி தொங்க மெலிந்த கழுத்தில் குரல்வளை புடைத்துத் தெரிந்தது. வாய் திறந்து கறைபடிந்த பெரிய பற்கள் தெரிந்தன. தருமபுரிக்குரிய ஃப்ளூரைட் பல்கறை.

நான் வழிகாட்டி முன்னால் சென்றேன். அவர்கள் எனக்குப்பின்னால் வந்தார்கள். புதர்களை வெட்டி வெட்டி வழியைப் பெரியதாக்கியபடியே போனேன். புதருக்குள் இருந்து ஏதோ சிறிய பறவை ரிவீட் என்றபடி அதிர்ச்சி அடைந்தது போல படபடவென சிறகடித்துக்கொண்டு எழுந்து காற்றில் சுற்றி இன்னொரு கிளைக்குச் சென்று அமர்ந்தது.நாங்கள் முன்னால் சென்றபோது இன்னொரு பறவை அதேபோல ரிவீட் என்று சொன்னபடி எங்கள் முன்னால் பறந்து வானில் தத்தளித்து சுழன்று கிளையில் சென்று அமர்ந்தது. மூன்றாவது முறை நான் உணர்ந்தேன், அந்தப் பறவையேதான். அது எங்களைப் பின்தொடர்ந்து வந்துகொண்டிருந்தது.

ஆச்சரியமாக இருந்தது. நான் காட்டுக்குள் தங்க ஆரம்பித்து ஒருவருடம் ஆகிறது. எட்டுமாதமாக இங்கேதான் இருக்கிறேன். ஆனால் எனக்குக் காட்டைபற்றியும் பறவைகளைப்பற்றியும் எதுவுமே தெரியாது. பறவை அப்படி மனிதர்களைத் தொடர்ந்து வருமா என்ன? என் பிரமையா? இல்லை, உண்மையிலேயே அது சத்தம்போட்டு சிறகடித்து எங்களைப் பார்த்தபடி எங்களுக்கு முன்னால்சென்று மரங்களில் அமர்ந்துகொண்டு கூடவே வந்தது. என்னைத்தவிர எவரும் அதைக் கவனிக்கவில்லை

சிறிய குருவி. கைப்பிடி மயிரை எடுத்து உருளையாக சுற்றியது போல இருந்தது. சிறகுகளின் அடியிலும் வால் நுனியிலும் மட்டும் சாம்பல் நிறம். கண்களுக்கு மேலே இரு கோதுமைமணிகளை ஒட்டிவைத்தது போல பொன்னிறமான வட்டம். சிறகடித்து எழுவதும் திரும்பி அமர்வதும் சட்சட்டென்று துடிப்பாக இருந்தன. பறக்கும்போது அது டிர்ரீட் என்று

சத்தம்போடுவது சிலசமயம் பின்னாலும் சிலசமயம் பக்கவாட்டிலும் கேட்பது போல இருந்தது. கூரிய குரல். கண்ணாடியில் கையை உரசுவது போல உடம்பைக் கூசவைக்கும் கூர்மை.

குழி வெட்டப்பட்ட இடத்தை அடைந்தபோது இருவரும் வியர்வை வழிய மூச்சிரைத்துக்கொண்டிருந்தார்கள். குழி சிவந்த பெரிய வாய் போல திறந்து காத்திருந்தது. விரிந்த உதடுகள் போல அள்ளிப்போடப்பட்ட மண்

குழியின் அருகே கொண்டு சென்று அவனைப்போட்டுக் கட்டுகளை அவிழ்த்தபோது நான் அந்த ரிவிட் என்ற குரலைக் கேட்டேன். கரியகுருவி அங்கே வந்துவிட்டிருந்தது. மரங்கள் தோறும் மாறி மாறி அமர்ந்துகொண்டு அது குரலெழுப்பியது.

இப்போது டிஎஸ்பி அதை கவனித்தார். 'என்னடாது, அந்தக் குருவி பின்னாடியே வந்து சத்தம்போடுது?' என்றார்.

'காட்டுக் குருவிசார்...எதுனா பாத்தா பின்னாடி வந்திரும்'என்றான் பெருமாள்.

'பத்திவிடு அத..சனியன், என்ன சத்தம்போடுது'

நான் கற்களைப் பொறுக்கி அதை எறிந்தேன். ஆனால் தன்னை எவரும் கல்லால் அடித்துவிடமுடியாது என்று அதற்குத் தெரிந்திருந்தது

அப்புவைத் தூக்கி அமரச்செய்தார்கள். 'டேய் தண்ணி குடிக்கிறியாடா?' என்றார் டிஎஸ்பி

'ம்'; என்றான்.

நாராயணன் தண்ணீரை அவன் உதடுகளில் வைக்க வீங்கிய உதடுகளைக் குவிக்கமுடியாமல் நீர் கன்னங்களில் வழிந்தது. தொண்டை ஏறி இறங்கியது. நான் அப்போதுதான் அவனுடைய கண்களைப் பார்த்தேன். ஆள் மாறி வேறு யாரோ இளைஞனைக் கொண்டுவந்துவிட்டார்கள் என்று தோன்றியது. அத்தனை களங்கமற்ற கிராமியத்தனமான கண்கள். தருமபுரி பஸ்நிலையத்தைப் பார்த்தாலே பிரமித்துப் பார்க்கும் குழந்தைக் கண்கள்.

அவனால் நீரைப் பற்றி உறிஞ்சி உள்ளே அனுப்ப முடியவில்லை. வாயில் உணர்ச்சியே இருக்காதென்று பட்டது. நாராயணன் டம்ளரை அவன் பற்கள் நடுவே செலுத்தி நீரை நன்றாக உள்ளே விட்டான். அவன் குடிக்கும் ஒலி மட்டும் அந்த அமைதியில் அத்தனை துல்லியமாகக் கேட்டது. எனக்கு அந்த ஒலி குமட்டலெடுப்பது போல உடலை உலுக்கியது. பெருமாள் மிகவும்

பின்னால் சென்று கருவேல மரத்தைப் பற்றியபடி நின்றிருந்தான். அவன் முகம் செத்த சவம்போல வெளிறிப்போயிருந்தது.

டிஎஸ்பி எரிச்சலுடன் 'டேய் அந்த சனியனை தொரத்துங்கடா' என்றார்.

'போகமாட்டேங்குது சார்' என்றேன்.

டிஎஸ்பி பெருமாளிடம் "டேய் , அங்க என்ன செய்றே? வா...' என்றார்.

பெருமாளும் கருப்பையாவும் அவனை இழுத்துக்கொண்டு சென்று அந்தக் குழி அருகே போட்டார்கள். அவன் உடம்பு மிக மெலிந்து வயிறு கைப்பிடி அளவுதான் இருந்தது. முடியில்லாத மார்பில் இருந்து மெல்லிய ரோமப்படலம் அடிவயிற்றை நோக்கி இறங்கியது. இடுப்பில் ஒரு சிறிய சரடு கட்டியிருந்தான். 'டேய் அந்த சரடை அறுத்திரு' என்றார் டிஎஸ்பி.

நான் குனிந்து அதைப் பிடித்து இழுத்தேன். இரட்டைச்சரடு. அவன் ஆஆ என்று அலறினான். அவன் உடலில் ரத்தம் கன்றாத இடமே இல்லை. என் கையில் இருந்த சிறிய கத்தியால் அதை வெட்டி எடுத்தேன். அவன் என்னை நோக்கி மெல்லப் புன்னகைசெய்து 'தாங்ஸ்' என்றான். அந்தப் புன்னகையுடன் சேர்ந்து சிரித்த கண்கள் அவற்றில் இருந்த இளமையையும் கிராமியத்தன்மையையும் கைவிட்டுவிட்டு ஆழமாக மாறி ஒளிவிட்டன என்று எனக்கு பட்டது. அக்கண்களை சந்திப்பதை விலக்கி ,கைகள் நடுங்க நான் எழுந்துகொண்டேன்.

நிலைகொள்ளாமல் பறவை காற்றில் சிறகடித்துக்கொண்டே இருந்தது. அதன் சிறகோசை என் தோளுக்குப் பின்னால் மிக அருகே கேட்பது போலிருந்தது. அதன் குரல் கூழாங்கற்கள் போல என் முதுகில் விழுவதாக உணர்ந்தேன்.

'என்னாச்சுடா?' என்றார் டிஎஸ்பி.

'ஆச்சு சார்' நாராயணன் மேலேறி வந்தான்.

'போட்டிருடா கண்ணப்பா'

அப்பு இப்போது இலகுவாகியிருந்தான். அவன் கண்கள் ஒருகணம் என்னை நோக்கியபின் கண்ணப்பனை நோக்கின. கண்ணப்பன் அந்த நாட்டுத்துப்பாக்கியை எடுத்து அப்புவைக் குறிபார்த்தார். துப்பாக்கியை தழைத்துப் பார்வையை விலக்கிய கண்ணப்பன் சுட முடியாது

திரும்பிவிடுவார் என நான் நினைத்தேன். ஆனால் அவர் சட்டென்று அப்புவின் மார்பில் சுட்டார்.

அந்தக்குருவி படபடத்து மரக்கிளைகளில் உரசிப் பதறுவதை உணர்ந்தேன். அதன் மென்சிறகுகள் முட்களில் சிக்கிக்கொண்டனவா என நினைத்தேன்.

அப்புவின் உடல் இருமுறை எம்பியது. கைகால்கள் நான்குபக்கமும் பரபரத்தன. குதிகால்கள் மண்ணை உரசிப் பின்பு அடங்கின. கழுத்தில் மட்டும் ஒரு துடிப்பு கொஞ்சநேரம் இருந்தது. வாயோரம் கடைசியாக ஒருமுறை அதிர்ந்து இழுத்துக்கொள்ள அசைவின்மை காலில் இருந்து மெல்லிய படலமாக பரவி முகத்தை மூடியது

அவன் மார்பில் சற்றுப்பெரிய ஒரு குங்குமப்பொட்டு போல மிகச்சிறிய துளை. அதில் செங்குமிழி வெடித்துக் குருதி கொழுமையாக விலாவெலும்பில் வழிந்தது. ரத்தத்தின் எரியும் வீச்சம் எழுந்தது. குருவி எங்கள் தலைக்குமேல் குறுக்கும் நெடுக்குமாக வேகமாகப் பறந்தது. எங்கள் கண்களைக் குத்திவிடுமோ என்று பயம் வந்தது. நாராயணன் கூடையை எடுத்து அதை அடிக்க முயன்றான். அது பறந்தவேகத்திலேயே திசை திருப்பித் தப்பியது.

நானும் நாராயணனுமாக அப்புவின் உடலைப்புரட்டிக் குழிக்குஉள்ளே போட்டோம். உடம்பில் சூடு இருந்ததனால் அதை ஒரு சடலம் என்று எண்ண முடியவில்லை. சடலம் குழிக்குள் பொத்தென்று குப்புற விழுந்தது. அதன் கைகள் நம்பமுடியாத கோணத்தில் ஒடிந்து மடங்கின. அப்போதுகூட அவன் எழுந்துவிடுவான் என்ற எண்ணம் வந்தது

நாராயணன் மண்வெட்டியால் மண்ணை அள்ளி அள்ளிக்கொட்டினான். குழி நிரம்புவதை நான் பார்த்து நின்றேன். அவன் களைத்தபோது நான் மண்ணைத்தள்ளினேன். என் தலைக்குமேலே அந்த சிறியகுருவி சிறகடித்துக் கலைந்து சுற்றி வந்தது. தன் முட்டைகள் உள்ள கூடு கலைக்கப்படுவதைப் பார்த்தால்தான் குருவிகள் அப்படி தட்டழிந்து சுற்றிவரும். இருமுறை மிகவும் கீழே என்னை மோதுமளவுக்கு வந்தது. நிமிர்ந்து அதைக் கைவீசி விலக்கினேன்.

மண்ணால் குழியை மூடி சிறியமேடாக ஆக்கி அதை மிதித்து அழுத்தினேன். பின்னர் விளக்கில் இருந்த மண்ணெண்ணையை எடுத்தும் அந்த மண்ணில் தெளித்துப் பரப்பினேன். காட்டில் புதைப்பதன் பெரிய சிக்கலே மிருகங்கள்

தோண்டி எடுத்துவிடும் என்பதுதான். செந்நாய்கள் பன்னிரண்டடி தூரம் செல்லாதுதான். ஆனாலும் மண்ணெண்ணை வாடை இருந்தால் இன்னும் கொஞ்சம் உறுதி.

ரைஃபிள்களையும் விளக்கையும் புட்டிகளையும் பிறபொருட்களையும் பொறுக்கிக்கொண்டோம்.

‘டேய் இன்னொருவாட்டி பாருங்க...இங்க ஒரு பொருள் இருக்ககூடாது’ என்றார் டிஎஸ்பி

திரும்பி நடக்கும்போது கருப்பையா என்னருகே துருத்தி போல மூச்சு இரைக்க நடந்து வந்தார். டிஎஸ்பி ஒரு சிகரெட் பற்றவைத்துக் கண்ணப்பனுக்கும் ஒன்று கொடுத்தார்.

கருப்பையா என்னிடம் ‘என்ன பொழைப்பு என்ன?’ என்றார் மெல்ல.

நான் ஒன்றும் சொல்லவில்லை.

‘கொன்னா பாவம் தின்னா தீரும்பாங்க. சரி, செயிலிலே தூக்கில போடுறவனுக்கு என்ன பாவம் வரப்போவுது?’ என்று மீண்டும் சொன்னார்.

அவர் என்ன சொல்ல வருகிறார் என்று தெரியவில்லை. எப்படியோ சமாதானப்படுத்திக்கொள்ள முயல்கிறார், அவரது மண்டைக்குள் சொற்கள் எழவில்லை என்று தோன்றியது

அந்தக் குருவி என்னைத் தொடர்ந்து வருவதை உணர்ந்தேன். வேறு வேறு மரங்களில் சிறகடித்து வந்து அமர்ந்தபடி ‘டிர்ர்ர்யூ’ என்று அது திரும்பத்திரும்பக் கூவிக்கொண்டிருந்தது. ஒரு மரத்தில் அமர்ந்தபின் அந்த எல்லையைத் தாண்டி வரவில்லை. அது வருகிறதா என திரும்பித்திரும்பிப் பார்த்தேன். வரவில்லை என்று தெரிந்ததும் ஆறுதல் ஏற்பட்டது

முகாமுக்கு வந்து சேர்ந்தோம். டிஎஸ்பி ’ அப்ப நாம கௌம்பிருவோம்டா... ’ என்றார்

கண்ணப்பன் “சார்’ என்றார்

கண்ணப்பனிடம் ‘தர்மபுரி வாறியா?’ என்றார்.

‘எஸ் சர்’

‘நம்ம வீட்டுக்கு வா. சாந்தி ஊரிலே இல்ல. ஸ்காட்ச் ரெண்டு வச்சிருக்கேன்’

‘வாறேன் சார்’

டிஎஸ்பி நாராயணனிடம் ‘டேய், ரிவெர்ட் ஆடர் வர்ர வரை இங்கே காம்ப் இருக்கும்… பாத்துக்கங்க…எல்லாம் வழக்கம்போல…’ என்றார்

‘எஸ் சார்’

டிஎஸ்பி முற்றத்துக்கு வந்தபோது சரிந்த கல் மீது அமர்ந்திருந்தஆயுதப்படைக் காவலர்கள் எழுந்து தொப்பிகளை வைத்துக்கொண்டனர். ஜீப்பில் டிஎஸ்பி ஏறிக்கொண்டார். கண்ணப்பன் பின்னால் ஏறியதும் ஜீப் கிளம்பியது. ஆயுதப்படைக்காவலர்கள் வேனில் ஏறிக்கொண்டு பின்னால் கதவை சாத்தினார்கள். ஜீப் அதிர்ந்து டப் டப் எனப் புகை விட்டது. துப்பாக்கிக்குண்டு வெடிப்பதுபோல

அந்தப் பறவையை நினைத்தேன். அதன் ஒலி கேட்கவில்லை. ஆனால் இப்போது அது ஏமாற்றத்தை அளித்தது.

கருப்பையா என்னிடம் ‘பாத்துக்கடே….வாறேன்’ என்று சொல்லி பைக்கைக் கிளப்பினார்.

அவை தூசுப்படலம் பின்னால் நீண்டு பறக்க புழுதிச்சாலையில் செல்வதை நெடுநேரம் பார்த்துக்கொண்டிருந்தேன். விசித்திரமான மூன்று பறவைகள், நீண்ட செந்நிறமான இறகுவாலுடன் கூடியவை.

பின்பு திரும்பி வந்து பெஞ்சில் அமர்ந்தேன்

நாராயணன் ‘டீ போடவா?’ என்றான்

‘போடு’ என்றேன்

பெருமாள் ஒரு பீடியைப் பற்றவைத்தான்

‘பெருமாள்ட்ட அவன் என்ன சொல்லியிருக்கான் தெரியுமா?’நாராயணன் கேட்டான்.

‘ம்?’என்றேன்

பெருமாள் ‘ஒண்ணுமில்ல…என்னமோ சொன்னான்’ என்றான்

‘என்ன?’

‘என்னமோ … ’

‘சொல்லு’

‘இங்க வேல ரொம்ப கஷ்டம்தான் இல்ல தோழர்? -ன்னு கேட்டான்’

நான் ‘ஓ’ என்றேன் அர்த்தமில்லாமல்.

நாராயணன் ‘முட்டாப்பய’ என்று சொல்லி ஸ்டவ்வைப் பற்றவைத்தான். பெருமாள் பீடியை மிக ஆழமாக இழுத்தான். இதயம்வரை அந்தப் புகை செல்லவேண்டும் என விரும்புகிறவன்போல.

## (3) அம்மையப்பம்

அம்மா இட்லிஎடுப்பதைப்பார்க்க எனக்குப்பிடிக்கும். இட்லிக்குட்டுவம் ஒருமாதிரி விம்மிப் பொருமி பெருமூச்சுவிடுவதுபோலிருக்கும். செம்பிப்பசு பிரசவத்துக்கு நின்றபோது இப்படித்தான் தெரிந்தது. அதன் வைக்கோல்நிறம் நன்றாக சிவந்துவிட்டதுபோல. அதன் வயிறோ விலாவோ வெடித்துத் திறந்துவிடும் என்பதுபோல. அதன் செம்புல்சருமம் மீதிருந்து ஆவி கிளம்பியது. தலையைத் தாழ்த்தி அது பெருமூச்சுவிட்டது. காலின் குளம்பால் தரையை தட் தட் என்று அடித்தது. சற்றுநேரத்தில் சூடான வெந்நீர் அதன் பின்பக்கத்தைத் திறந்துகொண்டு பீரிட்டது. மெல்லிய படலத்தால் சுற்றப்பட்ட வெள்ளைநிறமான கன்றுக்குட்டி உள்ளிருந்து சலவைக்காரியின் மூட்டை போலப் பிதுங்கி வெளிவந்தது.

அம்மா இட்லிக்குட்டுவத்தின் மூடி மேலே இருந்த கைப்பிடியைப் பிடித்துத் தூக்கியபோது ஆவி பொங்கி விறகடுப்பு மேலே உத்தரங்களில் அமர்ந்திருந்த கருப்பட்டிப்பத்தாயத்தை சூழ்ந்தது. நான்கு இட்லித்தட்டுகள். நான்கு குட்டிகள். தட்டுகளைக் கவிழ்த்து அந்த வெம்மையான துணிப்படலத்தை மெல்ல உரித்து எடுத்தபோது ஒவ்வொன்றும் ஆறு குட்டிகள். குட்டிகளல்ல, ஆறு மென்மையான வெண்ணிறமான கோழிக்குஞ்சுகள். முட்டை ஓட்டை உடைத்து அப்போதுதான் வெளிவந்தவை.

அதில் ஒன்றில் வெந்துவிட்டதா என்று பார்க்க அம்மாவின் கை அழுந்திய பள்ளம் இருக்கும். அது என்னுடைய இட்லி. ஆதை நான் சின்னவயதில் இருந்தே அம்மையப்பம் என்று சொல்லி விசேஷ சலுகையாகத் தின்று வந்திருக்கிறேன்.அந்த இட்லியைப் பிறர் தொடுவதுகூட எனக்கிழைக்கப்படும் மாபெரும் அநீதியாகவே எடுத்துக்கொள்வேன். அம்மா அந்தக் கைத்தடம் பதிந்த இட்லியை எடுத்து ஒரு அலுமினியத்தட்டில் போட்டு முந்தையநாள் மிஞ்சிய மீன்குழம்பில் கொஞ்சம் அள்ளி ஊற்றினாள். ‘குழிலே குழிலே’ என்று நான் அடம்பிடித்தேன். துளி சிந்தாமல் அந்தக்குழிக்குள் மீன்குழம்பு விடப்படவேண்டும். அதைப் பக்குவமாக எடுத்துக்கொண்டு நடந்து வெளித்திண்ணைக்கு வந்தேன்.

வெளித்திண்ணையில் வாழைப்பூ என்று என்னால் பெயரிடப்பட்ட சிவப்புக்கோழி என்னைக் காத்து நின்றிருந்தது. கீழ்த்தாடை துருத்திபோல

அசைய கொண்டை சிலும்ப அது வெடுக் வெடுக்கென்று தலைதிருப்பி என்னைப் பார்த்தது. அலகு சற்றே திறந்து உள்ளே சிறிய நாக்கு அசைவது தெரிந்தது. நான் ஒட்டுத்திண்ணையில் அமர்ந்துகொண்டேன். மேலாங்கோட்டு அம்மனுக்கு நேர்த்திக்கடனுக்காக மொட்டையிடப்படும் நோக்குடன் ஒருவருடமாக வளர்ந்து வந்து தோளிலும் மார்பிலுமாகக் கிடந்த என்னுடைய கூந்தலில் அம்மா கட்டியிருந்த ரிப்பனைப் பிய்த்து வீசிவிட்டு குந்தி அமர்ந்து இட்லியை மெதுவாகப்பிய்த்து சாப்பிட ஆரம்பித்தேன். கோழிக்கு அவ்வப்போது சற்று பிய்த்து வீசினேன். வாரியல்தடங்கள் வளையம்வளையமாகப் படிந்த மணல்விரிந்த முற்றத்தில் நெடுந்தொலைவுக்கு அதைத் தூக்கி வீசினேன். கோழி சற்றே இறக்கையை விரித்து எம்பிப்பறந்துபோய் அதைக் கொத்தி , தலையைத் தூக்கி அண்ணாந்து அவ் அவ் அவ் என்று விழுங்கியது. அதன் தூவியடர்ந்த மெல்லிய கழுத்துவழியாக இட்லி உள்ளே செல்வதைக் காணமுடிந்தது.

வீட்டின் வலப்பக்கம் தொழுவத்தில் குட்டப்பன் ஆவேசமாகக் குரைத்தான். பெரிய செம்புக்குட்டுவத்தில் செம்பு அகப்பையால் அடிப்பதுபோன்ற ஒலி அந்தக் குரைப்புக்கு. அப்பா ஆபீஸ் கிளம்பும் நேரம். அப்போது அவரது அறைவாசலில் கல்படிகளில் குட்டப்பன் வாலை நீட்டி குந்தி அமர்ந்திருப்பான். வாயைச்சுற்றும் ஈக்களை அவ்வப்போது மூக்கைச்சுழற்றிக் கவ்வமுயல்வது, காலைமாற்றிவைத்து சப்புக்கொட்டுவது, தொலைதூர ஒலிகளுக்குக் காதுகளை மடிப்பது தவிர வேறு அசைவுகள் அந்நேரம் அவனில் இருக்காது. அதைமீறித் தொழுவத்துக்குச் சென்றிருக்கிறான் என்றால் யாரோ விரும்பத்தகாதவர் வந்திருக்கிறார் என்றுதான் அர்த்தம். யார்? அப்பாவுக்கு நஸ்யசூரணம் கொண்டுவந்து கொடுக்கும் அப்பு பணிக்கரா? இலைக்காரி நாணம்மையா? இல்லை தலையாட்டிமாடுடன் பண்டாரமா? குரங்குடன் குறவனேதானா?

நான் இட்லித்தட்டை நாக்கால் ஒருமுறை முழுமையாக நக்கி அதை அங்கேயே போட்டுவிட்டு தோளில் சரிந்த கால்சட்டையின் நாடாவை எடுத்து மேலே விட்டுக்கொண்டு முற்றத்தில் குதித்து தொழுத்துப்பக்கமாக சென்றேன். குட்டப்பன் குரைப்புடன் கொட்டாங்கச்சியைத் தரையில் உரசினாற் போன்ற உறுமலையும் சேர்த்துக்கொண்டிருந்தான். நான் அங்கே சென்றதும் என்னைநோக்கி ஓடிவந்து வாலை இருமுறை வீசிவிட்டு திரும்பிக்

குரைத்தான். குட்டிச்சுவருக்கு அப்பால் கிறுக்கனாசாரி குந்தி அமர்ந்திருப்பதைக் கண்டேன்.

கிறுக்கனாசாரி என்னைக் கண்டதும் சிவந்த கூழாங்கற்கள் போன்ற பற்களைக் காட்டி சிரித்து 'ஆகா...கொச்சேமான் மீங்கறியில்லா தின்னிருக்கு...ஆசாரிக்கு உண்டா மீனும்சோறும்?' என்றார். நான் இடுப்பை நெளித்துத் தலையை ஆட்டினேன். கையில் எஞ்சிய மீன்கறி வாசனையை நக்கிக்கொண்டேன். கிறுக்கனாசாரிக்கு நல்ல கறுத்த சுருண்ட கூந்தல். அதைக் குடுமியாக உருட்டிப் பின்மண்டையில் கட்டிவைத்திருந்தார். அவருடைய மீசையும் தாடியும் கரிய குருவிக்கூடு போலிருந்தன. அவற்றுக்குள் வெற்றிலைச்சிவப்பேறிய உதடுகள். மூக்கில் மூக்குத்தி போட்ட துளை. நெற்றிப்பொட்டாக பச்சைகுத்தப்பட்ட நாகபடம். மெலிந்த தோள்களிலும் முழங்கைகளிலும் இலைகளும் பூக்களும் பாம்புகளும் பச்சைகுத்தப்பட்டிருந்தன. முன்பு கடுக்கன் போட்டிருந்த காதுத் துளைகளில் இரு அரளிமலர்களை செருகி வைத்திருந்தார். காலருகே ஒரு தோல்பையில் அவரது பணிச்சாமான்கள். நீளமான முழக்கோல்.

நான் அவரை மேலும் நெருங்கிக் கூர்ந்து பார்த்தேன். ஆசாரி காலையில் கோயிலுக்குப் போயிருந்தார். மெல்லிய களப குங்கும மணம் அடித்தது. ஆனால் நெற்றியில் திலகம் இல்லை. ஆசாரி என்னைப்பார்த்து 'அப்பா உண்டுமா உள்ள?' என்றார்.

நான் குட்டப்பனைச் சுட்டிக்காட்டி 'பட்டி கடிக்கும்....இது கடிக்குத பட்டியாக்கும்' என்றேன்.

ஆசாரி சிரித்து 'ஆசாரிமாரை பட்டி கடிக்காது கொச்சேமான். அதுக்கில்லா இது இருக்கது?' என்று முழக்கோலைத் தூக்கிக் காட்டினார். 'மாட்டுக்குக் கொம்பும் பிச்சக்காரனுக்குக் கம்பும்னாக்கும் சொல்லு. ...'

அப்பா வெள்ளைச்சட்டையின் கைகளை மடித்து மேலேற்றியபடி வெளியே வந்தார். நெற்றியில் அழிந்த மேகத்தீற்றல்போல திருநீறு. 'என்னடே?' என்றார்.

ஆசாரி 'கண்டுகிட்டு போலாம்னாக்கும்...' என்று சொன்னபடி எழுந்தார்.

குட்டப்பன் பாய்ந்துசென்று அப்பாவின் முன்னால் நின்று காதுகளைப் பின்னால் மடித்து வாலைச்சுழற்றிப் புட்டத்தைக் குழைத்து முன்காலைத்தூக்கி வைத்து மெல்லிய நடனமொன்றை

ஆடினான். ’கண்டாச்சுல்லா…போ…உனக்ககிட்ட இங்க வரப்பிடாதுன்னுல்லா சொன்னேன்?’ என்றார் அப்பா

ஆசாரி “அப்ப்டி சொல்லப்பிடாது…பாவங்களாக்கும்…இவ்விடத்துக் கருணையாலே ஒருவாய் கஞ்சி குடிக்கப்பட்ட சனமாக்கும்’ என்றார்.

‘டேய், உனக்க வாய் தேனாக்கும்ணுட்டு எனக்குத்தெரியும். ஆனால் உனக்க கையிருப்பு மோசம்லா? நாற வெள்ளத்தைக் குடிச்சிட்டு அண்ணைக்கு ஜங்ஷனிலே நிண்ணு என்னைப்பாத்து நீ என்னடே சொன்னே?’

ஆசாரி பம்மி ’அது நான் சொன்னதில்லை ஏமானே…நாறவெள்ளத்துக்க ஊற்றம் அதாக்கும்…தாயளி இந்த எறும்பன்தாமஸு அதிலே ஊமத்தைவெதையாக்கும் அரைச்சுக் கலக்குதான். குடிச்சாப்பின்னே எங்க போறது எங்க நிக்கப்பட்டது ஒண்ணும் பிடியில்ல’ என்றார்.

‘டேய் அதெப்பிடிடே உனக்க உள்ளுக்குள்ள இல்லாததாடே வெளிய வருது?’ என்றார் அப்பா.

’எல்லாம் உள்ளுக்குள்ள இருக்கப்பட்டதுதான். மனுஷனுக்குள்ள ஏளு பிசாசுண்டுண்ணுல்லா கதை?’ என்றார் ஆசாரி.

அப்பா சட்டென்று சிரித்துவிட்டார் ’அதுசெரி…அப்பம் மிச்சம் ஆறையும் காட்டவாக்கும் வந்திருக்கே’

ஆசாரி ’அதில ஒண்ணு இப்பம் இந்நா வந்து நிக்குது…அது பசியாக்கும்…இனியிந்த வீட்டுக்கு முன்னாலயிருந்து கும்பித்தீயோட திரும்பிப் போறதுக்காக்கும் சொல்லுகதுண்ணா போறேன்…போட்டு…அப்டியும் ஒரு காலம் வந்தாச்சுண்ணு நெனைச்சுட்டு போறேன்’ என்றார்

அப்பா தணிந்தார் ’அதுக்குச் சொல்லல்லடே….போ, போயி என்ன உண்டுமோ அதை வேங்கித் தின்னுட்டு போ’ .

ஆசாரி ’அதெப்பிடி. சும்மா குடுத்தா திங்கியதுக்கு நான் என்ன எரப்பாளியா ? கலையுள்ள ஆசாரியில்லா?’

அப்பா எரிச்சலுடன் ’டேய் நீ கிறுக்கன். உனக்கு என்னடே சோலி தாறது?’

’எனக்குக் கிறுக்காக்கும். ஆனா எனக்க உளியும்கொட்டுவடியும் கலையுள்ளதாக்கும்’

'உனக்க உளி மசுத்திச்சு…டே, அண்டுகோட்டு வீட்டிலே நீ என்னலே பணிசெய்தே? சொல்லு'

'அதிப்பம்…'

'என்ன இப்பம்? நீ செய்த பணி என்ன, அதைச்சொல்லு…'

ஆசாரி வேறுபக்கம் பார்த்து 'போறவளியிலே விளிச்சு ஒரு சோலியச் சொன்னாவ'

'சும்மா சொல்லல்ல…வயறுநெறைய உனக்குப் பழங்கஞ்சியும் சக்கைப்புளிக்கறியும் குடுத்தபிறவு ஒரு வேலை சொன்னாங்க. ஒரு நெலைக்கண்ணாடிக்க சட்டத்துக்குள்ள கண்ணாடி ஆடிட்டிருக்கு .சட்டத்தை ஒண்ணு இறுக்கிக்குடு ஆசாரீண்ணு சொன்னாங்க…ஒரு பதினஞ்சு மினிட்டு சோலி. நீ என்னடே செய்தே? சொல்லு'

ஆசாரி ஒன்று சொல்லாமல் மெலிதாக நெளிந்தார்.

'நீ என்னடே செய்தே? சொல்லுடே'.

'எளகினா ஆப்பு வைக்கியதாக்கும் ரீதி…'

'அடிச்செருப்பாலே…டே, நீ சட்டத்துக்கும் கண்ணாடிக்கும் நடுவிலே ஒரு ஆப்ப அடிச்சு கேற்றினே. கண்ணாடி சில்லுண்ணு உடைஞ்சு போச்சு. அந்தால உளியையும் கொட்டுவடியையும் எடுத்துக்கிட்டு கடந்துபோட்டே…. அந்தக்கிளவி இப்பமும் கிடந்து கூப்பாடு போடுதா. அவளுக்க கெட்டினநாயரு அந்தக்காலத்திலே பர்மாவிலே இருந்து கொண்டுவந்த பெல்ஜியம்கண்ணாடியாக்கும்.. இப்பம் நினைச்சா வாங்கமுடியுமா?'

'அது பெல்ஜியம் கண்ணாடி இல்ல. டூப்பு. பெல்ஜியம்கண்ணாடி உடையாது'

'உனக்ககிட்ட பேசவந்த என்னைய செருப்பாலே அடிக்கணும்…நீ ஒரு சோலியும் செய்யாண்டாம்…இங்க எதிலயாவது நீ கைய வச்சே அந்தக் கைய ஆளவச்சு அடிச்சு முறிப்பேன்'

'கோளிக்கூட்டுக்குக் கதவு உடைஞ்சிருக்குண்ணு சொன்னாவ'

'நீ சரியாக்கினபிறவு கோளியெல்லாம் பறந்து போறதுக்கா? நாறப்பயலே நீ அதிலே கைய வைக்கப்பிடாது. நீ செய்துகுடுத்த மணையிலே இருந்தா அங்கயும் இங்கயும் சாமியாடவேண்டியிருக்குண்ணு அப்ப்டியே தூக்கி

அடுப்பில வச்சாச்சு...நாட்டில உள்ள நல்ல மரத்தையெல்லாம் வெறகடுப்புக்குக் கொண்டுபோறதுதானேடே உனக்க ஆசாரிப்பணி? மயிராண்டி, உனக்க சுண்ணிக்க கனமில்லாதபயக்கள்லாம் இண்ணைக்கு கொலேரம் நாறோயில்ணு போயி செத்தி அடுக்கி கைநிறைய காசுமாட்டு வாறான். சிவாஜிகணேசன் மாதிரி நெத்தியிலே முடியச் சுருட்டிவிட்டுக்கிட்டு சில்க்கு சட்டையும் பௌடறும் போட்டு விசிலும் பாட்டுமாட்டு அலையுதான்...நீ நாறவெள்ளம் குடிச்சுட்டு நாட்ட நாறடிக்குதே...'

'இப்பம் தொளிலறியாதவனுக்குல்லா காலம்? கலிகாலமாக்குமே' என்றார் ஆசாரி

அப்பா தளர்ந்துபோனார். 'வேணுமானா போயி வல்லதும் வாங்கித் தின்னுட்டுப்போ...சோலி மயிருண்ணு உளிய வெளியிலே எடுத்தே, உனக்குக் காலம் முடிஞ்சாச்சுண்ணாக்கும் அர்த்தம்...' உள்ளே சென்று பையையும் குடையையும் எடுத்துக்கொண்டு வெளிவந்தார். டயர்செருப்பைப் போடும்போது குட்டப்பன் அப்பாவின் கால்களை முகர்ந்தான்.

'சும்மா கூலி வாங்குதது ஆசாரிதர்மமில்லை'

'உனக்க கிட்ட பேச எனக்கு நேரமில்ல'

அப்பா பையுடன் இறங்கி நடந்து ஆற்றுக்குச் செல்லும் பாதையில் இறங்கினார். குட்டப்பன் அவருக்கு முன்னால் ஓடினான். ஆசாரி என்னைப்பார்த்துக் கண்ணடித்து 'கொச்சேமான் அம்மைக்கிட்ட சொல்லணும். கிறுக்கனாசாரி வந்திட்டுண்டுண்ணு...'

நான் உள்ளே சென்றேன். அம்மா பாத்திரங்களை அள்ளிக் கொல்லைப்பக்கம் போட்டுக்கொண்டிருந்தாள். கொல்லைப்பக்கம் தங்கம்மை பாத்திரம்கழுவ உட்கார்வதற்கு முன்பாக வெற்றிலை போட்டுக்கொண்டு அமர்ந்திருந்தாள். அவளுக்கு முன்னால் ஏழெட்டு காகங்கள் அமந்திருந்தன. வாழைப்பூ வெளியேபோடப்பட்ட சட்டிகளில் ஒன்றுக்குள் தலை நீட்டிக் கொத்திக்கொண்டிருந்தது.

'என்னடா ?' என்றாள் அம்மா

'கிறுக்கனாசாரி வந்திருக்காரு...மீன்குளம்பும் சோறும் கேக்காரு'

தங்கம்மா "ஆமா, கேப்பான். அவனுக்க அம்மைக்க ஆமக்கன்லா இங்க மீங்கறி காய்ச்சி வச்சிருக்கு…கொச்சேமான் அவன போவச்சொல்லணும்…' என்றாள்

'பாவம், குடலுகாய்ஞ்சு வந்திருப்பான்' என்றாள் அம்மா

'குடலு காயுதது எரிப்பன் குடிக்கதனாலயாக்கும்…இந்நேற்று ஆற்றுங்கரையிலே கோமணத்தையும் அவுத்துப்போட்டுட்டு நிண்ணு ஆடுதான்…என்னைக் கண்டப்பம் ஒரு வேளம் சொன்னான்…உம்மாணை அம்மிணியே அவனுக்க வெண்டைக்காய அப்பமே நான் நறுக்கியிருப்பேன். பின்ன ஆசாரியில்லா, வித்தைக்காரனுல்லாண்ணு நானும் ஒண்ணு பொறுத்தேன்…'

அம்மா என்னிடம் 'அவரை இந்தால வரச்சொல்லு…இட்டிலி தின்னுட்டுப் போலாம்னு சொல்லு' என்றாள்

'அம்மிணியாக்கும் இவனுகளக் கெடுக்கது' என்றபடி தங்கம்மா எழுந்தாள். சட்டிவிளிம்பில் ஏறிய வாழைப்பூ அதைக் கவிழ்த்து சமநிலை இழந்து சிறகடித்துப் பின்னால் பாய்ந்தது. காகங்கள் சிறகடித்து காற்றில் ஏறிக்கொண்டன.

நான் கிறுக்கனாசாரியிடம் 'இட்டிலி தின்ன அம்மை வரச்சொன்னா' என்றேன்

ஆசாரி 'மீங்கறி உண்டுமா? புளிக்கறியானா நான் சாபம் போடுவேன் எண்ணு அம்மைக்கிட்ட கொச்சேமான் சொல்லணும்…' என்றபடி பணிப்பையையும் முழக்கோலையும் எடுத்துக்கொண்டு வந்தார்.

ஆசாரி கைகழுவி வந்து அமர்ந்தார்.அம்மா ஆசாரிக்குத் தலைவாழை இலை போட்டு அதில் ஏழெட்டு இட்லியைப் போட்டு மீன்கறி விட்டாள். 'சாளையாக்குமா அம்மிணி?' என்றார் ஆசாரி

'ஏன் வேற மீனானா திங்க மாட்டீரோ? வே , உன்ன லெச்சணத்துக்குத் தலைவாழ எல வேணுமா?' என்றாள் தங்கம்மை

'நான் ஆசாரியாக்கும்…சரஸ்வதிய கையிலே வைச்சிருக்கப்பட்டவன். இன்னொருத்தன் தின்ன எச்சில் தட்டிலே நான் கை வைக்கப்படாது…' என்றார் ஆசாரி

‘உம்ம கையிலே சரசதி இருக்காளாக்கும்…நாறவெள்ள நாத்ததிலே அவ ஓடிப்போயி பல வருசமாச்சுல்லா’

ஆசாரி முழுக்கவனத்துடன் இட்லியை சாப்பிட ஆரம்பித்தார். நடுவே வாய் நிறைய இட்லியுடன் ஏறிட்டுப் பார்த்து என்னிடம் ‘கொச்சேமான் இட்டிலி தின்னாச்சுல்லா?’ என்றார்.

‘நான் அம்மையப்பம் தின்னேன்’

‘அது என்னது?’

‘இப்பிடி இருக்குமே…அம்மைக்க கை …’

அம்மா சிரித்தபடி ‘வெந்தாச்சாண்ணு குத்திப்பாக்குத இட்டிலியிலே அவனுக்கு அப்பிடி ஒரு இஷ்டம்…அது கிட்டலல்லண்ணா இங்க அடிபிடிதான்…’

‘பின்னே? அம்மைக்க விரலுள்ள இட்டிலியில்லா? அம்மிணி, இட்டிலிகளிலே அதுக்கு மட்டுமில்லா அதைப் படைச்ச மகாசக்திக்க அனுக்கிரகம் கிட்டியிருக்கு’ என்றார் ஆசாரி ‘இம்பிடு மீனு…’

சாப்பிட்டு முடித்து ஏப்பத்துடன் எழுந்து இலையை சுருட்டிக்கொண்டு மாமரத்தடிக்குச் சென்றார் ஆசாரி . கைகழுவியபின் மாமரத்தைப்பார்த்து ‘உறப்புள்ள தடியாக்கும்….’

‘அது அங்க நிக்கட்டும்வே’ என்றாள் தங்கம்மா

‘நீ என்னட்டி கண்டே தங்கம்மை ,பொன்னம்மை ,செல்லம்மை… ஏட்டி எல்லாக் கல்லுக்குள்ளயும் சாமியுண்டு. கலையுள்ள கை தொட்டா படுதாவ நீக்கி சாமி வெளிய வரும்…எல்லா மரத்திலயும் வாஸ்துலச்சுமி உண்டு….விஸ்வகர்மனுக்க கை படணும்….’

தங்கம்மை பிரமித்து வாய் திறந்து பார்த்தாள்.

‘அம்மிணியே…கூலி கிட்டியாச்சு. சோலி குடுங்க’

‘அய்யோ அம்மிணி…வேண்டாம்…இவன் கைபட்டா மரம் பாழாப்போவும்’ என்றாள் தங்கம்மா

‘செத்தி எடுத்துப்போடுவேன் ரெண்டெண்ணத்தையும் ’ என்று ஆசாரி உளியைக் காட்டினார். உள்ளே பார்த்து ‘அம்மிணி…என்னமாம் சோலி குடுங்கம்மிணி…செய்துட்டுப் போறேன்’

‘அம்மிணி வேண்டாம்...நான் சொல்லியாச்சு’

‘கோளிக்கூடு கதவு உடைஞ்சுபோட்டுல்லா?’

‘அதை நாகப்பனாசாரி செரியாக்கியாச்சு’

‘அவன் ஆரு? ஆசாரிண்ணா தொளிலறியணும்...அவன் மரங்கொத்தியாக்குமே...’

அம்மா உள்ளே இருந்து வந்து ‘ஒண்ணும் வேண்டாம் ஆசாரியே நீ போ’ என்றாள்

‘அப்பிடிச் சொல்லப்பிடாது...அனுக்ரஹிக்கணும்’

‘உனக்கு ஒரு சோலியும் குடுக்கப்பிடாதுண்ணாக்கும் அவ்வோப்பா கண்டிசனாட்டு சொல்லியிருக்காரு’

அது பழைய ஆசாரி...ந்தா இப்பம் திருந்தியாச்சு. குடிய விட்டாச்சு அம்மிணி... இனி அதைக் கையாலயும் தொடுகதில்ல... கண்ணாணை, உளியாணை... விட்டாச்சு...இப்பம் ஆசாரிக்குக் கையிலே கலை உண்டு...’

அம்மா பலவீனமாக ‘வேண்டாம் ஆசாரியே’ என்றாள்

ஆசாரி சுற்றுமுற்றும் பார்த்து ‘ஆ...அந்நா கிடக்குல்லா முளை...அது என்னத்துக்கு?’ என்றார்

‘அது ஏணி கூட்டுகதுக்காக்கும்...’

‘என்னம்மிணி...ஒரு ஏணி கூட்டத்தெரியாதா ஏழுகலை கண்ட மூத்தாசாரிக்கு...இங்க எடுங்க...நான் கூட்டித்தாறேன். ஒரு மணிநேரத்துக்க சோலி’

‘இல்ல ஆசாரியே...வேண்டாம்’

‘அம்மிணி சும்மா இருங்க....நான் சோலிய முடிக்குதேன்’

அம்மா பரிதவித்து நிற்க ஆசாரி இரு மூங்கில்களையும் கொண்டு சென்று தோட்டத்து நிழலுக்குள் போட்டார். பூவரசுத்தடி ஒன்று கிடந்தது. அதைக் கொண்டு சென்று அருகே போட்டு பணிப்பையைப் பிரித்து உளிகள் கொட்டுவடிகள் ரம்பம் எல்லாவற்றையும் எடுத்துப் பரப்பினார். ‘அம்மிணியே ஒம்பது பழுதுதானா?’

அம்மா ‘வேண்டாம் ஆசாரியே’ என்றாள் தழுதழுத்த குரலில்.

'இந்த நீளத்துக்கு ஒம்பது பழுதுவேணும்...நான் பாத்துக்கிடுதேன்...' ஆசாரி வேட்டியைத் தார்ப்பாய்ச்சினார். பூவரசு மரத்தை எடுத்து சட் சட்டென்று வெட்டி ஒன்பது துண்டுகளாக ஆக்கினார். ' கொச்சேமான் இம்பிடு குடிவெள்ளம் கொண்டுவரணும்...கண்ணிமாங்காயோ நெல்லிக்காயோ உண்டெங்கி அதும் வரட்டு'

தண்ணீர் குடித்தபின் ஒன்பது துண்டுகளையும் செதுக்கினார். அவற்றை அப்படியே போட்டுவிட்டு வாழைநிழலில் கால்நீட்டி அமர்ந்துகொண்டு 'கொச்சேமான் உள்ள போய் வெத்தில கொண்டுட்டு வரணும்...' என்றபின் ரகசியமாக 'அப்பா பிடிக்கப்பட்ட சுருட்டு உண்டெங்கி ஒரு நாலு சுருட்டும் எடுக்கணும்...அப்பனுக்குக் கணக்கெல்லாம் இருக்காது'

நான் வெற்றிலைச்செல்லத்தையே கொண்டுவந்தேன். அதற்குள் சுருட்டுக்கட்டு இருந்தது. ஐந்து சுருட்டுகளையும் எடுத்து மடியில் செருகியபின் ஆசாரி வெற்றிலை போட்டுக்கொண்டார். அதை துப்பியபின் ஒரு சுருட்டைப் பாதி வரை இழுத்து விட்டார். புகையைப்பார்த்தபடி 'உள்ள இருக்கப்பட்ட நெனைப்புகளாக்கும் கொச்சேமான் இந்தா புகையா போறது...சுருட்டுபிடிச்சா உள்ளுக்குள்ள ஒண்ணுமில்லாம ஆயிடும்'

'உள்ளுக்குள்ள என்ன இருக்கு?' என்றேன்

'ஆசாரிக்க உள்ளுக்கு கவலையில்லா?'

'என்ன கவலை?'

'ஏமான், கலையிருக்கப்பட்ட எடத்திலே கவலையும் உண்டுல்லா? சீதேவி இருந்தா அங்க அவ அக்கா மூதேவியும் வந்திருப்பா...ரெண்டாளுக்கும் அப்டி ஒரு சொருமிப்பாக்கும்'

'என்ன கவலை ஆசாரி?'

'எனக்க கெட்டினவ விட்டுட்டு போனாள்லா? பாவி மட்ட எட்டுமாசம்கூட சேந்து வாளல்ல...காலில விளுந்து விளிச்சேன். வரமாட்டேன் போடான்னு சொல்லிப்போட்டா...பிறவு அவளுக்கு மாடன் ஆசாரிக்க கூட தொடுப்பாச்சு...நானும் விட்டுப்போட்டேன். இந்நா கெடந்து சீரளியுதேன்'

மூங்கில்களில் ஒன்பது ஒன்பது ஓட்டைகளையும் போட்டபின் மீண்டும் வந்து அமர்ந்துகொண்டார். மீண்டும் வெற்றிலை, சுருட்டு.

நான் 'ஆசாரிச்சி இப்பம் இருக்காளா?' என்றேன்

‘இருக்கா...இருக்கா...இப்பம் அவளுக்கு அதில எட்டு பிள்ளைய.நல்ல களுத்து கனக்க மாலையும் காதுவடிய பாம்படமும் போட்டுக்கிட்டு ராணி கணக்காட்டு இருக்கா...சும்மா சொல்லப்பிடாது . இப்பமும் அவ காண நல்ல அளகாக்கும். செத்திவச்ச செலையாக்குமே...நான் செலசமயம் அங்க போறதுண்டு...மாஞ்சிறக்கோணம் வயலுக்கு அந்தாலயாக்கும் அவளுக்க குடி. ஒருநாளில்லாட்டி ஒருநாளு காலம்பற எந்திரிக்கும்பம் அவளுக்க நெனைப்பு வரும். செரீண்ணு வச்சு ஒரு நடப்பு. நேராட்டு போயி அவளுக்க குடிக்க பக்கத்திலே ஒரு முளங்கூட்டம் உண்டு. அதுக்க நெளலிலே கேறி நிப்பேன்.அங்க நிண்ணா அவ அடுக்களையிலயும் பொறவாசலிலேயும் பெருமாறுதது தெரியும்....மொலையும் கொலையுமா சேலாட்டு இருப்பா...அங்க நிண்ணு அப்டியே மத்தியான்னம் வரை பாத்துக்கிட்டு நிக்கது...பின்ன திரும்பி வந்துபோடுவேன்...ஒண்ணுரெண்டுதடவ அவ திட்டினா. மாடன் ஆசாரி வந்து ஒருக்கா செவி பொத்தி ஒரு அடி அடிச்சான். அடியோட அந்தால வந்துபோட்டேன்...எட்டுநாள் செவியிலே பொன்னீச்ச பறக்குத சத்தம்...அடுத்த தடவை போயி நிண்ணப்ப அவன் அடிக்க வந்தான். இவ வந்து கைய நீட்டி ‘தொடப்பிடாது’ண்ணு சொல்லிப்போட்டா. பாத்தா வனபத்ரகாளி மாதிரி இருக்கா... கண்ணெல்லாம் செவந்து இருக்கு. தேகம் அடுப்பிலே கெடந்து சுட்டு பளுத்த கல்லு மாதிரி ....மாடனாசாரி அந்தால திரும்பி போயிட்டான். இவ எனக்ககிட்ட ‘எதுக்குவே வாறீரு’ண்ணு கேட்டா. நான் சொன்னேன் ‘எனக்கு வேற கெதியில்ல.நான் கிறுக்கனாக்கும்’ணு. வாரும்ணு கூட்டீட்டுப்போயி வயறு நெறைய கஞ்சி குடுத்தா. ‘இனிமே வந்தா வந்து திண்ணையிலே இரியும். கஞ்சி குடிச்சுட்டு போவும்’ணு சொன்னா. இப்பம்லாம் நேரா போயி பொறவாசல் திண்ணையிலே இருந்து அவளக் கண்ணு நெறைய பாத்து கஞ்சியும் குடிச்சுட்டு வாறது. அவளுக்க பயக்க வளந்துட்டானுவ. மூத்தவனுக்கிப்பம் பதினாறு வயசாக்கும். அவனும் வளீல கண்டா ஒரு ரூவா சக்கறம் எடுத்துக் குடுத்திட்டுப் போவான்....’

‘ஆசாரியே சோலி தீரல்லியா?’

‘இந்நா தீந்தாச்சு...’ என்றார் ஆசாரி என்னிடம் ‘இது ஒரு சோலியா? ஒம்பது கம்ப எடுத்து ரண்டு முளைக்கு நடுவிலே வைச்சு ஒரு ஆப்பு அடிச்சிறுக்கினா ஏணி...இது ஆசாரிப்பணி இல்ல கொச்சேமானே...இது சும்மா’

நான் ‘எனக்கு ஏணி பிடிக்காது’ என்றேன். ஒருமுறை ஏணியில் இருந்து நான் விழுந்திருந்தேன்.

‘ஏமானுக்கு என்ன பிடிக்கும்?’

‘அம்மையப்பம்’

‘ஆசாரிக்குப் பிடிச்சது அம்மையப்பனாக்கும்’

‘அதென்னது?’

‘ரெண்டும் ஒண்ணுதான்’

‘திங்க முடியுமா?’

‘திங்கமுடியாது…ஆனா இனிப்பா இருக்கும்….ஏமான் ஒரு நல்ல மரக்கட்டை எடுத்துக்கிட்டு வரணும்…ஆசாரி அதை செஞ்சு தாறேன்’

நான் வீட்டுக்குள் சென்றேன். மரக்கட்டையா? அப்படி என்ன இருக்கிறது? அம்மா உட்கார்ந்து காய்கறி வெட்டும் கட்டை கிடந்தது. ஆனால் அதை என்னால் தூக்க முடியாது. நான் அப்பாவின் அறைக்குள் செல்வதற்குள் பக்கவாட்டு வச்சுபூட்டு அறையைப் பார்த்தேன். திறந்து கிடந்தது. உள்ளே அரையிருட்டு. உள்ளே நுழைந்தேன். துணிவைக்கும் கால்பெட்டிகள், பலவகையான சிறிய பெட்டிகள். மேலே சித்திரைநாற்றுவேலைக்குக் கொண்டுவந்து நிறைத்த நெற்கதிர்களுடன் கட்டப்பட்ட தாழம்பூக்குலைகள். தாழம்பூப்பொடியும் கரப்பான்பூச்சி உருண்டையும் எலிப்புழுக்கையும் கலந்த மணம்.

அதைக் கண்டதுமே நான் முடிவுசெய்துவிட்டேன். அது சந்தனமணை. அப்பா வருடம்தோறும் அவரது அப்பாவுக்கு ஊட்டு கொடுத்து புரையில் வைக்கும்போது இலையில் பதினான்குவகை கறிகள், ஏழுவகை பாயசங்கள், சோறு, குழம்பு, பப்படம் ,பழம் எல்லாம் பரிமாறிவிட்டு அந்த சந்தன மணையைத்தான் போடுவார். அதன்பின் சத்தமில்லாமல் அறைக்கதவை மூடிவிடுவார். இருட்டுக்குள் அப்பாவின் அப்பா வந்து அந்த உணவை சாப்பிட்டுவிட்டுப் போவார் என்று தங்கம்மா சொன்னார். ஆனால் உணவை யாரும் சாப்பிடவில்லை, நான் பார்த்தேன். சென்ற முறை மொத்த சாப்பாட்டையும் அப்படியே எடுத்துக்கொண்டுபோய் காக்காய்க்காக வைக்கோற்போர்மீது வைத்தார் அப்பா.

நான் சந்தனமணையை எடுத்துக்கொண்டு துரத்தப்பட்டவன் போல மூச்சுவாங்க ஓடி ஆசாரியை அடைந்தேன். அவர் மல்லாந்து படுத்து வானத்தைப்பார்த்து ஏதோ முனகியபடி கால்களை ஆட்டிக்கொண்டிருந்தார்.

‘இந்தா ஆசாரி’ என்றேன்

‘இதா...இது சந்தனமாக்குமே...நல்ல அசல் ரத்தசந்தனம்...கொள்ளாம்’ என்றார் ஆசாரி. ‘ஏமான் அந்த சிற்றுளியை எடுங்க’

சிறிய உளியால் அவர் மெல்ல மெல்ல அதை செதுக்குவதைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

‘இது என்ன ஆசாரியே?’

‘இதா...இதாக்கும் அம்மையப்பம்’

அம்மா ‘ஆசாரியே...ஏணி கூட்டியாச்சா? சோறு உண்ண வாறேரா?’ என்றாள்:

‘இந்நா வாறேன்...’ என்றபின் அந்த சந்தனமணையை சருகுக்குள் செருகினார். ‘இந்த எளவெடுத்த ஏணிய முதல்ல கூட்டிப்போடுவோம் ஏமான்’ என்றார்.

ஏணியை மளமளவென்று கூட்டினார். கூட்டி ஆப்படித்துப் பார்த்தபோது ஏணியின் ஒன்பதுபழுதுகளும் கோணலாக இருந்தன.

‘ஓ’ என்றார் ஆசாரி

‘கோணலா இருக்கு’ என்றேன்

‘ஆமா...கண்ணால கணக்கு போட்டா போரும்ணாக்கும் நினைச்சேன்....இந்த எளவுக்கென்னத்துக்கு கணக்கும் மயிரும்...செரி வந்து கூட்டுவோம்’ மளமளவென்று ஏணியைப் பிரித்துப்போட்டார். ‘வாங்க முதல்ல சோத்த திம்போம். அன்னலெச்சுமி காத்திருக்கமாட்டாள்லா?’

இலையில் கூம்பாரமாக சிவப்புச்சோற்றைக்குவித்து அதன்மேல் வெள்ளரிக்காய்போட்டுத் தாளித்த செந்நிறத் தேங்காய்க்குழம்பை கொதிக்கக் கொதிக்க விட்டு ஒட்டுமொத்தமாகப் பிசைந்து பூசணிக்காய்பயறுக்கூட்டும் முருங்கையிலைத் துவரனும் காணச்சம்மந்தியுமாக ஆசாரி நிறைவாகச் சாப்பிட்டார். நான்குமுறை கைநிறைய மோர் வாங்கி குடித்தார். எழும்போது ஏப்பம் விட்டார். ‘அம்மைக்க கைப்பக்குவத்திலே வித்தை உண்டும்’ என்றார்

‘ஏணி எப்பம் ரெடியாவும்?’ என்றாள் அம்மா

‘இந்நா...ஒரு செக்கண்டு...ஓட்டை போட்டு பழுதும் செத்தியாச்சு. வச்சுப் பூட்டி ஆப்படிச்சா ஏணி...ஏணி கூட்ட ஆசாரி என்னத்துக்கு?’ என்றார் ஆசாரி

சாப்பிட்டபின் இன்னொருமுறை வெற்றிலை போட்டுக்கொண்டார். உற்சாகமாக எழுந்து ‘ஜீவப்பிரியே சியாமளா என் ஜீவப்ரியே சியாமளா...சியாமளா சியாமளா’ என்று பாடியபடி சந்தமணையைச் செதுக்க ஆரம்பித்தார். நான் அவர் அருகே அமர்ந்து அந்த உளியின் நுனியில் இருந்து சிறிய நுணுக்கமான உருவங்கள் எழுவதைப் பார்த்துக்கொண்டிருந்தேன். முந்தைய கணம் இல்லாமலிருந்தவை. காற்றுக்கு அப்பால் ஒளிக்கு அப்பால் உள்ள ஏதோ ஓர் இடத்தில் இருந்து அவை வந்தன. காற்றை விலக்கி ஒளியை விலக்கி. மெல்லிய கொடிகள் மலர்கள் . அவற்றினூடாகத் துள்ளிய மான்களின் சரடு. துதிக்கை பிணைத்த யானைகளாலான மணிமாலை. அனைத்தும் ஒன்றுடன் ஒன்று பிணைந்து ஒன்றைப்பார்க்கையில் அனைத்தும் தெரிந்தன அனைத்தையும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் ஒன்றுமட்டும் முந்தி எழுந்து என்னைப் பார்த்தது. கண்ணெதிரே ஒரு கனவு கையால் தொடமுடியக்கூடியதாக இருந்துகொண்டிருந்தது. கனவுபோல இதுவும் தொடுவதற்குக் கைநீட்டினால் அப்படியே கலைந்து மறைந்துவிடுமா என்று நினைத்தேன்.

‘இது ஏன் இப்பிடி இருக்கு?’ என்றேன். பின்னிப்பிணைந்திருப்பதை என்னால் சொல்லமுடியவில்லை. ஆகவே கைகளைப் பின்னிக்காட்டினேன்

‘கொச்சேமான், தனித்தனியா இருக்கப்பட்டது மனுஷனுக்க அகங்காரம் மட்டுமாக்கும். மத்த எல்லாமே பின்னிப்பிணைஞ்சுல்லா கெடக்கு...’ கையால் சற்று மண்ணை அள்ளி விலக்கிக் காட்டினார். வாழையின் வெள்ளைவேர்கள் அடர்ந்து பின்னி இருந்தன. கண்களைத் தூக்கியபோது அந்த மணையின் வடிவங்கள் விசித்திரமான வேர்ப்பின்னலாகத் தெரிந்தன. உயிருள்ளவை, நெளிபவை.

‘இது என்ன ஆசாரி?’

‘இதாக்கும் அம்மையப்பம்’

நான் ஆசாரியின் விரல்களைத்தவிர எதையுமே பார்க்கவில்லை. அனைத்தையும் உருவாக்கிக்கொண்டிருக்கும் விரல்கள். அவை அப்படியே முடிவில்லாமல் செதுக்கிக் கொண்டே இருக்கும் என நினைத்தேன்.இதேபோல வானத்தில் உள்ள கைகள் பூமிமீது மலைகள்

மரங்கள் வீடுகள் மனிதர்கள் மிருகங்கள் என செதுக்கிக்கொண்டே இருக்கின்றன. எல்லாம் சேர்ந்து பின்னிப்பிணைந்து ஒரே படலமாக ஆகிவிட்டிருக்கின்றன. குளத்துப்பாசி போல. ஒரு நுனியைப்பிடித்து எடுத்தால் எல்லாம் சேர்ந்து அசைந்து இழுபட்டு வரும்.

நுணுக்கமான உருவங்களாலான ஒரு பெரிய வட்டமாக அந்த சந்தனமணையை ஆசாரி மாற்றியிருந்தார். யானைக்கூட்டங்களுக்குள் அணியணியாக நடனமிடும் ஆணும் பெண்ணும். அதற்கு உள்வட்டத்தில் பல்வேறு தேவர்களும் தேவதைகளும் கைகளில் மலர்களுடன் தழுவிப்பின்னி நின்றிருந்தனர்.. அந்த வட்டத்திற்கு நடுவே இரு உருவங்களை நான் கூர்ந்து பார்த்தேன். ஆசாரி செதுக்கிக்கொண்டே இருந்தார். உளி தூரிகையாக மாறி வரைவதுபோல, ஒரு மெல்லிய தூவியாக மாறி தூசுப்படலத்தை விலக்கி உள்ளிருந்து அந்த பிம்பங்களை எடுப்பதுபோல.

'இது யாரு?' என்றேன்

'இது அம்மை' என்றார். 'ஜெகதம்பா...இவளாக்கும். காளி....காளிதாசன்னு ஏமான் கேட்டிட்டுண்ணா?'

நான் 'இல்லை' என்றேன்

'அவனுக்க வாயில காளி தாம்பூலத்த துப்பிக்குடுத்தா...தாயோளி அந்தால பெரிய கவியா ஆயிட்டான்....'

காளிக்குப் பதினாறு கைகள். எல்லாக் கைகளிலும் ஆயுதங்கள். அவள் கண்கள் தெறிப்பவை போல விழித்திருந்தன. நாக்கு நீண்டு தொங்கியது. நாக்கின் இருபக்கமும் கோரைப்பற்கள். கழுத்தில் மண்டைஓட்டு மாலையை ஆசாரி செதுக்கிக்கொண்டிருந்தார். மண்டை ஓடுகள் ஒரு பயறுமணி அளவுக்கு இருந்தன. ஒவ்வொன்றிலும் பற்களையும் கண்களையும் செதுக்கினார்.

'இது?' என்றேன்

'இது அப்பன்...முக்கண்ணன், சிவன். ஆடவல்லான். அம்பலவாணன்...'

'எங்க சிவன்?'

'இருங்க...வாறாரு'

சிவன் மல்லாந்து ஒரு பாறைமீது சாய்ந்தவராகக் கிடந்தார். பாறைமேல் சடை பரவிக்கிடந்தது. நான்கு கைகள். ஒன்றில் மான். அதை அவர் செதுக்கும்போதே நான் கண்டுகொண்டேன்

‘இது உளிதானே?’

‘சிவனுக்கு எங்க உளி? இது மளுவாக்கும்’

சிவனின் கால்களும் இடுப்பும் உருவாகி வந்தன. சிவனின் நெஞ்சுக்குழி மீது காளி தன் காலைத்தூக்கி வைத்திருந்தாள். கட்டைவிரலால் நெஞ்சுக்குழியை ஆழமாக அழுத்தியிருந்தாள். சிவன் இரு கைகளையும் தலைக்குமேல் கூப்பியிருந்தார். கண்கள் மூடியிருந்தன

‘உறங்குதாரா?’

‘ஏமான் அது தியானமுல்லா? தியானமில்லாம கலை உண்டுமா?’

‘காளி எதுக்கு சவிட்டுதாங்க?’

‘அது அனுக்ரமாக்கும்....சிவனுக்க நெஞ்சில குளியக்கண்டுதா? அங்கிணயாக்கும் அக்கினி இருக்கப்பட்டது.’

‘எங்க?’

‘உள்ள இருக்கு...அதை இந்தக் கையிலே எடுப்பாரு. அந்தக்கையிலே உடுக்க எடுப்பாரு. எந்திரிச்சாருண்ணு சொன்னா ஒரு ஆட்டமாக்கும்...அதாக்கும் நடராஜநிருத்தியம்....ஏமான் நான் இதுவரை ஒம்பது நடராஜ நிருத்யம் செத்தியிட்டுண்டு...ஆனால் இதுவரை ஊர்த்துவநிருத்யம் செத்தினதில்லை. கட்டை வேவறதுக்குள்ள அதும் ஒண்ணு செத்தணும்’

‘ஆசாரியே...ஏணி என்ன ஆச்சு?’

‘ஓ...இந்தபார எளவுலே இல்லியா எனக்க பாழும் சென்மம் வந்து கெட்டிக்கிடக்கு’ என்றபடி ஆசாரி படுவேகமாக செதுக்கினார்.

தங்கம்மா வரும் ஒலி கேட்டது

‘ஒண்ணையாவது முளுக்க செத்திமுடிக்க யோகமில்லை...வாறா’ என்றார் ஆசாரி. ‘ஏமான் இத அந்தால வைக்கணும்...இன்னும் கொஞ்சம் சோலி இருக்கு’

தங்கம்மை வந்து ‘ஏணி கூட்டியாச்சா?’ என்றாள்

‘இந்தா’ என்றபடி ஆசாரி உளியையும் கொட்டுவடியையும் எடுத்தார். மளமளவென்று இன்னொரு ஒன்பது ஓட்டைகளைப் போட்டு ஒன்பது கழிகளையும் அந்தத் துளைகளில் செருகி ஆப்படித்தார். கழிகள் முன்பைவிடக் கோணலாக இருந்தன.

‘இதென்னது சறுக்கி வெளையாடுததுக்கா?’ என்றாள் தங்கம்மா

‘நீ சும்மா கெடட்டி...’ என்று ஆசாரி தட் தட் என அடித்து ஏணியைக் கழற்றினார். மூங்கிலைப் புரட்டி மீண்டும் ஒன்பது துளைகள் போட்டார்

தங்கம்மா கண்களைச் சுருக்கியபடி பார்த்துக்கொண்டிருந்தாள். ஆசாரி இம்முறை ஏணியை ஆப்பு பூட்டாமலே கோணலைக் கண்டுகொண்டார். மீண்டும் ஒன்பது துளைகள். ஆனால் இம்முறை துளைகள் குழம்பிவிட்டன. எந்தத் துளையில் எந்தக் கழியை செருகுவதென்று தெரியவில்லை.

‘அம்மிணி...இங்க நம்ம ஆசாரி ஒரு அருமையான சோலியில்லா செய்திருக்காரு? வந்து பாருங்க...முளையிலே தேன்கூடு செய்திருக்காரு...’ என்றாள் தங்கம்மை

‘இருட்டி...இந்தா ஒரு அஞ்சு நிமிசம்’

ஆசாரியின் கைகள் நடுங்கின அவர் அங்குமிங்கும் பரபரத்தார். முழக்கோலால் அளந்தபோது அவருக்கு அளவுகள் குழம்பின. ஒரு துளைக்கும் இன்னொரு துளைக்குமான தூரத்தை அளக்கையில் வெவ்வேறு துளைகளை எடுத்துக்கொண்டார். புதிய ஒன்பது துளைகள்.

தங்கம்மா ‘அம்மிணியே...வந்து இந்த கூத்தப்பாருங்க’ என்றபடி ஓடினாள்

ஆசாரி பரபரவென்று தன் பணிப்பையை எடுத்து எல்லா சாமான்களையும் அதற்குள் அள்ளி அள்ளிப்போட்டார். முழக்கோலை எடுத்துக்கொண்டு என்னிடம் ‘கொச்சேமான் அந்த சந்தனவட்டைய ஆரிட்டயும் காட்டவேண்டாம்... அப்ப்டியே எடுத்து ஆத்தில போட்டிருங்க...நான் வாறேன்’ என்றபடி தோட்டத்திற்குள் பாய்ந்தார்.

மறுபக்கம் அம்மா ‘என்னட்டி சொல்லுதே?’ என்ற கூச்சலுடன் வரும் ஒலி கேட்டது. வேலியின் அன்னாசிச்செடிகளைப் பிய்த்து விலக்கி அதில் பொத்திப்பிடித்து ஏறி அந்தப்பக்கம் சென்று அப்படியே கோயில் நந்தவனத்துக்குள் ஆசாரி செல்வதைப் பார்த்தேன். மரக்கூட்டங்கள் நடுவே அவர் மறைந்தார்

அம்மா வந்து மூங்கில்களைப் பார்த்தாள் 'அய்யோ...எனக்க கோரோயில் முருகா...நான் இனி அவ்வோப்பாகிட்ட என்ன சமாதானம் சொல்லுவேன்? யம்மா' என்று தலையில் கைவைத்தாள். தங்கம்மா சிரிப்பை அடக்கிக்கொள்வதைக் கண்டேன்.

அந்த அம்மையப்பத்தை வாழைச்சருகுகளுக்குள் போட்டு அதன் மீது நான் அமர்ந்திருந்தேன். 'இவன் என்னத்துக்கு முட்டையிடுத கோளி கணக்காட்டு இருக்கான்?' என்று அம்மா சீறினாள்

'அம்மணி, கொச்சேமான் பொதையலு எடுத்திருக்காருல்லா...' என்றாள் தங்கம்மை சிரித்தபடி.

## (4) கிடா

முட்டன்கிடா. மட்கிய கம்பிளியின் கொச்சைவாடையுடன் தாடிதழைய குறுங்கொம்புடன் நின்று பர்ர் என்று செருக்கடித்தது. முன்காலால் தரையை இருமுறை உதைப்பதுபோல பிறாண்டித் தலையைக் குனித்து வாசனை பிடித்தபோது அதன் மூக்கு நெளிந்தது. அதன் ஒவ்வொரு அசைவிலும் கம்பீரம்.

சிதம்பரம் அதனருகே நெடுநேரம் நின்றுவிட்டான். பின்பு கொஞ்சம் துணிவுடன் அதை நோக்கிக் கையை நீட்டினான். கனத்த உறுமலுடன் கிடா இரு கால்களையும் தூக்கி ஆக்ரோஷமாக முட்டவந்தது. அவன் சட்டென்று பின்னால் நகர்ந்துகொண்டான். இல்லாவிட்டால் அபப்டியே தூணோடு அவனைச்சேர்த்து நசுக்கியிருக்கும்.

யாரும் பார்க்கவில்லை என்று ஆறுதலுடன் வேகமாகப் பின்னகர்ந்ததனால் மண்சுவரில் உரசிய முழங்கையைத் துடைத்துக்கொண்டான். மெல்லிய சிரிப்பொலி. உண்மையிலேயே கேட்டதா, இல்லை அவனுடைய பிரமைதானா? சுற்றுமுற்றும் பார்த்தான். யாருமில்லை. நிம்மதியாக இருந்தது. எச்சில் தொட்டு சிராய்ப்பில் பூசிக்கொண்டு கீழே கிடந்த ஒரு மண்கட்டியை எடுத்துக் கிடாவை நோக்கி எறிந்தான். அது மிகச்சரியாகத் தலையைத் திருப்பி அந்த மண்கட்டியை முன்னந்தலையால் முட்டி உடைத்தது.

‘டேய் செலம்பரம். இங்க என்ன செய்றே? காட்டூர்சித்தப்பா கேட்டுகிட்டே இருக்காரு’ என்றபடி அண்ணன் வந்தான். கைகளைத் தூக்கி சோம்பல் முறித்தபடி ‘ஒண்ணொண்ணா முடிச்சு மொத்தக் கூட்டத்தையும் வண்டியில ஏத்துறதுக்குள்ள வெயிலேறிடும்லே’ என்றான்.

கிடாவைப்பார்த்து ’ இவருதானா ஆளு? சும்மா மஸ்து ஏறில்ல கெடக்குது’ என்று கிடா அருகே சென்று அதன் நெற்றியில் கையை வைத்தான். அது தலைகுனிந்து மெல்லப் பின்னகர்ந்தது. அவன் இயல்பாக அதன் தாடியையும் தலையின் பின்பகுதியையும் தடவிக்கொடுத்தான்.

‘முன்னாடி பழக்கமா ?’ என்றான் சிதம்பரம்

‘எத?’

‘கெடாய...’

‘இல்லியே.....இப்பதான் பாக்கேன்... இதுதானே பொலி?’

‘ஆமா...என்னைய முட்டவந்தது’

‘முட்டும்..கெடா வசக்கேடா முட்டினா வெலா எலும்பு சும்மா முறுக்குமாதிரி நொறுங்கிரும்... மேலகரம் மாமாவோட மூத்தபையன கெடாமுட்டித்தானே பெரியாஸ்பத்திரியிலே பத்துநாள் கிடந்து செத்தான்...கெடாவோட தலை இரும்புமாதிரி... ராமக்கோனாரோட கெடா தவிட்ட திங்க ஆசைப்பட்டு மாம்பலக கதவை உடைச்சு உள்ள போய்ட்டுது தெரியுமா?’

‘ஏன் உன்னை முட்டல?’

‘அதுக்கு தெரியும்லே... ’ அண்ணன் அதன் மண்டையை குத்தினான்.

சிதம்பரம் கிடாவையே பார்த்துக்கொண்டிருந்தான். அதற்கு என்னதான் தெரிகிறது? அண்ணனையும் அவனையும் எதைக்கொண்டு அது பிரித்து அறிகிறது? அதன் கண்கள் இரு சிப்பிகள் போலிருந்தன. அந்தக் கண்களுக்குப்பின்னால் ஒரு அறிவு இருப்பதாகவே தெரியவில்லை.

‘வா’ என்று அண்ணன் கிளம்பினான். ‘சித்தப்பா உனக்கு ஒரு பட்டுவேட்டி எடுத்திருக்காரு...அதைக் கட்டிட்டு வரணுமாம்...’

‘பட்டுவேட்டி இடுப்பிலே நிக்காதே’

‘பெல்ட்ட போடுடா...என்னமோ பேசுறான்...வா’

‘லே பளனி’ என்று அப்பா அண்ணனைக் கூப்பிட்டார். அவரால் அண்ணன் இல்லாமல் எதையுமே செய்யமுடியாது. ‘வாறேன்’ என்றான் அண்ணன்.

சிதம்பரம் அண்ணன் பின்னால் சென்றான். அண்ணன் அவனைவிட இரண்டு வயதுதான் மூத்தவன். ஆனால் அவனுடைய நடையும்பேச்சும் எல்லாமே பெரியவர்களைப்போல இருக்கும். அப்பா உட்பட எல்லாருமே அவனைப் பெரியமனிதனாகத்தான் நடத்துவார்கள். சிதம்பரத்தைக் கொஞ்சமாவது இளைஞனாக நினைப்பது பீடாக்கடை செல்லையாநாடார்தான். அவன் இன்னும் பீடிபிடிக்க ஆரம்பிக்கவில்லை என்பதில் பெரிய மனக்குறை. ‘என்னவே சண்டியரே... வெளைஞ்சிட்டீரு...ஆனா அதுக்குண்டான வளிமொறைகளைக்

காணுமே...இந்தாரும் ஒரு சொக்கலால் இளும்...பொகை உள்ள போனாத்தான்வே உள்ள இருக்கப்பட்ட சின்னப்புள்ளத்தனம்லாம் வெளிய போகும்...' கண்ணடித்து 'நாலுநாள் பொகைவிடும். அஞ்சாம்நாளு கலக்கல் கேப்பீரு'

முற்றம் முழுக்க பெஞ்சுகள் போல செங்கல் அடுக்கி அதன்மேல் பலகைகளைப் போட்டிருந்தார்கள். அதில் தலைக்கட்டுகள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தன. அத்தை எல்லாருக்கும் கருப்பட்டிக் காப்பி கொண்டு வந்து கொடுத்தாள். பித்தளை லோட்டாக்களில் ஊற்றப்பட்ட கருப்பட்டிக் காப்பியில் சுக்கு மணத்தது. ஆனால் பெரும்பாலும் பெரிசுகள் அதை விரும்பவில்லை. மேகாட்டுமாமா சிரித்தபடி சொல்லியே விட்டார். 'ஏனம்மிணி, நாங்க உள்ள வச்சிருக்கப்பட்டது தீயாக்கும். தண்ணி ஊத்தி அதை அணைக்கணும்னு சொல்லுறே?' எல்லாரும் சிரித்தார்கள்.

'தீயில கும்பி எரியப்படாதுன்னுதான் அண்ணா... ' என்றாள் அத்தை 'இன்னும் கொஞ்சநாள் இருக்கணும்ல அது?'

மேகாட்டுமாமா திரும்பி சிதம்பரத்தைப் பார்த்தார். 'யய்யா....நம்ம சின்னராசால்ல வாறது...வாங்க வாங்க...என்ன புதுச்சட்டையா?'

சிதம்பரம் எரிச்சலுடன் பல்லைக்கடித்துக்கொண்டு பக்கத்தில் சென்று நின்றான். மேகாட்டு மாமாவின் சிரிப்பு கைநீட்டுதல் எல்லாமே பள்ளிக்கூடப் பையனிடம் பேசுவது போலிருந்தன.

மேகாட்டு மாமா அவன் தோளைப் பிடித்தபடி 'நல்லா கறிசோறு திங்கணும் மாப்ள...உடம்ப இப்டியா வச்சிருக்கிறது? அந்தக்காலத்திலே உங்கப்பன் தோளிலே நான் தேங்காய அடிச்சு உடைப்பேன் பாத்துக்கிடுங்க...' என்றார்.

'ஆம...உங்க மருமான் தோளிலே ஒரு மெதுவடைய வச்சு ஒடைச்சுப்பாருங்க' என்று அத்தை சொன்னாள்

'இந்தா மீனாட்சி, ஒண்ணு பண்ணு, அண்ணன் தம்பி ரெண்டுபேரிலே யாரு எளவட்டக்கல்ல அதிகமாத் தூக்குறானோ அவனுக்குத்தான் சானகின்னு ஒரு போடுபோடு...சின்ன மாப்புள்ள நாலே மாசத்திலே உருட்டுக்கட்டையா ஆயிட மாட்டாரு?'

‘என்னது கடைசியிலே ராமலச்சுமணனுங்கள சண்டையக்காட்டி பிரிச்சுவிட்டிருவீரு போலிருக்கே...’ என்றார் சுப்பு மாமா. ‘அந்த வெத்தலைய இந்தால எடுக்கிறது. வாயி நமநமங்குதுல்ல?’

‘வாயி நமநமப்புக்கு இதெல்லாம் ஆகாது மேலக்காட்டான்...’

சுப்பு மாமா கண்ணைக் காட்டினார். மேகாட்டு மாமா சிரித்தார்.

அத்தை திரும்பிப்பார்த்து ‘நாத்தத்தண்ணியக் குடிக்கிறதுக்கு ரகசியம் வேற .கண்ணக்காட்டுறாராம். பொட்டச்சிகள்ட்ட அந்தப் பயமிருந்தா காடுகரை ஏன் அடமானத்துக்குப் போவுது?’ என்றாள்

‘இந்தா மீனாச்சி வாயில நாக்கிருக்குன்னு பேசிப்பிடாதே... காடு எப்டி அடமானம்போச்சு? நான் குடிக்கேன்னா அது நான் வேலசெஞ்ச காசு. காட்ட அடமானம் வச்சு மூத்தவளுக்கு நக போடச்சொன்னது உந்தங்கச்சி...கேட்டுப்பாரு’

‘வடக்கூரானுக்கு அடமானமாக் குடுத்தா வெலையா குடுக்கிறதுண்ணுதான் அர்த்தம்...போயி தலமுழுகிட்டு சோலியப்பாருங்க’

‘அப்டி விட்டிருவோமா? வாற ஆவணியிலே லோனு வந்ததும் மூட்டுக்கவேண்டியதுதான்’

‘போயிப்பாரு...நோட்டு ஒண்ணு சொல்லும். அவன் ஒண்ணு சொல்லுவான். அப்பன்காரன் அம்பது சேத்துச் சொல்லுவான்...மறுபேச்சுப் பேசினா அருவாளத்தூக்குவான்...’

‘அருவா நம்ம கையிலேயும் இருக்கண்ணோவ்’

‘இருக்குலே...இது பாவப்பட்டவன் அருவா...கூர் பத்தாது. அவனோட அருவாள போலீஸு கோர்ட்டும் சேந்து கூர் தீட்டிவச்சிருக்கு பாத்துக்க’

அண்ணன் வந்து ‘வண்டி வந்தாச்சு மாமா....கௌம்பீரலாம்’

‘எல்லாத்துக்கும் ஒத்தவண்டியா மாப்ள?’

‘ஆம்புளையாளுங்களுக்கு ஒத்தவண்டி. பொண்டுகளுக்கு இன்னொருவண்டி வருது...’

‘நாம மொதல்ல போவம் மாப்ள’ என்றார் கணக்குச் சித்தப்பா

'ஆமா...போயி அந்தால தொம்பன் காச்சுற சாராயத்த ஏந்துங்க' என்றாள் தாயம்மா சித்தி

'செரி போகல்ல...இருந்திருவோம்...'

'ஏன் இங்க எங்கியாம் பொதைச்சு வச்சிருக்கீயளோ?'

'இவ என்னலே, முன்னாலபோனா கடிக்கா. பின்னால போனா ஒதைக்கா'

'ஆமா நாங்க களுதைங்கதான்...களுதைக்க மஞ்சக்காணிக்கு ஆசைப்பட்டுதானே வந்தீக'

'ஆத்தா அண்ணனை விட்டிரு....இப்ப நீ பேசின பேச்சுக்கு அவரு இன்னும் ஒரு குப்பி அடிச்சு ஏத்தணும்...அதுக்குண்டான காசு அவரு கையிலே இருக்கும்ணு தோணல்ல'

அண்ணன் சிதம்பரத்திடம் 'லே...உன் பட்டுவேட்டியும் சட்டையும் அரங்குல வச்சிருக்கு...கட்டிட்டு வந்திரு'

'வேணாம் அண்ணா'

'போய் கட்டிட்டு வாலே...சித்தப்பு ஆசையா எடுத்துக் கொண்டுவந்து குடுத்திருக்காரு...போ'

சிதம்பரம் வீட்டுக்குள் சென்றான். மாமா வீடு அவனுக்கு எப்போதுமே பிடிக்கும். அவன் வீட்டுக்குள் இல்லாத ஒரு இதமான இருட்டு அங்கே உண்டு. வாசலின் வெளிச்சம் சதுரவடிவ குளம்போல உள்ளே விழுந்து மெலிதாக அலையடித்தது. கொடியில் ஒரு மஞ்சள்நிறமான சேலை கிடந்து காற்றில் நெளிந்தது. அந்த ஒளியில் அறைச்சுவர்கள் அந்தியில் தெரிவதுபோல தெரிந்தன.

கொல்லைப்பக்கம் ஒரே சந்தடி. சித்திகளும் அத்தைகளும் அவர்களின் பெண்களும் அலங்காரம் செய்துகொண்டிருந்தார்கள். மரிக்கொழுந்தும் மல்லிகையும் குங்குமமும் கலவையாக மணத்தன. பளிச்சிடும் நிறங்களில் சேலையும் பாவாடைகளும் தாவணிகளும் அணிந்த பெண்கள் கொல்லைப்பக்கம் வழியாக கடந்துசென்றபோது வெயில்பட்டு பிரதிபலித்து வீட்டுக்குள் சிவப்பிலும் மஞ்சளிலும் நீலத்திலும் ஒளி மாறிக்கொண்டிருந்தது

அரங்கு அறையின் கதவு சாத்தப்பட்டிருந்தது. சிதம்பரம் சாவிக்காகத் தேடினான். அது தொங்கும் ஆணியில் இல்லை. அவனுக்கு என்ன

செய்வதென்று தெரியவில்லை. மெல்லிய சிரிப்பொலி. கேட்டதா இல்லை, அதுவும் பிரமையா?

'சாவியா தேடுறீங்க?' என்று மெல்லிய குரல்

அவன் உடனடியாகத் திரும்பவில்லை. கழுத்து இறுக்கமாக விரைத்துக்கொண்டதுபோலிருந்தது. 'ம்'

'கேக்கலாமில்ல?'

'கொண்டா'

'இந்தாங்க'

அவன் திரும்பினான். ஜானகி சிவப்புத்தாவணியும் மஞ்சள்நிறப்பாவாடையும் அணிந்திருந்தாள். ரெட்டைச்சடையில் ஒன்றை முன்னால் தூக்கிப்போட்டிருந்தாள். வகிடு அரை இருட்டில் துல்லியமாகத் தெரிந்தது.

அவன் கைநீட்டி சாவியை வாங்கிக்கொண்டான். அவள் உள்ளங்கையும் வெண்மையாகத் தெரிந்தது. வாழைப்பூ நிறம் அதற்கு.

'என்ன அங்க, கெடாகிட்ட ஒரு வீரம்?'

'என்னது?' என்றான்

அவள் சிரித்து 'நான் பாத்தேன்..' என்றாள். பற்கள் வெண்முல்லைச்சரம் போல பளிச்சென்று இருளுக்குள் மலர்ந்தன.

அவன் கோபத்துடன் 'ஒண்ணுமில்ல' என்றான்

'பயப்படாதீங்க கெடாதான் முட்டவரும். கெடாக்கறி ஒண்ணும் செய்யாது'

'இருட்டுக்குள்ள இருட்டு மாதிரி நின்னு வேடிக்கை பாக்கிறியா?'

'ஆமா இவுரு பெரிய சுண்ணாம்புக்கல்லு நெறம்...'

'அப்ப செவப்பான ஆளாப் பாத்துக்கிடுறது....கெடாயக்கண்டா பயப்படாம நெத்தியத்தொட்டு வெளையாடுறவங்க இருக்காங்களே... '

'பாத்துக்கிட்டாப்போச்சு.... '

'அப்ப அவன்கிட்டப் போயி பேசு போ'

'ஏன், கொளுந்தன்கிட்டயும் பேசப்படாதோ?'

சிதம்பரம் கடும் கோபத்துடன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். என்ன சொல்வதென்றே தெரியவில்லை. பிறகு அடக்கிக்கொண்டு அரங்கைத் திறந்து பட்டுவேட்டியைக் கட்டிக்கொண்டான். காகிதத்தைக் கட்டிக்கொண்டதுபோல இருந்தது. சட்டைவழியாக மார்புமுடிகள் தெரிந்தன.

சிதம்பரம் வெளியே வந்தபோது எல்லாரும் லாரியில் ஏறிக்கொண்டிருந்தார்கள். லாரிக்குமேல் இருபக்கமும் மூங்கில்நட்டு மேலே தார்ப்பாய் விரித்து நிழல் செய்யப்பட்டிருந்தது. உள்ளே அமர்வதற்காகவும் மூங்கில் வைத்து கட்டியிருந்தார்கள். சேவல்மலைத் தாத்தாவும் கணேசமூர்த்தி தாத்தாவும் பூசாரி மாணிக்கம் தாத்தாவும் லாரியின் இரும்புத் தரையில் உட்கார்ந்திருந்தார்கள்.

‘வாங்க மாப்ள… ஏறிக்கிடுங்க’

‘ஆகா…மாப்ள என்ன களையா இருக்காரு…நம்ம பொண்ணைக் கட்டிக்குடுக்கலேண்ணா அப்டியே அள்ளிட்டுப் போயிடலாம்னு தோணுதே’

‘மாப்ள பெரியவர்ல? அவரு எங்க?’

‘அவருதானே இங்க எல்லாம்…வந்திருவாரு…’

‘பளனி எங்க மாப்ள?’

‘அண்ணன் பைக்ல வருவாரு’

‘அது சரி’

‘முருகேசன் முடிவுசெஞ்சுட்டானாமா?. கெடாவெட்டுறான்?’

‘கெடாவெட்டு எப்ப வேணுமானாலும் செய்யலாம்டா’

‘இல்ல…சாமி முன்னால ஒரு வார்த்த சொல்லிக்கிட்டா நல்லதுதானே? பளனிக்கும் இப்பம் தையிலே இருபத்தஞ்சாயிரம்…சானகிக்குப் பதினெட்டு. நல்ல கணக்குதானே?’

‘என்னமாம் கணக்கு இருக்கும்போல…’

‘இருக்குங்கிறேன்.. இல்லேன்னா ரெண்டாயிரத்தப்போட்டு கெடா வாங்கி வெட்டுவானாங்கிறேன்’

அண்ணன் கிடாவை இழுத்துக்கொண்டு வந்தான். லாரியில் ஆடுகளை ஏற்றுவதற்குரிய தடப்பலகையைப் பின்பக்கம் சாய்த்துவைத்தான்.

‘ஏன் மாப்ள, இதிலயா ஈரோவும் ஏறுறாரு?’

‘அது பேசாம நின்னுக்கிடும் மாமா…’

குழையைக் காட்டியதும் கிடா அதுவே கம்பீரமாக ஏறிக்கொண்டது.

‘கெடாவுக்குள்ள கெம்பீரியமே வேற சித்தப்பு..’

‘ஏலே, எது நல்லதோ அது சாமிக்கு….அதாக்கும் கணக்கு’ என்றார் பூசாரித்தாத்தா. ‘பொலிண்ணா என்னான்னு நினைக்கே? பொலியறது. தங்கமா பொலியறது. அதெல்லாம் சாமிக்கு…’

‘சும்மாவா அய்யனாரு கெடா கேக்காரு…கெடாக்கறி தின்னாக்க கொல்லவும் சாகவும் தெம்பு வந்திரும் மச்சான்’

கிடாவை ஓரமாகக் கட்டினார்கள். தொங்கவிடப்பட்ட குழையை மென்றபடி அது பர்ர் என்றது.

‘ஏன் மாப்ள வாடிப்போயிருக்காரு?’

‘மாமன் பொண்ண அண்ணன் கொண்டு போய்ட்டாருல்ல?’

‘நீ ஒண்ணியும் கவலப்படாத மாப்ள…நான் பெத்துத்தாறேன் நல்ல காராமணிமாதிரி பொண்ணு உனக்கு…உங்கத்தைகிட்ட நீயும் ஒரு வார்த்தை சொல்லிரு’ . வண்டியே சிரித்தது.

வண்டி குலுங்கிக் குலுங்கிச் சென்றது. சிதம்பரத்தின் தலை இருமுறை வண்டியில் முட்டிக்கொண்டது. அவனுக்கு அப்படியே குதித்து ஓடினால் என்ன என்று தோன்றியது.

‘டேய் வண்டிய நிப்பாட்ரா…டேய்’ என்று செந்தட்டி அண்ணா கத்தினார். வண்டி நின்றதும் அப்படியே குதித்து கோனாரின் கடையின் பின்பக்கம் சென்று அங்கிருந்து ஒரு பெரிய கேனை எடுத்து வந்தார்.

‘டேய், ஊரையே கொளுத்திரலாம் போலிருக்கே’

‘இது என்ன மாப்ள…என்னைய விடுங்க…ஒரே இருப்பில குடிச்சுக் காட்டறேன்’

குழல்போலக் கொண்டுவந்த பிளாஸ்டிக் கோப்பைகளில் இருந்து உருவி ஒவ்வொருவருக்காகக் கொடுத்தான் செந்தட்டி அண்ணா. கேனிலிருந்து

ஊற்றும்போது தெறித்தது. லாரிக்குள் சாராயவாடை. கோப்பைகளில் ஊற்றிக் குடித்துக்கொண்டே வந்தார்கள்.

செவலைக்காட்டுப் பொட்டலுக்குப் போய்ச்சேரும்போது எல்லாருமே நல்ல மப்பில் கண்கள் சிவந்து காற்றிலாடும் கருவேலமரம்போல இருந்தார்கள். காட்டூர் சித்தப்பா ஏப்பம் விட்டபடி 'மாப்ள, நீ நம்ம பட்டுச்சட்டையிலே ரசினி மாதிரி இருக்கே பாத்துக்க.. டேய் நீ ரசினிடா...நல்ல ஒரிசினல் ரசினி' என்று சிதம்பரத்தின் தோளைப் பற்றினார். லாரியிலிருந்து அவர் கையில் ஒட்டிய அழுக்கெல்லாம் வெள்ளைச்சட்டையில் படிந்தது

அப்பா அண்ணாவின் பைக்கில் பின்னால் ஏறி வந்து சேர்ந்திருந்தார். அவர் வாயில் பீடாவை அதக்கியிருந்ததைப் பார்த்தபோது அவரும் நன்றாகவே குடித்திருந்தார் என்று தோன்றியது. இருமுறை மெலிதாக ஏப்பம் விட்டார்.

இன்னொரு பைக்கில் மாமாவும் வந்து சேர்ந்தார். அவருக்குப்பின்னால் ஒரு பெரிய நார்ப்பெட்டியை மடியில் வைத்துக்கொண்டு அத்தை அமர்ந்திருந்தாள்.

மாமா 'உங்க தங்கச்சி கடசீ நேரத்திலே பூவ எடுத்து வைக்காம விட்டுட்டா மச்சான்...பைக்ல போயி எடுத்திட்டு வாறோம்' என்றார்.

லாரியிலிருந்து ஒவ்வொருவராக குதித்தார்கள். அண்ணா வந்து தடப்பலகையை சாய்த்து கிடாவைக் கீழே இறக்கினான். கிடா துரை போல டக் டக் என்று பிடரி அசைய இறங்கி வந்தது. தடப்பலகை வழியாக வயசாளிகள் மெல்ல இறங்கினார்கள். பூசாரித்தாத்தா அதன் தாடையைப்பிடித்து வாயைப்பிளந்து பார்த்தார். ''பல்லெல்லாம் இருக்கு மாப்ள...நல்ல ஐட்டம்' என்றார்.

பெண்கள் வந்த லாரி தூசுப்படலத்தைப் பின்னால் எழுப்பியபடி பொட்டலில் வந்தது. கலங்கிய ஆறுபோலக் கிடந்த லாரித்தடத்தில் அது பெரிய படகுபோல ஆடி ஆடி வந்து ஆழமான மூச்சுடன் நின்றது. சுப்பு மாமா சென்று லாரியின் உள்ளே இருந்து ஏணியை எடுத்துப் பின்னால் சாய்த்து வைத்தார். பெண்கள் ஒவ்வொருவராக இறங்கினார்கள். எல்லாரும் மஞ்சள்பூசிய முகத்தின் மீது பூசப்பட்ட பௌடர் வியர்வையில் வழிய, தலைமுடி காற்றில் கலைந்து பறக்கத் தெரிந்தாலும் உற்சாகமாக சிரித்து கூச்சலிட்டுப்பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஜானகி கடைசியாகத்தான் இறங்கினாள். அவளைத் தான் பார்ப்பதை எவரேனும் கவனிக்கிறார்களா என்று சிதம்பரம் நான்குபக்கமும் பார்த்தான். யாருமில்லை. அண்ணன் அவனிடம் வந்து 'டேய், எல்லாருக்கும் பாய எடுத்து விரிக்கச் சொல்லு...நான் இந்தா வந்திடறேன்' என்று சொல்லிவிட்டு பைக்கில் ஏறி உதைத்தான்

பெண்களின் லாரியிலேயே பனம்பாய்கள் வந்திருந்தன. கம்புசோளம் காயப்போடும் பாய்கள். உறுதியாக இருப்பதற்காக சாணி மெழுகப்பட்டவை. செந்தட்டி அண்ணன் பெரிய தூண்போல சுருட்டப்பட்டிருந்த பாயை எடுத்தபோது சிதம்பரம் பிடிக்கப்போனான். 'நீ என்னத்துக்கு மாப்ள தொடுற? சட்ட அழுக்காயிரப்போவுது...' என்றான் செந்தட்டி அண்ணன்

பனம்பாய்களில் பெண்கள் புடவையின் ஓர் அடுக்கை விலக்கி அடிப்பகுதி படும்படியாக அமர்ந்துகொண்டார்கள். செண்பகம் அக்கா லாரியிலிருந்து வெற்றிலைப்பெட்டியைக் கொண்டுவந்து வைத்தாள். எல்லாரும் வெற்றிலை போட்டுக்கொள்ள ஆரம்பித்தனர். பெரிய கேன்களில் தண்ணீர் கொண்டுவந்திருந்தார்கள். செந்தட்டி அண்ணனும் ராசப்பனுமாக அவற்றை எடுத்துக்கொண்டுவந்து வைத்தார்கள்.

பூசாரித்தாத்தா தன் உடுக்கையை அய்யனார் அருகே வைத்துவிட்டு கிடாவை அவிழ்த்துப் பிடரியை நீவிக் கூட்டிக்கொண்டு சென்றார். அதன் தலையில் நீர் தெளித்தபின் செவ்வந்தி அரளி சேர்த்துக் கட்டிய மாலையை அதன் கழுத்தில் மாட்டினார். கிடா நாக்கால் துழாவிப்பார்த்து எட்டாமல் தலையைத் தழைத்தது. அதை அய்யனார் அருகே இருந்த தறியில் கட்டினார்.

அய்யனார் என்று பேச்சே ஒழிய அது ஒரு செங்குத்தான கல்தூண்தான். அதைச்சுற்றிக் கல்லடுக்கிக் கட்டப்பட்ட சிறிய பீடம். ஒரு கல்விளக்கு. எல்லாமே மழையில் கருத்துப்போயிருந்தன. மாடன் மீது ஓர் ஓணான் அமர்ந்து வயிற்றை எக்கி எக்கி செதிலை விரித்தது. தாத்தா கொஞ்சம் தண்ணீரை அள்ளி வீசியதும் அது சிலிர்த்தபடி ஓடிப் பின்பக்கம் பாய்ந்தது.

மீனாட்சி அத்தை பூக்கூடையைக் கொண்டுவந்து வைத்தாள். பூசாரித் தாத்தா அய்யனார் மீது நல்லெண்ணை தடவி செவ்வரளியும் செவ்வந்தியும் சேர்த்துக் கட்டிய மாலையைத் தொங்கவிட்டார். வெள்ளைச்சுண்ணாம்பால் இரு பெரிய கண்களை வரைந்தார்.

‘வெளக்கு வைக்கிறது’ என்றார் தாத்தா. பெண்டுகள் எல்லாம் வந்து கூடி நின்றார்கள். கல்விளக்கில் நல்லெண்ணை விட்டு தீபம் கொளுத்தியபோது பெண்டுகள் கையால் வாய்பொத்திக் குலவையிட்டார்கள். காற்றில் தீபச்சுடர் பறந்து பறந்து எரிந்தது.

மேக்கூர் பெரியப்பா வடலிப்பனையில் மட்டை வெட்டி அந்த மிளாச்சில் வெள்ளைத்துணி சுற்றி எண்ணை விட்டு பந்தங்கள் செய்து கொண்டுவந்தார். அதைக் கொளுத்தி அய்யனாருக்கு இருபக்கமும் நாட்டினார் பூசாரித்தாத்தா. தீ சிதறி சிதறிக் காற்றில் தெறித்தது. ‘ஏலே மருமகனே எண்ணைய விட்டுட்டே இரு…அணைஞ்சிரப்பிடாது ’ என்றார் பூசாரித்தாத்தா.

புகையிலைக்கற்றைகள் போலப் பெரிய சடைகளைப் பொட்டலம் போல சுற்றித் தலையில் வைத்திருந்தார். அதை அவிழ்த்துத் தோளில் புரளவிட்டுக்கொண்டார். அய்யனார் அருகே இருந்து உடுக்கையை எடுத்து திடுதிடுதிம் திடுதிடுதிம் என விரல்களால் மீட்டி கனத்த உடைந்த குரலில் பாட ஆரம்பித்தார்

‘மூணு பொளுதிருக்கு எஞ்சாமி மூணு பொளுதிருக்கு
ஆறு காலமில்லா எஞ்சாமி ஆறு காலமுல்லா
ஏளு நாளிருக்கே எஞ்சாமி ஏளு நாளிருக்கே
நாலு பூவிருக்கே எஞ்சாமி நாலு பூவிருக்கே
ஆண்டு முளுசெல்லாம் எஞ்சாமி ஆண்டு முளுசெல்லாம்
அருகிருந்து காக்கணுமே எஞ்சாமி அருகிருந்து காக்கணுமே

உடுக்கையின் துடிப்பு அவரது குரலில் கச்சிதமாகக் கலந்துகொண்டது. வந்திறங்கியதுமே அங்கங்காக சிதறிச்சென்ற ஆண்கள் எல்லாரும் வந்து கூடினார்கள். சாராயவாடை தூக்கியடித்தது. பைக்கின் ஒலி கேட்டது. அண்ணன் வந்திறங்கி அதை நிறுத்திவிட்டு வந்து பின்பக்கம் நின்றான்

சிதம்பரம் பெண்கள் கூட்டத்தில் தேடி ஜானகியை பார்த்தான். அவளுடைய கண்கள் வந்து அவனைத் தொட்டுச்சென்றன. அவளுடைய கொழுத்த கன்னம் கொஞ்சம் மடிந்தது. சிரிப்பு போல, அல்லது பழிப்பு போல. அவன் பார்வையை விலக்கிக் கொண்டான்.

பாட்டு முடிந்ததும் ‘பொலிய கொண்டாங்க… பொலிகுடுக்கிற குடும்பம் வந்து படைங்க’ என்றார் பூசாரித்தாத்தா

முருகேச மாமனும் மீனாட்சியத்தையும் வந்து முன்னால் நின்றார்கள். மாமன் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டார். மீனாட்சியத்தை முந்தானையை செருகிக்கொண்டார். செந்தட்டி அண்ணன் கிடாவை அவிழ்த்து முன்னால் நீக்கினான். முருகேசன் மாமனும் மீனாட்சியத்தையும் கிடாவின் கயிற்றை எடுத்துப் பூசாரியிடம் கொடுத்தார்கள்.

பூசாரித் தாத்தா அய்யனாரின் மாலையில் இருந்தே கொஞ்சம் பூ பிய்த்து முருகேசன் மாமனுக்கும் அத்தைக்கும் கொடுத்தார். அத்தை அதைக் கண்ணில் ஒற்றித் தலையில் வைத்துக்கொண்டார். மாமன் கையிலேயே வைத்துக்கொண்டார்.

கிடாவின் கயிற்றை அப்பா கெட்டியாகப் பிடித்துக்கொண்டார். பூசாரித்தாத்தா சூரிக்கத்தியை விரித்துக்கொண்டு கிடாவின் கழுத்தைப்பிடித்து பக்கவாட்டில் வளைத்துச் சாய்த்து சட்டென்று கழுத்தின் ரத்தக்குழாயை வெட்டினார். ரத்தம் பீய்ச்சியடித்தது. அதை வாகாகத் திருப்பி அய்யனாரின் காலடியில் விழும்படி செய்தார். குலவை ஓசை செவியை அடைத்தது. அய்யனாரின் வெள்ளைக்கண்கள் விழித்துப்பார்த்தன. சிதம்பரத்துக்கு வயிற்றுக்குள் உடுக்கின் அதிர்வு எஞ்சியிருப்பது போல இருந்தது. தாகம்போலவோ மூச்சுத்திணறல்போலவோ.

சட்டென்று காலடியில் தரையை யாரோ பாயாக இழுத்தது போல உணர்ந்தான். என்ன நடந்தது என உணர்வதற்குள் கீழே விழுந்துவிட்டான். கூச்சல்களையும் பிடிக்க நீண்ட கைகளையும்தான் கடைசியாகக் கண்டான்.

பின்பு தரையில் அமர்ந்திருப்பதைக் கண்டான். முகத்தில் யாரோ தண்ணீரை வீசியிருந்தார்கள். செந்தட்டி அண்ணன் ஒரு பிளாஸ்டிக் குவளையில் தண்ணீரைக் கொடுத்து ‘குடிலே..’என்றான். அவன் தலைகுனிந்து தண்ணீரைக் குடித்தான். இரண்டுமிடறு தண்ணீர் எல்லாவற்றையும் சரிசெய்ததுபோல இருந்தது. படபடப்பு குறைந்தது. தொண்டை ஈரமாயிற்று. மறுகணமே வெட்கம் வந்து உடம்பு சுருங்கியது.

‘ஒண்ணுமில்ல...காலம்பற சாப்பிட்டது வயத்துக்குப் பிடிக்கல்ல’ என்றாள் அம்மா.

‘நீ சும்மா சப்பைக்கட்டு கட்டாதே...ரத்தத்தப் பாத்து பயந்திருக்கு நீ பெத்த பிள்ள...டேய் அவன அந்தப்பக்கமா போவச்சொல்லு’ என்றார் அப்பா

‘எந்திரிங்க மாப்ள’ என்று செந்தட்டியண்ணன் கை நீட்டினார். அவன் அதைப் பிடிக்காமல் எழுந்து நின்றான். சட்டை ஈரமாக இருந்ததை உதறிக்கொண்டான். கிடாவைக் காணவில்லை. பீடத்தைத் திரும்பிப்பார்ப்பதை தவிர்த்தான். அப்படியே ஓடிப்போய் பஸ் ஏறி வீட்டுக்குப்போய்விடவேண்டும் போலிருந்தது. அவர்கள் எவருடைய முகத்திலும் விழிக்கக்கூடாது. இனி இவர்கள் எவரையுமே பார்க்கக்கூடாது. அப்படியே திருநெல்வேலிக்குப் போய்விடவேண்டும். இல்லை, மதுரைக்கு. சென்னைக்கு...

‘மாப்ள ரத்தம் பாத்த பயத்த கறியத் தின்னு போக்கிக்கலாம்...போய் ரெஸ்ட் எடுங்க’ என்றார் சுப்பு மாமா. எல்லாரும் சிரித்தார்கள்.

அவன் மெல்ல பின்னால் நகர்ந்தான். ஜானகியின் பார்வையை உடம்பெங்கும் உணர்ந்தான்.

முருகேசன் மாமா ‘இல்ல...செலம்பரம் நிக்கட்டும்...’ என்றார்.

சிதம்பரம் நின்றுகொண்டான். ஆனால் தலையைத் தூக்கவே இல்லை.

பூசாரித்தாத்தா ‘செரி, பூவப்போட்டு சங்கல்பம் சொல்லணுமானா சொல்லிடறது...சாமி நிறைஞ்சு நிக்கிற நேரம்’ என்றார்

‘அதாகப்பட்டது, இப்பம் எங்க குட்டி சானகிக்கு வயசும் அறிவும் வந்தாச்சு...சாதிவழக்கப்படி செய்யவேண்டியதச் செய்யணும்....அதான்.சொந்தமும் சனமும் நமக்கு வேணும்’

பெண்கள் எல்லாரும் வாய் திறந்து கவனித்தனர்

‘நீ சொல்லுறதும் சரிதான் முருகேசா... இந்தக் காட்டுப்பொட்டலிலே நாமள்லாம் உசிரும் மானமுமா இருக்கிறதே சொந்தத்தாலதான்’ என்றார் காட்டூர் சித்தப்பா

‘இருவத்தஞ்சு வருசம் முன்னால சுடலை இந்தூருக்கு வந்தப்ப அவனுக்கு நெலமும் பொண்ணும்குடுத்து கூடவே வச்சுகிட்டேன். ரத்தினம் நான் தோளில போட்டு வளத்த பொண்ணு... ...அவ அசலூரு போகப்படாதுன்னுதான் அதைச் செஞ்சேன். ஒத்த தங்கச்சிய நான் ஒருநாள் கூட பிரிஞ்சதில்ல. இப்ப அவளுக்கும் சிங்கக்குட்டிபோல ரெண்டு ஆம்புளப்புள்ள வீடுநெறைய வளந்து நிக்குது....குடுத்தத எடுத்துக்கிடறதுதான் நம்ம வழக்கம்... ’

‘செஞ்சிரவேண்டியதுதான்... கெணத்துல தண்ணி இருக்கிறப்ப ஆறு என்னத்துக்கு?’ என்றார் கீகாட்டு மாமா

‘இதெல்லாம் அவுங்க சின்னஞ்சிறிசுகளா இருக்கிறப்பவே நாங்க மச்சானும் மச்சானும் முடிவுசெஞ்சதுதான். புதிசா ஒண்ணுமில்ல. இப்ப சிறிசுக வளந்து அதுக்குண்டான அறிவுவந்திட்டதினால நாலு பெரியமனுசங்க சொந்தபந்தம் சாட்சியா சாமிமுன்னால ஒரு சொல்லு சொல்லிப் பூவை வச்சிடலாம்னு முடிவுசெஞ்சிருக்கோம்’

‘வேண்டியதுதானே...நல்ல விஷயம் நடக்கட்டும்’ என்றார் கணேசமூர்த்தி தாத்தா ‘’ஏலே எல்லாரும் கேட்டாச்சாலே? வேத்துச்சொல்லு இருக்கப்பட்டவன் இப்பவே சொல்லிடுங்க...’ என்றார்

‘வேத்துச்சொல்லு என்ன மாமா? ஊரறிஞ்ச விசயம்தானே?’ என்றார் சுப்புமாமா.

‘அப்ப பூவை வச்சிடறது’ என்றார் பூசாரித்தாத்தா

‘அதிலே ஒரு சின்ன விசயம். பெரிய மாப்பிளைட்ட பேசினேன். அவரு சின்னவருக்கு சானகியக் குடுக்கிறதுதான் நல்லாருக்கும்னு நெனைக்கிறார்....’

எல்லாரும் கலைந்து பேசிய ஒலி ரீங்காரமாக எழுந்தது

‘அதென்ன பேச்சு முருகேசு புதிசா?’ என்றார் சுப்பு மாமா

‘பெரியமாப்ள நிதானமானவரு...அவரு சொன்னா அர்த்தமிருக்கும்னு நானும் மேக்கொண்டு கேக்கல்ல...’ என்றார் மாமா.

பூசாரித்தாத்தா ‘அதும் சரிதான்...இதெல்லாம் அதுக்குமேலே கேக்கப்பிடாது...சின்னவருக்கும் சானகிக்கும் சம்மதமான்னு கேட்டுட்டு பூவப்போட்டிரலாம்’ என்றார்.

சிதம்பரம் என்ன நடக்கிறதென்ற பிரக்ஞையே இல்லாமல் நின்றான். சுப்பு மாமா ‘என்ன மாப்ள, கேட்டிகதானே? சானகிய பிடிச்சிருக்குதானே?’ என்றார்

பிரமையுடன் சிதம்பரம் தலையசைத்தான். மீண்டும் விழுந்துவிடுவோம் என்று தோன்றியது

பெண்கள்கூட்டத்தில் இருந்து செண்பகம் அக்கா 'சானகிக்கும் பிரியம்தானாம்...' என்றாள்:

'பிறவென்ன? மீனாச்சி சுந்தரேஸ்வரர் மாதிரி நெறைஞ்சிருக்கட்டும்' என்றார் பூசாரித்தாத்தா. பெண்கள் கும்பலில் செண்பகம் அக்கா ஏதோ சொல்ல எல்லாரும் சிரித்தார்கள்.

'சொடல என்ன சொல்றே? பூவ போட்டிரலாமா?'

அப்பா தலையசைத்தார்

அம்மா மட்டும் தயங்கி 'இப்ப இப்டி சொல்றீக....எப்டின்னாலும் மூத்தவனுக்கு முடிச்சதுக்குப்பிறகுதான் சின்னவனுக்கு...' என்றாள்

முருகேசமாமா 'அதென்ன அப்டி சொல்லிட்டே? மூத்தவனுக்கு வாறவதானே முதல் மகாலட்சுமி?' என்றார்

'பூவப் போட்டுடறது' என்றார் பூசாரித்தாத்தா

பூவை மாமனும் அத்தையும் சேர்ந்து அய்யனார் காலடியில் போடுவதை சிதம்பரம் பார்த்திருந்தான். மனம் கல் மாதிரி அசையாமல் இருந்தது.

பூசாரித்தாத்தா உடுக்கை கடைசியாக அடித்துப் பாடி பூசையை முடித்ததும் ஆண்கள் ஆவலாகக் கிடாக்கறி வேகுமிடம் நோக்கிச் சென்றார்கள். கறிவேகும் மணம் அப்போதுதான் சிதம்பரம் மூக்கில் நுழைந்தது. அப்பாதான் முதலாளாகப் போய் நின்று வாழையிலைக்கீற்றில் வெந்த கறி வாங்கிக்கொண்டு கருவேலமரத்துப்பக்கமாகச் சென்றார். அதன்பின் ஒவ்வொருவராகக் கறி வாங்கிக்கொண்டு விலகினார்கள். வெவ்வேறு மரத்தடிகளில் சென்று சிறிய குழுக்களாக அமர்ந்துகொண்டார்கள்.

சிதம்பரம் கண்களை சுழற்றினான். ஜானகியைக் காணவில்லை. அவன் பார்ப்பதை செண்பகம் அக்கா சுட்டிக்காட்ட பெண்கள் சிரித்தார்கள். அவன் எழுந்து சென்று லாரியின் சக்கரத்தருகே போடப்பட்டிருந்த அட்டை மீது அமர்ந்துகொண்டான். ஏனோ மிகவும் களைப்பாக இருந்தது. தூங்கினால்போதும் என்று பட்டது. கறி சரியாக வெந்து குழம்பாக ஆக இன்னும் நேரமாகும். சோறு இப்போதுதான் அடுப்பிலேறியிருக்கிறது.

அசப்பில் திரும்பிப்பார்த்தபோது ஜானகியின் கண்களைச் சந்தித்தான். நுனிநாக்கை நீட்டிக்காட்டிக் கண்களை உருட்டினாள். பதறிப் பார்வையை விலக்கிக்கொண்டான்.

அண்ணன் வந்து 'இங்கியா இருக்கே?' என்றான். அவனுக்கு அப்பால் சென்று லாரியின் மறைவில் நின்றுகொண்டான்.

சிதம்பரம் பதில் சொல்லவில்லை

'நீ எதுக்குலே பொலிரத்தம் முன்னால போய் நிக்கிறே?' என்றான் அண்ணன். சுற்று முற்றும் பார்த்தபின் ஒரு கசங்கிய சிகரெட்டை எடுத்து நீவி நேராக்கி வாயில் வைத்தான். உதடை அசைக்காமல் 'தலைங்க ஏதாவது வந்தா சொல்லுலே' என்றபின் தீப்பெட்டி எடுத்துப் பற்றவைத்துக்கொண்டான். ஆழ இழுத்து மூக்கு வழியாகப் புகை விட்டான்.

'நீ எதுக்கு அப்டிச் சொன்னே?'

'என்னது?'

'சானகிக்கு என்னைய–'

'அவளுக்கு உம்மேலதான்லே பிரியம்...' என்று சாம்பலைத் தட்டினான்

'எப்டித் தெரியும்?'

'தெரிஞ்சிருது...'

'எப்டி?'

'நமக்குப் பிடிச்சிருக்கிறவங்களுக்கு நம்ம மேலே பிரியமிருக்கான்னுதானே நாம பாப்பம்?'

அண்ணன் சிகரெட்டை ஆழ இழுத்தான். கனல் தீவிரமாகச் சிவந்து மெல்ல கருகியது

## (5) தீபம்

மாமன் வீட்டு முகப்பில் காலொடிந்த ஆடு ஒன்று நின்றிருந்தது. சிம்பு வைத்துக் கட்டப்பட்ட காலுடன் ஜன்னல்கம்பியில் கட்டப்பட்டிருந்த அகத்திக்குழையைக் கடித்துக்கொண்டிருந்தது அசைவைக்கண்டு திரும்பிப்பார்த்து கூழாங்கல்போன்ற கண்களை மூடித்திறந்து ம்ம்பே என்றது. வாசலில் கிடக்கும் கருப்பனைக் காணவில்லை. மாமா காட்டுக்குத்தான் போயிருக்கவேண்டும். அத்தை இருக்கிறாளா என்று தெரியவில்லை. வீடே அமைதியாக இருந்தது

முருகேசன் வீட்டுமுற்றத்தில் தயங்கி நின்றான். அவன் பிறந்ததே அந்த வீட்டில்தான். அதன்பின் நேரம் கிடைக்கும்போதெல்லாம் ஓடிவந்துவிடுவான். கறிசமைத்தாலோ எள்ளுருண்டையோ வெல்லமாவோ உருட்டினாலோ அத்தையே அவனை வரச்சொல்லித் தகவலனுப்பிவிடுவாள். வந்ததுமே முதலில் சமையலறைக்குப்போய் என்ன இருக்கிறதென்றுதான் பார்ப்பான். அவன் வீட்டில் எப்போதுமே எல்லாம் கொஞ்சம் பற்றாக்குறையாகத்தான் இருக்கும். மாமா குடிப்பதில்லை. மாட்டுத்தரகும் உண்டு. ஆகவே வீட்டில் தானியமும் பருப்பும் கருப்பட்டியும் எப்போதும் செழிப்புதான். அடுப்புக்குமேலே உத்தரம் வைத்து அதில் வைக்கப்பட்டிருக்கும் பனைநார்ப்பெட்டிகளில் உப்புக்கண்டம் கறி எப்போதுமிருக்கும்.

அப்போதெல்லாம் வீடு இன்னும் கொஞ்சம் சின்னது. இப்போது பக்கவாட்டில் இரு சாய்ப்புகளும் முன்பக்கம் ஒரு திண்ணை எடுப்பும் சேர்ந்து பெரியதாகி விட்டது. லட்சுமி வளர்வதைப்போல வீடும் வளர்கிறது என்று முருகேசன் நினைத்துக்கொண்டான். ஆனால் அவனும் அண்ணனும் வளர்ந்தபின்னாலும் அவர்கள் வீடு வளரவில்லை. வீட்டுக்குள் நான்குபேர் கைகால்நீட்டிப் படுக்க இடமில்லை. பெரும்பாலும் அப்பா முற்றத்தில் வேப்பமரத்தடியில் கயிற்றுக்கட்டில் போட்டுப் படுத்துக்கொள்வார். அண்ணன் எங்காவது பம்புசெட்களில் தங்குவது வழக்கம். முருகேசனுக்கும் வெளியே படுத்துக்கொள்ள ஆசைதான். ஆனால் படுத்து எழுந்தாலே மூக்கு வீங்கி கனத்து தும்மலாக வரும். மறுநாளே தடுமன் பிடித்து ஒருவாரம் பாடாய்ப்படுத்தும்.

சாத்திய கதவு மெல்ல விரிசலிட்டது, உள்ளே லட்சுமியின் சிவப்புத்தாவணி அசைவது தெரிந்தது. ஏன் அது அத்தையாக இருக்கக் கூடாதா? இல்லை, அசைவே இல்லாமல் அவள் அங்கே நின்றால்கூட, அவள் நிற்பது கண்ணுக்கே தெரியாவிட்டால்கூட அவன் மனசுக்குத்தெரிந்துவிடும். அவள்தான். அவள் கையைத் தாழ்த்தியபோது வளையல்கள் மெல்லிய ஒலியுடன் மணிக்கட்டில் விழுந்தன.

முருகேசன் திண்ணையைப் பிடித்தபடி நின்றான்.

'அம்மா இல்ல…அப்பா வண்டியூருக்கு வசூலுக்குப் போயிருக்காங்க'

'ஓ' என்றான் முருகேசன் . மேற்கொண்டு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

'திருணையிலே ஒக்கார்ரது…வந்த காலிலே ஏன் நிக்கணும்'

'இல்ல…சோலி கெடக்கு'

'ம்ம்க்கும் மைனருக்கு ஆயிரம் தொழிலுல்ல' மெல்லிய சிரிப்பு

முருகேசன் அவளைப் பார்க்க முனைந்தான். அவள் கை கதவைப் பிடித்திருந்ததும் ஒரு காலும் மட்டும்தான் தெரிந்தது. காலில் வெள்ளிக் கொலுசு தெரிந்தது. அவன் பார்ப்பதைக் கண்டதும் அவள் காலை உள்ளே இழுத்துக்கொண்டாள்.

'வெள்ளிக்கொலுசுபோல…புதிசா?'

'ம்…செஞ்சது இல்ல. வாங்கினது…அப்பா போன பொங்கலுக்கே வாங்கிக் குடுக்கறேன்னு சொன்னார்…இப்பதான் சோளம்போட்ட காசு வந்திச்சுன்னு வாங்கிட்டுவந்தார்'

'ம்'

அவன் கைநகங்களைப்பார்த்தான். போய்விடவேண்டும். ஆனால் போகவும் முடியவில்லை. திண்ணையைப்பிடித்தபடி நின்றான்

'பிடிச்சிருக்கா?'

'என்னது?'

'கொலுசு'

'நான் எங்க பாத்தேன்…'

'பாருங்க'

அவன் மனம் படபடக்கப் பார்த்தான். கதவுக்குக் கீழே இருட்டுக்குள் இருந்து மெல்ல அவள் நீலப்பாவாடை அசைந்து முன்னால் நீண்டது. பின்பு அதற்குள் இருந்து அவள் கால் வெளியே வந்தது. அதில் வெள்ளிக்கொலுசு பளபளப்பாகத் தொய்ந்து கிடந்தது. அவன் பார்த்துக்கொண்டே இருந்தான்.

'என்ன பார்வ?'

'இல்ல'

'என்ன இல்ல?'

'ஒண்ணுமில்ல'

'என்ன ஒண்ணுமில்ல...பிடிச்சிருந்தா சொல்றது'

'பிடிக்காம இருக்குமா....'

'வெள்ளிக்கொலுசு நல்லா செஞ்சிருக்கான் இல்ல?'

'ம்'

அவள் அசைய கதவு முனகியது

'காலு முத்துப் பல்லைக் காட்டி சிரிக்கிற மாதிரி இருக்கு...'

'அய்யே... '

'இல்ல மல்லிச்சரம் மாதிரி'

'அய்யோ' என்று அவள் சிரித்தாள்.

'காலு வெளியே வந்தது எப்டி இருந்திச்சு தெரியுமா...?'

'ம்?'

'முயல் பதுங்கி வர்ரது மாதிரி'

அவள் 'உக்கார்ரது' என்றாள்

'இல்ல...உக்காந்தா நல்லாருக்காது...வீட்டிலே யாருமில்ல'

'வீட்டிலதான் நாங்க இருக்கம்ல?'

'நீ மட்டும்தானே இருக்க?'

‘ஏன் நான் பத்தாதா?’

‘இல்ல....அது மொறையில்லல்ல...’

‘மொறைதான் செஞ்சாச்சே...ஊருக்கே தெரியறாப்ல அய்யனாருமுன்னால பூவும் போட்டாச்சு...பிறவு என்ன?’

‘இல்ல...நான் வாறேன். மாமன் வந்தா மேலகரத்திலே வசூலுக்கு திங்கக்கிழமை போலாமான்னு அப்பா கேக்கச்சொன்னாருன்னு சொல்லிடு’

‘உக்காந்துட்டுப் போலாமே’

‘இல்ல’

‘எப்பவாச்சும் வாறது. வந்தாலும் சரியாப் பாக்கக்கூட முடியறதில்ல’

‘நீங்க அங்க நின்னு பாத்துக்கலாம்....நாங்க எங்க பாக்கிறோம்? எப்ப வந்தாலும் இருட்டயில்ல பாத்துட்டுப் போறம்...?’

‘சாமியக்கூட இருட்டிலதான் பாக்கிறீய’

‘சாமிய வெளக்கு கொளுத்திக் காட்டுறாங்களே’

‘வெளக்குல காட்டினா கும்பிடுவீங்களாக்கும்?’

‘சத்தியமா’ என்றான் முருகேசன் . அவன் குரல் நடுங்கியது ‘கையெடுத்துக் கும்பிட்டிருவேன்’

‘பொய்யி’

‘எப்பவும் மனசுக்குள்ள கும்பிடுறதுதானே’

அவள் பேச்சில்லாமல் நின்றாள்

‘என்ன?’

‘ஒண்ணுமில்ல...’ அவள் குரல் மிகவும் தாழ்ந்திருந்தது

‘நான் வாறேன்’

‘போயிராதீங்க...’

‘ஏன்?’

‘ஒரு நிமிசம்’

அவன் அவள் உள்ளே செல்லும் ஒலியைக் கேட்டான். என்ன செய்கிறாள்?

பின் மெல்லிய குரல் ‘பாருங்க’

கதவு மிக மெல்லத் திறந்தது. உள்ளே லட்சுமி கையில் ஒரு விளக்குடன் நின்றிருந்தாள். சாமிகும்பிடும் லட்சுமி விளக்கு. அதன் சுடர் சிறிய சங்குப்பூவின் இதழ்போல அசையாமல் நின்றது. அதன் ஒளியில் அவள் கன்னங்களின் வளைவுகள், கழுத்தின் மென்மை, உதடுகளின் மெல்லிய ஈரம், காதோர மயிரின் சஞ்சலம், இமையின் படபடப்பு செம்பொன் நிறமாகத் தெரிந்தது. அவள் கண்களின் வெண்மையில் தீபச்சிவப்பு படர்ந்திருந்தது. கருவிழிகளுக்குள் இரு சிறு சுடர்கள் எரிந்து நின்றன.

பிறந்து இறந்து கொண்டே இருந்தான் முருகேசன்

மெல்லிய குரலில் லட்சுமி ‘ பாத்தாச்சா?’ என்றாள்

‘இல்ல’

‘எவ்ளவு நேரம் பாப்பீங்க?’

‘கடசீ வரைக்கும்தான்’

அவள் பெருமூச்சுவிட்டபோது மார்புகளும் தீபமும் அசைந்தன.

‘சரி’ என்று அவள் விளக்குடன் உள்ளே சென்றாள். முருகேசன் அவள் போனபின்னரும் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

மீண்டும் கதவுக்கு அப்பால் அவளுடைய அசைவு.

‘நான் வர்ரேன்’ என்றான்

‘அடிக்கடி வர்ரது’

‘இனிமே எங்கயானாலும் ஒரு சாதாரண வெளக்கே போதும். உன் முகத்த நானே பாத்துக்குவேன்’ என்றான் முருகேசன்

அவள் மெல்ல சிரித்தது கேட்டது. முருகேசன் முற்றத்தில் இறங்கி அவள் பார்வை விரிந்த மண்ணில் நடந்து சென்றான். வேலியெங்கும் ஆவாரம்பூக்கள் மலர்ந்து நின்றிருந்தன. தூரத்தில் நீலமலரிதழ்கள் போல மலையடுக்குள் விரிந்திருந்தன. அதன் மேல் ஒளிரும் வெண்ணிறமாக சூரியன் பூத்திருந்தது.

# (6) வெறும்முள்

சமேரியாவில் கோடைகாலத்தில் மது அருந்தாதவர்களை சோம்பேறிகள் என்கிறார்கள். இந்த பித்துப்பிடிக்கவைக்கும் வெயிலையும் அலையலையாகக் கிளம்பும் தூசுப்படலத்தையும் எதிர்கொள்ள ஒரேவழி குளிர்ந்து புளித்து நுரைத்துக் குமட்டச்செய்யும் யாயினை மண்குவளை நிறைய வாங்கி குடலை நிறைத்துக்கொள்வதுதான். அந்த கடும்துவர்ப்பு நாக்கில் குழைகையில் அபிசீனியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட உலர்ந்த மிளகாயை நரநரவென்று கடித்துக்கொண்டு கண்ணீர் மல்கலாம். மெல்ல மெல்ல நம் உடல் குளிர ஆரம்பிக்கிறது. வெப்பத்தில் உலர்ந்து பறந்த எண்ணங்கள் ஈரமாகிப் படிய ஆரம்பிக்கின்றன. அதன்பின் நம்மால் வேலைசெய்ய முடியும். சிந்திக்க முடியும்.

சமேரியாவின் இந்தச்சிறிய ஊருக்கு ஈன் ஷெவா என்று பெயர். ஏழு ஊற்றுக்கள். வரிசையாக அமைந்த ஏழு ஊற்றுகளைச்சுற்றி இந்த ஊர் உருவாகி வந்திருக்கிறது. அந்த ஊற்றுக்களைக் கண்டுபிடித்த அராபியர் இந்த ஊரை அவர்கள் மொழியில் டாப்கா என்று அழைத்தனர். இது புகழ்பெற்ற ஒட்டகப்பாதையின் ஓரத்தில் இருக்கிறது. நூற்றாண்டுகளுக்கு முன்பு சீனாவிலிருந்து பட்டையும் பாப்பிரஸையும் பாரதத்தில் இருந்து மயில்தோகைகளையும் சந்தனத்தையும் சுமந்துகொண்டு துருக்கிக்குச் செல்லும் ஒட்டகக்கூட்டங்கள் இந்த சிறிய பாலைவன ஊற்றுக்களின் அருகேதான் சுமையிறக்கின. அங்கே இரண்டாள் ஆழத்தில் தோண்டப்பட்டுக் கற்கள் அடுக்கிக் கரையிடப்பட்ட ஊற்றுகளுக்குள் எப்போதும் இளஞ்செந்நிறமான தண்ணீர் கலங்கிய ஒற்றைக்கண் போலக் கிடக்கும். கற்படிகளில் இறங்கித் தங்கள் கொப்பரைகளில் நீரை அள்ளி குடித்தபின் ஒட்டகங்களுக்கும் கொடுத்து அருகிலேயே ஓய்வெடுத்தனர் வணிகர்கள் .

உண்மையில் இது யாயின் விற்பதற்காகவே உருவாகிவந்த ஒரு இடம். அராபிய, சீன வணிகர்களுக்கு யாயினை விற்பதற்காகத் தொலைதூரத்தில் ஜுடாயாவில் இருந்து யூத வணிகர்கள் இங்கே வர ஆரம்பித்தார்கள். மெதுவாக இது ஒரு கிராமமாக ஆயிற்று. மதுக்கடைகளாலான கிராமம் இது. மரப்பலகைகளைக் கற்கள் மீது போட்டு உருவாக்கப்பட்ட கரடுமுரடான

இருக்கைகளும் ஈச்சைமர ஓலைகளைக் கொண்டு கட்டப்பட்ட தாழ்வானகூரைகளும் கொண்ட சிறிய விடுதிகள். விடுதிகளுக்குப்பின்னால் விடுதிக்காரனின் குடும்பம். பலசமயம் நிறையப்பெண்கள் அங்கே இருப்பார்கள். அவர்களும் புளித்து நுரைக்கும் யாயினைப்போன்றவர்கள். காசுக்கு வாங்கப்படுபவர்கள்.

ஆனால் இன்றுகூட இங்கே யாயினை செய்வதற்கு எவருமில்லை. யாயினுக்கு நல்ல தரமான மாவு தேவை. பார்லியை அரைத்து நீரில் சேர்த்து வருடம் முழுக்க புளிக்கச்செய்து அதை எடுக்கிறார்கள். அதைச்செய்ய தொலைதூரத்துக்கிராமங்களில் அதற்கென்றே வாழும் மக்கள் இருக்கிறார்கள். தலைமுறை தலைமுறையாக அதைச்செய்பவர்கள் அவர்கள். உடைகளில் மூச்சில் சொற்களில் சிந்தனையில் எல்லாம் யாயினின் புளிப்பு கொண்ட மக்கள். அவர்களின் கிராமங்கள்கூட புழுதிபடிந்த பாலைநிலத்திற்குள் எங்கோ புதைக்கப்பட்ட ஊறல்கலங்கள் போல மறைந்துகிடக்கின்றன

அகழ்ந்து எடுக்கப்பட்ட யாயின் மண்வீச்சத்துடன் மரப்பீப்பாய்களில் கொண்டுவரப்படும். கழுதைவண்டிகள் ஏற்றி வரும் புதிய யாயினுக்கு சக்கரவர்த்திகளுக்குரிய வரவேற்பு அளிக்கப்படும். அதன்பின்னால் கின்னார் வாத்தியத்தின் நரம்புகளை சுண்டி கனத்த குரலில் அதன் புகழைப் பாடியபடி நாடோடிக்கவிஞர்கள் வருவார்கள். பெண்களும் சிறுவர்களும் நடனமிடுவார்கள். அந்த வண்டி ஊருக்குள் நுழைந்ததும் உகாவ் குழாய்கள் வானோக்கி எழுந்து பிளிறல் ஒலியுடன் வரவேற்கும். யாயின் பீப்பாயில் எஞ்சும் கன்னங்கரிய அடிமண்டிக் கலங்கல் நாட்கணக்காக சுமை ஏந்தி நடக்கும் ஒட்டகங்களுக்கு சிறந்த மருந்து. அவை சொக்கிச்சரியும் இமைகளுடன் கழுத்துக்களைக் குழைத்து மணலில் சரியும். தூங்கி விழிக்கையில் புதியதாகப் பிறந்தவை போலிருக்கும். யாயினின் வாசனை அவற்றுக்குத்தெரியும். மூத்த தந்தைஒட்டகம் பர்ர் என்று ஒலித்து தன் விருப்பத்தைத் தெரிவிக்கும். அடக்கமான பெண் ஒட்டகங்கள் மணலில் கனத்த குளம்புகளை பொத் பொத் என உதைத்து நாசி கூர்ந்து பிடரியைச் சிலித்துக்கொள்ளும்

சுற்றிலும் செந்நிறத்தூசியே காற்றாகவும் வானாகவும் நிலமாகவும் பரந்துள்ள இந்தப் பாழ்வெளியில் இப்படி ஒர் ஊற்று இருப்பது அதிசமயம்தான். இந்த மண்ணுக்கு அடியில் மிக ரகசியமான ஒரு ஆறு

ஓடுகிறது என்று கிழக்கே பனிமலைகளுக்கு அப்பாலிருக்கும் பாரதநாட்டில் இருந்து வந்த ஒரு நீர்நிபுணன் ஒருமுறை சொன்னானாம். அந்த நதிக்கு மேல் செஸபான் மரங்கள் வரிசையாக வளர்ந்திருப்பதை தொலைவில் காற்றிலரித்த மணற்பாறைகளுக்குமேலே நின்று பார்த்தால் பாலைநிலத்தில் விழுந்து கிடக்கும் ஒரு பச்சைத்துவாலை போல தெரியும். செஸபான் மரங்களைத்தான் இப்பகுதிக்கே உரிய தாவரம் என்று சொல்லவேண்டும்.

குட்டையான முள்மரங்கள் அவை. நீரற்ற பச்சை இலைகளும் எதிரும்புதிருமாக வளரும் கிளைகளும் கொண்டவை. வசந்தகாலத்தில் தளிர்விட்டுப் பச்சைக்குவியல்களாக நிற்கும். இலையுதிர்காலத்தில் சுள்ளியை நட்டுவைத்தது போல ஆகிவிடும்.. அக்காலகட்டத்தில்தான் அபிசீனியர்கள் வருவார்கள். அவர்கள் ஒருபோதும் இந்த மரங்கள் பசுமையாக இருந்ததைப் பார்த்திருக்கமாட்டார்கள். இவற்றை அவர்கள் ஃபில்ஃபிலீ என்கிறார்கள். வெறும்முள் என்று இதற்கு அர்த்தம் என்றான் ஒரு மொழிபெயர்ப்பாளன். அபிசீனியர்களின் கனத்த மொழியில் அது பெரிய வசை. அகங்காரம் மட்டுமே கொண்ட சாரமற்ற மனிதனைச் சுட்டும் சொல் அது. வசந்தத்தில் இந்த முட்செடி புன்னகை செய்கிறது. ஆனாலும் எச்சரிக்கையாக இலைகளுக்குள் முட்களை நிரப்பிவைத்திருக்கிறது. அது வஞ்சகச்செடி என்கிறார்கள் சமாரியர்கள். அதன் பசுமை கவர்ந்திழுக்கிறது. அதை நோக்கிச்செல்லும் கழுதை சற்று கவனக்குறைவாக இருந்தாலும் வாயை ரணமாக்கிக்கொள்ளும். அதில் உடைமாட்டிக்கொண்ட வழிப்போக்கன் இன்னொருவர் உதவாமல் விடுபடமுடியாது.

நான் கோடைகாலத்தை விரும்பக்கூடியவன். சமாரியாவின் குளிர்காலம் எனக்கு பிடிப்பதில்லை. என் உடலுக்கு குளிர் அழுக்கான ஈரக்கம்பிளியைக்கொண்டு என்னை அழுத்திச் சுற்றிக்கட்டுவதுபோலிருக்கும். இலையுதிர்காலத்தில் காற்று மண்ணை அள்ளிக் கொட்டிக்கொண்டே இருக்கும். மண்கலக்காமல் ஒரு கோப்பை புளித்தகாடியைக்கூட நாம் குடிக்கமுடியாது. அன்றெல்லாம் இந்த மதுக்கிராமமே காலியாகக் கிடக்கும். பீப்பாயைத் திறக்கவே வணிகர்கள் தயங்குவார்கள். ஒற்றைநாணயங்களுக்காகச் சபலப்பட்டு திறக்கப்பட்ட பீப்பாய்களின் ஆன்மா பூசணம்பூத்து நாறும். ஆனால் வசந்தகாலத்தில் இங்கே பெரிய நெரிசல் இருக்கும். கின்னார் வாசித்தபடி கவிஞர்களும்

இளம்வணிகர்களும் வேசிகளும் எங்குபார்த்தாலும் அமர்ந்திருப்பார்கள். கண்மூடித்தனமாகக் குடிப்பார்கள். குழறல்களும் போதைச்சிரிப்புகளும் எங்கும் நுரைத்துக்கொண்டிருக்கும். அப்போது யாயின் விலை அதிகம். என்னைப்போன்ற நாடோடிகளால் அதிகமாகக் குடிக்கமுடியாது.

கோடைகாலம் கூட்டம் குறைவானது. வானமும் பூமியும் கொஞ்சம் தளர்வாக இருக்கும். வழிதவறிப்பெருமூச்சுவிடும் பாலைவனக்காற்றின் ஒலியும் அவ்வப்போது வந்துசெல்லும் ஒட்டகப்பயணிகளின் ஒலியும் மட்டுமே கேட்டுக்கொண்டிருக்கும். திசைகள் திறந்து, வான்வெளித்து ,வெயில் குடித்துக்கிடக்கும் பாலையை நிதானமாக அமர்ந்து பார்த்தபடி இருக்கலாம். ஒன்றுக்கும் ஒரு அர்த்தமும் இல்லை என்ற எண்ணம், ஒவ்வொரு நாடோடியையும் மனநிறைவிலாழ்த்தும் இனிய சிந்தனை, என் மனதில் நிறையும். ஒன்றுமில்லை ஒன்றுமில்லை என்று சொல்லிக்கொண்டே இருக்கும் அகம். வெளியே அப்போது ஒரு கின்னார் இசைத்தது என்றால் அக்கணம் வாழ்க்கை முழுமையாகிவிட்டதென்று பொருள்.

வெளியே கிழட்டு தாமஸ் அவனுடைய கின்னாரை மடிமேல் வைத்துக்கொண்டு பீளைபடிந்த கண்கள் மூடியிருக்க நரைத்த தாடி காற்றில் பறக்க அமர்ந்திருக்கிறான். தூக்கம் கனத்து அவன் தலை சரிந்தபோது கை மார்பிலிருந்து இறங்கி கின்னாரின் பன்னிரண்டு தந்திகள்மேல் விழ அது 'ஆமாமல்லவோ' என்று முனகியது. ஒருகணம் என் அகம் கல்விழுந்த கிணற்றுநீராகக் குலுங்கியது. நான் கேட்டது என் தாய்மொழியை. நான் இளவயதில் கேட்ட மொழி. முப்பத்திரண்டு ஆண்டுக்காலமாக நான் ஒரு சொல்கூடப் பேசாமல் விட்டுவிட்டமையால் மெல்ல மெல்லப் பின்வாங்கி அவிந்து என் ஆழத்துக்குள் வண்டலாகப் படிந்துவிட்ட மொழி. என் கனவுகள் மட்டுமே அறிந்த மொழி. நான் இன்னொரு கோப்பை யாயினுக்கு ஆணையிட்டேன்.

அதை நான் பாதி முடித்திருக்கையில் கிறுக்கு ஐசக் வீக்கம் மண்டிய கால்களை இழுத்து இழுத்து வந்து மதுக்கடை வாசலில் நின்றான். அவன் உடம்பில் பாலைவனக்காற்று மரங்களில் கொண்டு சுற்றிய கந்தல்சுருள்களைப்போல கிழிந்த உடைகள் இருந்தன. கையில் ஒரு பெரிய துணிமூட்டை. அதற்குள் அவன் கையில்கிடைத்த கந்தல்துணிகளை எல்லாம் எடுத்துச்சேர்த்துக்கொண்டே இருப்பான். பிரம்மாண்டமான மூட்டை அது. அதைச்சுமந்தே அவன் கால்கள் வீங்கிவிட்டன. ஆனால் அவன்

அதை கீழே வைப்பதில்லை. தூங்கும்போதுகூட அவன் மடிமீது அது இருக்கும்.

உள்ளிருந்து ரெபெக்கா வேகமாக வந்து 'நாசமாகப் போ ,அழுக்குப்பிடித்த பிணமே. காலையிலேயே வந்து ஏன் என் உயிரை வாங்குகிறாய்?' என்றாள். அவளுடைய கோபமும் கையிலிருந்த மரச்சட்டியை அவள் ஓங்கியதும் ஐசக்கை எதுவும் செய்யவில்லை. அவன் அசையாமல் அங்கேயே நின்றிருந்தான். அவனுக்குத் தேவையானவற்றைப் பெறுவது வரை அவனை அங்கிருந்து அகற்றமுடியாது. அவனுடைய கண்கள் பழுப்புநிறமான கூழாங்கற்கள்போலிருந்தன. காலைப்பனியின் மெல்லிய ஈரம் படிந்த கூழாங்கற்கள்.

ரெபெக்கா வேனிற்காலத்தில் எரிச்சலுடனேயே இருப்பாள். என்னென்னவோ வசைபாடினாள். கனத்த தண்ணிரித்தொட்டியுடன் உள்ளே சென்ற அவளுடைய அம்மா 'அந்தக் கிறுக்கனுக்கு எதையாவது கொடுத்து அனுப்பு. அவன் வாசலில் நின்றால் இங்கே யார் வருவார்கள்?' என்றாள்.

'ஆமாம், வருகிறார்கள். நீ சும்மா இருக்கிறாயா? காலையிலிருந்தே ஒரே வாடிக்கையாளன்தான். இந்தக் கிழக்கத்தி நாடோடி ஒருநாள் முழுக்க இருந்து ஒரு செம்புநாணயத்துக்குக் குடிப்பான்…' என்றாள் ரெபெக்கா. திரும்பி என்னிடம் 'நாடோடி, நீ இந்தக்கோப்பை மதுவை இப்போதே முடித்து கிளம்பிவிடு…உன் உடைகளின் நாற்றம் காரணமாக மற்றவர்கள் இங்கே நுழையமாட்டார்கள்…' என்றாள்.

நான் '…ரெபெக்கா, இந்தா. ஐசக்குக்கும் தாமஸுக்கும் ஒரு கோப்பை யாயின்வீதம் கொடு' என்றேன்.

ரெபெக்கா அதிர்ச்சியடைந்தவள்போல என்னைப்பார்த்தாள்.

'உண்மைதான்…இதோ இந்த வெள்ளிநாணயம் உண்மையானது….' என்றேன். 'இது உன்னிடமிருக்கட்டும். இது முடிவதுவரை கணக்குவைத்துக்கொள்'

அவள் வெடுக்கென்று என்னிடமிருந்து நாணயத்தைப்பிடுங்கிக்கொண்டு உள்ளே சென்றாள். உள்ளே அவள் நாணயத்தைப் பலமுறை திரும்பத்திரும்பப் பார்த்திருப்பாள். இந்த ஊரில் என்னை மந்திரவாதி என்று நினைக்கிறார்கள். இவர்களின் பார்வையில் கிழக்குநாடுகளில் அனைவருமே மந்திரவாதிகள்தான். பறக்கும்கம்பளங்கள், பாம்பாக மாறும்

கைத்தடிகள், தீக்கதிராக மாறி எரியும் நாக்குகள். ஒரு கிழக்கத்தியன் தன்னால் பறக்கமுடியாது என்று சொன்னாலே விசித்திரமாகப் பார்க்க ஆரம்பிப்பார்கள் என்று சென்ற முறை வந்த சீன வணிகன் இடுங்கிய கண்களை மேலும் சுருக்கி சிரித்துக்கொண்டு சொன்னான்.

நான் சொன்னதைக் கேட்டவன்போல தாமஸ் உள்ளே வந்தான். இப்போது அவன் வாடிக்கையாளனாகிவிட்டான். மிடுக்குடன் கின்னாரை மரப்பீடம்மேல் வைத்துவிட்டுப் பலகையில் அமர்ந்தான். கைகளை உரசிக்கொண்டு என்னைப்பார்த்துப் புன்னகைசெய்தான். காய்ந்தபுல்போன்ற தாடிக்குள் அவன் பற்கள் கருமையாகத் தெரிந்து மறைந்தன. ஐசக் எதையும் கவனித்ததாகத் தெரியவில்லை

ரெபெக்கா முதலில் ஐசக்குக்குத்தான் மதுகொண்டு கொடுத்தாள். அவன் அதை இரு கைகளாலும் வாங்கிக்கொண்டு பணிவுடன் மண் திண்ணையில் அமர்ந்தான். மிகச்சூடான சூப்பைக் குடிப்பதுபோல உதட்டைக்குவித்துத் துளித்துளியாக உறிஞ்ச ஆரம்பித்தான்.

உள்ளிருந்து ரெபெக்கா ‘இது என்ன மந்திரவாதம் செய்ததற்கான கூலியா?’ என்றாள்

‘இல்லை....நான் குறிசொன்னேன்’

‘யாருக்கு?’

‘ரோமானியப்படைத்தலைவனுக்கு’

‘அதுதானே பார்த்தேன்...இந்தக் கோடையில் இங்கே வெள்ளிநாணயம் வேறு யாரிடமிருக்கிறது?’ என்றாள் ரெபெக்கா

தாமஸ் “என்ன குறி சொன்னாய்?’ என்றான்

‘கெட்டகாலம் வருகிறது....உன்னுடைய அடிமைகள் கட்டுமீறப்போகிறார்கள். புழுதிப்புயல் உன் குதிரைகளைச்சூழ்ந்துகொள்ளப்போகிறது. ஆகவே உன் கடவுள்களுக்கு மேலும் சில கோழிகளைக்கொடு’ என்றபின் உரக்கச்சிரித்து ‘நான் எந்த ஒரு அதிகாரிக்கும் இதே குறியைத்தான் சொல்வது’ என்றேன்.

தாமஸுக்கு மது கொண்டுவரப்பட்டபோது அவன் பிரபுக்களுக்குரிய மிதப்பான பாவனையுடன் அதைப்பார்ப்பதைத் தவிர்த்தான். தீவிரமான முகபாவனையுடன் என்னை நோக்கி ‘இந்தக்கோடையில் தெற்கே பல கிராமங்களில் மரணங்கள் நிகழும் என்கிறார்கள்’

என்றான். 'அபிசீனியாவிலிருந்து சென்றமுறை வந்த சில நோயாளிகள் விசித்திரமான நோய்களை விட்டுச்சென்றிருக்கிறார்கள்...' பேசியபடியே கவனமில்லாமல் கோப்பையை எடுத்து வாசனைபிடித்து நல்லது எனத் தலையை அசைத்து '...உடல்முழுக்க கொப்புளங்கள் வருகின்றன. நோயாளி அதிகபட்சம் நான்குநாளில் இறந்துவிடுகிறான். ஒருவனுக்கு நோய்வந்தால் அந்த இனக்குழுவே அழிகிறது' என்றான்

நான் ஐசக்கின் குப்பைமூட்டையை சுட்டிக்காட்டி 'இந்த சமேரியா இதைப்போல ஒரு பெரிய குப்பைக்கூடை' என்றேன். 'இது மாபெரும் வணிகப்பாதைகளில் உள்ளது. உலகத்தில் உள்ள எல்லா நோய்களும் இங்கே வந்துசேர்கின்றன. உலகத்தில் உள்ள எல்லா இனங்களும் தங்கள் விந்துவை இங்கே விட்டுச்செல்கின்றன....உலகத்திலுள்ள எல்லா சிந்தனைகளும் இங்கே வந்து விழுகின்றன'

தாமஸ் உரக்கச்சிரித்து ஆழமாக உறிஞ்சிவிட்டு 'ஆமாம்...உலகிலுள்ள எல்லா நாடுகளிலிருந்தும் இங்கே நாடோடிகள் வந்து சேர்கிறார்கள்' என்றான்.

இம்முறை உள்வாசலில் நின்ற ரெபெக்கா உரக்கச்சிரித்தாள். 'நீ அவனுக்கு மது வாங்கும்போதே நினைத்தேன்...இன்று நீதான் வாங்கிக்கட்டிக்கொள்ளப்போகிறாய்'

நான் ஐசக்கைப்பார்த்தேன். அவன் பாலைநிலத்தை நோக்கித் திரும்பி அமர்ந்து உறிஞ்சிக்கொண்டிருந்தான். கண்கள் நிலைகுத்தியிருக்க மிக ஆழமாக எதையோ நினைப்பவன்போல இருந்தான். அல்லது அனைத்து நினைப்புகளையும் ஒட்டுமொத்தமாக மறந்துவிட்டவன்போல.

'இதோபார் கிழக்கத்திநாடோடியே, நான் உன்னைப்போல இந்தமண்ணுக்கு அன்னியமானவன் அல்ல.நான் இந்த மண்ணில் பிறந்தவன். என் முன்னோர்கள் இருபதுதலைமுறையாகக் குலப்பாடகர்கள். அவர்கள் ஒவ்வொருவரின் பெயரும் என் நாக்கில் இருக்கிறது.' தாமஸ் கனத்த கையை முஷ்டிபிடித்துப் பலகைமேல் அழுந்த ஊன்றியபடி சொன்னான்.

'ஆனால் உன்னுடைய இனக்குழு அழிந்துவிட்டதே...பிறகென்ன?' என்றாள் ரெபெக்கா

'ஆம். அவர்கள் அன்னியநாட்டிலிருந்து வந்த நோயில் இறந்தார்கள்...அனேகமாக அந்த நோய் இந்த நாடோடியின் கிழக்குநாட்டிலிருந்து வந்திருக்கலாம்.' தாமஸ் துப்பினான். யாயினை

வேகமாகக் குடித்து உடலைக் கொஞ்சம் உலுக்கித் தொண்டையை காறிக்கொண்டான். 'இனக்குழு அழிந்த குலப்பாடகனின் மனமும் பெரிய குப்பைக்கூடைதான்…'

'நீ ஏன் வேறுவேலைசெய்யக்கூடாது?' என்றாள் ரெபெக்கா

'ஏனென்றால் நான் குலப்பாடகன்'

'குலப்பாடகன் வேலைசெய்யக்கூடாதா என்ன?'

'கூடாது….ஏனென்றால் அவன் குலப்பாடகன்' என்றான் தாமஸ். கடைசி சொட்டை நாவில் விட்டுவிட்டு ரெபெக்காவிடம் 'கொசுறாக நீ கொஞ்சம் யாயின் தருவதில் தப்பில்லை' என்றான்

ரெபெக்கா 'எழுந்து போ' என்றாள்

'உனக்கு நான் இந்த கிழக்கத்திய நாடோடியின் கதை என்ன என்று சொல்கிறேன்'

'யார் இவரா? இவர் ஏதாவது கிழக்கத்தி வணிகர்கூட்டங்களுடன் சேர்ந்து வந்திருப்பார். உடம்புமுடியாமலானபோது அவர்கள் விட்டுச்சென்றிருப்பார்கள்'

'அதுதான் இல்லை…' என்றான் தாமஸ் 'இவர் இன்னும் மூன்றுபேருடன் இந்த சமாரியாவுக்குள் நுழையும்போது நான் பார்த்தேன்'

'எப்போது?'

'அப்போது நீ பிறக்கவில்லை. இந்த சமாரியாவிலேயே அதிக பணம்வாங்கும் அழகியாக உன் அம்மா இருந்தாள். முப்பதுவருடம் முன்பு…அதற்குமேலேகூட இருக்கும்'என்றான் தாமஸ் 'அன்று சமாரியாவிலேயே மிகப்பெரிய வீரனாக இருந்தவன் இந்தக் கிறுக்கு ஐசக்'

'உண்மையாகவா?'

'ஆமாம்…அன்று ஐசக் இதைவிட உயரமாக இருந்தான்….கல்தூண் என்று நாங்கள் சொல்வோம். வெறும் கையால் மணல்பாறைகளை அடித்து உடைப்பவன் என்று அறியப்பட்டிருந்தான். எந்நேரமும் இடுப்பில் கனத்தவாளும் தோளில் மீன்வாலால் ஆன சவுக்கும் வைத்திருப்பான். நாகப்பாம்புகளைப் பச்சைகுத்திய அவன் கைகளையும் தோள்களையும் பெண்கள் மிகவும் விரும்பினார்கள். அரசப்படையில் அவன் அன்று

நூற்றுக்குடையவனாக இருந்தான்....மாலைநேரங்களில் மதுக்கடைக்கு வந்தானென்றால் அவனைச்சுற்றி ஈ போல பெண்களும் பாடகர்களும் மொய்ப்பார்கள்...அவன் இருக்குமிடமே கொண்டாட்டமாக இருக்கும்'

ரெபெக்கா ஐசக்கைப் பார்த்துவிட்டு 'பாவம்' என்றாள்.

'நான் அவனைப்பற்றித் தனியாக ஒரு கதைப்பாடல் வைத்திருக்கிறேன். அதைப் பிறகு பாடுகிறேன்...இப்போது நான் சொல்லவந்தது இந்த நாடோடியைப்பற்றி...;

'நீ வாயைமூடுவதென்றால் நான் இன்னொரு கோப்பை மது வாங்கித்தருகிறேன்' என்றேன்

'நான் உனக்கு ஒரு கோப்பை மது தருகிறேன்...பேசு' என்றாள் ரெபெக்கா 'இவர் எதற்காக இங்கே வந்தார்?'

'மது' என்றன் தாமஸ்

'நீ ஒரு...' என்று சொல்லவந்த ரெபெக்கா எழுந்துசென்று மதுகொண்டுவந்து ஊற்றினாள். என்னைப்பார்த்துக் கண்ணைச்சிமிட்டினாள் 'சொல்'

'..முப்பது வருடம் முன்பு ஒரு பெரிய வதந்தி இந்தப் பாலைநிலத்தில் சுழன்றடித்தது. அதற்குக்காரணம் ஒரு வால்நட்சத்திரம்....'

'ஆமாம்...அம்மா சொல்லியிருக்கிறாள்...சிவந்த தலைப்பிரட்டைபோல வானிலே தெரிந்ததாம்'

'நான் முதலில் அதைப்பார்த்தபோது பாலைவனத்தில் தொலைதூரத்தில் நடக்கமுடியாமல் விழுந்துவிட்ட யாரோ சட்டையைக்கழற்றிக் குச்சியில் தொங்கவிட்ட சிவந்த பதாகை என்று நினைத்தேன். அதன் வால் நீளமானது. சிலசமயம் அது இரட்டைவால்குருவியின் வால்போலப் பிளவுண்டு தெரியும். சிலசமயம் மீன்சிறகுபோல...அது நான்குமாதம் வானில் தெரிந்தது. தென்மேற்கேதான் முதலில் அது உதித்தது. பிறகு வடகிழக்கு நோக்கி நகர்ந்துசென்று மறைந்தது....'

'ஓ..' என்றாள் ரெபெக்கா. 'அற்புதம்...அதைப்போல ஒன்று மீண்டும் வருமா?'

'அனேகமாக வரவே வராது என்று வானசாஸ்திரிகள் சொல்கிறார்கள்....அதைப்போல ஒன்றை அவர்கள் அறிந்ததே இல்லை.' தாமஸ் குடித்தான்

நான் அவனையே பார்த்தேன். இந்த சமாரியர் அந்த வால்நட்சத்திரம்பற்றிய பேச்சை சலிக்காமல் முப்பதுவருடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எங்கே எந்தப் பாடகன் அதைப்பேச ஆரம்பித்தாலும் வயிறுநிறைய பார்லி கஞ்சியாவது கிடைத்துவிடும். சொல்லிச்சொல்லி அந்த வால்நட்சத்திரம் ஒரு பெரும் புராணமாக ஆகிவிட்டது.

'ஆனால் அந்த வால்நடத்திரம் பற்றி நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது...ஏழு தீர்க்கதரிசிகள் அதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்' என்றான் தாமஸ் 'அது ஓர் எச்சரிக்கை, ஓர் அறைகூவல். போருக்குமுன் நாம் வானில் அனுப்பும் எரிபந்தம்போல. இதோ ஆரம்பிக்கிறோம், இனிமேல் பின்வாங்கமாட்டோம் என்பதற்கான அறிவிப்பு' அவன் கண்கள் பளிச்சிட்டன.

ரெபெக்கா அவன் முன் அமர்ந்து தன் பாவாடையைத் தொடைகளுக்கிடையே திரைத்துக்கொண்டாள். அழகிதான் என்று நினைத்துக்கொண்டேன். அவள் கன்னங்கள் எழுச்சிமிகுதியால் சிவந்து தடிக்க ஆரம்பித்தன. கண்கள் படபடத்தன

'நூற்றாண்டுகளாக அடிமைகளாகவும் இழிமக்களாகவும் வாழ்ந்தாலும் சமாரியர்களாகிய நாம் உலகின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள். உண்மையான கடவுளைப் பாலைவனத்தில் கண்டுகொண்டவர்கள் நாம். நம்மிடம் மட்டுமே கடவுள் பேசியிருக்கிறார். நம்முடைய ஒற்றுமையின்மையால் நாம் அடிமைப்பட்டோம். இன்று ரோமாபுரியின் கனமான நுகங்களில் நம்மைக் கட்டியிருக்கிறார்கள். காலொடிந்துகிடக்கும் நம்மை சாட்டையால் அடிக்கிறார்கள். நாம் தாகத்துக்கு நமது குருதியையே குடித்துக்கொண்டு பாலைவனத்தின் அனலில் நடந்துகொண்டிருக்கிறோம்'

ரெபெக்கா தலையை அசைத்தாள்

'நாம் பிரார்த்தனைசெய்தோம்....சிதறிப்போன நம்முடைய இனக்குழுக்கள் இன்று எகிப்திலும் அபிசீனியாவிலும் ரோமானியாவிலும் அடிமைகளாக கைச்சங்கிலிகளுடன் முதுகெலும்பு ஒடிய வேலைசெய்கிறார்கள். சவுக்கடி பட்டும் பட்டினிகிடந்தும் கற்பழிக்கப்பட்டும் சாகிறார்கள். ஆனால் நாம் பிரார்த்தனை செய்தோம். கண்களை மூடிக் கைகளைக் கிழக்கத்தியபாணியில் மார்பின்மேல் சேர்த்து இதயம் ஒரு பெரிய ரத்தத்துளியாக நின்று அதிர பிரார்த்தனை செய்தோம். கண்ணீர் உருகிய

ஈயத்துளிகளாக நம் மார்புகளில் விழுந்தது. சொற்கள் உலைவாயின் வெப்பம்போல தகித்தன. நாம் செய்த பிரார்த்தனைகளைத் தூங்கும்குழந்தையின் முகச்சுளிப்பைப்பார்க்கும் தந்தை போல நமது பிதா குனிந்து பார்த்துக்கொண்டிருந்தார். நீண்ட தாடியைமெல்ல உருவியபடி அவர் புன்னகைசெய்தார். அதன்விளைவாகவே அந்த நட்சத்திரம் உதயமாயிற்று'

'ஓ' என்றாள் ரெபெக்கா. மார்பை அவள் கை அழுத்திக்கொண்டது. 'பிதாவே...பிதாவே...நானும் எப்போதும் பிரார்த்தனை செய்வேன்...தெரியுமா?'

'பிரார்த்தனைசெய்யாத எவரும் இந்த சமேரியாவில் இல்லை' என்றான் தாமஸ். 'அதன் விளைவாகத்தான் நமக்கு அந்த நட்சத்திரம் அளிக்கப்பட்டது. ஈரவிறகை நாம் நூற்றாண்டுகளாக ஊதிக்கொண்டிருந்தோம். மெல்ல அது சிவந்து பற்றிக்கொண்டது. அந்த முதற்கனல்தான் அது. இனி விறகு கொழுந்துவிட்டெரியும்....வானைத்தொடும் நெருப்புக்கோபுரமாக ஆகும்...' ஒரேவீச்சில் எஞ்சிய மதுவையும் குடித்துவிட்டு தாமஸ் சொன்னான் 'பட்டாக்கத்தி எங்கோ உருவப்பட்டுவிட்டது....'

நான் 'ரெபெக்கா எனக்கு மேலும் ஒரு கோப்பை' என்றேன்

'...முப்பதாண்டுகளுக்கு முன்னால் அந்த வால்நட்சத்திரத்தைப் பின்தொடர்ந்து கிழக்கிலிருந்து ஏராளமானவர்கள் வந்தார்கள்' தாமஸ் சொன்னான் 'வான சாஸ்திரிகளும் ஞானிகளும். கிழக்கே நெடுந்தூரம்வரை அந்த வால்நட்சத்திரம் தெரிந்ததாம். அங்கிருந்து ஒருலட்சம் ஞானிகள் கிளம்பிவந்தார்கள் என்கிறார்கள். அரேபியாவைத்தாண்டி எதிப்தைத் தாண்டி அவர்களில் சிலர்தான் வந்தார்கள். இருந்தாலும் அன்று இந்த சின்ன ஊரில் எங்குபார்த்தாலும் கிழக்கத்திய முகங்கள் நிறைய தென்பட்டன. வேகாத அப்பம்போல மஞ்சளாக முகம் கொண்டவர்கள். இதோ இவரைப்போல அதிகமாக வெந்த அப்பம்போன்றவர்கள்...'

நான் ரெபெக்கா கொண்டுவந்து வைத்த மதுவைக் குடித்தேன். ஐசக் கடைசிச்சொட்டையும் உறிஞ்சிவிட்டுக் கோப்பையை வைத்தான். தன்னுடைய மூட்டையை மடியில் வைத்துவிட்டு அதன்மேல் கையை ஊன்றிப் பாலைநிலத்தையே பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தான்

'அன்று நான் இந்த அன்னியர்களைப்பார்ப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தேன்' தாமஸ் சொன்னான் 'அது கடுங்குளிர்காலம்.

வடக்கிலிருந்து காற்று வாள்களை வீசிக்கொண்டிருந்தது. இரவுகளில் எவருமே வெளியே வருவதில்லை. நான் அன்று ஒரு கனவுகண்டேன். என்னுடைய மொத்த இனக்குழுவையும் பாலைவனத்தில் ஓர் இடத்தில் புதைத்திருக்கிறார்கள். நான் நடந்துசெல்லும்போது ஒரு கால் என் காலில் இடறியது. குனிந்துபார்த்தால் குட்டிஜானின் கால்கள். நான் அவனைத் தோண்டி எடுத்தேன். ஆச்சரியமென்னவென்றால் அவனுக்கு உயிர் இருந்தது...அவன் என்னிடம் அம்மா இங்கே அருகேதான் இருக்கிறாள் என்றான். நான் அவன் அம்மா மரியாளைத் தோண்டி எடுத்தேன். மணலில் இருந்து வெறிபிடித்தவன்போல அவர்களை எல்லாரையும் தோண்டித்தோண்டி எடுத்துக்கொண்டே இருந்தேன். அப்படியே வியர்த்து நடுங்கியபடி விழித்துக்கொண்டேன்'

'உனக்கே தெரியும், உயிர்த்தெழுதல் பற்றிய கனவு வந்தால் மரணம் வருகிறதென்பதுதான் பொருள் என்று....எனக்கென்று எவருமில்லை. அப்படியென்றால் அது என் மரணமா என்ன? நான் நடுங்கியபடி ஒரு கோப்பை யாயினுக்காக மதுக்கடைகள் நோக்கி வந்தேன். பின்னிரவானதனால் எல்லாக் கடைகளும் மூடியிருந்தன. என்ன செய்வதென்று அறியாமல் நின்றபோது தொலைதூரத்தில் வரிசையாக விளக்குகள் வருவதைக்கண்டேன். அவற்றின் ஆட்டத்திலிருந்து தெரிந்தது, அவை ஒட்டகத்தின் மீதிருக்கும் விளக்குகள் என. உடனே அவற்றைநோக்கிச்சென்றேன்' தாமஸ் சொன்னான்

'அங்கேதான் இவர் இருந்தாரா?'

'ஆமாம்....அந்தக்குழுவில் நிறையபேர் இருந்தார்கள். மொத்தம் இருபது ஒட்டகங்கள். பதிமூன்று ஒட்டகங்களில் சுமைகள் இருந்தன. நான் அவர்களை அணுகும்போது அவர்கள் சுமைகளை இறக்கி மணலில் கூடாரம்போட ஆரம்பித்திருந்தார்கள். என்னை அவர்கள் திருடன் என நினைத்துவிடக்கூடாதென்று நான் என் கின்னாரை எடுத்து இசைத்துப்பாடியபடியே சென்றேன். கிழக்கத்திக்குறுவாட்கள் குறிதவறாதவை அல்லவா?. அவர்களின் காவலன் தன் நீண்ட மெல்லிய உடைவாளை உருவி நீட்டி என்னிடம் நான் யார் என்று கேட்டான். பளபளப்பான பாம்புபோன்ற வாள். நான் இனக்குழு அழிந்துபோன குலப்பாடகன் என்று சொன்னேன். என்னை சோதனையிட்டபின்

அமரச்செய்து கசப்பான கீழ்நாட்டு மதுவும் ரொட்டியும் உலர்ந்த பழங்களும் தந்தார்கள்'

தாமஸ் தொடர்ந்தான் ' அங்கே மணலில் விரிக்கப்பட்ட பெரிய கம்பளத்தில் நான்குபேர் அமர்ந்திருந்தார்கள். அந்தக் கம்பளம் வானில் பறக்கக்கூடியது. அதில் எனக்குச் சந்தேகமே இல்லை. அதிலிருந்த மர்மமான மந்திர எழுத்துக்கள் எதற்காக என்று எனக்கு நன்றாகவே தெரியும்....பளபளப்பான நீலநிறக் கம்பளம். அதில் அமர்ந்திருந்த நால்வரும் நான்கு சக்கரவர்த்திகள் போலிருந்தனர். ரெபெக்கா நீ நம்ப மாட்டாய். நான்குபேருமே கிழக்கர்கள். ஆனாலும் நால்வருக்கும் நான்கு நிறம்...நால்வரில் இவர்தான் கருப்பானவர்'

'இவரா?' என்றபடி ரெபெக்கா எழுந்துவிட்டாள் 'இவர் அந்த சக்கரவர்த்திகளில் ஒருவரா?'

'ஆமாம்...அப்போது இவர் எப்படி இருந்தார்தெரியுமா? பொன்னிறக்கேடயப்பூச்சி போல...இவர்கான் அவர்களில் வயதில் இளையவர். கொம்பு போலக் கூர்மையான கரிய தாடி. வெண்கூழாங்கற்கள் போலப் பற்கள். பெரிய கண்கள். என்னிடம் சமேரிய மொழியிலேயே பேசினார்...'

'என்ன கேட்டார்?'

'இங்கே இந்த வால்நட்சத்திரம்பற்றி என்ன சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டார். நான் பொதுவாக அனைவரும் அஞ்சிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். நம்முடைய ரகசியங்களை ஏன் அன்னியரிடம் சொல்லவேண்டும்? இவர் கோபம் கொண்டு உண்மையைச் சொல்லாவிட்டால் என்னைப் பைத்தியமாக ஆக்கிவிடுவதாக மிரட்டினார். அப்போது அவர்களில் வயதுமுதிர்ந்தவர் இவரைக் கண்டித்துவிட்டு என்னை அருகே அழைத்தார். அவரது நீண்ட தாடி மேகம்போல மார்பில் விழுந்து கிடந்தது. என்னிடம் 'இங்கே ஏதாவது அற்புதம் நிகழ்ந்திருக்கிறதா?' என்றார். நான் அவரை மகிழ்விக்கும்பொருட்டு 'ஆமாம்...நீங்கள் வந்திருக்கிறீர்கள். ஒரு குலப்பாடகனின் வயிறு பூரணமாக நிறைந்திருக்கிறது' என்றேன். 'இல்லை, இங்கே ஏதாவது அசாதாரண நிகழ்வு உள்ளதா' என்றார். பின்பு குரலைத்தாழ்த்தி 'மன்னர்குலத்தில் ஏதாவது பிறப்பு நிகழ்ந்திருக்கிறதா?' என்றார்.

"நான் அந்தக்கணம் வரை அப்படி யோசித்ததில்லை" என்றான் தாமஸ் 'ஆனால் உடனே எனக்கு எல்லாமே புரிந்துவிட்டது. ஆமாம், கண்டிப்பாக நிகழ்ந்துவிட்டது என்று சொன்னேன். ஆனால் அது யார் என்று என்னால் சொல்லமுடியாது. அந்த வால்நட்சத்திரத்துக்கு அதுதான் அர்த்தம். சிங்கக்குட்டி பிறந்துவிட்டது' அவர்கள் என்னைப் போகச்சொன்னார்கள். நான் போகவில்லை. சற்றுதள்ளிச்சென்று பாறைமேல் ஏறி அவர்களைக் கண்காணித்தபடி படுத்தேன். ஆனால் கிழக்கத்தியமது மிக வீரியம் மிக்கது. உனக்குத்தான் தெரியுமே…நான் தூங்கிவிட்டேன். காலையில் எழுந்தால் அங்கே அந்தக் கூடாரமோ ஒட்டகங்களோ இருந்ததற்கான தடமே இல்லை. சுவடுகளைக்கூடக் காற்று அழித்துவிட்டது. ஊற்றுக்களின் அருகே ஒரு மெல்லிய பொன்னிறச் சல்லாத்துணி கைவிடப்பட்டுக் கிடந்தது மட்டுமே நான் சொன்னதற்கான ஆதாரம். ஆனால் அதை மக்கள் நம்பவில்லை. ஒரு கோப்பை யாயினுக்குக்கூட அது உதவவில்லை'

'இவர் போகவில்லையா?'என்றாள் ரெபெக்கா என்னைப் பார்த்துக் கண்ணைச்சிமிட்டியபடி.

'இல்லை…ஆனால் மேலும் எட்டுவருடம்கழித்துத்தான் நான் இவரைப்பார்த்தேன். ஜாப்பா துறைமுகத்தில் ஒரு மதுக்கடையில் இவர் அமர்ந்துகுடித்துக்கொண்டிருந்தார். கிழிந்த ஆடைகள். அழுக்கடைந்த உடம்பு. பரட்டைத்தலை. ஆனால் கண்களை வைத்து இவரை நான் அடையாளம் கண்டுகொண்டேன்…ஓடிப்போய் நீங்களா என்று கேட்டேன். இவர் என்னை அடையாளம் காணவில்லை…'

'நீங்கள் திரும்பிப்போகவில்லையா?' என்றாள் ரெபெக்கா

'நீ இவன் சொல்லும் கதைகளை நம்புகிறாயா? ஒரு கோப்பை மதுவுக்காக நான் மாறுவேடமிட்டுவந்த சீசர் என்றே இவன் சொல்வான்' என்றேன்

'குலப்பாடகன் வாயில் பொய் வருவதில்லை' என்றான் தாமஸ் 'ரெபெக்கா கண்ணே நீ அழகி. உன் தொடைகளும் அவற்றின் நடுவே உள்ள அழியாத ஊற்றும் மகத்தானவை. எனக்கு ஒரு கோப்பை யாயின் தரமாட்டாயா?'

'மண்டையை உடைப்பேன்' என்று ரெபெக்கா சிரித்தபடி கை ஓங்கினாள். ஆனால் அரைக்கோப்பை யாயினைக் கொண்டுவந்து தாமஸுக்கு ஊற்றினாள். என்னிடம் 'ஆனால் இவன் சொல்லும் இதை

நம்புகிறேன்...நீங்கள் இங்கே ஏழெட்டுமுறைதான் வந்திருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் வெறும் நாடோடி அல்ல...அதை நான் உறுதியாகவே நினைக்கிறேன்'

'வெறும்நாடோடிக்கும் மற்ற நாடோடிக்கும் என்ன வேறுபாடு?'

'மற்றவரிடம் ஒரு நல்ல கதை இருக்கும்' என்று ரெபெக்கா கிளுகிளுத்தாள்

'அல்லது புதையல் ரகசியம் இருக்கும்' என்றான் தாமஸ் குடித்தபடி.

'சரி, உனக்காக நானும் ஒரு கதை சொல்கிறேன்...என்னுடைய ஊர் எது தெரியுமா?'

'சொல்லுங்கள்'

'உன்னால் கற்பனைகூட செய்துபார்க்க முடியாது...இங்கிருந்து கிழக்கே...நெடுந்தொலைவில் பனிமூடிய மலைகளுக்கு அப்பால் ஒரு தேசம் இருக்கிறது. மனித இனத்தின் ஞானம் முழுக்க அங்கே உள்ள மரங்களில் இருந்து விதைகளாகக் கிளம்பிச்சென்றவைதான்...'

'இண்டஸ்...எனக்குத்தெரியும்...அங்கிருந்து வந்த ஒரு வணிகனுடன் நான் ஒருவாரம் இருந்திருக்கிறேன்...'

'ஆமாம். அது ஒரு நதி. அதற்குத் தெற்கே இன்னும் பெரிய நதிகள் இருக்கின்றன. மிகப்பெரிய வயல்வெளிகள். பிரம்மாண்டமான நகரங்கள். அங்கே சிலநகரங்களில் வெண்கலத்தால் வீடுகளுக்குக் கூரையிட்டிருக்கிறார்கள். இன்னும் சிலநகரங்களில் வெள்ளியால். சில ஆலயங்களுக்குப் பொன்னாலேயே கூரைவேய்ந்திருக்கிறார்கள்'

ரெபெக்கா வாய்திறந்து பிரமித்துப்போய்ப் பார்த்தாள்

'தெற்கே செல்லச்செல்ல இன்னும் பெரும் தேசங்களும் நகரங்களும் இருக்கின்றன. தெற்கில் ஒரு நிலத்தின் முனையில் இரண்டுகடல்கள் இரண்டு திசைகளில் இருந்து வந்து சந்திக்கின்றன. அங்கே அலைகள் குதிரைகள்போல முட்டிக்கொள்ளும். ஒருகடல் இளம்பச்சைநிறமானது. இன்னொன்று கனமான பச்சைநிறம் கொண்டது. அந்த ஊரை ஆட்செய்பவர்கள் அதிபுராதனமான ஒரு மன்னர்குடும்பத்தைச்சேர்ந்தவர்கள். மீன்பிடிக்கும் குலத்தின் அதிபர்கள் அவர்கள்.. அந்தக்கடலில்தான் முத்துக்கள் கிடைக்கின்றன'

'நான் பார்த்திருக்கிறேன்...' என்று ரெபெக்கா எழுந்துவிட்டாள் 'அது மீனின் கண் போலிருக்கும்...கீழைவணிகர்கள் அதை மேற்குநாடுகளுக்கு விற்பதற்காகக் கொண்டுசெல்வார்கள்'

'ஆமாம்...முத்துக்கள் கிடைக்க ஆரம்பித்ததும்தான் அந்த மீனவர்குலம் செல்வம் ஈட்ட ஆரம்பித்தது. மரக்கலங்கள் கட்டவும் கடலோடி வணிகம்செய்யவும் கற்றுக்கொண்டார்கள். தங்களுக்கென அலைவாய் என அழைக்கப்பட்ட ஒரு மதில்நகரத்தை உருவாக்கிக்கொண்டார்கள். அவர்களின் குலத்தலைவன் அரசனாக ஆனான்....அவர்கள் வெல்லமுடியாத பண்டையர் குலமாக அறியப்பட்டார்கள்...'

ரெபெக்கா 'நீங்கள் அந்தக்குலமா?' என்றாள்

'என்று வைத்துக்கொள்...உனக்குத்தேவை கதைதானே? சரி, நான் அந்த அரசகுலத்தில் பிறந்தவன் என்றே வைத்துக்கொள்வோம். என்னுடைய பெயர் செழியன்'

'திரும்பச்சொல்லுங்கள்' என்றாள் ரெபெக்கா.

'செழியன்... '

'செஸியா' என்றாள் அவள்

'சரி... செஸியா' என்றேன்.

'நீங்கள் எதற்காக இங்கே வந்தீர்கள்? இவ்வளவுதூரம் மலைகளையும் பாலைகளையும் தாண்டி?'

நான் சிரித்து 'அதை உன்னுடைய பாடகனிடம் கேள்...அவனுக்கு அடுத்த பலவருடங்களுக்கு யாயின் கோப்பைகளாக மாறக்கூடிய கதைகளை அதிலிருந்து அவன் உருவாக்குவான்....'

'சொல்லுங்கள்...'

'ரெபெக்கா....வேண்டுமென்றால் இப்படி வைத்துக்கொள்... நான் வணிகனாக இங்கே வந்தேன். மொத்தப்பணத்தையும் உன் அம்மாவைப்போன்ற அழகிகளிடம் இழந்துவிட்டதனால் ஊருக்குத்திரும்பிச்செல்லமுடியவில்லை....இதுவும் நல்ல கதைதானே?'

'நீங்கள் விளையாடுகிறீர்கள்...'

‘ஆமாம்’ என்றேன்

‘நான் கேட்பதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள்...நீங்கள் எங்கள் ஜுடாயாவின் சிங்கக்குட்டியைப்பார்த்தீர்களா?’

‘இல்லை’

‘ஓ...’ என்றாள் ரெபெக்கா ஏமாற்றத்துடன் ‘உங்களுடன் வந்த பிறர் அவனைப்பார்த்தார்களா?’

‘ஆமாம்’

ரெபெக்கா மூச்சிழுத்தாள். ‘உங்களை அவர்கள் கூட்டிச்செல்லவில்லையா என்ன?’

‘கூட்டிச்சென்றார்கள்’

‘பிறகென்ன?’

‘உனக்கு எப்படிச்சொல்வது? அவர்கள் அவனருகே சென்று அந்தக்காலடியில் மண்டியிட்டார்கள்’

‘நீங்கள்?’

‘.நான் அவனைப்பார்க்கவில்லை’

‘ஏன்?

‘ஏனென்றால் நான் அவன்முன் மண்டியிடவில்லை’

‘அப்படியென்றால் நீயும் ஒரு தேவன்’ என்றான் தாமஸ் ‘என் தேவனே, எனக்கு இனிய மதுவை அருளுங்கள் ஐயா’

‘எனக்கு நீங்கள் சொல்வது புரியவில்லை’என்றாள் ரெபெக்கா.

‘அது இன்னொரு கதை.... தாமஸின் இன்னொருகோப்பை யாயின்’ என்று கண்ணைச்சிமிட்டினேன்

ரெபெக்கா சோர்வுடன் ‘இந்தமாதிரி சில்லறை மர்மங்கள் வழியாகத்தான் நீங்கள் வாழ்கிறீர்கள்’ என்றாள். ‘இங்கே கயிறுமாயம் செய்யும் ஒரு கிழக்கத்தியன் வந்தான்...ஒரு சின்ன தந்திரம்தான் அது. அதைவைத்து அவனுடைய குலம் ஆயிரம் வருடமாக வாழ்கிறது’

‘சரியாகச்சொன்னாய்’

ரெபெக்கா தாமஸிடம் ‘இப்போதெல்லாம் எவருமே தேவனைப்பற்றிப்பேசுவதே இல்லையே. அந்தக்காலத்தில் கொஞ்சநாள் இதேபேச்சாக இருந்தது என்று அம்மா சொல்லியிருக்கிறாள்’ என்றாள்

‘ஆமாம்…அந்தப் பேச்சு ஏரோதுமன்னனின் காதுகளில் விழுந்தது. அவன் பயந்துபோய் அந்த வருடம் பிறந்த அத்தனை குழந்தைகளையும் கொல்ல ஆணையிட்டான்’

‘ஆமாம்…கேள்விப்பட்டிருக்கிறேன்….என்னுடைய அண்ணன்கூடக் கொல்லப்பட்டான் என்று அம்மா சொன்னாள்’

‘ஆயிரக்கணக்கான குழந்தைகள் கொல்லப்பட்டார்கள். படைவீரர்கள் வாளுடன் கிளம்பி வீடுவீடாகச்சென்று குழந்தைகளை எடுத்து வெட்டி வீசினார்கள். முலைகுடித்துக்கொண்டிருந்த குழந்தைகளைத் தாயின் கரங்களில் இருந்து பிடுங்கி வெட்டிவீசியபோது முலைகளில் இருந்து பாலும் கண்களிலிருந்து கண்ணீரும் பீரிட்டன….நான் அதைப்பற்றி எழுபது பாடல்கள் புனைந்திருக்கிறேன்…’

”அய்யோ’ என்றாள் ரெபெக்கா

கொல்லபப்ட்டகுழந்தைகளின் ரத்தம்படிந்த உடைகளைச் சேகரித்து மூட்டைகட்டி கொண்டுபோய் கணக்கதிகாரியிடம் காட்டிப் பணம்பெற்றுக்கொள்வார்கள் வீரர்கள். பணத்துடனும் ரத்தம்படிந்த வாளுடனும் வந்து குடிப்பார்கள். பெண்களைப் புணர்வாகள். எங்களுக்கு நாணயங்களை விட்டெறிந்து பாடச்சொல்வார்கள்…நான் புனைந்த எல்லாப் பாடல்களும் அவர்களுக்காகத்தான். அதைக்கேட்டு அவர்கள் போதையில் கதறிக் குமுறி அழுவார்கள்’

உள்ளிருந்து ரெபெக்காவின் அம்மா ‘அதெல்லாம் இப்போது எதற்கு?’ என்றாள்

‘அவை கவிதைகள்…கவிதைகள்தானே வரலாறு?’

‘பாடாதே’ என்றாள் ரெபெக்காவின் அம்மா

‘பாடாமலிருப்பதற்காக உனக்கு ஒரு கோப்பை யாயின் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது’ என்றேன்

தாமஸ் உக்கிரமான கோபம் கோண்டு 'வாயைமூடு பன்றியே...நாடோடியாகிய நீயும் நானும் சமமா? நான் ஆயிரமாண்டு வரலாறுள்ள இனக்குழுவின் பாடகன்'

'ஆனால் அந்த இனக்குழு இப்போது இல்லை'

'அவர்கள் வெட்டுக்கிளிகளைப்போல....பாலைவன மண்ணில் புதைந்து காத்துக்கிடக்கிறார்கள். ஒரு மழைபோதும் அவர்கள் உயிர்த்தெழுவார்கள்...எங்கள் தேவன் ஒருகையில் வாளும் இன்னொருகையில் தீயுமாக செந்நிறப்புரவி மீது வரும்போது விண்ணகம் உடைந்து மழை கொட்டும்...தண்ணீராலான மழை அல்ல...செந்நீராலான மழை.அந்தமழையில் செத்தவர்கள் எல்லாம் விழித்துஎழுவார்கள்...என் கின்னரம் ஓயாமல் பாடும் அப்போது'

'நல்ல யாயின் காட்டுத்தீ போல... மெல்லமெல்லத்தான் பற்றி ஏறும்' என்றேன்

'த்தூ....நாடோடிப்பிச்சைக்காரா...என் முன்னால் நிற்காதே...ஓடு' என்றான் தாமஸ் 'என் மீட்பர் வந்துகொண்டிருக்கிறார்'

'ஒருவேளை முப்பதாண்டுகளுக்குமுன்னால் ஏரோது மன்னனின் வாளால் அவர் கொல்லப்பட்டிருக்கலாம்'

தாமஸ் திகைத்துவிட்டான். இமைக்காமல் என்னைப்பார்த்தான். தலை ஆடியது. பிறகு சட்டென்று கம்பிளிகிழிபட்டதுபோல ஒரு சத்தம். தாமஸ் குமுறி அழ ஆரம்பித்தான். தாடியில் கண்ணீர் கொட்டியது. கைகளால் அதைத்துடைத்தபடி , மார்புத்துணியைப் பற்றிக்கசக்கியபடி விசும்பி விசும்பி அழுதான்

'சரிதான்...ரெபெக்கா அவனை இழுத்து வெளியே போடு' என்றாள் அவள் அம்மா

நான் வெளியே வந்தேன். திண்ணையில் ஐசக் அப்படியே அசையாமல் அமர்ந்திருந்தான். நான் சிறுநீர் கழிக்க செஸபான் புதர்கள் நடுவே ஒதுங்கினேன். யாயின் குடித்தால் இதுதான் பிரச்சினை. குந்தி அமர்ந்துகொண்டு ஆடைகளை அவிழ்த்தபோது அப்பால் ஏதோ ஓசை கேட்டது. வணிகர்களா? கோடையில் யாரும் வரமாட்டார்களே?

நான் எழுந்து பார்த்தேன். சாலையில் ஒரு சிறிய கும்பல் சென்றுகொண்டிருந்தது. எல்லாரும் புழுதிபடிந்த நீள அங்கி அணிந்திருந்தனர். ஏழெட்டுபேர் சூழ்ந்துசெல்ல நடுவே ஒருவன் கழுதைமேல் வந்து கொண்டிருந்தான். சூழ்ந்துசென்றவர்கள் ஏதோ பாடிக்கொண்டிருந்தார்கள்

நான் எழுந்தேன். கடைக்குள்ளிருந்து ரெபெக்காவும் தாமஸும் வந்து வாசலில் நின்றார்கள். தாமஸ் உரக்க 'அவன் தச்சன் மகன்...தன்னை ஒரு போதகன் என்று சொல்லிக்கொள்கிறான். படித்தவன்போலப்பேசுகிறான்' என்றான்

அவனைப் பார்த்தேன். என் மனம் ஏன் அப்படி படபடக்கிறது என்று என்னால் ஊகிக்கமுடியவில்லை. அவனுடைய நீண்டதலைமுடி தோளில் வழிந்தது. தேன்கூடு போன்ற கன்னங்கரிய தாடி. அங்கி கந்தலாகிக்கிழிந்திருந்தது. அவன் கழுதைமேல் செல்வதுபோலத் தெரியவில்லை, அவன் உடலின் ஒருபகுதி கழுதையாக ஆகிவிட்டதுபோலத் தோன்றியது.

'மீனவர்களுக்கு மீன்பிடிக்கச் சொல்லித்தந்தான் தச்சன் மகன்!
ஆமாம் தச்சன் மகன் ! ஆமாம் தச்சன் மகன் !ஆமாம் தச்சன் மகன்!
மீனவர்கள் அவனுக்கொரு சிலுவையைச்செய்தார்கள்
ஆமாம் சிலுவையைச்செய்தார்கள் !ஆமாம் சிலுவையைச்செய்தார்கள்!'

தாமஸ் கையைத் தூக்கி உரக்கப்பாடி ஆடினான். ரெபெக்கா சிரித்துக்கொண்டு பார்த்துநின்றாள்.

நான் அவன் கண்களைப்பார்த்தேன். என் கைவிரல்கள் நடுங்கிக்கொண்டிருந்தன. அவர்கள் என்னைத்தாண்டிச்சென்றார்கள். கழுதைமேல் இருந்த அவனுடைய கால்கள் தெரிந்தன. வெடித்துப்போன புழுதிபடிந்த கால்கள். நான் சட்டென்று அப்படியே அவனைநோக்கிப் பாய்ந்தோடிச்செல்லும் உக்கிரமான இச்சையை என் உடல் முழுக்க உணர்ந்தேன். என்னையறியாமலேயே முன்னகர்ந்தேன். ஆனால் கூரிய முட்களுடன் செஸபான் முட்புதர் எனக்கு முன்னால் சூழ்ந்து நின்றது. நான் முன்னகர்ந்தபோது இருமுட்கள் என் முழங்கையில் குத்தின. ஒரு முள் என் மேலாடையைப் பற்றிக்கொண்டது.

வேலிக்கு அப்பால் அவர்கள் சென்றபடியே இருந்தார்கள். நான் எரிச்சலுடன் முழங்கையை விலக்கிக்கொண்டேன். முள் குத்திய இடத்தில் குருதியாலான மெல்லிய தீற்றல். அங்கே ஒரு சொட்டு நெருப்பை வைத்ததுபோல எரிந்தது

சட்டென்று ஒரு விசித்திரமான கூச்சலைக்கேட்டேன். திடுக்கிட்டுப் பின்னால் நகர்ந்தேன். ஐசக் என் பின்னாலிருந்து பாய்ந்தோடி வந்து என்னைத்தாண்டி மூர்க்கமான வேகத்துடன் செஸபான் முட்புதர்களில் பாய்ந்து அதை ஊடுருவினான். முட்புதர்களில் சிக்கி ஒருகணம் திகைத்து மீண்டும் ஓர் அலறலுடன் திமிறி பாய்ந்து சாலைப்புழுதியில் விழுந்து எழுந்து கைகளை விரித்துக்கொண்டு கூவியபடியே ஓடினான். அவன் உடைகள் முட்புதர்களில் சிக்கிக்கொள்ள நிர்வாண உடம்பெங்கும் வரிவரியாக முட்கள் கிழித்து குருதிப்பட்டைகள் பிறந்திருந்தன.

நான் எட்டிப்பார்த்தேன். உடம்பெங்கும் ரத்தத்துடன் கருப்பைவிட்டு வெளியே பாய்ந்தோடும் குழந்தைபோல ஐசக் ஓடிக்கொண்டிருந்தான். அவனுடைய மூட்டை ரெபெக்காவின் கடை வாசலில் கிடந்தது.

# (7) குருதி

சேத்துக்காட்டார் என்று சொன்னபோது ஊரில் எவருக்கும் யாரென்றே தெரியவில்லை. ‘சேக்கூரானா? மாடு தரகு பாப்பாரே?’ என்று கலப்பையும் கையுமாகச் சென்றவர் கேட்டார்

சுடலை ‘இல்லீங்க..இவரு கொஞ்சம் வயசானவரு....’ என்றார்

‘வயசுண்ணா?’

‘ஒரு எம்பது எம்பத்தஞ்சு இருக்கும்’

‘இந்தூரா?’

‘ஆமாங்க..’

‘அப்டி யாரு நம்மூரிலே?’ மேலும் கீழும் பார்த்துவிட்டு ‘நமக்கு அவரு என்னவேணும்?’ என்றார்

சுடலை அரைக்கணம் தயங்கிவிட்டு ‘நான் அவருகூட செயிலிலே இருந்தேன்’ என்றார்

கலப்பைக்காரர் முகம் மாறியது. ‘நமக்கென்னாங்க தெரியும்...நானே குத்தகைக்கு எடுத்து ஓட்டிட்டிருக்கேன்...வரட்டுங்களா?’ என்றார். சுடலை மேலே பேசுவதற்கு முன் அவர் சென்றுவிட்டார்

சுடலைக்கு ஆச்சரியமாக இருந்தது. எப்படி அந்த மண்ணில் அத்தனை வருடம் வாழ்ந்த ஒருவரை ஊரே மறந்திருக்க முடியும்? வேற்றூர்க்காரர் ஒன்றும் இல்லை. அதே ஊரில் பிறந்து வளர்ந்து விவசாயம் பார்த்துப் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கிய சம்சாரி. ஒருவேளை செத்துப்போய்விட்டாரோ. செத்தாலும் எப்படி தடமில்லாமல் ஆக முடியும்?

சேத்துக்காட்டார் என்றால் ஜெயிலில் எல்லாருக்கும் ஒருபயம்தான். இரட்டைக்கொலை. இரண்டுதலைகளையும் இரு கைகளிலாக எடுத்துக்கொண்டு எட்டு மைல் நடந்துசென்று போலீஸ் ஸ்டேஷனில் சரண் அடைந்தார். தூக்கு கிடைத்தது. பிறகு விதவிதமான மறுபரிசீலனைகள் கருணைமனுக்கள். குற்றம் நடக்கும்போது சேத்துக்காட்டாருக்கு வயது

அறுபத்திரண்டு. அதுதான் அவருக்குக் கைகொடுத்தது. இரட்டை ஆயுள்தண்டனையாக முடிந்தது.

சுடலை கைதாகி உள்ளே போனபோது சேத்துக்காட்டார் ஏற்கனவே பதிமூன்று ஆண்டுகளை சிறையில் கழித்துவிட்டார். நரைத்த தலைமுடி. புருவம்கூட நரைத்திருந்தது. ஓங்குதாங்கான உருவம். மண்ணில் வேரோடிய கருவேலமரம் மாதிரி உடம்பு. அதிகம் பேசமாட்டார்.

ஜெயிலில் மரியாதையே ஒருவர் செய்த குற்றத்தை வைத்துதான். ஆனால் அதற்கும் மேலாகவே சேத்துக்காட்டாருக்கு ஒரு இடம் இருந்தது. அது ஏன் என்பது அவர் ஜெயிலுக்குச் சென்ற எட்டாம்நாள் தெரிந்தது. சில்லறைத்திருட்டும் அடிதடியுமாக ஜெயிலுக்கு வந்த சங்கரப்பாண்டியை பார்த்தாலே பெரிய கரைச்சல்காரன் என்று தெரிந்தது. சுடலை சாப்பாட்டை வாங்கிக்கொண்டு சென்று அமர்ந்ததும் அவன் அருகே வந்தான். 'மாமா, தட்ட இந்தப்பக்கமா நீட்டுறது.... மருமான் பசியால துடிக்கிறேன்ல?' என்றான்

'இம்புட்டுதானேய்யா இருக்கு?' என்றார் சுடலை. முதல்நாள் தட்டில் களியாக வேகவைத்து உருட்டிய சோற்றை அவர்கள் போட்டபோது உண்மையிலேயே அவருக்குத் துணுக்கென்றது. இவ்வளவு சோற்றையும் தின்று எப்படி வாழ்வது? ஊரில் அவர் படிப்படியாக சோறு போட்டுக்கொள்ளமாட்டார், கூம்பாரமாக சோற்றைக் குவித்து நுனியில் குழி எடுத்து அதில் குழம்பை ஊற்றிப் பிசைந்து சாப்பிட்டால்தான் நிறைவாக இருக்கும்.

'குடுங்க மாமா..பெரியபேச்சு பேசறீங்க' என்று சங்கரப்பாண்டி தட்டைப் பிடிக்க சுடலை சற்று கோபமாக 'விடுடா டேய்' என்றார்.

'என்ன மரியாத கொறையுது?' என்று முறைத்தவன் எதிர்பாராத கணத்தில் தரையிலிருந்து மண்ணை அள்ளி சோற்றிலே போட்டுவிட்டான். சுடலை கொதித்து எழப்போய் மறுகணமே அடக்கிக் கொண்டார். இவன் சிறைப்பறவை. நான் ஒரு எதிர்பாராத பிரச்சினையால் இங்கே வந்தவன். எனக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள். எனக்கு நிலமிருக்கிறது. ஆனால் கைகால்கள் நடுங்கின

'டேய் என்னடா மொறைக்கிறே?' என்றான் சங்கரப்பாண்டி

சுடலை பார்வையைத் திருப்பிக்கொண்டார். கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

அப்போது சேத்துக்காட்டார் எழுந்து வந்தார். ‘டேய் உன் சோத்த அவனுக்குக் குடுத்திட்டு அந்த சோத்த நீ எடுத்துக்க’ என்றார். நிதானமான கனத்த குரல்

சங்கரப்பாண்டி ” என்ன பெரிசு...கொரலு ஓங்குது? போ போ ...போய் அந்தால ஒதுங்கு’ என்றான்

சேத்துக்காட்டார் மேலும் நிதானமான குரலில் ‘குடுத்தா நீ நாளைக்கும் உசிரோட இருப்பே....எனக்கு ரெட்டக்கொலைக்கு ரெட்ட ஆயுள்... இன்னொரு கொலையச் செஞ்சாக்க எனக்கு புதிசா தண்டன இல்ல பாத்துக்க’ என்றார்.

அவர் கண்களைப்பார்த்த சங்கரப்பாண்டி திகைத்துவிட்டான். கை இயல்பாக நீண்டு அவன் தட்டை சுடலையை நோக்கி நீட்டியது.

அதன்பின் பெரியவருக்கு சுடலைதான் மிக நெருக்கமானவராக இருந்தார். ஜெயிலில் இருந்த இரண்டுவருடமும் அனேகமாக தினமும் கூடவே இருந்தார். பெரியவர் பொதுவாகப் பேசுவதேயில்லை. பகல் முழுக்க மூர்க்கமாக மண்ணில் வேலைசெய்வார். ஜெயிலுக்குள் ஆயிரம் ஏக்கரில் விவசாயம் நடந்தது, அதில் பாதி மரங்கள் பெரியவர் நட்டு வளர்த்தவை என்றார்கள். இரவில் கம்பிக்கு அருகில் வெளிச்சமுள்ள இடத்தில் இருந்துகொண்டு கொண்டு வந்திருந்த மரக்கட்டைகளைச் செதுக்கிக் கொண்டிருப்பார். செதுக்கி பாலீஷ் போட்டு முடிக்கையில் யானைத்தலையோ கழுகுமுகமோ கொண்ட கைத்தடிகளாக அவை உருவாகிவரும். பெரும்பாலும் வார்டர்களுக்கே கொடுத்துவிடுவார். செதுக்கும்போது மொத்த முகமும் கூர்ந்து கவனமாக இருக்கும். வாயை மட்டும் மெல்வதுபோல அசைப்பார்

ஒன்றரை வருடம் கழித்துதான் அவர் ஏன் ஜெயிலுக்கு வந்தார் என்பது சுடலைக்குத் தெரிந்தது. இரண்டு வருடங்களில் ஒரேஒருமுறைதான் அவரது வீட்டார் அவரை மனுபோட்டு பார்க்க வந்திருந்தார்கள். அவரது பேத்தி வயதுக்கு வந்திருந்தாள். பட்டுப்பாவாடை கட்டி நகைபோட்ட கரிய குண்டுச்சிறுமியுடன் அவள் அப்பா ஜெயிலுக்கு வந்திருந்தான். பார்க்க சேத்துக்காட்டார் மாதிரியேதான் இருந்தான். ஆனால் அந்த உறுதியும் உள்ளிறுக்கமும் இல்லாத சாதாரண மனிதனாகவும் தெரிந்தான்.

சேத்துக்காட்டார் தயக்கமாகத்தான் போனார். கம்பிக்கு அப்பால் நின்ற சிறுமியைக் கண்டதும் நடை தளர்ந்தது. மெதுவாக அருகில் சென்று நின்று அவள் தலையில் கைவைத்து வருடினார்.பின்னர் மெல்லியகுரலில் ‘எதுக்கு இங்கல்லாம் கூட்டிட்டுவாறே? சொல்லியிருக்கேன்ல?’ என்றார்

‘இவதான் கேட்டா....பின்ன, என்னதான் இருந்தாலும் உங்க ஆசீர்வார்தமில்லாம...’

‘அது இருக்கே...எங்க இருந்தாலும் இருக்கே..’

‘இருந்தாலும்...’

‘டேய் நான் செத்தாச்சுன்னு நினைச்சுக்கடா...போடா...’ அவரது உரத்த குரல் கேட்டு எல்லாரும் பேச்சை நிறுத்திவிட்டுத் திரும்பினார்கள். சேத்துக்காட்டார் சட்டென்று பேத்தி தலயில் மீண்டும் கைவைத்து ‘நல்லா இரும்மா...மவராசியா பெத்து நெறைஞ்சு இரும்மா’ என்று சொல்லிவிட்டுத் திரும்பிவிட்டார்

அன்றிரவு அவர் குச்சி செதுக்கவில்லை. சுவரையே பார்த்துக்கொண்டு பேசாமலிருந்தார். பின்னர் ‘டேய் உனக்கு எவ்வளவு நெலமிருக்கு?’ என்றார்

‘அதுகெடக்கு நாலஞ்சு ஏக்கர். வெறும் முள்ளு...ஆடுகடிக்க பச்சை இல்லை’ என்றார் சுடலை

‘பொட்டக்காடா இருந்தாலும் அதுதாண்டா உனக்கு அடையாளம். நீ செத்தா விளப்போற எடம்டா அது. நாளைக்கு உம்பிள்ளையும் அங்கதான் அடங்குவான்...டேய் மண்ணில்லாதவன் மனுசனில்ல. மிருகம்...தெரிஞ்சுக்க’

பிறகு அவரே அவரது கதையைச் சொன்னார். அவருக்கு எட்டேக்கர் நிலமிருந்தது. பொட்டல்தான். ஆனால் இருபதுவருடம் இரவுபகலாக அதில் கல்லும் சரளும் பொறுக்கிப் போட்டு வயலாக்கினார். கிணறு வெட்டினார். மிளகாயும் சோளமும் தக்காளியும் போட்டார். நிலத்தில் பசுமை விரிந்தபோது ஊர்ப்பெரியமனிதர்களுக்கு எரிந்தது. ‘லே என்னலே சேத்துக்காட்டான்...சமுசாரி ஆயிட்டே போல... ’ என்பார்கள். ‘ஏதோ இருக்கேன் ஐயா’ என்பார் பணிவாக. 'அப்டியே வெள்ளைய சுத்திக்கிட்டு வண்டிகட்டிக்கிட்டு வந்து பஞ்சாயத்திலே ஒக்காரவேண்டியதுதானேடா?’ ‘என்னய்யா நீங்க? ...நான் ஏதோ கைப்பிடி மண்ணக் கிண்டிக்கிட்டிருக்கேன்...’

கொஞ்சம் கொஞ்சமாகப் பிரச்சினைகள் ஆரம்பித்தன. நிலத்தை விலைக்குக் கேட்டார்கள். விலையைக் கூட்டிப்பார்த்தார்கள். நான்குசாதிசனத்தை வைத்துப் பேசிப்பார்த்தார்கள். ‘இந்தாபாரு சேத்துக்காட்டான், நமக்கு இதெல்லாம் ஆகாது. சமுசாரித்தனம் செய்றவன்

அதைச்செய்யணும். அப்பதான் அதுக்கு அழகு....ஏக்கருக்கு எட்டாயிரம் சொல்றாரு நாயக்கரு...இண்ணைக்கு இந்தூர்ல ஆயிரத்துக்கு மேலே போற நெலம் எங்க இருக்கு சொல்லு... பேசாம வாங்கிட்டு போ...'

'இல்லீங்கய்யா... இது நான் ரத்தம் சிந்தி செதுக்கி எடுத்த மண்ணு...இந்த மண்ணுதானுங்களே நமக்கு ஒரு ஆதாரம்...இத விட்டுப்போட்டுட்டு எப்டிங்கய்யா?' ஆனால் வற்புறுத்தல்கள் ஏறிக்கொண்டே போயின. 'அவங்கள எதுத்து நீ இந்த நெலத்த வச்சுகிட முடியும்னு நினைக்கிறியா? விட்டிருவானுங்களா? இப்ப வித்தா பணமாச்சும் மிஞ்சும். சண்டையபோட்டுப் பறிச்சுக்கிட்டானுங்கன்னா அதுவுமில்ல பாத்துக்க'

அதன்பின் கேடிகள் வந்து மிரட்டினார்கள். ஒரே ராத்திரியில் ஒட்டுமொத்த சோளத்தையும் பறித்துக்கொண்டு சென்றார்கள். மிளகாய்ப் பாத்திகளில் மாடுகளை விட்டு அழித்தார்கள். இரவும்பகலும் தோட்டத்திலேயே கிடந்தார். இடுப்பில் அரிவாளுடன்தான் தூங்கினார். தங்கத்தைப் பொத்திப்பாதுகாப்பதுபோலப் பயிரைப்பாதுகாத்தார்.

ஒருநாள் ராத்திரி மூத்தவனைத் தக்காளித்தோட்டத்தில் காவலுக்கு உடகாரச்செய்துவிட்டு வீட்டுக்குப்போனார். திரும்பிவந்தபோது காவல்மாடத்தில் கழுத்துவெட்டுப்பட்டுக் கிடந்தான். அரையடி தள்ளிக்கிடந்தது தலை. தலையில் கையை வைத்துக்கொண்டு அங்கேயே அமர்ந்துகொண்டார். நாலைந்துநாளுக்கு பேச்சே நின்றுவிட்டது.

வழக்கம்போல போலீஸ் வந்து மகசர் எழுதினார்கள். அவர்தான் குற்றவாளி என்பதுபோல அங்குமிங்கும் நடத்தினார்கள். ஒருமாசத்தில் கேஸ் ஓய்ந்துவிட்டது. குற்றவாளிகள் யாரென்று தெரியவில்லை என்றார்கள்.

அவருக்குத்தெரிந்திருந்தது. ஆனால் அவர் ஒன்றும் சொல்லவில்லை. ஒன்றும் செய்யவுமில்லை. சிதைந்து அழிந்த தக்காளிச்செடிகளை ஒவ்வொன்றாக எழுப்பி நிறுத்திக் குச்சி வைத்துக் கட்டித் தண்ணீர் ஊற்றி மீண்டும் உயிர்ப்பித்தார். அந்த வருடம் அவருக்குத்தான் தக்காளியில் அதிக மகசூல். அவருக்குத்தெரியும் என அவர்களுக்கும் தெரியும். அவர்கள் எச்சரிக்கையாக இருந்தார்கள். கவனித்துக்கொண்டே இருந்தார்கள். அவர் விவசாயத்தில் மட்டும் மூழ்கி இருந்தார். சிரிப்பு மறைந்துவிட்டது. பேச்சு முழுக்க உள்ளுக்குள் புகுந்துவிட்டது.

அதன் பின் அவர்கள் வம்புக்கு வரவில்லை. எட்டு வருடம் அவர் எதையுமே வெளியே காட்டிக்கொள்ளவில்லை. எஞ்சிய இருபையன்களும் வளர்ந்து பெரியாளானார்கள். மூத்தவனுக்கு உள்ளூர் சொசைட்டியில் வேலை கிடைத்தது. இளையவளுக்குத் திருமணம் செய்து வைத்தார். சின்னவன் போலீசில் சேர்ந்தான். அவனுக்கு வேலைகிடைத்த மறுநாள் அவர் நாலடி நீளமான அரிவாளுடன் மேலகரம் நாயக்கர் வீட்டுக்குச் சென்றார்.

காலைநேரம் .வீட்டுமுன்னால் நாயக்கர் நாற்காலியில் அமர்ந்திருந்தார். அருகே பெரிய கோளாம்பி. வெற்றிலைத்தட்டம் ஸ்டூல்மேல் இருந்தது. பக்கத்தில் அவரது தம்பி சிக்கையா நின்றிருந்தான். பருத்திவாங்கவந்தவர்கள், சாணிஎருவை அள்ளி மாட்டுவண்டியில் ஏற்றிக்கொண்டிருந்தவர்கள் என பத்துப்பதினைந்துபேர் இருந்தார்கள். 'என்னடா சேத்துக்காட்டான்? என்ன விசயம்?' என்றார் நாயக்கர்

'எட்டுவருசமா என் பிள்ளைய மேல வரட்டும்னு காத்திருந்தேன்' என்றார் சேத்துக்காட்டார். நாயக்கர் புரிந்துகொள்வதற்கு முன் சட்டென்று படியேறி அவரை ஒரே வெட்டில் வெட்டி வீழ்த்தினார். சிக்கையா முற்றத்தில் பாய்ந்து ஓடினான். அவனை இரண்டே எட்டில் பிடித்தார்
'

'கொல்லாதே...கொல்லாதே' என்று சிக்கையா கதறினான்.

'பெத்தவனுக்க அக்கினியிலே இது' என்றபடி ஒரே வெட்டில் அவனைத் துண்டித்தார். இரு தலைகளுடன் , அக்குளில் அரிவாளுடன் பொதுச்சாலை வழியாக நடந்து சென்றார்.

'ஒரு பிடி மண்ண வச்சுக்கிட எனக்கு உரிமை உண்டான்னு நாடு அறியட்டும்லே' என்றார் சேத்துக்காட்டார். சுடலை அவரையே பார்த்துக்கொண்டிருந்தார்.

'இப்ப வருத்தப்படுறிகளா?' என்றார் சுடலை ஒருமுறை

'எதுக்கு?'

'இனி வெளிக்காத்து கிட்டாதுல்ல?'

‘வேண்டாம்ல...ஆனால் இனி ஒரு ஏழையோட நெலத்தைத் தொடுறப்ப யோசிப்பானுகள்ல? நம்மாளுக நாலுபேரு துணிஞ்சு வெட்டாம இதுக்கு ஒரு தீர்ப்பு கெடையாதுலே மக்கா’

மேலும் ஒன்பது வருடம் கழித்து சேத்துக்காட்டானுக்கு மன்னிப்பு கிடைத்தது. சிறையில் இருந்து அவர் வெளியேவந்தபோது சுடலை பார்க்கப்போயிருந்தார். அவரது மகன் சொசைட்டியில் ஆபீசராக இருந்தார். பேத்திக்குத் திருமணமாகிப் பிள்ளையும் ஆகிவிட்டிருந்தது. ‘எல்லாம் மாறிப்போச்சுலே சுடலே...ஒத்த ஒரு தெரிஞ்ச ஆளு இல்ல பாத்துக்க...வேற ராச்சியம்போல இருக்கு’ என்றார் சேத்துக்காட்டார்.

டீக்கடையிலும் பஞ்சாயத்துபோர்டு ஆபீசிலும் சேத்துக்காட்டாரை எவருக்கும் தெரியவில்லை. சொசைட்டிக்காரரை சொல்லிக் கேட்டுப்பார்த்தார். அவரையும் தெரியவில்லை. அவர் சாத்தூர் பக்கம் வேலைசெய்வதாகச் சொன்னார் ஒருவர். அவருக்கே பெரிய பிள்ளைகள் இருக்கும்போல.

பஸ்ஸுக்காகக் காத்துநிற்கையில்தான் அதுவரை உள்ளூரக் கொந்தளித்துக்கொண்டிருந்ததைத் தொண்டையில் ஒரு பதற்றமாக கைவிரல்களின் நடுக்கமாக கால்களில் ஒரு பலமிழப்பாக உணர்ந்தார். ஊரில் பஸ் ஏறும்போது ராமரின் கடைக்குப்பின்புறம் சென்று குடித்ததுதான். ராமர் தின்பதற்கு ஏதும் வைத்திருப்பதில்லை. குடித்துவிட்டு அப்படியே திரும்பிவிடவேண்டியதுதான்.

ஒருரூபாய்க்கு ஊறுகாயாவது வாங்கலாமென நினைத்துக்கொண்டே ரோட்டுக்கு வரவும் பஸ் வந்தது. ஏறிக்கொண்டபின்புதான் போதை மேலேற ஆரம்பித்தது. ஆனால் நாக்கு தடித்து எச்சில் ஊறிக்கொண்டே இருந்தது. சன்னல் வழியாகத் துப்பிக்கொண்டே இருந்தார். பின்னிருக்கை ஆசாமி ஒருவன் ‘டேய் அறிவுகெட்ட கூமுட்ட...ஓடுற பஸ்ஸில துப்புறியே அறிவில்ல?’ என்றான். மெல்ல நடுங்கும் தலையுடன் அவனைத் திரும்பிப்பார்த்தார். வாயில் எச்சில்தான் கொழகொழவென்று வந்தபடியே இருந்தது. வெறித்துப்பார்த்தபடி சில கணங்கள் சென்றன. ஏதோ பேச நினைத்தார். ஒரு வார்த்தைகூடத் திரண்டுவரவில்லை. திரும்பிக்கொண்டார். தலை கனத்து துவண்டது.

எட்டுமாதம் முன்னால் இவன் என்னை இப்படிச் சொல்லியிருப்பானா? எட்டுமாதம் முன்னாலிருந்த சுடலை ஆளே வேறு. கையும்காலும் பனந்தடிபோல இருக்கும். குரல் உடுக்குபோல ஒலிக்கும். வேட்டியை இறுக்கிக் கட்டியிருக்கும் பச்சை பெல்ட்டில் எப்போதும் கட்டாரி வைத்திருப்பார். வெள்ளைத்துண்டை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு மீசையை நீவியபடி பஞ்சாயத்தில் அமர்ந்தாரென்றால் எதிர்ப்பேச்சு பேச ஆளிருக்காது

இன்று அவரைப்பார்க்க எப்படி இருக்க்கும்? வெயிலில் காய்ந்த வாழைத்தண்டு போல உடம்பு. இடுப்பளவு ஓடைத்தண்ணீரில் நடப்பது போல நடை. எல்லாவற்றையும் விட மரியாதை போயிற்று. கண்டவனிடமெல்லாம் கடன் வாங்கிக் குடித்தாயிற்று. குடிமகன் ராமுகூட ‘வே சும்மா போவும்வே அனத்தாம...அவனவன் சாவுறான்...குடிக்கதுக்கு சில்லறைக்கு வந்திருக்கீரு....போவும்வே போயி இடுப்பு துண்ட எடுத்து ரோட்டில விரிச்சிட்டு இரும். சாயங்காலம் அஞ்சோபத்தோ தேறும்’ என்று முகம்பார்த்து சொன்னபோது டீக்கடையில் இருந்த அத்தனை பேரும் சும்மா பார்த்துக்கொண்டிருந்தார்கள். எல்லாக் கண்களிலும் ராமு கண்களிலிருந்த அதே பாவனைதான். புழுவை, மலத்தைப் பார்க்கும் அருவருப்பு. எட்டுமாசம்...எல்லாமே இடிந்துவிழுந்த எட்டுமாசம்.

கம்பியில் தலையை சாய்த்துக்கொண்டபோது சட்டென்று கண்ணீர் கொட்ட ஆரம்பித்தது. மார்பில் சொட்டும் நீர்த்துளிகளைத் தன் கண்ணீர் என்று உணர்ந்து துடைத்தார். ஆனாலும் கொட்டிக்கொண்டே இருந்தது. சட்டென்று வேறு எங்கிருந்தோ கேட்பதுபோல தன் கேவல் ஒலியைக் கேட்டார். பஸ்ஸே திரும்பிப்பார்த்தது. அவர் கண்ணீருடன் அவர்களை ஏறிட்டுப்பார்த்தார். ‘என்னய்யா?’ என்றார் கண்டக்டர். இருவர் சிரித்தனர். அவர் அண்ணாந்து நோக்கி விசும்பிக்கொண்டே இருந்தார். வந்திறங்குவது வரை மனசு உருகி கண்ணீராக சொட்டிக்கொண்டிருந்தது.

எங்கே சரக்கு கிடைக்கும் என உணர்வது கண்ணோ காதோ அல்ல. அது ஓர் உள்ளுணர்வு. அது இந்த எட்டுமாதங்களில் மிகவும் பெருகிவிட்டிருந்தது. சொல்லப்போனால் பிற எல்லா உணர்வுகளும் மழுங்கி அதுமட்டும் வளர்ந்திருந்தது. பஸ்ஸ்டாப்புக்கு அருகிலேயே விறகுக் கடையில் விற்றுக்கொண்டிருந்தான். பிளாஸ்டிக் டம்ளரில் அந்தக் கலங்கலான திரவத்தைக் கண்டதும் உடம்பு உலுக்கிக்கொண்டது. ஆனால் வாய் நிறைய

எச்சில் நிறைந்தது. ஒரே மடக்கில் குடித்ததும் இன்னொரு உலுக்கல். உடம்புக்குள் அது எரிந்து இறங்குவதை உணந்தபடி சில கணங்கள் நின்றார்.

வேட்டியைத் தூக்கி அண்டர்வேரில் இருந்து பணம் எடுத்துக்கொடுத்தபோது உள்ளே குந்தி அமர்ந்திருந்த மொட்டைத்தலை ஆசாமி 'அண்ணாச்சிக்கு எந்தூரு?' என்று சினேகமாகக் கேட்டார்.

'வடக்க' என்றார் சுருக்கமாக

'இங்கிண யாரப்பாக்க வந்திக?'

சொல்லலாமா என்று சிந்தித்துவிட்டு சொன்னார் 'சேத்துக்காட்டாருண்ணுட்டு பெரியவரு ஒருத்தரு...செயிலிலே எல்லாம் இருந்திருக்காரு'

அவன் பெயர் மாரிமுத்து 'தனலட்சுமி டீச்சரோட தாத்தன் ஒருத்தன் கெடக்காரு.அவரு செயிலுக்குப் போனவரு. போஸ்டுமேன் அவரு லெட்டர எங்கிட்ட குடுத்தான். நான் கொண்டுபோயிக் குடுத்திருக்கேன். செண்டிரல் ஜெயிலு லெட்டர்' என்றான்.

'ஆளைக்காட்டுலே' என்றார் சுடலை.

'நமக்கு சோலி கெடக்குல்ல? அண்ணாச்சி, இந்தா இப்டியே நேரா மேகாட்டுப் பனம்பொட்டலுக்குப் போங்க...செவலமேட்டில ஒரு சின்னக் குடிச தெரியும்....பெரியவரு அங்கதான் கெடப்பாரு... '

'செரிலே' என்று சுடலை கிளம்பினார்

'அண்ணாச்சி துப்புக் கூலி குடுக்கல்ல' என்றான் அவன் சோழிப்பற்களைக் காட்டி

அவனுக்கு ஒரு இரண்டு ரூபாயைக் கொடுத்தபின் வேட்டியைத் தூக்கிக் கட்டியபடி நடந்தார். ஊருக்குள் இருந்து காலனிக்குள் செல்லும் பாதை. பாதையும் ஊரிலிருந்து வெளியேறும் சாக்கடையும் ஒன்றுதான் . நாலைந்து பன்றிகள் முட்டிக்கொண்டு உறுமின. பிளாஸ்டிக்தாள்களும் மட்கிய துணிகளுமாகக் குப்பை குவிந்துகிடந்தது. காலனியில் இருபது வீடுகள். இருபதும் குட்டிச்சுவர்களுக்குமேல் புல்வேய்ந்த கூரை கொண்டவை. எதற்குமே கதவுகள் இல்லை.சாணி மெழுகிய வாசலை வளைவாகக் குழைத்திருந்தார்கள். குகைவாசல் போல. சாக்குப் படுதாக்கள்தான் கதவு. குடிசைகளில் எவரும் இல்லை. இரண்டு சின்னப்பிள்ளைகள்

துணியில்லாமல் மண்ணில் விளையாடிக்கொண்டிருந்தன. ஒரு கிழம் திண்ணையில் சுருண்டு கிடந்தது. அருகே கிடந்த நாய் எழுந்து ஆர்வமில்லாமல் மூக்கை நீட்டிப்பார்த்தது

காலனிக்கு அப்பால் பொட்டல் ஆரம்பித்தது . முழுக்க உடைமுட்கள். அவற்றில் காற்று கொண்டு வந்து மாட்டிவிட்ட பழைய துணிகளும் மழைக்காகிதங்களும் பல வண்ணங்களில் படபடத்தன. ஒற்றையடிப்பாதை நீண்டு சென்றது.

மேகாடு எங்கிருக்கிறது என்று தெரியவில்லை. மேடு என்று சொன்னான். ஆனால் அது ஊருக்கு மிக வெளியே இருந்தது. அதுவரை நடக்கவேண்டுமா என்று தயக்கமாக இருந்தது. தள்ளாட்டம் ஆரம்பமாகிவிட்டது. சமமில்லாத தலைச்சுமை ஒருபக்கமாக இழுப்பது போல உடம்பு அல்லாடியது. அதுவரை வெயிலில் நடந்தால் கீழே விழுந்தாலும் விழவேண்டியிருக்கும். அதன்பிறகு எழ முடியாது.ஆனால் வெறுவழியில்லை. வந்தாயிற்று.

செம்மண் மேடு. தூரத்தில் தெரிந்ததுபோல செங்குத்தான மேடு இல்லை. பனைவிடலிகள் செறிந்த சரிவுதான். நாலைந்து பனைகளைப் பிடித்துக்கொண்டு ஏறமுடிந்தது. மேலே ஒரு சாளை தெரிந்தது. பனையோலைகளைக்கொண்டு கூரை போடப்பட்டிருந்தது. காவல்மாடம் அளவுக்கே இருந்தது. காவல்மாடமாகக் கட்டப்பட்டதற்குக் கொஞ்சம் மண்சுவர் சேர்த்துக்கொண்டு குடிசையாக ஆக்கியிருக்கிறார்கள்.

குடிசை வாசலில் சென்று நின்றார். குடிசைக்குள் மனிதர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. அப்பகுதியிலேயே மனிதநடமாட்டம் இல்லை என்று தோன்றியது. குடிசைமுற்றத்திலேயே முள்மண்டிக்கிடந்தது. திண்ணை இடிந்து மண்ணாகக்கிடக்க காற்றில் வந்த சருகுகள் சுவரில் மோதிக் குவிந்திருந்தன. 'அய்யா' என்றார் சுடலை. அவரது குரல் அன்னியமாக அவருக்கே கேட்டது.

இரண்டாம் முறை கூப்பிட்டபோது உள்ளிருந்து ஒரு முனகல் ஒலித்தது. 'அய்யா இருக்கீங்களா?' என்றார் சுடலை

'ஆரு?' அது சேத்துக்காட்டாரின் குரல்தான்

'நாந்தான் ,சுடலே'

'உள்ள வா...'

மெல்ல திண்ணையில் ஏறினார். வெயிலில் வந்ததனால் கண்கள் இருட்டாக இருந்தன. உள்ளே தரையில் விரிக்கப்பட்ட பாயில் இரு கால்கள்தான் தெரிந்தன. செருப்பைக் கழற்றிவிட்டு உள்ளே போனார்

'வாலே'

சுடலை மெல்ல அமர்ந்தார். கண்கள் பழகியபோது கீழே கிடந்தவரை நன்றாகப் பார்க்க முடிந்தது. படபடப்பாக வந்தது.

'என்னல பாக்கிறே? மனுசன் இப்டி காஞ்சபீயா கெடக்கானேன்னு நெனைக்கிறியா? எல்லாம் மக்கி மண்ணா போற ஒடம்புதானே போவட்டும்' தொண்டையில் குரல்வளை ஏறி இறங்கிய போது சாரைச்செதில் படர்ந்த கரியசருமம் அசைந்தது.

சுடலை அவரது கைகளைத் தொட்டார். குளுகுளுவென அழுகிய மீன்போல நெளிந்தது சதை. சில்லென்றிருந்தது.

'தனியா கெடக்கீங்க?'

'எப்பவும் தனிமதானே? இங்க வசதியா காத்தோட்டமா இருக்கு...'

'பேத்தி கூட இருக்கதா சொன்னாக'

'அவதான் பாத்துக்கிடுதா....அவ ஊருக்குள்ள இருக்கா. சோறு குடுத்தனுப்புவா...வேற என்ன வேணும்?'

'இருந்தாலும்...'

'லே இது நான் பாத்துப்பாதுகாத்த நெலம் பாத்துக்க....கமல வச்சு தண்ணி எறச்சு நான் வெள்ளாம பண்ணின மண்ணு. இப்ப யாருக்கும் வெள்ளாமைக்கு நேரமும் இல்ல மனசும் இல்ல. இருந்தாலும் இது நம்ம மண்ணுல்ல? என் சடலம் இங்கதானே விளணும்?'

'அங்க வீட்டிலே இருந்திருக்கலாமே வயசான காலத்திலே'

'அவுகள்லாம் இப்ப பெரியாளாயாச்சுலே...செயிலுக்குப்போன கொள்ளுத்தாத்தாவப்பாத்தா பிள்ளையளுக்கு பயமா இருக்குண்ணு சொல்லுறா. மூத்தகுட்டிக்குத் தரம்பாக்கிறாக. பேச்சுவாறப்ப இவன் யாரு என்னன்னு கேள்வி வரத்தானே செய்யும்? இப்ப அவுக இருக்கிற இருப்புக்கு ரெட்டைக்கொலை செஞ்சு செயிலுக்குப்போன கதையச் சொல்ல முடியுமா?

சரிதான்னு நானே இந்தப்பக்கமா நவுந்துட்டேன்...நீ ஒண்ணும் கவலப்படாதே...எனக்கு ஒரு கொறையுமில்ல...'

'உடம்பு எப்டி இருக்கு?'

'நடுவு தளந்துபோச்சு. எந்திரிக்கமுடியாது....சரி இனிமே என்ன? மிஞ்சிப்போனா இந்தக் கார்த்திகை. அதான் என் கணக்கு பாத்துக்க....எல்லாம் பாத்தாச்சுலே . இருந்து இருந்து சலிச்சுப்போச்சு. போனாப்போரும்னு ஆயாச்சு. எளவு, உத்தரவும் வரமாட்டேங்குது....சரி, நாம நினைச்சா வருமா? அவன் நினைக்கணும்....'

சுடலை பேசாமல் பார்த்துக்கொண்டே இருந்தார்

'என்ன பாக்கே?'

'மூத்தவன் வாறதுண்டா?'

'ரெண்டுபேரும் வருவானுக...ஆனா அவனுகளுக்கும் வயசாச்சு. ஆயிரம் நோயிங்க அவனுகளுக்கும் இருக்கு....நாம இப்டி இளுத்துகிட்டு கிடந்தா அவனுக என்ன செய்வானுக?...செரி அது போவட்டு...நீ எப்டி இருக்கே? சரியா கண்ணு தெரியல்ல பாத்துக்க....'

அவர் சுடலையின் கையைப் பிடித்து உருட்டிப்பார்த்தார். 'என்னல கையெல்லாம் ஒழவுகம்பு கணக்கா இருக்கு?'' மூச்சு இழுத்து 'சாராயம் மணக்குது....அப்ப அதுதான் என்னல?'

'வாறப்ப கொஞ்சம் குடிச்சேன்'

'கொஞ்சமில்ல...உனக்க கை நடுங்குது...நனைஞ்ச துண்ட முறுக்கினமாதிரி இருக்கு கை...லே நீ இப்ப இத்துப்போன குடிகாரன்...இல்லேண்ணு சொல்லு'

சுடலை உதடுகளை இறுகக் கடித்தார். நெஞ்சுக்குள் அழுத்தம் ஏறி ஏறி வந்தது.

'வேண்டாம்லே...நீ பிள்ள குட்டிக்காரன்...ரெண்டு பயக இருக்கானுக ராமலட்சுமணன் மாதிரி..'

சட்டென்று அலறியபடி கிழவர் காலில் விழுந்துவிட்டார் சுடலை. மெலிந்த கால்களை இறுகப்பிடித்து மண்டையை அதில் மோதி மோதிக் கதறி அழுதார். அந்தக்கணமே செத்துவிடவேண்டும் என நினைப்பவரைப்போல.

பெரியவரின் கை அவர் தலைமேல் படிந்து முடியைப் பற்றிக்கொண்டு நடுங்கிக்கொண்டிருந்தது

மெல்ல ஓய்ந்து தேம்பிக்கொண்டிருந்தபோது கிழவர் ‘போனது யாரு?’ என்றார்

‘மூத்தவன்யா….கருமுத்துஅய்யனாரு மாதிரி கண்ணு நெறைஞ்சு நின்னானே …என் செல்லம் என் ராசா…என் எஜமானே, நான் என்ன செய்வேன்? இனி என்னத்துக்கு நான் உசிரோட இருக்கணும்? நான் இனி என்ன மசுத்துக்கு மனுஷன்னு நடமாடணும்?’ மீண்டும் தலையிலறைந்துகொண்டு அழ ஆரம்பித்தார்

‘என்ன நடந்தது?’

‘அப்பவும் இப்பவும் ஒரே கததான் அய்யா… ஈனச்சாதி நெலம்வச்சிருந்தா விடமாட்டானுங்க…’

கிழவர் ‘முருகா…’ என்றார்

‘நெலத்தக் கேட்டானுக. குடுக்க மாட்டேன்னு சொன்னேன். சீண்டிட்டே இருந்தானுக. பய கொஞ்சம் சூடுள்ளவன். துணிஞ்சு நின்னான்….கைய வச்சிட்டானுக…அய்யா என் சக்கரவர்த்திய பழங்கந்தல மாதிரி அடிச்சு சுருட்டி முள்ளுக்காட்டில செருகி வச்சிருந்தானுகளே…அதக் கண்ணால பாத்துட்டு நானும் சோறு திண்ணுட்டு வாழுறேனே….அந்தக் கண்ண நோண்டி எறியாம இருக்கேனே’

‘ஆளத்தெரியுமாலே?’

‘தெரியும்….’

கிழவர் ‘ம்ம்?’ என்றார். அந்தப் பழைய சேத்துக்காட்டார் குரல் அது. குகைப்புலியின் ஒலி போல. சுடலைக்குப் புல்லரித்தது.

‘ம்ம்?’ என்றார் கிழவர் மீண்டும்

‘என் கையிலே அருவா நிக்கமாட்டேங்குது சாமி…நூறுவாட்டி ஆயிரம் வாட்டி மனசுக்குள்ள அவன வெட்டி சாய்ச்சாச்சு…முடியல்ல. சாராயத்த ஊத்தி தீய அணைச்சுகிட்டு படுக்கத்தான்யா முடியுது….என்னால முடியல்ல…என் காலு மண்ணில தரிக்கல….நான் அப்பவே செத்தாச்சு…இந்தச்சடலத்த வச்சுகிட்டு

நான் அவன் முன்னால போயி நிக்கமுடியாது....என்னால முடியல்ல...என்னால முடியல்லய்யா'

கிழவர் பேசாமல் கண்கள் மின்ன படுத்துக்கிடந்தார்.

'உங்களப்பாத்தா ஒரு தைரியம் வருமான்னு பாக்கவந்தேன்யா....வீட்டுப்பாத்திரத்த எடுத்து வித்து அந்தப்பணத்திலே வெசாரிச்சு வந்தேன்...ஆனா நீங்க இந்தக் கெடை கெடக்கிறீக....என்னத்துக்கு இதெல்லாம்னு தோணுது. எதுக்கு வெட்டும் குத்தும்? அந்தப் பாழாப்போன நெலத்துக்கா? அந்தப் பொட்டக்காட்டுக்கா நான் என் செல்லத்த பலிகுடுத்தேன்? வேண்டாம்....அந்த மண்ணு நாசமா–'

பளாரென்று கன்னத்தில் அறை விழுந்தது. காதுஅடைக்க விழுந்த அறையில் சுடலை பொறி கலங்கி சரிந்து பொத்திப்பிடித்துக்கொண்டார். ஊன்றிய கை ஆடியது. அவர் நிமிர்வதற்குள் கிழவர் தன் ஒரு கையை ஊன்றிக் கடைசி உந்தலில் எழுந்து பாதி அமர்ந்துவிட்டார். வற்றிச்சுருங்கிய முகம் உணர்ச்சிமிகுதியால் கோணலாகியது. தாடை ஆட கழுத்துச்சதைகள் நெளிந்து நெளிந்து இழுபட்டன.

'ச்சீ...பிச்சக்காரப்பயலே....நெலத்தையா பழிக்குறே? லே நெலம் உனக்கும் எனக்கும் தாயாக்கும்லே...நீயும் உன் சந்ததிகளும் இந்த மண்ணில மனுஷனா வாழணுமானா கையிலே நெலமிருக்கணும்...நீ ஆம்புளையானா போயி அவன வெட்டுல.. வெட்டிட்டு நீயும் சாவுலே... உன்னால முடியல்லேண்ணா உனக்க மகன அனுப்பு...நீயும் உன் வம்சமும் வெட்டிச் செத்தாலும் சரி, ஒரு துண்டு நெலத்த விடாதீங்க ....நம்ம சந்ததிகளுக்கு நாம செய்ற கடமைலே...'

ஊன்றிய கை வெடவெடவென ஆட கிழவர் அப்படியே மல்லாந்து விழுந்தார். மறுகையால் தரையைப் படார் படார் என ஓங்கி அறைந்தார். 'மனுசனா வாழணும்ல...நாயா பண்ணியா வாழாதே. மனுஷனா வாழு...மனுஷனா வாழுலே...லே மனுஷனா வாழுலே'

இருமல்களும் மூச்சுத்திணறல்களுமாக தன் முன் கிடந்து நெளியும் அந்த வற்றிய உடலை சுடலை விழித்துப்பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தார்.

## (8) நிலம்

இருபத்திரண்டு வருடங்களுக்குப்பின் ராமலட்சுமிக்கு பொத்தைமுடி ஏறிப்போய் வெட்டுவேல் அய்யனாரைச் சேவிக்கவேண்டுமென்று ஆசை வந்தது. எப்போது அவளுக்குள் அந்த எண்ணம் வந்தது என்று அவளுக்குத்தெரியவில்லை. உறைகுத்தின தோசைமாவு மறுநாள் காலை மூடியைத் தள்ளிவிட்டுப் பூத்துமலர்ந்திருப்பதுபோல காலையில் அவள் அது தன்னிடமிருப்பதை உணர்ந்தாள்.

அவள் முகம் பூரித்திருப்பதைக்கண்டு அன்னமயில் 'ஏனம்மிணி, மொகத்திலே எளவெயிலுல்ல அடிக்குது?' என்று கேட்டாள். ராமலட்சுமி புன்னகைத்துக்கொண்டாள்.

அடுத்தக்கணமே மனம் கூம்பியது. முகத்தை சுவரை நோக்கித் திருப்பிக்கொண்டாள். நாலைந்துவருடம் முன்புகூட காலையில் அப்படி அகம்பூரித்திருந்தால் நாலைந்துநாள் தள்ளிப்போயிருக்கிறது என்று அர்த்தம். அதன்பின் வேண்டுதல்கள், காணிக்கைமுடிதல்கள். உள்ளூர ஒவ்வொரு சொல்லும் மன்றாடலாக இருக்கும். காலடி எடுத்துவைக்கும்போதெல்லாம் வயிறு வயிறு என்று மனசு பதறும். நாட்கள் தாண்டத்தாண்ட நம்பிக்கை சோளக்கதிர் கனப்பதுபோல வளரும். பின்பு ஒருநாள் வாடிய செம்பருத்தி முற்றமெல்லாம் உதிர்ந்துகிடக்கும்.

அந்த நம்பிக்கையின் அலைக்கழிப்பு முழுமையாக அடங்கிப்போனதுகூட நல்லதுதான் என்று ராமலட்சுமி நினைத்துக்கொண்டாள். இனிமேல் அவள் கொல்லைப்பக்கச் சுவரில் நாட்களைக் கரியால் புள்ளிவைக்கவேண்டியதில்லை. வண்ணாத்தி சின்னு வரும்போதெல்லாம் கூசி அரங்குஅறைக்குள் ஒடுங்கிக்கொள்ளவேண்டியதில்லை.

கொல்லையில் தொழுவத்துப் புல்கூரைமேல் கருக்கிருட்டு வடிந்துகொண்டிருந்தது. கறுத்தானும் மாடசாமியும் பசுக்களை ஒவ்வொன்றாக அவிழ்த்துக் கொண்டுவந்து முளைத்தறிகளில் கட்டிக்கொண்டிருந்தார்கள். தொழுவத்தின் குண்டுபல்புகளைச்சுற்றிப் பூச்சிகள் புகைச்சுருள்போல பறந்துகொண்டிருந்தன. செவலை நன்றாகத்

திரும்பி நின்று முளையில் சுற்றிய கன்றைப்பார்த்து அம்பே என்றபின் வாலைத்தூக்கி சடசடவென சிறுநீர் கழித்தது.

அன்னமயில் கூடைநிறைய எள்ளுப்புண்ணாக்கு அள்ளி இடுப்பில் வைத்து கொண்டுசென்று முந்தையநாளே தொட்டிகளில் கலக்கி வைத்திருந்த புளித்தகாடியில் கொட்டிக் கலக்கினாள். புண்ணாக்குவாசனைக்குப் பசுக்கள் கயிற்றை இழுத்து கனத்த நாக்கை நீட்டின.மூக்குக்கயிறு இழுக்க தலை தாழ்த்திச் சுற்றிவந்தன. மாடசாமி தொழுவத்தில் பெரியகருப்பியின் அருகே கன்றை அவிழ்த்துவிட்டான். செவலைக்கன்று. முதுகில் வெள்ளைக் கைக்குட்டையைப் போட்டதுபோல ஒரு தடம். மெழுகுமூக்கை நீட்டி நீட்டித் தாயின் அகிடைப் பிடிக்க முனைந்துகொண்டிருந்தது. கயிறு தளர்ந்ததும் குட்டிவாலை தூக்கியபடி சென்று கனத்து நரம்புபுடைத்துத் தொங்கிய அகிடில் முட்டி இருமுறை ஏந்தியபின் வேகமாகச் சப்ப ஆரம்பித்தது. ராமலட்சுமிக்குப் புல்லரித்தது. கதவருகே சற்றே மறைந்து நின்று பார்த்துக்கொண்டிருந்தாள். படபடப்பில் அவளுக்குக் கால் பதறியது. ஒவ்வொருநாளும் அவள் பார்க்கும் காட்சிதான். ஒவ்வொருநாளும் அதை அவள் ஒளிந்துநின்றுதான் பார்ப்பாள். அன்னமயில் அடுத்தமுறை புண்ணாக்கு எடுக்க உள்ளே வரும் சத்தம் கேட்டதும் அவள் உள்ளே சென்றாள்

கொல்லைக்குச்சென்று மரச்சம்புடத்தில் தொங்கிய உமிக்கரியைக் கொஞ்சம் அள்ளிப் பூவரசம் இலையில் மடித்துக் கொண்டு வடலிப்பனையில் இருந்து ஒரு ஓலையைக் கீறிக்கொண்டாள். கொல்லைப்பக்கம் நின்ற வேப்பமரத்தில் காகங்கள் எழுந்து எழுந்து பறந்து பூசலிட்டுக்கொண்டிருந்தன. பனையோலை மறைப்பு போடப்பட்ட குளியலறைக்குள் பெரிய சிமிண்ட் தொட்டியில் அன்னமயில் தண்ணீர் நிறைத்து வைத்திருந்தாள். முந்தைய நாளே நிறைத்து இரவின் குளிரை வாங்கிவைத்திருக்கும் தண்ணீர். ராமலட்சுமி க்கு அதில் குளிக்க மிகவும் பிடிக்கும். அந்தத் தண்ணீருக்குக் கொஞ்சம் கனம் அதிகம் என்று தோன்றும். இந்த கரிசல்காட்டின் வெக்கைக்குத் தண்ணீர் சாதாரணமாக உடம்பில் விழுந்ததுமே உலர்ந்துவிடும். ராத்திரித்தண்ணீர் இன்னும் கொஞ்சநேரம் உடம்பில் நீடிக்கும் என்று அவளுக்கு ஒரு நினைப்பு.

குளித்து முடித்துவந்ததும் அவள் அரங்கு அறைக்குச் சென்று தேக்குப் பெட்டியைத் திறந்தாள். மரிக்கொழுந்து செண்ட் போட்டு வைத்த புடவைகள்

அடுக்கப்பட்டிருந்தன. பெட்டியின் மூடியின் உட்பக்கம் அவளும் சேவுகப்பெருமாளும் திருமணம்செய்துகொண்டபோது எடுக்கப்பட்ட படம். அவள் கையில் ஒரு செண்டு இருந்தது. இங்கெல்லாம் அது வழக்கமே இல்லை. அன்று யாரோ திருநெல்வேலியில் இருந்து கொண்டுவந்து கையில் கொடுத்துவிட்டார்கள். அதை என்ன செய்வதென்றே தெரியாமல் கையில் வைத்திருந்தாள். மெத்தென்று குளுமையாக இருந்தது. கைக்குழந்தைபோல.

அவளுக்குப் புல்லரித்தது. ஆம், அதை மடியில் வைத்திருந்தபோது அதைத்தான் அவள் நினைத்தாள். பூச்செண்டு வாடாமலிருக்கத் தெளித்திருந்த பன்னீர் ஊறி அவள் சின்னாளப்பட்டுப் புடவையில் சொட்டித் தொடை ஈரமானபோது அவளுக்கு புல்லரித்துக் கண்ணீரே வந்துவிட்டது. உதட்டை இறுக்கியபடி தலையைக் குனிந்து கொண்டாள். சேவுகப்பெருமாளுக்கு அப்போதே ஊரெல்லாம் தோழர்கள். எல்லாருமே பெரியமனிதர்கள். மோட்டாரைப்போட்டுக்கொண்டு வந்தபடியே இருந்தார்கள். என்னென்னவோ பரிசுப்பொருட்கள். கடிகாரம் மட்டும் இருபத்தைந்துக்குமேல் வந்தது. ஒவ்வொருவரைப்பார்த்தும் அவள் புன்னகைக்கவேண்டியிருந்தது. புன்னகைசெய்தே முகம் வலிக்க ஆரம்பித்தது

ராமலட்சுமி அரக்குச்சிவப்புப் பட்டுப்புடவையை எடுத்தாள். அதை மெதுவாகத் தடவிப்பார்த்தாள். மதுரையில் அழகர்விழா பார்க்கப்போனபோது எடுத்தது. கல்யாணமாகி நான்கு வருடம் கழித்து. சேவுகப்பெருமாள் அதை ஒரு வழக்கமாகவே வைத்திருந்தான். வெளியே கூட்டிச்சென்றால் கண்டிப்பாகப் புடவை உண்டு. ‘அய்யே இப்ப என்னத்துக்கு இது? நான் இதையெல்லாம் கட்டிக்கிட்டு எங்க போறேன்?’ என்று அவள் சொன்னாலும் அவன் கேட்கமாட்டான். ‘என்ன இப்ப? பொட்டியில வச்சுக்க…இல்லாட்டி வீட்டுக்குக் கட்டிக்க’ என்பான். ‘இதையா…நல்லாருக்கு பட்டுகட்டிகிட்டு காட்டுவேலைக்குப்போறேனக்கும்’ என்பாள் அவள். ‘காட்டுவேலை ஏன் செய்றே? நீ மகாராணியாக்கும்…நாக்காலியிலே அட்டணக்கால் போட்டுட்டு ஒக்காரு…’ அவள் சிரித்து ‘ஆமா… அட்டணக்கால் போடுறாங்க… மானம்பாத்த பூமியிலே அது ஒண்ணுதான் கொற’ ஏன் போட்டா என்ன? நீ யாரு? நீ வடக்கூரான் பெஞ்சாதி…கோயில்பட்டி சங்ஷனிலே போயி பேரச்சொல்லிப்பாரு. தெருவே எந்திரிச்சு நிக்கலேண்ண என்னாண்ணு கேளு…’

பட்டுப்புடவைக்குள் இருந்த பாச்சாஉருண்டைகள் எல்லாம் ஆவியாகிப் புடவையிலேயே கலந்துவிட்டிருந்தன. அதை எடுத்து முகர்ந்து பார்த்தபோது அவளுக்கு எங்கோ போய்விட்டதுபோலிருந்தது. மதுரை சாலைகளில் வண்டிப்புகையை சுவாசிப்பதுபோல இருந்தது. புதிய மோட்டார்காரில் ஏறியதுபோல இருந்தது. இளவாழையிலை போலிருந்த புடவையை மெதுவாகப் பிரித்து உதறிவிரித்தாள். மூன்றுமுழம் அகலத்துக்கு மயில் சரிகைபோட்ட முந்தானை. உள்ளுக்குள் செவ்வந்திப்பூ புட்டா. அந்தக்காலத்தில் அதைப்பார்ப்பதற்காகவே பெண்கள் பக்கத்து ஊரில் இருந்தெல்லாம் தேடிவருவார்கள்.

அவள் பீரோக் கண்ணாடியில் தன்னைப்பார்த்தாள். காதோரம் படர்ந்த நரையில் முகத்தின் மஞ்சள் கலந்து ஏதோ குருவியின் இறகுபோலிருந்தது. நெற்றியில் குங்குமம் வைத்த இடம் வட்டமாகக் கருகி அய்யனார் கோயில் கல்படியில் சூடவிளக்கு ஏற்றிய தடம்போலிருந்தது. கன்னம் கனத்து, கழுத்து குறுகி, உடம்பு உருண்டு அந்தத் தோற்றம். அது அவள்தான் என்று அவள் மனம் முழுக்க நம்பியதேயில்லை. திரும்பத்திரும்ப கண்ணாடிபார்த்த காலகட்டத்தில் மனதில்பதிந்த ஒரு சித்திரம் உண்டு. அவளுக்கு கே.ஆர்.விஜயாவின் சாயல் என்பாள் மேலகரம் அத்தை. 'அந்த விசயாக்கூட ஒன்னைமாதிரி கறுப்புதாண்டீ...லைட்டடிச்சு செவப்பாக் காட்டுறாங்க' என்பாள். சேவுகப்பெருமாளிடமும் அதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். 'உன்னைப்பாத்தா கே.ஆர்.விஜயாமாதிரின்னு சொன்னாங்க... அவ என்ன உன்னைய மாதிரி உளுந்து நெறத்திலயா இருக்கா?' என்று அவன் முதலிரவில் கேட்டான் 'ஆ, அவள பெயிண்ட் அடிக்கிறதுக்கு முன்னாடி பாத்துட்டு வந்து கேளுங்க' என்றாள் அவள்.

அவள் புடவை கட்டி வெளியே வந்தபோது அன்னமயில் பெரிய செம்பில் விளிம்பு வழிய நுரைத்த புதுப்பாலுடன் உள்ளே வந்தாள். கண்கள் விரிய பார்த்து 'ஏனம்மிணி....இண்ணைக்கு எங்கியாம் போறிகளா?' என்றாள். 'ஏன் போனாத்தானா? சும்மா கட்டிக்கப்பிடாதா?' என்றாள் ராமலட்சுமி . 'கட்டிக்கிடுறது...உங்களுக்கு என்ன மகராசி' என்றபின் அவள் சமையல்கட்டுக்குள் சென்றாள்.

'அன்னம், பாலைக்காய்ச்சி டீ போடுடீ...மதியம் குழம்பும் சோறும் சமைச்சிரு...நான் சும்மா பொத்தைமுடி வரைக்கும் போய்ட்டு வாறேன்' என்றாள். 'பொத்தைமுடிக்கா? இப்ப அங்க யாரு இருப்பா? வெசாகத்துக்கு

சனம் ஈ மாதிரி அம்மும். அப்றம் மாடுமேய்க்கிற பயலுக கூட எட்டிப்பாக்க மாட்டாங்களே' என்றாள் அன்னமயில்

'அய்யனாரு இருப்பாருல்ல?'

'அவருக்கென்ன? பசியா தாகமா வெயிலா மழையா?...நயினாரு கூட வாறாரா'

'கேட்டுப்பாக்கிறேன்..'

ராமலட்சுமி முன்னறைக்குப்போய் வாசல்வழியாக எட்டிப்பார்த்தாள். சேவுகப்பெருமாள் பெரியகட்டில்நிறைத்துப் படுத்துக்கிடந்தான். சீரங்கம் பெரியபெருமாள் போல கன்னங்கரிய உடம்பு. 'வடக்கூரானா அவன் மதயானையாச்சே' என்பார்கள் அக்காலத்திலேயே. பெண்பார்க்க வந்தபோதுதான் அவனை அவள் முதன்முதலாகப் பார்த்தாள். வெள்ளை வேட்டியை ஏற்றிக்கட்டி வெள்ளைச்சட்டைக்கையை நன்றாகச் சுருட்டி விட்டு கழுத்துக்குப்பின் கைக்குட்டை செருகி தோல்செருப்பு ரீக் ரீக் என்று ஒலிக்க நடந்து வந்தான். பெரிய மீசை. கம்பிச்சுருள்கள் போலத் லைமயிர் நெற்றியில் புரண்டது. திண்ணையில் அமர்ந்ததும் 'டீ சாப்புடறீயளா?' என்றார் அப்பா. 'கொண்டாங்க' என்று சொல்லி விட்டு 'டம்ளரிலே வேணாம்...சொம்புல கொண்டாங்க' என்றான். அப்பாவுக்குப் புரியவில்லை. கூடவந்த கழுகுமலை மாமா 'அவ்வோ வீட்டிலே அதான் வழக்கம்...எல்லாம் கொஞ்சம் கூடுதலா இருக்கும்' என்று சிரித்தார். பெரிய ஓட்டுச்செம்பு நிறைய கொதிக்கும் டீ வந்தது. அதை அப்படியே தூக்கி களக் களக் என ஒரே மூச்சில் குடித்தான். வாயிலிருந்து உலைவாய் போல ஆவி எழுந்தது.

அப்பாவுக்குத் தயக்கம்தான். 'ஏனம்மிணி, பையன் ஒருமாதிரி இருக்கானே...கையும்காலும் அய்யனாரு மாதிரி இருக்கு...' அவளுக்கு ஒன்றும் சொல்லத்தெரியவில்லை. ஆனால் அம்மாச்சி உடனே சொல்லிவிட்டாள் 'ஏளா என்ன சொல்லுதே? நரம்பனுக தான் பொட்டைக்குட்டிகள மதிக்க மாட்டானுக...இவன் அய்யனாரு அம்சம்...நம்ம குட்டிய ராணிமாதிரி வச்சுக்கிடுவான்...காலில விளுந்து கெடப்பான்.... ' அதற்குமேல் எவருக்கும் கருத்து இருக்கவில்லை.

கல்யாணமெல்லாம் கனவுபோலதான் இருந்தது. என்ன நடக்கிறது என்றே தெரியாத துண்டுநிகழ்ச்சிகளின் ஓட்டம். கல்யாணமாகி நாலாம்நாள் மலையேறி வெட்டுவேல் அய்யனாரைப் பார்த்தபோதுதான் அவளுக்குள்

ஏதோ நிகழ்ந்தது.விழித்த கண்களுடன் நின்ற அய்யனாரின் ஆளுயரக் கருங்கற்சிலை.வெட்டுப் பற்களில் ஒரு சிரிப்பு இருப்பதுபோலத் தெரிந்தது. அவள் கண்களிலிருந்து கண்ணீர் கொட்டியது. 'ஏன்ளா? என்னாச்சு? என்ன?' என்று அவன் கேட்டுக்கொண்டே இருந்தான். அவள் உதட்டை அழுத்திக் கண்ணீரைத் துடைத்தாள். திரும்பிப் படியிறங்கும்போது நாலாம்படியில் நின்றுவிட்டாள். 'என்ன? என்னளா?' என்றான் அவன் .சட்டென்று விசும்பிவிட்டாள். 'எஞ்சாமி...தெய்வமா வச்சு கும்பிடுதேன்...எஞ்சாமி' என்று சொற்கள் கசங்கின. அவன் அவள் தோளைப்பிடித்துத் தன்னுடன் சேர்த்துக்கொண்டான். அவள் உடல் நடுங்கியது. ஒரு நிமிடத்தில் 'அய்யோ' என்று விலகிவிட்டாள். நல்லவேளையாக மலையில் வேறு யாருமே இல்லை. அவன் சட்டையில் கொஞ்சம் குங்குமம் ஒட்டியிருந்தது. அதை அவள் சுண்டிவிட்டாள். அவன் விலகிக்கொண்டு சிரித்தான்.

அவள் பார்வையை உணர்ந்ததுபோல அவன் இமைகள் அசைந்தன. சட்டென்று கண்களை விழித்து அவளைப் பார்த்தான். எழுந்து அமர்ந்து 'என்னளா?' என்றபடி மீசையை நீவினான்.

அவள் 'இல்லை' என்று தலையை அசைத்தாள்

'என்ன?' என்று பல்லைக்கடித்துக்கொண்டு உரக்கக் கேட்டான்.

'ஒண்ணில்ல...சும்மா அப்டியே பொத்தமுடிவரை போலாமாண்ணு'

'அங்க இண்ணைக்கு என்ன? நாளைக்குப்போலாம்' என்று எழுந்து லுங்கியைக் கட்டிக்கொண்டான். அருகே மேஜைமேல் இருந்த சந்தனப்பெட்டியில் இருந்து புலிநகம் போட்ட சங்கிலியை எடுத்து முடிநிறைந்த மார்பில் போட்டுக்கொண்டான். திரும்பி மீண்டும் 'என்ன?' என்றான்

'ஒண்ணில்ல'

'ஏளா, எனக்கு இண்ணைக்கு தலைக்குமேலே வேல கெடக்கு... வக்கீலுபிள்ளைய வரச்சொல்லியிருக்கேன்...'

அவள் தலையைக் குனிந்து கொண்டாள். ஆனால் அப்படியே நின்றாள்

'வெந்நி எடுத்து வை'

'ம்'

‘என்ன?’

‘ஒண்ணில்ல’

அவன் கைகளில் போட்டிருந்த மோதிரங்களைத் திருகினான். பின் குரலை மாற்றி சுவரைப்பார்த்தபடி ‘நாராயணன் வரட்டும்...சொல்லிட்டுப் போலாம்’ என்றான்

அவள் ‘ம்’ என்றாள்

‘பிடிச்சா பிடிச்ச பிடி....விட்டே குடுக்காத...அவனவன் ஆயிரம் சோலியிலே சாவுறான்...செரி போ...’

அவள் மெல்லப் பின்வாங்கி அவன் முன்னாலிருந்து விலகியதும் சிரித்துக்கொண்டு சமையலறைக்கு ஓடினாள்.

அன்னமயில் ‘என்ன சிரிப்பு?’ என்றாள்

‘வாறாரு’

‘அது என்ன புதிய விஷயமா? எப்ப தாலிய கட்டினாரோ அப்ப நயினாரு அடங்கியாச்சுல்லா? மீசையும் அருவாளுமெல்லாம் வீட்டுக்கு வெளியதானே?’

‘போடி’

சேவுகப்பெருமாள் குளித்துத் தலை துவட்டுவதில்லை. கையாலேயே இருமுறை பின்பக்கமாக நீவி விட்டுக்கொள்வான். உடம்பைத் துவட்டுவதுமில்லை. ஈரத்துடன் சட்டை போட்டுக்கொண்டால் உடம்பெல்லாம் அது ஒட்டி சொட்டுநீலம் பூசியது நீலத்தடங்களாகத் தெரியும். பௌடர் எல்லாம் போடுவதில்லை. ஒரு சின்ன சம்புடத்தில் புனுகும்மெழுகும் கலந்து வைத்திருப்பான். அதைப் பல்தேய்க்கும் பிரஷ்ஷால் எடுத்து மீசையில் போட்டு அதாலேயே நன்றாக நீவி விட்டுக்கொள்வான். அதன்பின் கன்னத்தில் முறுக்கி நிறுத்தித் திரும்பித்திரும்பிப்பார்ப்பான்

‘போரும் வடக்கூரான் சண்டியரே...மீசை நல்லா வெட்டரிவா கணக்காத்தான் இருக்கு’

‘போடி...அடிச்சுப் பல்லப்பேத்திருவேன்’

‘நாராயணன் வந்திருக்கான்...’

சேவுகப்பெருமாள் வாசலுக்கு வந்தான். கூடவே அவளும் பட்டுப்புடவையுடன் வந்ததும் நாராயணன் புரிந்துகொண்டான்

‘எங்க அண்ணி? கோயிலுக்கா?’

‘அய்யனார பாக்கணும்கிறா...’

‘வெயிலு வந்திருமே’

‘சுருக்குன்னு போய்ட்டு வந்திருதோம்.... வக்கீலுபிள்ள எப்ப வாறாரு?’

‘பத்துமணின்னு சொன்னாரு’

‘...முடிஞ்சிருமா?’

‘பிடிபிடின்னு நிக்கானுக....அவனுகள்ட்ட சும்மா பேசினா படியாது. அருவா பேசணும்’

‘ம்’ என்று மீசையைக் கோதினான். அப்போது அவன் கண்கள் கீழே தழைவது அவளுக்குப் பிடிப்பதில்லை. அவன் வேறு எவரோ ஆகும் தருணம் அது.

‘பாத்துக்கிடுவோம்’ என்றபின் அவளிடம் ‘வாடி’ என்றான்.

பைக்கை அவன் எடுக்கையில் நாராயணன் தயங்கி ‘அண்ணா’ என்றான்

‘ஏண்டா?’

‘இல்ல...தனியாப்போறிக...’

அவன் புன்னகை செய்து முன்கூரையில் இருந்து தோல் உறையிட்ட அரிவாளை எடுத்து வண்டியில் நெடுக்குவாட்டாக வைத்தான். அதை வண்டியுடன் பொருத்த இரண்டு கிளிப்புகளைச் செய்திருந்தான். ‘அய்யனாருக்கு ஆயுதம்தான்ல தொணை...நீ போய்ப் பிள்ளைவாளப் பாரு...’

‘பொத்தைமுடிப்பக்கம் இந்நேரம் யாருமிருக்க மாட்டாங்க’

‘அய்யனாரு இருக்காருல்ல?’ அவன் பைக்கில் ஏறிக்கொண்டான். அவன் எடையில் பைக் அமிழ்ந்தது. ‘ஏறுட்டீ’

அவள் ஏறிக்கொண்டாள். ஒரே உதையில் அவன் வண்டியை இயக்கினான். வண்டி தடதடவென்று ஒலித்து செம்மண்சாலையில் ஏறியது. சரளைக்கல் உருண்டுகிடந்த எட்டடிச்சாலை வழியாக சென்றது. சாலையின் குழிகளை

ஒதுக்கி வளைத்து வளைத்து ஓட்டினான். அவள் கூந்தலை இழுத்து முன்னால் விட்டுக்கொண்டாள். புடவைத்தலைப்பை இடுக்கிக் கொண்டாள்.

சித்திரை மாதம். ஆனாலும் காலையில் குளிர் இருந்தது. காலனி தாண்டியதும் இருபக்கமும் விரிந்த பொட்டல். சோளக்கொல்லைகள் குச்சி எச்சங்களுடன் காய்ந்து புழுதி பரவிக் கிடந்தன. காலைவெயிலில் பொட்டலில் கிடந்த கண்ணாடிக்காகிதங்கள் ஏனத்தில் தண்ணீர் பிடித்து வைத்ததுபோல ஒளிவிட்டன. உடைமுட் புதர்களுக்குள் அடைக்கலாங்குருவிகள் எழுந்து எழுந்து அமர்ந்து இரைதேடின.

கொஞ்சம் கொஞ்சமாக அவளுக்கு தன் எடையெல்லாம் கரைந்து விட்டதுபோலத் தோன்றியது. குருவி போல அவள் பொட்டல்மேல் பறந்துகொண்டிருந்தாள். எழுந்து அமர்ந்து சுழன்று சென்றுகொண்டே இருந்தாள்.

உச்சியில் தூக்கி வைத்ததுபோன்ற பாறையுடன் பொத்தைமுடி நெருங்கி வந்தது. அதில் ஒற்றைக்கண்போலத் தெரியும் அம்மணாண்டிக்குகை தெளிந்து தெளிந்து வந்தது. மலையுச்சியில் நிற்கும் ஒற்றைக்கருவேலத்தின் இலைகளைப் பார்க்கமுடியும்போலிருந்தது.

சேவுகப்பெருமாள் பைக்கை நிறுத்திப் பூட்டினான். அதிலிருந்து அரிவாளை எடுத்துக் கழுத்துவழியாக முதுகுப்பக்கம் சட்டைக்குள் போட்டுக்கொண்டான். வேட்டியை நன்றாகக் கட்டிக்கொண்டு ‘வா’ என்றான்.

கீழிருந்து பார்க்கையில் அவ்வளவு உயரத்தையும் ஏறமுடியுமா என்ற பிரமிப்பு எப்போதுமே ஏற்படும். ஆனால் எப்போதுமே அவள் இயல்பாக ஏறிவிடுவாள். சேவுகப்பெருமாள்தான் கொஞ்சம் மூச்சிரைப்பான்.

‘என்ன?’ என்றான் சேவுகப்பெருமாள் . அவள் முகத்தை எப்போதும் அவன் பார்த்துக்கொண்டிருப்பான். அவள் என்ன நினைக்கிறாள் என்று அவனுக்குப்புரியும்

‘ஒண்ணில்ல’

‘சொல்லுட்டி’

’இப்ப எதுக்கு இந்த அருவா?’

’ஒரு சின்ன பிரச்சின போய்ட்டிருக்கு…அதான்’

‘என்ன பிரச்சின?’

‘உனக்கென்ன அதுக்கு? சொன்னா புரிஞ்சுகிடவா போற?’

‘ஆமா புரியறதுக்கு என்ன இருக்கு…எவனோ போக்கத்தவன் நெலத்த வளைக்கிறது. அருவாளக்காட்டி மெரட்டுறது. கேஸப்போட்டு வாட்டுறது….அடிச்சுத் தொரத்திட்டு அத சேத்துக்கறது…இதுதானே நடக்குது இருவத்தஞ்சு வருசமா’

‘இதான் நடந்திட்டிருக்கு ஆயிரம் வருசமா …லெச்சம் வருசமா. மண்ண மனுசன் விட்டிருவானா? மண்ணு வச்சிருக்கவன்தான் மனுசன்…’

‘பொண்ணாசையால ராவணன் கெட்டான் மண்ணாசையால துரியோதனன் கெட்டான்னு சொலவடை’

‘மண்ணுக்காக சாவுறதில ஒரு கெம்பீரம் இருக்குட்டீ’

‘என்ன சொன்னாலும் ஏறப்போறதில்லை…’. அடுத்த சொல் அவள் வாயில் எழுந்து உதடுகளில் கடிபட்டு நின்றது. பிள்ளையில்லாமல் எதற்கு இத்தனை நிலம். சொல்லாத சொல் உள்ளுக்குள் வீங்கியது. நெஞ்சுக்கூட்டை இறுக்கியது.

சேவுகப்பெருமாள் படிகளில் நின்று சுற்றுமுற்றும் பார்த்தான். கண்ணெட்டும் தூரம் வரை நிலம் விரிந்து கிடந்தது. தொடுவானில் ஒளிதேங்கிக்கிடந்து கண்கூசியது.

‘எவ்வளவு நெலம்…எவனெவனோ வச்சிருக்கான்….’ என்று அவன் சொன்னான் ‘நம்ம கிட்ட இருக்கிற இம்புட்டு நெலத்துக்காக இந்தப்பேச்சு பேசுற’

‘நூறு ஏக்கர்னா இம்புட்டு நெலமா?’

‘கழுகுமலையிலே சிக்கைய நாயக்கர் எழுநூறு ஏக்கர் வச்சிருக்காரு’

‘அந்தப்பக்கம் அவருக்க தாத்தன் ஆயிரம் ஏக்கர் வச்சிருப்பான்… நாம எவ்வளவு நெலத்த வளைச்சுப்பிடிச்சாலும் ஒலகத்திலே அவ்வளவு நெலமும் மிச்சமாத்தான் கெடக்கும்…’

‘நீ சும்மா வாடி…பொட்டக்கழுத …ஒனக்கென்ன தெரியும்?’

‘ஆமா. எது சொன்னாலும் இப்டி ஒரு வார்த்தை சொன்னாப்போச்சு…’

மூச்சிரைக்க மூச்சிரைக்க நடந்தபின் அவன் பாதையோரப் பாறை ஒன்றில் அமர்ந்துகொண்டான். ‘தண்ணிப்பாட்டில் கொண்டாந்திருக்கணும்…’ என்றான்

‘இந்த பொத்தை ஏறி எறங்கறதுக்கு என்ன தண்ணி?’

‘தவிக்குதுல்ல….சூட்டிகையான பொட்டப்புத்தின்னா ஒரு பாட்டில் தண்ணி கையோட எடுத்து வச்சிருக்கணும்’

‘மலைமேலே ஊத்துத்தண்ணி இருக்கு…குடிச்சுக்கலாம்’

அவளும் அருகே அமர்ந்தாள். கையில் இருந்த பிளாஸ்டிக் பையில் தேங்காய் பூ பழம் கற்பூரம் எல்லாம் வைத்திருந்தாள். அதை அருகே வைத்தாள். ஒரு குரங்கு அருகே வந்தது. பெரிய தாய்க்குரங்கு. அடிவயிற்றில் குட்டி ஒட்டியிருந்தது. பெரிய கண்களைச் சிமிட்டிச்சிமிட்டி விழித்தது. அன்னையின் கன்னம் சிவப்பாக இருந்தது

‘இது கன்னம் எதுக்கு செவப்பா இருக்கு?’ என்றாள்.

‘குட்டி போட்டிருக்குல்ல?’

‘தேங்காய குடுக்கட்டா?’

‘அய்யனாருக்கு உடைக்கவேண்டாமா? அப்றமா குடுப்பம்’

‘அய்யனாருக்கு பூ போரும்’ அவள் தேங்காயைத் தரையில் அறைந்து உடைத்து இரு மூடிகளையும் வீசினாள். குரங்கு பாய்ந்து ஒன்றை எடுத்துக்கொள்ள இன்னும் இரு குரங்குகள் பாறையில் இருந்து தாவி வந்தன. ஒன்று மூடியுடன் ஓட இன்னொான்று பின்னால் சென்றது.

‘போலாமா? வெயிலாயிரும் அப்புறம்’

மேலும் நடந்தபோது அவள் பலமுறை சொற்களை மேலெடுத்துத் திரும்ப உள்ளே போட்டபின் மெல்ல கேட்டாள். ‘’ஏங்க, சத்திரப்பட்டி சின்னத்தை கடைசியா என்னண்ணு கேக்கச்சொன்னாங்க’

‘என்னது?’ என்றான். அவனுக்கு உண்மையிலேயே நினைவில்லை என்று கண்கள் சொல்லின

‘மீனாச்சி விசயம்’

‘த…எவ்வளவு வாட்டி சொல்றது…சும்மா கெட….’

‘ஆமா...சும்மா கெடக்கேன். கடலு மாதிரி நெலமிருக்கு...கட்டியாள ஒரு வாரிசில்ல...பாழ்மரம் மாதிரி நிக்கிறேன்...பட்டுவிளுந்தா தூக்கிப்போட்டுத் தீய வைக்க ஒரு ஆளில்ல’

அவன் கோபத்துடன் நின்று அவள் கண்களைப்பார்த்தான். ‘முட்டாச்சிறுக்கி அப்டியே ஒரு அப்பு அப்பினா பல்லு உதுந்திரும்....நிப்பாட்டு ஏய் நிப்பாட்டுரீ...நிப்பாட்டச் சொல்றேன்’

அவளை மீறிக் கண்ணீர் கொட்டிக்கொண்டே இருந்தது. புடவை முந்தானையால் துடைக்கத்துடைக்கப் பெருகியது. பின் மூக்கைப் பிழிந்துகொண்டாள்

‘காலங்காத்தால இதுக்கா கூட்டிட்டு வந்தே? நான் போறேன்’ அவன் படியிறங்கினான்

‘இல்ல ராசாவே...இல்ல...சொன்னா கேளுங்க...ஏதோ பொட்டப்புத்தி...வாங்க’

அவன் நின்றான். முகம் மாறியது. ‘த...இந்த படியில வச்சுத்தாண்டி என்னையச் சொன்னே, அய்யனாருண்ணுட்டு.... அய்யனாரு சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவராக்கும்...’

அவள் தலைகுனிந்து நின்றாள்

‘இந்தாபாரு...இந்த சென்மத்திலே இன்னொரு பொண்ணு இல்ல...அது அன்னைக்கு இந்தப் படியில வச்சு முடிவுசெஞ்சது....இனி அந்தப்பேச்ச எடுக்காதே....’

‘ம்’

‘நமக்கு என்னட்டி கொற? சிங்கம்மாதிரி ரெண்டு தம்பிக இருக்கானுக...அவனுகளுக்க பிள்ளைய உன் இடுப்ப விட்டு எறங்கின நேரமில்ல...பின்ன என்ன?’

‘சரிதான்’

‘வா’ என்று அவன் வேட்டியை மடித்துக்கட்டிக்கொண்டு ஏறினான்

அவள் மெல்ல ‘பிறவென்னத்துக்கு இந்த நெலமெல்லாம்?’

‘அந்தப் பேச்ச விடு’

‘எப்டி விடுறது? எவ்வளவு ரத்தம்...எவ்ளவு சாபம்... எல்லாம் நம்ம தலையிலதானே விழுது...’

‘ரத்தம் இல்லாம நெலம் இல்ல... மகாபாரதமே அதுக்காகத்தானே’

‘அநியாயமா ஏழைங்க நெலத்த புடுங்கிட்டு புள்ளகுட்டிகளோட அடிச்சுத் தொரத்துறதுக்கு மகாபாரதமா தொண?’

‘நியாயம் அநியாயம்லாம் இங்க என்ன? நெலத்த வச்சிருக்க திராணியிருக்கிறவனுக்கு அது சொந்தம்....ரெத்தத்தக் கண்டா தொடைநடுங்கிற சனத்துக்குக் கூலிவேலதான் விதி’

‘இந்தப்பொட்டக்காட்டு நெலத்துக்கு இந்தப்போரு’

‘பொட்டக்காடா இருந்தாலும் இது நெலம்...பொட்டக்காடுன்னு சொன்னியே...இவனுக வச்சிருக்கிற கோமணம் மாதிரி நெலத்துக்கு என்ன மதிப்பு? நாலாடு நின்னு கடிக்க அதில எலையில்ல...ஆனா அதுக்காக சாவுறான்’

‘நீங்களும்தான் சாவுறீய’

‘அதான்...நெலமுண்ணா
அதான்...கொல்லணும்,சாவத்துணியனும்...அதுக்குத்தான் நெலமே...’

‘நமக்கென்னத்துக்கு–’

‘இப்ப சும்மா வாறியா இல்லியா?’

அப்படி அவன் கத்துவான் என்று அவள் நினைக்கவில்லை. அவனுக்குள் இருந்து அவள் அஞ்சும் அந்த துரியோதனன் வெளிவரும் தருணம். அவன் கண்கள் இடுங்கிவிடும். உடம்பே இரும்பாலானதுபோல ஆகிவிடும். அப்போது கைநடுங்காமல் அரிவாளைத்தூக்கி மரக்கிளையை வெட்டுவதுபோல ஒருவனின் கையை வெட்டித் தூக்கி அப்பால் போட அவனால் முடியும்.

மலைமேல் செல்லச்செல்ல அவன் மெல்ல இறுக்கமிழந்தான். ‘அப்ப சொன்னியே ஆயிரம் ஏக்கர் வச்சிருக்கிறவருண்ணு.... ஒட்டப்பிடாரம் கிட்ணப்பநாயக்கர்னு கேள்விப்பட்டிருக்கியா?’

‘இல்ல’

'ஆயிரம் ஏக்கர் வச்சிருந்தார்னு சொல்லுவாங்க...பதினெட்டு ஊர்லயா நெலமிருந்துச்சு... சொந்தமா ஒரு கம்மாயே வச்சு வெள்ளாம செஞ்சிருக்காரு... அவரோட அப்பன் குடுத்தது எண்பது ஏக்கருதான். மிச்சமெல்லாம் இவரே சம்பாரிச்சது...ஆயிரம் ஒழவுமாடு வச்சிருந்திருக்காரு...மாட்டைக்கவனிக்க ஒரு கிராமமே இருந்திருக்கு....'

'அவ்ளத்தையும் அள்ளிட்டுப் போனாராக்கும்?'

அவன் பதில் சொல்லவில்லை. மேலே அய்யனார் கோயில் உச்சி தெரிந்தது. ஐம்பதாண்டுகளுக்கு முன்னால் வரைக்கும் அங்கே அய்யனார் சிலை மட்டும்தான் இருந்தது. ஜின்னிங் ஃபேக்டரி வைத்திருந்த தாத்தையநாயக்கர்தான் காரைச்சுவரும் ஓட்டுக்கூரையும் போட்டு ஒற்றை அறைக் கட்டிடம் கட்டியது. கோயில் முன் ஒடுபோட்ட கூரையுடன் ஒரு சிறிய மண்டபம். பக்கவாட்டில் சிமிண்ட் மேடையில் விதவிதமான வேல்களும் சூலங்களும் நாட்டப்பட்டிருந்தன. எல்லாமே துருப்பிடித்துக் காய்ந்த மலர்மாலைசுற்றி நின்றன.வலதுபக்கம் கருவேல மரம் வேர்கள் பரப்பி நின்றிருந்தது. பிரம்மாண்டமானதோர் கழுகின் ஒற்றைக்கால் போலத் தெரிந்தது அடிமரம்

சட்டென்று அவள் திடுக்கிட்டாள். மண்டபத்தில் கிடந்த பண்டாரத்தை அடையாளம் கண்டுகொண்டாலும் படபடப்பு ஓய சில நிமிடங்களாயின.

'என்ன?' என்று கேட்டபின் அவனும் பார்த்தான். 'ஓ...பண்டாரம்...' என்றான்

பண்டாரம் சடைமுடி மண்டிய தலையும் சடைகள் கலந்த தாடியுமாக அப்படியே கிடந்தார். அவர்கள் வருவதை அவர் முன்னரே கவனித்திருக்கவேண்டும். பொருட்படுத்தவில்லை. தூங்குகிறார் என்று தோன்றவில்லை. வெகுநேரமாகப் படுத்திருப்பார் போல. உடலில் சருகுகள் கிடந்தன

கோயிலுக்குக் கதவில்லை. சேவுகப்பெருமாள் 'சட்டுபுட்டுனு பூசைய முடி... வெயிலேறினா இறங்கிக்கிட மாட்டே' என்றான்.

அவள் பூசைப்பொருட்களைக் கோயில் முன்வைத்தாள். 'பாத்துக்கிடுங்க...கொரங்கு வந்திரப்போவுது' என்றபின் ஊற்றுக்குச் சென்றாள். மேலேறிச்சென்ற கரும்பாறையின் காலடியில் இருக்கும்ஒரு பெரிய ஏனம் அளவுள்ள பாறைக்குழிஅது. பாறையின் இரண்டு இடுக்குகளில் இருந்து நீர் ஊறி அதில் தேங்கிக்கொண்டே இருக்கும். மிஞ்சி

வழிந்த நீர் வலதுபக்கமாக நீண்ட கரியபட்டைக்கறையாகக் கீழிறங்கி அங்கே நின்றிருந்த இலஞ்சி மரத்தடியில் மண்ணில் மறைந்தது. எருமைமாட்டின் கண்ணீர்த்தடம் போல.

கயிற்றில் கட்டப்பட்ட தகர டப்பா இருந்தது. அதில் நீரை அள்ளிக் குடித்தபின் கைகால் முகம் கழுவிக்கொண்டாள். இன்னொரு தகரப்போணியில் நீரை அள்ளிவிட்டு நிரப்பி அதைக் கையில் எடுத்தபின் கோயில் முகப்புக்கு வந்தாள்.

‘தண்ணிவேணுமானா போயி குடிக்கிறது’

சேவுகப்பெருமாள் ஊற்றுக்குத் தண்ணீர் குடிக்கச் சென்றான். ராமலட்சுமி கோயில் முன்னாலிருந்த பலிபீடத்தை நீர்விட்டுக் கழுவினாள். கொண்டுவந்த பிளாஸ்டிக் பையைப்பிரித்து அதிலிருந்து பழச்சீப்பு, பொரி ,வெல்லம் எல்லாவற்றையும் எடுத்து அந்த பலிபீடத்தில் படைத்தாள். ஊதுவத்தி கொளுத்தி வாழைப்பழத்தில் குத்தி வைத்தாள். புகைச்சுருள் காற்றில் சுழன்று பறந்து மறைந்தது.

இரு கூரையோடுகளால் பொத்திவைக்கப்பட்டிருந்த கல்விளக்கில் கொண்டுவந்திருந்த கடலை எண்ணையை ஊற்றித் திரிபோட்டுப் பற்றவைத்தாள். செவ்வந்திமாலையை அய்யனாரின் தோளில் தொங்கவிட்டாள். சேவுகப்பெருமாள் முகமும் சட்டையுமெல்லாம் நனைந்திருக்க வந்து அருகே நின்றான்.

ராமலட்சுமி மிகமெல்ல ‘சாமியக் கூப்பிடலாமா?’ என்றாள்

‘அவரு சாமிகும்பிடறதில்ல’ என்றான் சேவுகப்பெருமாள்

‘பின்ன எதுக்கு இங்க இருக்கார்?’

‘ரெண்டுநாளைக்கு ஒருக்க இங்க எவனாவது திங்கிறதுக்குக் கொண்டாந்து குடுத்திடறான். ஊத்துத்தண்ணி இருக்கு. ஒதுங்க எடமிருக்கு...போரும்ல?”

அவள் திரும்பிப் பண்டாரத்தைப்பார்த்தாள். தூங்குகிறாரா? அவர்கள் பேசுவது கேட்கிறதா?

அவள் மேலும் மெதுவாக ‘இப்டி எதுக்கு இருக்கணும்?’ என்றாள்

‘நெலமில்லேன்னா இப்டி இருக்கலாம்...என்ன சரியா, இருந்திருவோமா?’

‘சும்மா இருங்க’ என்று அவள் அவனை மெல்லத் தட்டினாள். கற்பூரத்தை ஏற்றினாள். தீ அந்தரத்தில் எழுந்து பறந்தது. ‘கும்பிட்டுக்குங்க’ என்றாள். அவன் கைகூப்பினான்

பின்பக்கம் பண்டாரம் மெல்லிய குரலில் ‘’ஏலே, நீயும் அய்யனாரா? அரிவாளோட நிக்கே?’ என்றார்

சேவுகப்பெருமாள் திரும்பிப்பார்த்தான்

பண்டாரம் ‘அத வச்சுக்கிட்டுக் கும்பிடுலே...’

சேவுகப்பெருமாள் பேசாமல் கூர்ந்து பார்த்தான்

‘அந்த நம்பிக்க இல்லேன்னா எதுக்கு அய்யனாரக் கும்பிடுதே? அந்த அரிவாள நாட்டிக் கும்பிடுறதுதானே?’

சேவுகப்பெருமாள் ‘அய்யனாரு மேல நம்பிக்கை இருக்கு....’

‘என் மேலே இல்ல...’ பண்டாரம் சிரித்தார். அவரது பற்கள் அவ்வளவு வெண்மையாக இருந்ததை ராமலட்சுமி ஆச்சரியத்துடன் கவனித்தாள். ‘இல்ல என் மேலே பயமா?’

‘பயமா?’ என்றான் சேவுகப்பெருமாள் சிரித்தபடி

‘பயப்படாதே...எனக்கு மண்ணு இல்ல. மண்ணாசையும் இப்ப இல்ல’

சேவுகப்பெருமாள் அரிவாளை உறையுடன் எடுத்து மண்டபத்தில் வைத்துவிட்டு வந்து அவளருகே நின்று கும்பிட்டான். ராமலட்சுமி தீபத்தை தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டாள். அவனும் கண்ணில் ஒற்றிக்கொண்டான்.

‘பரவாயில்ல....திரும்பியே பாக்கலை....’ பண்டாரம் சிரித்தார் ‘ஏட்டி, அந்தப் பழத்திலே ரெண்டு எடுத்து இந்தப்பக்கமா போடு’

சேவுகப்பெருமாள் அரிவாளை எடுத்துக்கொண்டு ‘மண்ணாசை முன்னாடி இருந்திருக்கு....இல்ல?’ என்றான்

‘இருந்தது....உன்னைவிட பத்துமடங்கு மண்ணு. பத்துமடங்கு மண்ணாசை. அதனால பத்துமடங்கு பயம்.பத்துமடங்கு ஆயுதம்....’ பண்டாரம் சிரித்தார்

சேவுகப்பெருமாள் அவரையே கூர்ந்து நோக்கி நின்றான்

‘சரி போ...எங்கிட்ட பேசினா நீயும் வந்து அந்தத் திண்ணையிலே படுத்திரப்போறே’

சேவுகப்பெருமாள் ஏதோ சொல்ல வந்தபின் திரும்பி ராமலட்சுமி யிடம் ‘சீக்கிரம் வாடி’ என்றபின் படிகளில் இறங்கினான்.

‘சாமி அவல்பொரியும் வெல்லமும் சாப்பிடறீங்களா?’

‘போடம்மா அன்னலச்சுமி...கை நெறையப் போடு....உன் கையாலே பண்டாரம் ரெண்டுநாள் பசிய ஆத்திக்கட்டும்’

அவள் வாழையிலையில் பொரியும் அவலும் வெல்லமும் வாழைப்பழமும் கலந்து பண்டாரத்துக்கு எடுத்து வைத்தாள். அவர் எழுந்தமர்ந்து பழத்தையும் வெல்லத்தையும் அவலுடன் குழைத்தார். ராமலட்சுமி ஊற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து அவரருகே வைத்தாள்

பண்டாரம் முதல் உருண்டையை அருகே வந்த பெரிய ஆண்குரங்குக்குக் கொடுத்துவிட்டு சாப்பிட ஆரம்பித்தார். ராமலட்சுமி கைகூப்பியபடி நின்றிருந்தாள். பண்டாரம் நிமிர்ந்து பார்த்து ‘ஒண்ணு சொல்றேன் கேக்குறியா?’ என்றார்

‘சொல்லுங்க சாமி’

‘பெத்தவளுக்கு ஒண்ணுரெண்டுபிள்ளை. பெறாதவளுக்கு ஊரெல்லாம் பிள்ளை’

அவளுக்கு குபுக்கென்று கண்ணீர் வந்துவிட்டது. ‘அதில்ல சாமி....இப்டி நெலம்நெலம்னு அலையுதாங்களே’

‘எல்லா செடியும் மரமும் நெலத்தைத்தானே புடிச்சிட்டிருக்கு...விட்டா காத்து அடிச்சுட்டுப் போய்டும்ல?’

‘பிள்ளையில்லாம எதுக்கு சாமி இந்த மண்ணாச?’

‘பிள்ளை இல்லாததனாலதான்...’ பண்டாரம் சிரித்தார்.

ராமலட்சுமி அடிபட்டவள் போல எழுந்து விட்டாள். அவள் கால்கள் நடுங்கின. நிற்க முடியாமல் பின் வாங்கித் தூணைப் பிடித்துக்கொண்டாள்.

‘என்ன? என்றார் பண்டாரம் சிரித்துக்கொண்டு.

‘இல்ல சாமி’ என்று ராமலட்சுமி கைகூப்பினாள்

‘போ...காத்து நிக்கான் பாரு...’

தளர்ந்தநடையுடன் ராமலட்சுமி படிகளில் இறங்கினாள். வீடுவரை அவளால் ஒரு சொல்கூட பேசமுடியவில்லை.

## (9) நீரும் நெருப்பும்

இரவு பன்னிரண்டரை மணிவாக்கில் பூல்சந்திரர் பாபுவின் மலச்சட்டியுடன் வெளியே வந்து ஆசிரமத்தின் தெற்குமூலையில் வெட்டப்பட்டிருந்த குழியை நோக்கிச் சென்றபோதுதான் அவரைப் பார்த்தார். ஆசிரமத்தின் நுழைவாயிலில் நடப்பட்டிருந்த மூங்கில் கழியில் தொங்கிய அரிக்கேன் விளக்கின் ஒளி அவருக்குப் பின்னால் இருந்ததனால் நிழலுருவமாகவே அவரைப் பார்க்க முடிந்தது. தோளில் புரண்ட தலைமுடியிலும் தாடியிலும் விளக்கின் செவ்வொளி பரவி மின்னிக் கொண்டிருந்தது.

'யார்?' என்றார் பூல்சந்திரர் .

அவர் 'சிவோஹம்!' என்றார்.

யாரோ பைராகி. அபூர்வமாக அப்படி சிலர் வந்துவிடுவதுண்டு. சபர்மதியின் கரையிலிருக்கும் ஏதேனும் கோயில்களுக்கு வருபவர்கள் அங்கே எவரிடமாவது தங்குமிடம் பற்றி கேட்பார்கள். கிராமவாசிகளுக்கு இன்னும் இந்த ஆசிரமத்துக்கும் சாமியார்களின் ஆசிரமத்துக்கும் வேறுபாடு தெரியாது. கைகாட்டிவிடுவார்கள்.

பூல்சந்திரர் 'இது துறவிகளின் ஆசிரமம் இல்லை' என்று சொன்னார். முன்பெல்லாம் வருபவர்கள் அனைவரையும் தங்கவைக்கும் வழக்கமிருந்தது. ஆனால் பெரும்பாலான பைராகிகளும் துறவிகளும் கஞ்சா இழுப்பவர்கள். மேலும் ஆசிரமத்தில் தங்களுக்குத் துறவிகளுக்கான சிறப்பு மரியாதைகள் செய்யப்படவேண்டும் என்றும் எதிர்பார்ப்பார்கள். பாபு அவ்விஷயத்தில் மிகமிக கறரானவர். அவருக்கு அலைந்து திரியும் சாமியார்கள் மேல் உள்ளூர வெறுப்பிருந்தது. அவர்களின் வாழ்க்கையும் ஆன்மீகமும் அவருக்குப் புரியவில்லை. ஒருமனிதன் தன்னுடைய புலன்வாயில்களை மூடிப் புறவுலகை அணைத்துத் தன்னைத் துண்டித்துக் கொள்வதை பாபு ஒரு பாவமென்றே எண்ணினார்

'தெரியும்' என்றார் பைராகி 'நான் திருவாளர் காந்தியைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறேன்' அவர் சரளமான ஆங்கிலத்தில் பேசியது பூல்சந்திரை ஆச்சரியப்படுத்தியது

பூல்சந்திரர் 'எங்கிருந்து?' என்றார்.

'தொலைவிலிருந்து'

சட்டென்று அது வந்தவரின் மாறுவேடமா என்ற எண்ணம் ஏற்பட்டது. தலைமறைவாகச் செயல்படும் பயங்கரவாதக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் எப்போதும் தேர்ந்தெடுக்கும் வேடம் பைராகிதான். இந்தியாவில் பைராகிகளிடம் எந்தக் கேள்வியையும் கேட்க முடியாது, எவரிடமும் எந்த ஆதாரமும் இருப்பதில்லை. சாமியார்களிடம் போலீஸ் அத்துமீறினால் பொதுமக்கள் துணைக்கு வருவார்கள். ஒருமாதம் முன்புகூட ஒருவர் பைராகி வேடமிட்டு வந்து பாபுவிடம் அதியுக்கிரமாக வாதிட்டுவிட்டுச் சென்றிருந்தார்

'அவர் நோயுற்றிருக்கிறார்' என்றார் பூல்சந்திரர் .

'தெரியும். நான் அதைக் கேள்விப்பட்டுத்தான் அவரைச் சந்திக்க வந்தேன்..'

பூல்சந்திரர் பெருமூச்சுவிட்டார். சரிதான், இன்னொரு வைத்தியர். கடந்த பன்னிரண்டு நாட்களாகவே பாபு உடல்நலமில்லாமல் இருக்கிறார். சுற்றுப்புறங்களிலிருந்தெல்லாம் நாட்டுவைத்தியர்களும் பூசாரி வைத்தியர்களும் மந்திரவாதிகளும் ஆசிரமத்திற்குத் தேடி வந்துகொண்டிருக்கிறார்கள். அனைவரிடமும் பாபுவைக் காப்பாற்றும் ஏதோ ஒரு சஞ்சீவிமருந்து இருந்தது.

'ஒரு நிமிடம்' என்றார் பூல்சந்திரர் . குழியை அணுகி உமியும் மண்ணும் மலமும் கலந்த கலவையை அதில் கொட்டிவிட்டு தொட்டியைக் கழுவி உள்ளே ஊற்றியபின் மண்வெட்டியால் மண்ணை வெட்டி உள்ளே கொட்டி மூடினார். சாமியார் அங்கேயே அவர் செய்வதைப் பார்த்துக் கொண்டு நின்றார்

பூல்சந்திரர் தொட்டியுடன் சாமியார் அருகே வந்து 'உள்ளே வாருங்கள். சற்றுநேரம் அமர்ந்துகொள்ளுங்கள். நான் இதோ வருகிறேன்' என்றார். சாமியார் தலையை அசைத்தாலும் அங்கேயே நின்றுகொண்டிருந்தார்.

பூல்சந்திரர் உள்ளே சென்றார். ஆசிரமத்தின் எளிய மூங்கில் குடிலுக்குள் நாட்டுமரப் பலகைகளை அடுக்கிச் செய்த கட்டில்மீது பாபு படுத்திருந்தார். அவர் தூங்கவில்லை என்பது பூல்சந்திரரின் காலடியோசை கேட்டு அவரது மூடிய இமைகள் அசைந்த விதத்தில் இருந்து தெரிந்தது. பன்னிரண்டு நாட்களில் பாபுஜி மிக மிக மெலிந்துவிட்டார். சதையே இல்லாத மெலிந்த

உறுதியான உடல் அவருடையது. காட்டுத்தீக்குப் பின்னர் வைரம் மட்டும் எஞ்சும் சுள்ளி போன்றது அவரது உடல் என பூல்சந்திரர் நினைப்பதுண்டு. அவரது ஊரில் அத்தகைய கழிகளைத் தேடி எடுத்துவந்து வயலில் சேற்றிலிறங்கி வேலை செய்யும்போது ஊன்றி நடக்கப் பயன்படுத்துவார்கள். வங்காளத்தின் சேற்றுச்சூழலில் எந்தக் கழியும் ஒருவருடம் கூடத் தாக்குப் பிடிக்காது. காட்டுத்தீயில் கிடைக்கும் கழிகள் தலைமுறைகளைத் தாண்டிப் பயன்பட்டுக் கொண்டிருக்கும்.

ஆனால் பாபு சட்டென்று கட்டுத் தளர்ந்த சுள்ளிக்கட்டு போல ஆகிவிட்டார். கிருஷ்ண ஜெயந்தியன்று காலையில்தான் அவர் ஆசிரமத்துக்கு வந்தார். அவருக்கு ஏற்கனவே உடல்நிலை சரியில்லை. நிலக்கடலை நெய்யும் எலுமிச்சம் பழமும் பழங்களும் மட்டுமே அவர் அப்போது உணவாகக் கொண்டிருந்தார். நிலக்கடலை நெய்யை ஒருவர் இரண்டு கரண்டிகளுக்கு மேல் சாப்பிட்டு பூல்சந்திரர் பார்த்ததில்லை. வயிறுகலங்கும்போது பாபு சாப்பிடுவதை நிறுத்திக்கொள்வார். ஒருநாள் உபவாசத்தில் குடல்சுருங்கி வயிறு அமைதியானதும் மீண்டும் அதே உணவு.

கிருஷ்ண ஜெயந்திக்குப் பாகும் பாயசமும் செய்யவேண்டுமென ஆசிரமத்தின் குழந்தைகள் ஆசைப்பட்டார்கள். குழந்தைகள் சார்பில் ரேணு சென்று கஸ்தூர்பாவிடம் சொன்னார். ஆசிரம நிதியை நிர்வாகம் செய்துவந்த பேராசிரியர் கோஸாம்பி அவ்வாறு ஒரு சிறப்பு உணவுக்கு ஆசிரம விதிகளில் அனுமதியில்லை என்று சொல்லிவிட்டார். ஆனால் கஸ்தூர்பா அந்தச் செலவை நான்குநாள் உபவாசமிருந்து தான் சரிக்கட்டி விடுவதாகச் சொன்னபோது கோஸாம்பியால் ஏதும் சொல்ல முடியவில்லை. அவர் குழம்பிப் போனவராகத் தலையைப் பென்சிலால் நீவிக்கொண்டார்.

பாபு இரவில்தான் வந்தார். களைத்துப் போயிருந்தார். பா அவருக்கு வெந்நீர் போட்டுக்கொடுத்தார். நெடுந்தூரம் நடந்த கால்கள் மண்ணும் புழுதியும் படிந்து அகழ்ந்தெடுத்த கிழங்குகள் போலிருந்தன. பா அவற்றை ஆவி பறக்கும் வெந்நீர் விட்டு தேய்த்துக் கழுவினார். பாபு தன் பலகையில் அமர்ந்ததும் பா சூடாகப் பயறுப் பாயசத்தைக் கொண்டுசென்று அவருக்குக் கொடுத்தார். பாபு புருவம் சுருங்க ஏறிட்டுப் பார்த்ததுமே 'இது குழந்தைகளுக்காகச் செய்தது...இன்றைக்கு கிருஷ்ண ஜெயந்தி. இதன் செலவுகளை நான் உபவாசமிருந்து சரிக்கட்டுவதாக கோஸாம்பியிடம் சொல்லியிருக்கிறேன்' என்றார்.

புன்னகையுடன் பாபு அந்தக் கோப்பையை வாங்கிக் குடித்தார். அவரது முகம் மலர்வதை பூல்சந்திரர் கண்டார். அவருக்குள் ஒரு குழந்தை இருக்கிறது. அது இன்னும் விளையாடவும் தின்பண்டங்கள் சாப்பிடவும் இலக்கில்லாமல் அலையவும் ஆசைப்படுகிறது. பாபுவின் ஓயாத போராட்டம் அவருள் இருக்கும் அந்தக் குழந்தையுடன்தான்

'இன்னும் கொஞ்சம் சாப்பிடுகிறீர்களா?' என்றார் பா. பாபு மலர்ந்த முகத்துடன் தலையசைத்தார். அவர் இரண்டு கோப்பை உணவுண்பதை பூல்சந்திரர் முதல்முறையாகப் பார்த்தார். அவருக்கு அப்போதே ஏதோ உறுத்தியது. ஒருமணிநேரத்திலேயே பாபுவின் உடல்நிலை மோசமடைந்தது. கடுமையான சீதபேதி. பா அவரை ஆசிரமத்திலேயே தங்கும்படி சொன்னார். ஆனால் வேலையை நிறுத்தமுடியாது என்று மறுநாள் காலை பாபு கிளம்பிச் சென்றார்.

நதியாத்தில் ஹிந்து ஆதரவற்றோர் விடுதியில் அவர் படுக்கையில் கிடப்பதாகச் செய்திவந்தது. பா உடனே கிளம்பி அங்கே சென்றபோது பூல்சந்திரரும் கூடவே சென்றார். பாபுவை கவனித்துக் கொண்ட டாக்டர் கனுகா அவர் அலோபதி மருந்துகள் சாப்பிடுவதுடன் உணவு முறையை மாற்றிக்கொண்டே ஆகவேண்டும் என்று கோரினார். பாபு எந்த மருந்தும் சாப்பிடமாட்டேன் என பிடிவாதமாக மறுத்துவிட்டார். உடம்பின் அமைப்பில் வரும் சிக்கல்களை உடம்பேதான் தீர்த்துக்கொள்ள வேண்டும், மருந்துமூலம் சரி செய்யக்கூடாதென்று வாதிட்டார். டாக்டர் கனுகா பாலாவது அருந்தும்படி மன்றாடினார். மிருகங்களிடமிருந்து பெறப்படும் எந்த உணவையும் ஏற்றுக் கொள்வதில்லை என பாபு உறுதியாக மறுத்துவிட்டார். பாலைக் குட்டிகளுக்காகத்தான் அந்த மிருகம் சுரக்கிறது, மனிதர்களுக்காக அல்ல. அது திருட்டு.

'இதோ பாருங்கள் டாக்டர், என்னுடைய கொள்கைகளைக் கடைசி எல்லை வரை பரிசோதனை செய்துபார்க்க இது ஒரு சந்தர்ப்பம். நான் உயிருடன் மீண்டுவிட்டால் என் சோதனைகள் வெற்றி எனஆகிவிடும். அப்போது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியும் நிறைவும் கிடைக்கும்...அதை நான் ஏன் இழக்கவேண்டும்?' என்றார் பாபு

'ஆனால் உங்கள் உடல் அதைத் தாங்காது... நீங்கள் எனக்கு முக்கியமானவர்'

'நான் நம்பும் விஷயங்களை என் ஆன்மாவைக் கொண்டும் என் உடலைக் கொண்டும்தான் நான் பரிசோதனை செய்யமுடியும்....என் உயிரையே எதன்பொருட்டுக் கொடுக்கச் சித்தமாக இருக்கிறேனோ அதைத்தான் நான் இன்னொருவருக்கு பரிந்துரைக்கமுடியும்'

கனுகா கோபத்துடன் தலையை ஆட்டினார். பாபு புன்னகையுடன் கண்களை மூடிக்கொண்டார். கனுகா சோர்வுடன் பெருமூச்சுவிட்டு எழுந்து சென்றார்.

நான்கு நாட்களில் நிலைமை மேலும் மோசமானது. சேத் அம்பாலாலின் மிர்ஜாபூர் பங்களாவுக்கு பாபுவைக் கொண்டு சென்றார்கள். அங்கே அவருக்குக் கடுமையான காய்ச்சல் வந்தது .இலை போல அவரது உடம்பு நடுங்கிக் கொண்டே இருந்தது.. ஆனால் எந்த மருத்துவமுறைக்கும் ஆட்பட மறுத்துவிட்டார். நோய் ஒரு உச்சநிலையை அடைந்தபோது அவர் தன்னினைவை இழந்து எப்போதும் ஒரு தியான நிலையில் இருந்தார். தூங்குவதில்லை. சூழலைப் பற்றிய நல்ல பிரக்ஞை உடலில் இருந்தது. ஆனால் மனம் வேறெங்கோ இருந்தது

இரண்டு நாட்கள் முன் பாவிடம் தன்னை சபர்மதிக்குக் கொண்டு செல்லும்படி சொன்னார். கனுகாவிடம் ஆலோசனை கேட்டபோது விரக்தியுடன் 'எங்கிருந்தால் என்ன?' என்றார். பா பாபுவின் பாதங்களை வருடியபடி அருகே இருந்தார். பாபு புன்னகையுடன் 'ஒருவேளை அது நிகழ்ந்தால் சபர்மதிதான் நல்ல இடம்...' என்றார். பா ஒரு துளி கண்ணீர் கன்னங்களில் உதிர முகத்திரையை இழுத்துவிட்டுக் கொண்டார்.

சபர்மதிக்கு வந்தபின் அனேகமாக பாபு பேசவேயில்லை. அஹமதாபாதிலிருந்து டாக்டர் தல்வல்கர் வந்து பாபுவை கவனித்துக் கொண்டார். ஆசிரமத்திற்கு வெளியே மரத்தடியில் நின்றபோது 'இது ஒருவகையில் புரோகிதர் வேலைதான்...' என்று கசப்புடன் தல்வல்கர் சொன்னார். 'அவர் முடிவு செய்துவிட்டார்...'

ஆசிரமத்தில் அனைவருமே அதை உள்ளூர உணர்ந்திருந்தார்கள். ஒவ்வொரு நாளும் வந்து சன்னல்வழியாக பாபுவைப் பார்த்துவிட்டுப் பெருமூச்சுடன் திரும்பிச் சென்றார்கள். மெல்ல அணைந்து கொண்டிருப்பது ஒவ்வொரு நாளும் தெரிந்தது. இருந்தாலும் தல்வல்கர் அப்படிச் சொன்னது

பூல்சந்திரரை அதிர்ச்சியடையச் செய்தது. 'என்ன சொல்கிறீர்கள்?' என்றார் பூல்சந்திரர்

தல்வல்கர் "எந்நேரமும் ஆவேசமாக வேலை செய்யும் இன்னொரு மனிதரை நான் கண்டதில்லை. இன்னும் கொஞ்சம் கடுமையாக உழைத்தால் உலகை மாற்றிவிடலாம் என்று நம்புகிறார் என்று நான் நினைப்பதுண்டு. ஆனால் அவருக்குள் எப்போதும் ஒரு சலிப்பும் இருந்து கொண்டிருக்கிறது. உள்ளே, வெகு ஆழத்தில். அது அவருக்கு மனிதர்களின் ஆழம் உண்மையில் என்ன என்று நன்றாகவே தெரியும் என்பதனால்தான். உலகப்போக்கை அறிந்த ஞானிகள் அனைவருக்கும் அந்தச் சலிப்பு இருந்து கொண்டிருக்கும். அவர்கள் கனிந்த பழம்போல எப்போதும் விடைபெற்றுச் செல்லத் தயாராக இருப்பார்கள்…' என்றார்

பாபு கண்விழித்து பூல்சந்திரரைப் பார்த்தார். என்ன என்பதுபோல. பூல்சந்திரர் மலச்சட்டியை வைத்துவிட்டு மெல்ல வெளியேறினார்.

வெளியே அந்தச்சாமியார் அங்கேயே அப்படியே நின்று கொண்டிருந்தார். பூல்சந்திரர் 'வணங்குகிறேன் மகாராஜ்… இன்றிரவு நீங்கள் பாபுவைப் பார்க்கமுடியாது. டாக்டர் தல்வல்கர்தான் இப்போது–'

'நான் டாக்டர் தல்வல்கர் அனுப்பி வந்தவன்'

'அவர்…'

'என் மருத்துவ முறைகளைப்பற்றி நான் அவரிடம் விரிவாகப் பேசியிருக்கிறேன்..'

'தல்வல்கர் என்ன சொன்னார்?'

'நான் ஒரு கிறுக்கன் என நினைக்கிறார். ஆகவே என்னைப் பார்க்கவும் என் மருத்துவத்துக்குள் வரவும் திரு. காந்தி உடன்படக்கூடும் என்றார்'

'ஓ' என்றார் பூல்சந்திரர்

'நான் பொதுவாகக் கிறுக்கர்களை மட்டும்தான் சிகிழ்ச்சை செய்து காப்பாற்றுகிறேன்… அவர்கள்தான் இந்த உலகுக்குத் தேவை…'

திடுக்கிட்டவராக 'ஏன்?' என்றார் பூல்சந்திரர்

'ஏனென்றால் இந்தப் பிரபஞ்சம் மிகமிகக் கிறுக்குத்தனமான விதிகளாலானது. கிறுக்கர்கள் தங்கள் கிறுக்குப் போக்கில் சென்றால்தான்

அதைத் தொட்டறிய முடியும்...’ பைராகி முன்னால் வந்து ‘நான் ஜெர்மனியில் எட்டுவருடம் அலோபதி முறைகளையும் கற்றிருக்கிறேன். கேரளத்தில் நான்குவருடம் ஆயுர்வேதம். அதன்பின் இந்தப் பன்னிரண்டு வருடங்களாக பாரதவர்ஷத்தை அளந்து கொண்டிருக்கிறேன்...நான் இந்த அலையாத பைராகியைப் பார்க்கவேண்டும்’

‘வாருங்கள்’ என்றார் பூல்சந்திரர். அந்த முடிவை ஏன் எடுத்தோம் என்று அவருக்கு ஐயமாக இருந்தது. ஆனால் பலசமயம் முடிவுகள் அப்படித்தான் அனிச்சையாக எடுக்கப்படுகின்றன.

பைராகி பாபுவின் அருகே அமர்ந்தார். பாபு கண்விழித்து அவரைப் பார்த்தார். முகம் மலர்ந்து சுருங்கிய வாய்க்குள் இருந்து பற்கள் வெளியே வந்தன. ‘சிவோகம்’ என்றார் பைராகி

பாபு “ராம் ராம்’ என்றார்

பைராகி ‘நான் உங்கள் நாடியைப் பார்க்கலாமல்லவா?’ என்றார். பாபு புன்னகைசெய்தார்

பூல்சந்திரர் நாடியைப் பிடித்ததுமே ‘நெருப்பு இருக்கிறது... ஆனால் அணைந்து கொண்டிருக்கிறது’ என்றார்

பாபு புன்னகை செய்தார்

‘நெருப்பை அணைக்க முயன்று கொண்டிருக்கிறீர்கள். எல்லாவகையிலும்...ஆனால் தைலமரத்தில் பற்றிக் கொண்ட நெருப்பு அணைய விரும்புவதில்லை’

‘உங்கள் சிகிழ்ச்சை முறை என்ன?’

‘நெருப்புமுறை என்று நான் அதை விளக்குவேன்’ என்றார் பைராகி. ‘இந்தப் பிரபஞ்சத்தை ஒட்டுமொத்தமாக நெருப்பு என்று நான் நினைக்கிறேன் .நான் சாங்கியதர்சி. நான்கு பூதங்களால் ஆனது இப்பிரபஞ்சம் என்பது எங்கள் கொள்கை. ஆனால் நெருப்பு மட்டுமே முதற்பெரும் பூதம். நெருப்பின் வெவ்வேறு வடிவங்கள்தான் நீரும் நிலமும் காற்றும். அவையும் நெருப்பாலானவை...’

‘நீர்கூடவா?’ என்றார் பாபு

‘ஆமாம்...என்ன ஐயம்? நீருக்குள்ளும் நெருப்பு இருக்கிறது...அதை ஒருவேளை நாளைய இயற்பியலாளர்கள் வெளியே எடுக்கக்கூடும்.... நிலத்துக்குள் ஒவ்வொரு துகளும் நெருப்பே என்று அவர்கள் இன்று கண்டுபிடித்துவிட்டார்கள்... ஒரு துகளில் உள்ள நெருப்பால் ஒரு உலகை அழிக்கமுடியும் என்கிறார்கள். உங்களுக்கு நவீன இயற்பியல் அறிமுகம் இருக்கலாம்’

‘கேள்விப்பட்டிருக்கிறேன்...’ என்றார் பாபு

‘இந்த உடலும் நெருப்பாலானதே. காய்ச்சல் என்பது நெருப்பு வெளிவரும் விதம்தான்...’ பைராகி சொன்னார். ‘உங்கள் உடம்புக்குள் இருக்கும் நெருப்பை நீங்கள் அணையச் செய்து கொண்டிருக்கிறீர்கள். நான் அதைக் கொஞ்சம் கொஞ்சமாக ஊதிப் பற்றவைக்கிறேன். அதைப் பெருக்குகிறேன். உங்கள் உடலை ஓர் யாக குண்டமாக ஆக்குகிறேன்... நீங்கள் விரும்பினால் நாளையே’

‘நான் யோசிக்கிறேன்’

‘யோசனைக்கு ஒன்றுமில்லை... இந்தக்காய்ச்சல் நாட்களில் நீங்கள் என்ன சிந்தனை செய்து கொண்டிருந்தீர்கள் என எனக்கு நன்றாகவே தெரியும்... சலிப்பாக இருப்பதனால் கிளம்பிவிடலாம் என்று நினைத்தீர்கள். ஆனால் கிளம்ப முடியவில்லை. பிடித்து வைத்திருப்பது எது என்று தெரியவில்லை. அதைத்தான் உங்களுக்குள் தேடிக்கொண்டே இருந்தீர்கள். அதைக் கண்டுபிடித்துவிட்டீர்கள்...’

‘இல்லை...அதை என்னால் விளக்க முடியவில்லை’

‘ஆனால் கண்டுபிடித்துவிட்டீர்கள்... நான் உங்கள் நாடிகளைத் தொடும்போது அவை மீண்டும் உறுதியாகத் துடிப்பதைக் கண்டேன். நாங்கள் அதை இச்சாநாடி என்போம். நீங்கள் வாழ விரும்புகிறீர்கள்’

‘எனக்குத்தெரியவில்லை’ என்றார் பாபு. ‘ஆனால் நேற்றிரவு நான் முடிவெடுத்தேன். போதும் என்று .... அந்த முடிவுடன் கண்ணை மூடினேன். காலையில் நான் கண்களைத் திறக்கப் போவதில்லை என்றுதான் நினைத்தேன். என் உடம்பு முழுக்க எடையிழந்து பஞ்சுபோல காற்றில் அலைவதாக உணர்ந்தேன். ஆனால் சற்றுமுன் ஒரு கனவு’

பைராகி பார்த்துக்கொண்டிருந்தார்

‘ஒரு குழந்தை பெரிய ஒரு மண்சட்டியுடன் சாலையோரமாக அமர்ந்திருக்கிறது… வற்றி உலர்ந்த கிராமப்புறக் குழந்தை… அனேகமாக அது ஒரு ஹரிஜனக் குழந்தை.. அந்த வெற்றுச்சட்டியில் இருந்து அது எதையோ எடுத்து தின்று கொண்டிருந்தது. நான் சட்டிக்குள் பார்க்கிறேன். ஒன்றுமே இல்லை. அது வெறுமையைத்தான் தின்று கொண்டிருந்தது. நான் திடுக்கிட்டுக் குழந்தையைப் பார்த்தேன். அது குழந்தையே இல்லை. ஒரு கிழவன்…மூன்றுவயது குழந்தை அளவே உள்ள படுகிழவன்… அவ்வளவுதான். விழிப்பு வந்துவிட்டது….’ பாபு பெருமூச்சு விட்டார். ‘கொடூரமான கனவு… ஆனால் அது வந்ததுமே மனம் தெளிவடைந்துவிட்டது’

‘அந்தக்காட்சியை நீங்கள் கைக்குழந்தையாக இருக்கும்போது உண்மையிலேயே கண்டிருக்கலாம்…’ என்றார் பைராகி. சென்ற நூறு வருடங்களாக அன்னியர் ஆட்சியில் இந்த தேசம் பஞ்சத்தால் அழிந்து கொண்டிருக்கிறது. இந்த தேசத்து மக்கள் கோடிக்கணக்கில் செத்து சருகுபோலக் குவிந்து மட்கி அழிந்துகொண்டிருக்கிறார்கள். இங்குள்ள அடித்தளச் சாதிமக்கள் பெரும்பாலும் அழிந்துவிட்டார்கள்…’

பாபு பெருமூச்சுவிட்டார்

‘அவர்களுக்கு நீங்கள் செய்யவேண்டிய கடமை மிச்சமிருக்கிறது… நீங்கள் உங்கள் உத்தரவைப் பெற்றது லண்டனிலோ தென்னாப்ரிக்காவிலோ அல்ல. போர்பந்தரில்தான். அதை உணர்வதற்குத்தான் மேலும் பலவருடங்கள் ஆயின’

‘ஆம்’

பைராகி ‘கனவு அதைத்தான் சொல்கிறது. ஆனால்–’

‘ஆனால்?’

‘மேலும் சொல்கிறது. அதை பிறகு அறிவீர்கள்… எப்படியோ உங்கள் பிறவி நோக்கத்தை உணர்ந்துவிட்டீர்கள். நீங்கள் செய்யவேண்டியவை நிறையவே மிச்சமிருக்கின்றன. நீங்கள் வாழ்ந்தாக வேண்டும்’

‘ஆமாம்’

‘நாளை முதல் உங்கள் உடலை எனக்குக் கொடுங்கள்… வெறும் ஏழுநாட்கள். அதில் உள்ள நெருப்பை நான் மீட்டு எடுக்கிறேன். வளரச் செய்கிறேன்’

‘என்ன செய்வீர்கள் என நான் அறியலாமா? ஏனென்றால் நான் ரசாயனங்களையோ மாமிச உணவுகளையோ உண்ண விரும்பவில்லை’

‘அவை ஏதும் தேவை இல்லை.... என் வழிகள் வேறு...’ பைராகி சொன்னார் ‘ஒரு அணையப்போகும் யாக குண்டத்தை மீட்பதுதான் நான் செய்யப்போவது’

பாபு பார்த்துக் கொண்டிருந்தார்.

‘அக்கினியே உண்ணுக! அக்கினியே எழுக!’ என்றார் பைராகி சம்ஸ்கிருதத்தில். உரக்க, மந்திர கோஷமிடுவதுபோல. ‘வேதங்கள் அதைத்தான் சொல்கின்றன. அக்கினி உண்மையில் உண்பது எதை? அந்த யாககுண்டத்தையேதான். உண்ணும் எதையும் அது தன்னிடம் வைத்திருப்பதில்லை. தன்னில் விழும் அனைத்தையும் அது பூர்வ வடிவுக்குக் கொண்டு வந்துவிடுகிறது....மீண்டும் பிரபஞ்சவெளியில் கலக்கச் செய்துவிடுகிறது’

பானீஸ் விளக்கு ஒளியில் பைராகியின் கண்கள் இரு சிறிய கனல்களாக ஒளிவிட்டன. ‘நான் உங்களுக்குச் சொல்லித் தருவது சில மந்திரங்களைத்தான். அந்த மந்திரங்களுக்கு வலுவூட்ட சில உணவுகள்... நெருப்புக்குப் பிரியமான சில உணவுகள்...அவ்வளவுதான். நாளைக் காலை பார்ப்போம்’

பைராகி திரும்பியதும் பாபு மெலிந்த குரலில் ‘மகராஜ்’ என்றார். பைராகி திரும்பினார்.

‘இந்த தேசமும் என்னைப் போலத்தான் கிடக்கிறது. மரண விளிம்பில்... அதை அழியாமல் வைத்திருப்பது ஒரு மெல்லிய ஏக்கம் மட்டும்தான். அல்லது ஒரு மங்கலான கனவு’

‘ஆம்...அதை சாம்பல் மூடிய நெருப்பு என்று சொல்வேன்’ என்றார் பைராகி ‘இங்கே எழவேண்டியது நெருப்புதான்... இந்த தேசம் ஒரு வேள்விக்குண்டமாக எழுந்து எரிய வேண்டும்... இங்குள்ள அனைத்துக் கீழ்மைகளையும் தின்று தழல்கள் ஓங்கவேண்டும்...’ சட்டென்று அவர் கைகளைத்தூக்கினார்

‘அக்கினியே எழுக!
தன்னொளியால் துலங்குகிறாய்

செம்புரவிகளில் பாய்கிறாய்
எங்கும் துதிக்கப்படுகிறாய்
உன்னைச்சேர்பவை எல்லாமே
நீயாக ஆகின்றன
உன்னை அழிக்க நினைப்பவற்றை
உண்டுதான் நீ மதம் கொண்டு கூத்தாடுகிறாய்
அக்னியே நீ மகத்தானவன்!'

வேதகோஷம் எழுப்பியபின் கூர்ந்து பாபுவைப் பார்த்தார் 'ரிஷி வசுகிருதன்.... ஏழாயிரம் வருடம் முன்பு பாடியது.... நம் பிதாமகன். நமக்கெல்லாம் குரு... அக்கினியில் நமக்கு முன்னரே எரிந்தவன்'

அடுத்த சொல் பேசாமல் பைராகி வெளியே சென்றார். பாபு பார்த்துக் கொண்டே இருந்தார். பின்பு கண்களை மூடிக் கொண்டார்.

பூல்சந்திரர் கொஞ்சம் தயங்கிவிட்டு பைராகியைப் பின் தொடர்ந்து சென்றார்.

பைராகி நேராகச் சென்று ஒரு மரத்தடியில் அமர்ந்து கொண்டார்.

'மகராஜ், உங்கள் உணவு மற்றும்–'

'சூரியன் உதயமானதும் நானே எழுந்து ஓடும் நீரில் குளிப்பேன்... அப்போது எனக்குத் தேவையான உணவை நானே தேடிக்கொள்வேன்'

'சபர்மதி அருகேதான் ஓடுகிறது'

'ஆமாம்...அங்கே சிறிய பிராணிகளும் உண்டு'

பூல்சந்திரர் திடுக்கிட்டார்.

பைராகி கண்களை மூடிக்கொண்டார். அதன் பின்னரும் பூல்சந்திரர் நின்று கொண்டிருந்தார். பின்னர் மெல்ல திரும்பி நடந்தார். இன்றிரவு இனிமேல் என்னால் தூங்க முடியாது என்று சொல்லிக்கொண்டார். என்ன நடந்தது என்று யாரிடமாவது சொல்லவேண்டுமா? ஆனால் எல்லாமே ஒரு கிறுக்குத்தனமான நாடகம் போலத்தான் தோன்றியது.

தன் குடிசைக்குள் படுத்துக் கண்களை மூடிக் கொண்டார் பூல்சந்திரர். கண்களுக்குள் ஓடிக் கொண்டே இருந்த ஒளியை கவனித்தார். தீயைப் பார்ப்பது போலத்தான் இருந்தது. உடலுக்குள்ளும் தீ எரிகிறதா என்ன?

சிதையில் எரிகையில் வெளியே இருக்கும் தீயுடன் உள்ளே இருக்கும் தீ இணைந்து கொள்கிறதா? என்ன கிறுக்குத்தனமான சிந்தனைகள். கிறுக்குச் சிந்தனை ஒரு அன்னியத் தேனீ போல. மூளையின் தேனீக்கூட்டை அது கலைத்து விடுகிறது.

விடிகாலையில் பூல்சந்திரர் எழுந்து கொண்டார். நல்லவேளையாக விடியவில்லை. அவசரமாக எழுந்து மேல்துண்டைத் தலையில் போட்டுக்கொண்டு பின்பக்கமாக ஓடினார். சமையலறையில் பா வந்திருந்தார். குளித்து உடைமாற்றியிருந்தார். கூந்தல்நுனி நீர் சொட்ட வெள்ளை சேலைக்கு மேல் படிந்திருந்தது. சமையலைக் கவனிக்கும் சோட்டுவும் சியாம்லாலும் வந்திருந்தார்கள். மணி என்ன?

மணி நான்கரைதான். பா வழக்கமாக ஐந்துமணிக்குத்தான் எழுவது வழக்கம். பெரிய கடாய் அடுப்பில் ஏற்றப்பட்டிருந்தது. சோட்டு அதற்குள் எண்ணையில் முக்கிய துணிச்சுருளைப் போட்டு இரும்புக்குழாயால் ஊதினான். மெல்ல தீ எழுந்து விறகைப் பற்றிக்கொண்டது. தாய்முலைக்குக் கைநீட்டும் சிவந்த குழந்தை. காலைக் கவ்வும் சிவந்த பாம்பு. நக்கி உண்ணும் நாயின் நாக்கு.

பாவின் முகம் சிலை போலிருந்தது. பாபு இருக்கும் நிலை பிற அனைவரையும் விட பாவுக்குத் தெரியும். ஆனால் ஆசிரமத்திலேயே அவர் ஒருவர்தான் நிதானமாக இருந்தார். சிலசமயம் தோன்றுவதுண்டு, பா முகமளவுக்கு நிதானமும் முழுமையும் கொண்டதாக ஒருபோதும் பாபுவின் முகம் இருந்ததில்லை என்று. என்ன இருந்தாலும் பாபு குழந்தைகளை வயிற்றில் சுமந்ததில்லை, ரத்ததை முலைப்பாலாக ஆக்கியதில்லை.

பூல்சந்திரரைப் பார்த்ததும் பா நிதானமான குரலில் ‘பாபு எழுந்துவிட்டார்.... இன்று ஏதோ புதிய சிகிழ்ச்சை செய்துகொள்ளப் போகிறார்’

‘ஆமாம்’ என்றார் பூல்சந்திரர்

‘களிமண், குளிர்ந்த தண்ணீர் எல்லாம் கேட்டார். சிமன்பாய் கொண்டு சென்றார். நீங்களும் போய்ப் பாருங்கள்’

களிமண்ணா. என்ன இது புதிய விஷயமாக இருக்கிறது. நெருப்பை வரவழைக்கும் பைராகி களிமண்ணை எதற்காகக் கேட்கிறார்? பூல்சந்திரர் பாபுவின் அறைக்குச் சென்ற போது உள்ளே சிமன்பாய் மட்டும்தான்

இருந்தார். ஒரு கலுவத்தில் சந்தனம் போல எதையோ அரைத்துக் கொண்டிருந்தார்

‘என்ன?’ என்று ஓசையில்லாமல் கேட்டார்பூல்சந்திரர்

‘களிமண்...சபர்மதியில் இருந்து கொண்டுவந்தேன்’

அறைக்குள் ஒரு மரத்தட்டில் சணல்நூல் சுருள்கள் இருந்தன. செம்பு அண்டாவில் குளிர்ந்த நீர். ‘ஓடும் நீர் கேட்டார்... நானே சபர்மதிக்குச் சென்று பிடித்துவந்தேன்’

‘பைராகி எங்கே?’

‘எந்த பைராகி?’

பூல்சந்திரர் புரியாமல் பேசாமல் பார்த்தார். மெல்லிய முனகலுடன் பாபு கண்களைத் திறந்தார். உதடுகள் அசைந்தன ‘பூல்’

’பாபு’

’அந்த சணலை நீரில் நனைத்து என்னுடைய தலையில் சமமாகப் போடு.’

‘காய்ச்சல் இருக்கிறது...’

‘காய்ச்சலுக்குத்தான்...’

பூல்சந்திரர் சணல்நூல்பிரிகளை நீரில் நனைத்து பாபுவின் நெற்றியில் போட்டார். பாபு ’ம்ம் ம்ம்’ என முனகிக்கொண்டார். பின்பு மெல்லியகுரலில் ‘அந்தக் களிமண் விழுதை என் நெற்றியிலும் வயிற்றிலும் பூசு...’ என்றார்

பூல்சந்திரர் களிமண் பூசிக் கொண்டிருந்தபோது பா வந்தார். கையில் மரக்குடுவையில் பழச்சாறு இருந்தது.

‘என்ன அது?’ என்றார் பாபு

‘பழச்சாறு கேட்டீர்களே’

‘ஆம்... அதை அங்கே வை. ஒருமணிநேரம் கழித்துதான் குடிக்க வேண்டும்’

பா அதை வைத்துவிட்டு வெளியே சென்றார். பாபு ‘பூல் நீ போகலாம்...’ என்றார்

’பாபு’

‘யாரும் இங்கே இருக்க வேண்டியதில்லை’

பூல்சந்திரர் வெளியே சென்றார். கன்றுக் குட்டியை அவிழ்த்துக் கொண்டு பா சென்று கொண்டிருந்தார். குளிருக்குக் கைகளைக் கட்டிக்கொண்டு கோஸாம்பி வந்து நின்றார்

'பாபு எப்படி இருக்கிறார்?'

'புதிய மருத்துவம் எதையோ ஆரம்பிக்கிறார்' என்றார் பூல்சந்திரர்

கோஸாம்பி முகம் மலர்ந்து 'நல்லது....' என்றார்

'கிறுக்குத்தனமான வைத்தியமாக இருக்கிறது'

'ஆமாம்...அவருடைய எல்லாமே கிறுக்குத்தனம்தான்... ஆனால் அவர் வாழ முடிவு செய்துவிட்டார் என்று தெரிகிறது... இனிமேல் பயமில்லை' கோஸாம்பி அலுவலகக் கட்டிடம் நோக்கிச் சென்றார்.

பூல்சந்திரர் சமையலறைக்குச் சென்றார். பா அடுப்பருகே இருந்தார். மாவு அளந்து பெரிய தடுக்கில் கொட்டிக் கொண்டிருந்தார். அருகே சோட்டு. ஆசிரமத்தில் எப்படியும் நாற்பது பேர் காலையில் சாப்பிடுவார்கள்

பாவிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டுமென்று பூல்சந்திரர் நினைத்தார். ஆனால் எங்கே தொடங்குவது? 'பா'

'என்ன குழந்தை?'

'நேற்று ஒரு பைராகி வந்தார்...'

சொல்லி முடித்தபோது பூல்சந்திரர் ஆறுதலாக உணர்ந்தார். எல்லாவற்றையும் அம்மாவிடம் சொல்லி முடித்த சின்னக் குழந்தை போல. ஆனால் அவர் பாவின் சலனமில்லாத தெளிந்த முகத்தைப் பார்த்தபோது மேலும் சற்று எதிர்பார்த்தார் 'எனக்கு பயமாக இருக்கிறது அம்மா'

பா 'பயம் வேண்டாம்' என்றார் 'அவர் அப்படி ஒன்றும் சாகமாட்டார்... அவரை வாழ வைப்பவை நிறைய இருக்கின்றன. அவற்றுடன் தான் அவர் எவ்வளவோ வருடங்களாகப் போராடிக் கொண்டிருக்கிறார்' சட்டென்று குளத்தில் வெயில்பட்டது போல புன்னகையால் பா முகம் மலர்ந்தது 'அவரால் ஒருபோதும் விரும்பி சாகமுடியாது... கடைசிக்கணம் வரை அவர் சலிப்படையவும் போவதில்லை'

சிமன்லால் ஓடிவந்தான் 'ஒரு பைராகி வந்து நிற்கிறார்... கோபமாக ஏதோ சொல்கிறார். நான் அவரை வெளியே நிற்கச் சொன்னேன்'

பூல்சந்திரர் ஓடிச் சென்றபோது பைராகி எரிபவர் போலக் குடிசை வாசலில் நின்றிருந்தார். பூல்சந்திரர் அருகே போனதும் 'யார் இதைச் செய்யச்சொன்னது? என்ன இதெல்லாம்?' என்றார். குரல் நடுங்கியது. தாடை அசைய தாடி ஆடியது.

'பாபுதான்'

'நான் அவரை இப்போதே பார்க்க வேண்டும்'

'தாரளமாகப் பார்க்கலாம்' என்றார் பூல்சந்திரர் 'வாருங்கள்'

பைராகி உள்ளே சென்றதும் பாபுவைப் பார்த்துத் திகைத்து நின்றார். பாபு சேற்றுப் பூச்சும் சணல்நூலுமாக மண்ணில் இருந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட ஒரு பெரிய கிழங்கு போல கிடந்தார்.

'என்ன இதெல்லாம்?' என்றார் பைராகி

'மகராஜ்.. நீங்கள்தான் என் கண்களைத் திறந்தீர்கள்...நேற்று சொன்னீர்களே, எல்லாம் நெருப்புதான் என்று'

'ஆமாம்'

'உடனே எனக்குத் தோன்றியது, என் வழி நீரின் வழிதான் என்று..' பாபு சொன்னார் 'இந்த தேசம் நெருப்புக் குண்டமாக ஆகவேண்டாம். இது ஒரு குளிர்ந்த தடாகமாக ஆனால் போதும்...'

'முட்டாள்தனம்' என்றார் பைராகி.

'மகராஜ்... நீங்களே நேற்று சொன்னீர்கள். நீருக்குள்ளும் நெருப்புதான் இருக்கிறது என்று.... அப்படிச் சொல்லும் ஒரு வேதமந்திரம் கண்டிப்பாக இருக்கும்'

'ஆமாம்'என்றார் பைராகி

'அந்த நெருப்பு நம்மை ஆசீர்வதிக்கட்டும் மகராஜ்...'

சிலகணங்கள் பார்த்துக்கொண்டே நின்றபின் பைராகி மெல்ல முகம் மலர்ந்தார். சிரிக்க ஆரம்பித்தார்.

'நான் ஏதாவது முட்டாள்தனமாகச் சொல்லிவிட்டேனா மகராஜ்?'

'இல்லை' என்றபின் பைராகி கைகளைத் தூக்கி 'ஆயுஷ்மான் பவ' என்றார். வெளியே சென்றுவிட்டார்.

'சணலை நனைத்து மீண்டும் என் நெற்றியில் போடு' என்றார் பாபு 'வெயில் வந்தபின் என் உடம்பை நீரில் கழுவவேண்டும்'

## (10) வெண்கடல்

'கடைக்கண்ணுன்னு ஏன் சொல்லுகான், அதைச்சொல்லிட்டு மேலே பேசுலே' என்றார் கணேசமாமா.

காயத்திருமேனித்தைலம் சுண்டிவரும்போது நாக்கில் எச்சிலூறும் ஒரு தின்பண்ட வாசனை எழும். நான் அதில் முழுமையாக ஈடுபட்டு இருந்தேன். பச்சைநிறமான திரவம் ஏதோ ஒரு புள்ளியில் நல்லெண்ணைநிறமாக ஆகத்தொடங்கும். அப்போது கொட்டம் போடுவார்கள். உடனே அதை நாக்கு புறக்கணிக்க ஆரம்பிக்கும். அதனுடன் வாதக்கால்களும் வாதக்கைகளும் சதைவுகளும் ஒடிவுகளும் சம்பந்தப்பட ஆரம்பிக்கும்.

'நீரு காயத்திருமேனி வேங்க வந்தீருண்ணா அந்தச்சோலியப்பாருமே' என்றார் அப்பு அண்ணா காயத்திருமேனியைக் கிண்டியபடி. பெரிய உருளியில் தூளிபாசி படிந்த குட்டைத்தண்ணீர் போலத்தெரிந்த தைலம் கொப்பளித்து உடைந்து தெறித்தது. கனத்த மழைத்துளிகள் விழும் குளத்தின் பரப்பு போல.

'நீ சொல்லு... நீ பகவதிக்க பக்தன்லா?'

'பந்தயம் இல்ல பாத்துக்கிடும்...ஓசி எண்ணைக்குள்ள பிளானானா அந்த சட்டிய இப்பமே அடுப்பிலேருந்து வாங்கி வச்சுக்கிடும்'

'செரி, பந்தயம் இல்ல...சொல்லு'

அப்பு அண்ணன் குமரேசனை ஓரக்கண்ணால் பார்த்து 'அதிப்பம், பகவதிக்க பார்வ நேராட்டு நம்ம மேல பட்டா நாம கிறுக்குப் பிடிச்சு அலைவோம்லா...'

'நம்ம கிறுக்கனாசாரி அந்த சேலாக்கும்னு பேச்சு இருக்கே' என்று குமரேசன் கொட்டத்தைக் குழவியால் நுணுக்கியபடி சொன்னான்.

'நீ சொல்லி மயிரப்புடுங்கினே...' என்றார் கணேசமாமா 'செரி, பந்தயம் இல்லாததனால நானே சொல்லுதேன்...லே, அம்மை அகில உலகத்தையும் காக்கப்பட்ட தெய்வமுல்லா? சிருட்டி திதி சம்மாரம் மூணும் அம்மையாக்குமே... இப்பம் ஆசாரி சில்பவேலை செய்யுதான்னு வச்சுக்கோ...அந்தால அவனுக்க பிள்ளை வந்து நிண்ணா எப்டிலே பாப்பான் ? உளிய நேராப்பாத்துக்கிட்டு கடைக்கண்ணால பிள்ளையப்பாத்து

சிரிப்பான்...இல்லியா?... அதாக்கும் கத.. நீ ஒரு துடம் எண்ணை எனக்கு ஊத்து...நான் வைத்தியரிட்ட சொல்லிக்கிடுதேன்’

‘அந்தப்பேச்ச மேலேப்பள்ளியில போயி சொன்னாப்போரும்....வைத்தியரு சொல்லட்டு, நான் உம்ம இந்த உருளியில போட்டுக் காய்ச்சுதேன்’ என்றார் அப்பு அண்ணா.

‘வே வாத்தியாரே ,நான் சொல்லல்லேண்ணு வேண்டாம் கேட்டேரா? காயத்திருமேனிய தினமும் தலைக்குத்தேச்சுக் குளிக்கப்பிடாது....பின்ன அதில்லாம உறக்கம் வராது’ குமரேசன் சொன்னான்

‘தெரியுதுல்ல? பின்ன என்ன மயித்துக்குப் பேசுகே? ஒரு துடம் எண்ணைய ஊத்தினா உனக்கு என்ன கேடு? நீ சொர்க்கத்துக்குப் போறப்ப அங்க நல்ல–’ என்னைப்பார்த்துவிட்டு கணேசமாமா நிறுத்திக்கொண்டார்.

நான் ‘மாமா, பகவதி பொம்புளையில்லா?’ என்றேன்

‘நல்ல கேள்வி...பயலுக்கு இப்பம்தான் ஒரோ காரியங்கள் கொஞ்சம் கொஞ்சமாட்டு மனசிலாகி வருது’ என்றார் அப்பு அண்ணா.

‘ஏம்லே?’ என்று கணேசமாமா கேட்டார்.

‘இல்லமாமா...இப்பம் பகவதி பொம்புளையா இருக்கப்பட்டதனாலே...’ எனக்கு சொற்கள் கைகொடுக்கவில்லை .’....ஆசாரிச்சி தாணம்மை அவளுக்க பிள்ளை அழுதப்ப சோலிய விட்டுட்டு எந்திரிச்சு வந்துல்லா அதை எடுத்து வச்சுக்கிட்டா? பிள்ளைய கொஞ்சிக்கிட்டு கடைக்கண்ணாலேதான் அடுக்களையிலே அடுப்பெரியுதத பாத்தா’

‘நீ அவளுக்க மூடு தாங்கினியாக்கும்? ’ என்றார் கணேசமாமா கோபமாக ‘லே...போ...போய் புக்க எடுத்து படி....போலே’

‘இல்ல கொச்சேமான் கேக்குதது நியாயமுல்லா?’ என்றார் குமரேசன்

‘’மயிரப்புடுங்கின நியாயம்.. லே, அவன் கணக்குல வாங்கின மார்க்கு என்ன தெரியுமாலே? வட்டப்பூச்சியம்....அவனுக்க அப்பன் தங்கப்பன் கண்ணில கண்ணீரா விடுதான்...இவன் வந்து பகவதிக்க தொட்டிலப்பத்திப் பேசுதான்...எந்திரிச்சு போலே’

நான் எழுந்து திண்ணையில் ஏறி ஓரமாக நின்றேன். காயத்திருமேனி சுண்டி வந்தது. தைலப்பரப்பில் சிறிய சிறிய வாய்கள் திறந்து மூடின. சரியாகக் கிண்டாவிட்டால் எண்ணை உடம்பில் தெறித்துவிடும்.

பெரியப்பா உள்ளிருந்து வந்தார். குளித்து முடித்து ஈரநெற்றியில் விபூதி பூசியிருந்தார். தோளில் கிடந்த துண்டில் ஈரம் பட்டு நீலம் தெரிந்தது. படிகளில் நின்று கண்களை மூடிக் கும்பிட்டார். குமரேசனும் அப்பு அண்ணாவும் வேட்டியைக் கீழிறக்கிவிட்டு நின்றார்கள். கணேசமாமா கொஞ்சம் விலகி நின்றார்

பெரியப்பா துண்டை எடுத்து முண்டாசாகக் கட்டிக்கொண்டு நேராக உருளியை நோக்கிச்சென்றார். கிழக்குநோக்கி நின்று அதைக் கும்பிட்டபின் கை நீட்டினார். கொட்டத்தூளை அப்பு அண்ணா எடுத்துக்கொடுக்க அதை எண்ணைப்பரப்பில் கொட்டி மெதுவாக அவரே கிளற ஆரம்பித்தார். தழைவாசனை மாறி மெல்லிய ரசாயனவாசனை வர ஆரம்பித்தது. பின்பு அது முறுகி காயத்திருமேனி வாசனையாக மாறியது.

‘நல்ல அசலு தைலமாக்கும்’ என்று வாசனையை இழுத்துப் பரவசத்துடன் கணேசமாமா சொன்னார்

பெரியப்பா அவரை ஒருமுறை பார்த்துவிட்டுக் கிளற ஆரம்பித்தார்

‘தைலத்தில வாசன வாறது பெண்ணு சமையுறதுக்குச் சமானமாக்கும்’ என்றார் கணேசமாமா

குமரேசன் சிரித்தான்

” என்னல சிரிப்பு? லே, பெட்டக்குட்டிக சின்னப்பிள்ளைகளாட்டு வெளையாடி அலையுதாளுக. சட்டுண்ணாக்கும் அதுக சமைஞ்சு நெறையுதது....அதோட அதுகளுக்கு ஏளு ஐசரியமாக்கும் வந்து பொலியுதது... சமையுறதுண்ணா என்னலே? அதுகளுக்குள்ள முலைப்பாலு வந்து நெறையுததாக்கும் கேட்டுக்க... பின்ன அதுகளுக்க தேகம் முளுக்க ஓடுதது ரெத்தமில்ல, பாலாக்கும்...பிள்ளை குடிக்குததுக்காக ரெண்டுமுலையும் காம்பும் வளந்து வருது....என்ன சொல்லுதேன்னாக்க–’

பெரியப்பா” டேய் உனக்குத் தைலம்தானே வேணும்...தாறேன்...சும்மா போட்டு சலம்பாதே...ஒட்டமணிமாதிரி....’

‘இல்ல நான் சொல்லுகது....அதாகப்பட்டது....சாஸ்திரப்படி சரஸ்வதிதேவிக்க முலைகளாக்குமே சங்கீதமும் சாகித்யமும்...எண்ணு வச்சா-’

‘அந்தால மாறி நில்லு...’ என்றார் பெரியப்பா.

கணேசமாமா உதட்டைச் சுழித்தபின் அப்பால் தள்ளி நின்றார்

காயத்திருமேனி அதன் நிறத்தை அடைந்துவிட்டது. பச்சைபோலவும் பழுப்புபோலவும் ஒரேசமயம் தோன்றும் நிறம். பெரியப்பா கைகாட்ட அப்பு அண்ணா அதன் விறகைப் பின்னால் இழுத்தார். கனலை மட்டும் அப்படியே நிரவிவிட்டு நீளச் சட்டுவத்தால் எண்ணையை மெல்லக் கிளறிக்கொண்டிருந்தார்.

‘அண்ணா...எண்ணைக்க காரியம் ஒண்ணும் சொல்லல்ல’

‘லே...இவனுக்கு ஒரு ரெண்டு துடம் குடுத்தனுப்பு....பிச்சக்காரப்பய...’ என்றபின் பெரியப்பா திண்ணையில் ஏறி அமர்ந்தார்

செம்பு அகப்பையால் சூடான தைலத்தை அள்ளி கணேசமாமா கொண்டுவந்திருந்த குப்பியில் ஊற்றினார் அப்பு அண்ணா . வைச்சூற்றி எல்லாம் இல்லை. கம்பி போல மெழுமெழுமெழுவென்று தைலம் குப்பிக்குள் விழுந்து சத்தமில்லாமல் நிறைந்தது. குப்பி ஆவியாகப் பெருமூச்சு விட்டது.

‘ஒரு சொட்டு கூடவிட்டா செத்துப்போன உனக்க அப்பன் ராமையன் சபிக்கமாட்டான்லே’ என்றார் கணேசமாமா

‘போரும்போரும்... உயிரவிட்டு நாங்க காச்சணும்...நீரு சும்மா வாங்கிட்டுப்போயி நெத்தியில பொத்தணும்...போவும்வே’

‘லே, தைலம்ணு ஏன் பேரு வந்திருக்குண்ணு சொல்லு பாப்பம்’

‘உம்ம அப்பன் அனந்தப்பப்பனாவன் மடியிலவச்சுக் காதுகுத்திப் பேரு போட்டிருப்பாரு...போவும்வே’

‘திலம்னா சம்ஸ்கிருதத்திலே எள்ளு....மிச்சத்த நீ சிந்திச்சுக்கோ...நான் வாறேன்’

கணேசமாமா போவதைப்பார்த்து ‘நேரா ஒரு எண்ணைக்குளி. பெண்டாட்டி போகம். பின்ன ஒரு கும்பா நெறைய சோறும் சாளைப்புளிக்கறியும்...கிடந்து உறங்கினாருண்ணா இனி திங்கக்கிளம பள்ளிக்கூடத்தில பெல்லடிக்கிற நேரத்தில பாத்தாப்போறும்...’ என்றார் . குமரேசன் சிரித்தான்.

மண்பாதையில் ஏறிய கணேசமாமா நின்று 'அண்ணா ஒரு நல்ல கோளுண்டுண்ணாக்கும் தோணுது... வில்லுவண்டி வருது....பாண்டிவண்டியாக்கும்' என்றார்.

அவர் செல்லவும் பச்சைநிறத்தில் சாயமிட்ட கூண்டுள்ள ஒற்றைக்காளைவண்டி வந்து நின்றது. வண்டியை ஓட்டிவந்த இளைஞன் இறங்கித் தலையிலிருந்த முண்டாசை எடுத்து முகம் துடைத்து தோளில் போட்டபடி தயங்கி நின்றான். பழைய அம்மி போல பளபளப்பான கன்னங்கரிய உடல். வயிறு கட்டுக்கட்டாக இறுகியிருந்தது. வேட்டி நெகிழ்ந்து இறுக்கமான இடுப்பில் கட்டப்பட்டிருந்த கரிய அரைஞாண் சரடு தெரிந்தது. கூரிய மீசையும் பெரிய கண்களும் கொண்ட சதுர முகம்.

'அய்யன் உண்டோ?' என்றான்

'ஆராக்கும்?' என்றார் பெரியப்பா

'நாங்க உண்ணாமலைக்கடையிலேருந்து வாறம்....'

'கைப்பள்ளிமாரா?'

'உள்ளதாக்கும்...'

'பாஷை கேட்டாத் தெரியுதே....' என்றார் பெரியப்பா 'என்ன காரியம். நான்தான் வைத்தியரு'

'அய்யன் நோக்கணும்... பதினாறுநாளாய் மரணவேதனைப்படுதா... ' என்றான்.அதற்குள் கண்கள் கலங்கிவிட்டன.'ரண்டு வைத்தியரைக் காட்டினேன்...ஒரு பிரயோஜனமும் இல்ல...ஒண்ணு நோக்கணும்'

'யாருக்கு தீனம்?'

'என்னுடே கெட்டினவளுக்கு... ஒண்ணாம் பிரசவம்...'

'ஓ...' பெரியப்பா கண்கள் இடுங்கின 'பிள்ள?'

'சாபிள்ளயாக்கும்...அப்பம் கெட்டின பாலு...பளுத்து உருண்டு நிக்குது'

'ஓர்மையுண்டா இப்ப?'

'பெருங்கடை வைத்தியரு அபினு குடுத்தாரு...அதில உறங்கிட்டிருக்கா....கண்ணு திறந்நால் அலறி விளிச்சு துடிப்பா...பிடிச்சு நிறுத்த முடியாது'

‘டேய் உள்ள போயி நாராயணியையும் அம்முவையும் வரச்சொல்லு’

நான் உள்ளே சென்று சொன்னேன். நெல்குத்திக்கொண்டிருந்த அம்முவும் பாத்திரம் கழுவிக்கொண்டிருந்த நாராயணியும் கைகளைக் கழுவி வேட்டிமுந்தியில் துடைத்துக்கொண்டு வந்தார்கள்.

‘ஏட்டி, வண்டியில இருக்கப்பட்டவள மெல்ல பொத்தி எடுத்துக் கொண்டு வந்து பெஞ்சில கெடத்து’ என்றபின் ‘துணைக்காராக்கும்?’ என்றார்

‘அவளுக்க அம்மை கூட உண்டு’

நாராயணியும் அம்முவும் சென்று வண்டிக்குப் பின்னால் நின்றார்கள். வண்டிக்குள் இருந்து குள்ளமான மெலிந்த கிழவி இறங்கி திகைத்துப்போனவள் போல பார்த்தாள். அதிகமாக வெளியே செல்லக்கூடியவளல்ல என்று தோன்றியது. வண்டிக்குள் இருந்து நீலநிறச்சேலை கட்டிய ஒரு பெண்ணை அவர்கள் மெல்ல இழுத்துத் தூக்கிக்கொள்வதைப் பார்த்தேன். கொஞ்சம் கனமான பெண். அவள்சேலை மேலேறி முழங்கால் தெரிந்தது. அவ்வளவு கனத்து உருண்ட முழங்காலை நான் பார்த்ததில்லை. கரிய சருமம் பளபளப்பாக இருந்தது. வெள்ளியாலான தண்டை கணுக்காலைச்சுற்றியிருந்தது.

அவளை அவர்கள் மெல்ல தூக்கி வந்தார்கள். நீண்ட கூந்தல் அவிழ்ந்து நாலைந்து சுருள்களாகத் தொங்கி ஆடியது. இரு கைகளும் துணியாலானவை போலத் தொங்கின. அவளுடைய சேலையை நன்றாகக் கழுத்தைச்சுற்றிக் கட்டியிருந்தார்கள்.

படி ஏறும்போது அவள் மெல்ல முனகுவதைக் கேட்டேன். பெஞ்சில் அவளைப்படுக்க வைத்தார்கள். பெரியப்பா வெற்றிலையை சுருட்டி வாய்க்குள் போட்டுவிட்டு அவர்கள் போகலாமென்று கையசைத்தார். அவள் தலையை மெல்ல இருபக்கமும் அசைத்துக்கொண்டு ஏதோ முனகினாள். கிழவி கையில் ஒரு துணிமூட்டையுடன் அருகே வந்து பதைத்து நின்றாள். அவள் கணவன் கீழே நின்றான்.

அவனிடம் ‘நீ போயி மாட்ட அவுத்துக்கட்டி வெள்ளங்கள குடுலே…நான் பாத்துக்கிடுதேன்’ என்றார் பெரியப்பா

நான் அவளைக் கண்வாங்காமல் பார்த்தேன். அப்படி ஒரு பெண்ணை நான் அவ்வளவு அருகே பார்த்ததில்லை. ஆறடி உயரமிருப்பாள்.

சுரைக்காய்க்குடுக்கை போலக் கன்னங்கரிய பளபளப்புள்ள சருமம். சுருண்ட கூந்தல் தார் போல பளபளப்பாக பெஞ்சிலிருந்து தரைநோக்கி வழிந்திருந்தது. உருண்டையான முகம். மெல்லிய புருவங்களுக்குக் கீழே பெரிய கண்கள். சிப்பிபோல இமைகள் மூடியிருக்க உள்ளே விழிகள் நிலையில்லாமல் அசைவது தெரிந்தது. கழுத்தில் அணிந்திருந்த கல்மாலை சரிந்து வலப்பக்கமாக பெஞ்சிலிருந்து தொங்கியது. வெங்காயத்தொல் போல மெல்லிய சிறிய உதடுகளுக்குள் சிறிய உப்புப்பரல் பற்கள்

நெற்றியிலும் புஜங்களிலும் பச்சைகுத்தியிருந்தாள். மூச்சில் மார்புகள் அசைந்தன. உள்ளங்கால்களை உள்நோக்கி குவித்து விரித்து பற்களை தாடைநெரிய இறுக்கி விட்டு மெல்லிய முனகல்களுடன் அவள் கனவுக்குள் ஏதோ வலியை அனுபவித்துக்கொண்டிருந்தாள்.

'உனக்க மோளா?'

'ஓம் அய்யனே'

'தலைப்பிரசவமா?'

'ஓம் அய்யனே....நல்ல பிள்ளயாக்கும்....அம்மிக்கொழவிமாதிரில்லா இருந்தது...கண்ணு தெரியாம வயற்றாட்டி களுத்தப்பிடிச்சு இளுத்துப்போட்டா....கையில வாறப்பமே குளைஞ்சுபோச்சு... பிள்ளை செத்துப்போட்டுண்ணு அறிஞ்சு எனக்க சாமியேண்ணு நெஞ்சில நாலஞ்சு அடி அடிச்சுட்டு மயங்கினவளாக்கும்...இப்பம் வரைக்கும் நல்ல போதம் இல்ல... ரெண்டாம்நாளு முதல் பாலுகெட்டிப்போச்சு...உள்ள மருந்தெல்லாம் அரைச்சு தேச்சாச்சு....உள்ள பாலுகெட்டிபுளுத்துப்போச்சு....பதினாறுநாளாட்டு நரகவேதனையாக்கும்...'

'அப்பிடி ஆவும்...சாபிள்ளையானா அப்பமே வாய வச்சு உறிஞ்சி முலைத்துவாரத்த திறந்துபோடணும்.... நீ பெத்தவதானே? பிள்ளை வாய வைக்காம எப்டி முல திறக்கும்? உனக்குத் தெரியாதா?'

கிழவி வாயைத்திறந்து பேசாமல் நின்றாள்

'உன்னைப் பாத்தா ஏது கோரனும் சொல்லுவான், உனக்க தலையில மயக்கின மரச்சீனியாக்குமெண்ணு...' பெரியப்பா வெற்றிலையை கோளாம்பி நோக்கித் துப்பினார். 'துளையடைஞ்சுபோயி உள்ள பளுப்பும்

வச்சா பின்ன சலம் வெளிய வாறதுக்கு வளியே இல்லல்லா? குடுக்காத பாலுமுளுக்க வெஷமாக்கும்...லே'

அவள் கணவன் வந்து நின்றான்

'நல்ல வேதன இருக்கும்லே....மருந்தால ஒண்ணும் கேக்காது...'

'ரெண்டையும் அறுத்து எறியுங்க அய்யனே...எனக்கு என் செல்லக்கிளிய மனுசியா கிட்டினா மதி...பிள்ளையும் வேண்டாம் ஒரு எளவும் வேண்டாம்....இவள இந்தப்பாடு படுத்துகதுக்குத்தான் வந்து பிறந்திருக்குண்ணா அதைப் புதைச்சிட்ட குளியில நாலு முள்ள வெட்டி நடுவேன் நான்....'

'லே மாபாவி, பிள்ளைப்பத்தியாலே பேசுதே?' என்றாள் கிழவி

'பிள்ளையில்ல அது சனியனாக்கும்... குழிச்சுப் போட்டதத் தோண்டி எடுத்து ஆத்தில கொண்டு போடுவேன்....த்தூ'

'லே எரப்பாளி...'

'எல்லாம் ஒரு பிரேமையினாலே சொல்லுகதாக்கும்...நீ சும்மா கெடந்து தொண்ட தொறக்காதே...டேய்'

நான் 'பெரியப்பா' என்றேன்

'இந்த இவனையும் கூட்டிக்கோ....அள்ளூர்கொளத்தில நம்ம எருமைக ரெண்டண்ணத்தைக் கூட்டிக்கிட்டு போயி எறக்கு... அதில ஒட்டிவாற கொளவட்டையப் பிடிச்சுக் கொண்டு வா....ஒரு பத்திருநூறு கொளவட்டை வேணும்...கேட்டியாலே?'

நான் தலையசைத்தேன். எனக்கு ஏதும்புரியவில்லை. ஆனால் பெரியப்பா எப்போதும் விசித்திரமாக எதையாவது கேட்கக்கூடியவர். போனவாரம்தான் காடுமுழுக்கத் தேடி அலைந்து காக்கா இறகுகளைச் சேகரித்துக்கொண்டுவந்தோம்.

நான் தொழுவத்துக்குப்போனபோது அவனும் கூடவந்தான்.

'கொச்சய்யனுக்க பேரு என்ன?'

'ஜெயன்'

எனக்கபேரு செல்லன்...'

‘ஓ’

‘அய்யன் என்னத்துக்கு அட்டை கேக்குதாரு?’

‘மருந்துக்கு’

‘அரைச்சு கெட்டுகதுக்கா?’

‘இப்பம் சொல்லமுடியாது’ என்றேன் ‘அந்தக் கோணக்கொம்ப அவுரும்’

நான் மூடிக் கொண்ட பித்தளைத் தூக்குவாளியை எடுத்துக்கொண்டேன். சின்னச் சம்புடத்தில் சுண்ணாம்பும். காளியும் கோணக்கொம்பியும் அசைபோட்டபடி வந்தார்கள். காளி வழியில் வேலியில் படர்ந்திருந்த காய்ச்சில்கொடியைத் தின்ன ஆசைப்பட்டாள். நான் கயிறு நுனியால் அவளை அடித்தேன். காதை மட்டும் அலட்சியமாக அசைத்துக்கொண்டு திரும்பி வந்தாள்.

குளம் அள்ளூர் பகவதிகோயிலுக்கு அருகே கிடப்பது. சுற்றிலும் பச்சைகனத்த தோப்புகள். ஆகவே தண்ணீரில் எப்போதும் பச்சைநிழல். குளிர்ந்த நீருக்கு அடியில் கிடக்கும் சேற்றுப்பரப்பு துல்லியமாகத் தெரியும். அங்கே விழுந்து பாதிபுதைந்த சருகுகள் எல்லாம் தங்கநிறமாக ஒளியில் மெல்ல அலைபாய்ந்தபடி தெரியும். பெரியபெரிய பொத்தை, கெண்டை ,கெளுத்தி, ஆரை, தூலை மீன்கள் உண்டு. மெதுவாகச்சென்று நம் நிழல் நீரில் விழாமல் பார்த்தால் நீர்ப்பரப்பு முழுக்க மீன்கூட்டங்களாக இருக்கும், கொல்லங்கோடு தூக்கவிழாவை ஆலமரத்தின் மீதிருந்து பார்ப்பதுபோல தெரியும். நிழல் விழுந்ததும் ,குளம் ஒருமுறை கண்சிமிட்டுவதுபோலிருக்கும்,ஒரே கணத்தில் மீன்கள் எல்லாம் மறையும்.

செல்லன் குந்தி அமர்ந்து நீரை அள்ளி முகம் கழுவப்போனான்.

‘அய்யோ’ என்றேன். ‘தொடாதே’.

‘ஏன்?’

‘அம்பிடும் அட்டையாக்கும்...இதுக்க பேரு அட்டைக்கொளம்....இதில ஆரும் இறங்கமாட்டாவ’

‘ஓ’ என எழுந்துகொண்டான்.

நான் காளியைத் தள்ளி நீரை நோக்கிச் செலுத்தினேன். அவள் குனிந்து நீரை முகர்ந்தாள். நீரில் வளையங்கள் விரிந்தன. இழுத்துக்குடித்து மீசையில்

துளிகளுடன் அண்ணாந்தாள். சருமம் குளிரில் அதிர்ந்தது. நான் அவள் வாலைப் பிடித்து முறுக்கி உள்ளே தள்ளினேன். கொஞ்சம் தயங்கியபின் நீருக்குள் பாய்ந்து இறங்கினாள். நான் அவள் கயிறைக் கரையில் நின்ற குட்டித்தென்னையில் கட்டினேன். அதற்குள் கோணக்கொம்பி பாய்ந்து காளியை நோக்கி நீந்தினாள். நான் ஓடிப்போய் சாரைப்பாம்புபோல ஓடிய அவள் கயிறைப் பிடித்துக் கட்டினேன்.

'இது என்ன கோயிலு?'

'அள்ளூர் பகவதி...விளிச்சா விளிகேக்குத சாமியாக்கும்' அவன் பார்வையை சந்தித்தபின் '... அம்மா சொன்னா' என்றேன்.

அவன் எழுந்து கோயிலைப்பார்த்தான்

'இடிஞ்சு விளுந்துபோட்டு'

'அறைக்கல் மாடம்பிக்க கோயிலு...அவ்வோ இப்பம் திருவனந்தபுரத்திலயாக்கும்'

அங்கிருந்து பார்த்தபோது வெளியே ஆலமரத்தடியில் குவிக்கப்பட்ட உடைந்த மண்சிலைகள் தெரிந்தன. நேர்ச்சைக்காக சிலைசெய்து வைப்பார்கள். உடைந்ததும் கொண்டுவந்து ஆலமரத்தடியில் போடுவார்கள். இடுப்பில் குழந்தையுடன் கூடிய அம்மன்சிலைகள் கோரைப்பற்களும் முட்டைக்கண்களுமாக சாயம்போன உடல்களுடன் சரிந்துகிடந்தன.

'ரண்டு சன்னிதி உண்டா?' என்றான் செல்லன்

'மூத்தம்மையும் இளையம்மையும் உண்டு. மூத்தம்மை இடுப்பில பிள்ளை வச்சிருப்பா. இளையம்மை பிள்ளைய வாயில கடிச்சு தின்னிட்டிருப்பா' என்றேன். 'மூத்தம்மைக்கு மஞ்சணமும் கும்பளங்காயும் வெட்டுவாவ. இளையம்மைக்கு முட்டன்கோளி வெட்டுவாவ'

செல்லன் மேலேறிச்சென்று ஆலமரத்தடியில் கிடந்த சிலைகளைப் பார்த்தான். பீடமும் சிலையும் எல்லாம் ஒன்றாகவே செய்யப்பட்டு சூளையில் சுடப்பட்டிருக்கும். உடைந்த கைகள் பப்பாளித்தண்டுபோல உட்குடைவாக இருந்தன. பிள்ளையை ரத்தம் கசியக் கடித்துப் பிடித்திருக்கும் சிலையை அவன் குனிந்துபார்த்தான். அதன்மேல் காய்ச்சில்கொடி படர்ந்திருந்தது.

நான் காளியைக் கரைக்கு இழுத்தேன். அவள் வரத்தயங்கினாள். மேலும் இழுத்தேன். என்னை உள்ளே இழுத்துவிடுவாள் என்று தோன்றியது. பக்கத்தில் நின்ற தழைகளைப் பறித்து ஆட்டிக்காட்டினேன். பாறைக்குழியில் தேங்கிய மழைநீர் போல இருந்தன அவள் கண்கள். நீருக்குள் மூழ்கி எழுந்து பெருமூச்சு விட்டாள். நான் மீண்டும் தழையை ஆட்டிக்காட்டினேன். காளி நீரில் மூழ்க கோணக்கொம்பி ஆவலாக நீந்திக் கரையை அணுகினாள். அவளுடைய பெரிய உடல் நீர் நலுங்காமல் காற்றில் அலைவருவதுபோல வந்தது. கரையில் ஏறிப் பெருமூச்சுடன் கைக்குழந்தை கைநீட்டி வாங்குவதுபோல கனத்த நாக்கை நீட்டித் தழையை வாங்கிச் சுருட்டி வாய்க்குள்ளே கொண்டுசென்றாள்

அவளைத் தென்னைமரத்தில் கட்டியபோது காளியும் ஏறி வந்துவிட்டாள். நான் சுண்ணாம்புச் சம்புடத்திற்குள் நீர் விட்டு நன்றாகக் கலக்கினேன். கோணக்கொம்பியின் அடிவயிறெங்கும் அப்பியிருந்த குளவட்டைகள் மீது சுண்ணாம்புக் கரைசலைத் தெறித்தேன். அவை துடித்து பிடிவிட்டு உதிர்ந்து சோம்பல் முறிப்பதுபோல நெளிந்தன. சின்ன அட்டைகள். ஒச்சுக்குஞ்சுகள் போல. ஆனால் இன்னும் அரைமணிநேரம் கழித்தால் அவை விரல் அளவுக்குக் கனத்து பெரிய உதடுகள் போல ஆகிவிடும்.ஒவ்வொன்றுக்குள்ளும் அரைத்துடம் ரத்தம் இருக்கும்.

நான் அட்டைகளைப்பொறுக்கிப் பித்தளைப்போணிக்குள் போட்டேன். செல்லன் வந்து 'என்ன செய்யணும்?' என்றான்

'அட்டையப் பிடிச்சு இதுக்குள்ள போடு' என்றேன்

'யம்மா...இம்பிடு அட்டையா?'

'அர மணிக்கூர் விட்டா எருமைக்க தேகம் முளுக்க அட்டையா இருக்கும்... ரெத்தம்போயி அது நீந்தமுடியாம கெடக்கும்' என்றேன். காளியின் மடி முழுக்க அட்டைகள் செறிந்திருந்தன. நான் அவள் காம்புகளைப்பிடித்து அட்டைகளை எடுத்தபோது ஒரு காம்பிலிருந்து பால் ஊறி சொட்ட ஆரம்பித்தது. இலைக்கள்ளிச்செடியின் தண்டை முறித்ததுபோல

'கறக்குதியண்ணாக்கும் நினைக்குது' என்றான் செல்லன்

'நான் எப்பம் தொட்டாலும் கறக்கும்' என்றேன். நான்கு காம்புகளிலும் பால் ஊறிச்சொட்டியது.

கோணக்கொம்பு ஏழுமாத கர்ப்பம். அதற்குப் பால் இல்லை. மீண்டும் காளியையும் கோணக்கொம்பியையும் நீரில் இறக்கினேன்.

‘இம்பிடு அட்டை எதுக்கு?’

நான் பதில் சொல்லவில்லை. செல்லன் என்னைப்பார்த்துவிட்டுப் பெருமூச்சுடன் ‘நரகவேதனையாக்கும்....கிட்டபோனா நம்ம முடியயும் மூக்கையும் பிடிச்சு பிச்சு எடுத்துப்போடுவா...’ என்றான்.

நான் அவனைப்பார்த்தேன்

‘நான் உறங்கி எட்டுநாளாவுது....எல்லாத்துக்கும் நானாக்கும் காரணம்னு நினைக்கும்பம் நெஞ்சில தீயாக்கும்’

‘நீரு என்ன செய்தீரு?’

செல்லன் பெருமூச்சு விட்டான்.

மீண்டும் அட்டைகளைப் பொறுக்கிப் போணியில் போட்டோம். முக்கால் போணி நிறைய அட்டை. குளுகுளுவென்று சேறு நிறைந்திருப்பதுபோல. அவை நெளிந்தபோது சதைப்பரப்பு போலவும் தோன்றியது

பெரியப்பா போணியைத் திறந்து அட்டைகளைப் பார்த்தார். அவற்றை ஒரு ஈரிழைத்துண்டில் கொட்டி மூட்டையாகக் கட்டி முறுக்கிப்பிழிந்தார். பின்பு அந்த மூட்டையை அப்பு அண்ணா கையில் கொடுத்து வேகமாக சுழற்றச்சொன்னார். கடைசித்துளி தண்ணீர் வரை அதிலிருந்து தெறித்தபின் அப்படியே வெயிலில் கொண்டுசென்று வைக்கச்சொன்னார்

நான் காளியையும் கோணக்கொம்பியையும் தொழுவில் கட்டினேன். மஞ்சள்தூளையும் வேப்பெண்ணையையும் குழைத்து அவற்றின் அடிப்பக்கம் முழுக்கத் தடவி விட்டேன். குனிந்து காளியின் அடிப்பக்கத்தில் எண்ணைபூசியபோது அது என் முதுகை நக்கியது. உப்புத்தாள்போன்ற நாக்கு. நான் அலறியபடி எழுந்துவிட்டேன். ‘மோறையப்பாரு....கருப்பி...அடிச்சு பேத்திருவேன்...சவமே’என்றேன்.

ஐந்துநிமிடம் வெயிலில் வைத்தபின் அட்டைகளை எடுத்துப் பிரித்தார் பெரியப்பா. அட்டைகளை அள்ளி அள்ளி இன்னொரு ஈரிழைத்துவர்த்தில் பரப்பினார்.

‘அவள எளுப்பி உக்கார வை’ என்றார் பெரியப்பா

கிழவி அந்தப்பெண்ணை மெல்லத்தூக்கி அமரச்செய்தாள். அவள் மெதுவாக எழுந்தாள். வாயிலிருந்து வழிந்த எச்சிலைப் புறங்கையால் துடைத்தாள். தலையைச் சொறிந்தபடி சுவரில் சாய்ந்து அமர்ந்துகொண்டாள். எருமைக்கண்கள்போல பெரிய விழிகள் சிவப்போடியிருந்தன. சட்டென்று தன்மார்பைப்பிடித்தாள். 'எனக்க அம்மோ என்னைக் கொல்லடியே' என்று வீறிட்டு மார்புகளை இறுகப்பிடித்துக்கொண்டாள். 'அம்மோ அம்மோ...' என்று வீறிட்டபடி வலது கையால் பெஞ்சை அறைந்தாள். சாமி வந்தவள் போல தலையைப் புரட்டிப்புரட்டி அலறினாள்

நான் கைகள் நடுங்க பின்னால் நகர்ந்தேன். செல்லன் தூரமாக ஓடிப்போய் தென்னைமரத்தடியில் நின்று இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டான். அவன் உடம்பு குறுகி அதிர்ந்தது

நான் அசப்பில் திரும்பியபோது அவள் மார்புகளைக் கண்டேன். உடனே பார்வையைத்திருப்பிக்கொண்டேன். இரு கைக்குழந்தைகள் போல அவை அவள் மார்பில் தொங்கி அசைந்தன. அவளை அள்ளிக்கவ்வித்தின்னும், அவளுக்குள் துளைத்து நுழையமுயலும் இரு பெருச்சாளிகள்.... நான் ஓடிப்போய்க் கிணற்றடியில் நின்று கொண்டேன். அங்கும் அவள் அலறல் கேட்டுக்கொண்டிருந்தது.

குமரேசன் அங்கே வந்தான் 'அங்க நிக்கப்பளுதில்ல கேட்டுதா?' என்றான்.

'பயங்கர வேதனை இருக்கும் இல்லியா?' என்றேன்

'வேதனையா?கொள்ளாம், ஏமான் என்ன கண்டுது? ஸ்திரீஜென்மத்துக்குண்டான வலியிலே பாதிகூட ஆம்பிளைக்கு இல்லை...'

'

'ஏன்?'

'அது பகவதிக்க வெளையாட்டு...ஏன் வே?'

அப்பு அண்ணா வந்து 'சிலசமயம் இந்த வேலைக்கு ஏன் வந்தோம்ணு தோணிடும்லே' என்றபடி கிணற்றுமதில் மேல் ஏறி அமர்ந்தார்.

'பெண்ணடியாளுக்க வலியக் கண்டா ஆணாப்பிறந்ததே பாவம்ணு தோணிப்போயிரும்' என்றான் குமரேசன்

'ஆணுக்கு அந்தமாதிரி வலி இல்லியா?' என்றேன்.

‘இல்லியே… இருந்தா இந்த உலகம் இப்பிடி நாறக்கூதறயா இருந்திருக்குமா? ஒரு மரியாதியும் சினேகமும் எல்லாம் இருந்திருக்குமே’ என்றார் அப்பு அண்ணா.

‘என்ன செய்யுதாரு?’ என்றேன்

‘அட்டைகள முலைக்குமேலே வச்சுக் கெட்டுதாரு…அட்டை அந்தப் பாலையும் ரெத்தத்தையும் சலத்தையும் எல்லாம் உறிஞ்சிப்போடும்….’

‘நோவுமா?’

‘நோவாம கடிக்குததுக்குண்டான கோப்பு அதுக்க கையில உண்டு… அது இருக்கதும் தெரியாது வலிக்கதும் தெரியாது… உறிஞ்சிக்குடிச்சு பக்கறை மாதிரி உப்பின பிறவு அது தானா விளுந்திரும். நல்ல புளியம்பளம் கணக்கா இருக்கும்…..’

சட்டென்று அலறல் நின்றுவிட்டதை உணர்ந்தேன்

‘அட்டை உறிஞ்சத் தொடங்கினதும் வலி இந்நா இந்நான்னு நின்னுபோயிரும்…’ என்றார் அப்பு அண்ணா

நான் பெருமூச்சுவிட்டேன்

‘பிள்ளைக்கு இந்த நாத்தம்பிடிச்ச தொளிலு வேண்டாம் கேட்டுதா? பிள்ளை படிச்சுகேறி நல்ல சட்டையும் கால்நிக்கரும் இட்டு வாத்தியாராட்டு போகணும்’ என்றார் அப்பு அண்ணா

‘ஏன்?’ என்றேன்

‘இந்தத் தொளிலும் புண்ணியமுள்ளதாக்கும். மேலே போனா சித்திரபுத்தன் ஓடிவந்து கெட்டிப்பிடிச்சு கூட்டிட்டுப்போவான்…ஆனா இங்க இருக்கப்பட்ட நாளிலே எப்பமும் கண்ணீரும் ரெத்தமும்தானே கண்ணில படும்…சீவிதத்துக்குமேலே ஒரு வெறுப்பு வந்துபோடும் பிள்ளே’

‘டேய் ஜெயா’ என்று பெரியம்மா அழைத்தாள் ‘வாடா வந்து கஞ்சி குடி’

நான் உள்ளே சென்று அமர்ந்து மௌனமாகக் கஞ்சி குடித்தேன்

‘ஏன் ஒருமாதிரி இருக்கே?’ என்றாள் பெரியம்மா

‘ஒண்ணுமில்ல’

‘உப்புமாங்கா வேணுமா?’

‘வேண்டாம்’

நான் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தபோது இருவரும் பீடி பிடித்துக்கொண்டிருந்தார்கள். நான் அருகே வந்து பேசாமல் அமர்ந்துகொண்டேன்

‘டேய்...’ என்றார் பெரியப்பா ‘எங்கடா அவன்?’

‘பெரியப்பா’ என்று சென்று நின்றேன்

பெரியப்பா அவள் மார்பில் இன்னொரு வெள்ளைத்துண்டை சுற்றிக்கட்டியிருந்தார். அவள் முகம் தெளிந்திருந்தது. கன்னத்தில் சுருண்ட தலைமயிர் ஒட்டியிருந்தது.

‘இதாரு அய்யனே, மகனா?’ என்றாள் . பெரிய கண்களின் நுனியே என்னைப்பார்க்க போதுமானதாக இருந்தது. பாளையரிவாளின் கூர்மையின் ஒளி அதற்கு இருந்தது. சிறிய உதடுகளுக்குள் வெண்ணிறப்பற்கள் தெரிய சிரித்து ‘நல்ல சொடியாட்டுல்ல இருக்காரு’ என்றாள்

‘என் தம்பிக்க பயலாக்கும்... ஏளாம்கிளாசு படிக்கான்.... நல்ல ரெசமுள்ள பய...’ என்றார் பெரியப்பா

அவள் என்னைப்பார்த்து இன்னும் பெரிதாகச் சிரித்தாள். உதடுகளுக்கு இருபக்கமும் கனத்த கன்னம் மடிய அந்தச்சிரிப்பு மிக அழகாக இருந்தது. சற்றுமுன் அலறியவள் அவளா என்று சந்தேகம் வந்தது

‘இப்பம் வேதன இல்லியா?’ என்றேன்

‘இல்ல...’ என்று புன்னகைத்துவிட்டு ‘ஆனா நல்ல ஷீணம் உண்டு’

‘அது அபினுக்க தலசுத்தலாக்கும்’ என்றார் பெரியப்பா . கீழே சுருண்டு கிடந்த ஈரிழைத்துவர்த்தின் வெள்ளைப்பரப்பு முழுக்க புதியரத்தமும் சலமும் ஆங்காங்கே திட்டுத்திட்டாகத் தெரிந்தன. ‘டேய் இந்த அட்டைகளைக் கொண்டுபோயி கோளிக்குப் போடு...’

அவள் திடுக்கிட்டு ‘அய்யோ...வேண்டாம் அய்யனே....கொல்லவேண்டாம் அய்யனே’ என்றாள். சட்டென்று குரல் தழைய ‘எனக்க பாலுகுடிச்ச சீவனாக்கும் அதெல்லாம்...’

பெரியப்பா அவளை நிமிர்ந்து சில கணங்கள் பார்த்தபின் என்னை நோக்கி ‘செரியாக்கும்…கொண்டுபோயி அந்தக்குளத்திலேயே எறிஞ்சிட்டு வா’ என்றார். நான் குனிந்து அந்தத் துண்டை எடுத்தேன். அவள் கண்களை மூடிக்கொண்டாள்.

தென்னைமரத்தடியில் கைகூப்பியபடி வீட்டை நோக்கியவனாக செல்லன் நின்றிருந்தான். நான் திரும்பிப்பார்த்தபோது அவள் சுவரில் தலைசாய்த்து கண்மூடி ஆழ்ந்திருப்பதைப்பார்த்தேன்.

## (11) விருது

டெல்லிக்கு அப்பாவுடன் சென்றிருக்கவேகூடாது என்று அவன் நினைத்துக்கொண்டான். ரயிலில் இருவர் மட்டும் அமரக்கூடிய சிறிய அறைக்குள் அவர் வெளியே பார்த்துக்கொண்டு இறுகிய முகத்துடன் அமர்ந்திருந்தார். அவருக்குப்பதில் அங்கே அவரது ஆளுயர போஸ்டர்படம்தான் ஒட்டப்பட்டிருக்கிறது என்று அவன் நினைத்துக்கொண்டான். அவரைவிட அவரது போஸ்டர்களைத்தான் அவன் அதிகமும் பார்த்திருக்கிறான். அவன் சின்னக்குழந்தையாக இருக்கும்போதுதான் அப்பாவின் படம் போஸ்டர்களில் வர ஆரம்பித்தது. மருதங்குழி முக்கில் அச்சுதன்மாமனின் டீக்கடை வாசலில் வைக்கப்பட்ட தட்டியில் ஒட்டப்பட்டிருந்த மூன்றுவண்ண போஸ்டரில் நசீரும் ஜெயபாரதியும் முகத்தோடு முகம் பார்த்துக்கொண்டிருக்கும் படத்திற்குக் கீழே வரிசையாகத் தெரிந்த முகங்களில் வலதுபக்கத்திலிருந்து நான்காவதாக அப்பாவின் படம் இருப்பதை அவன்தான் முதலில் கண்டுபிடித்தான். உடனே கால்சட்டையை இடுப்புக்கு ஏற்றிக்கொண்டு ஒரே பாய்ச்சலாக வெளியே குதித்து இடைவழி வழியாக ஓடிப் படிகளை மிதிக்காமலேயே வீட்டுக்குள் பாய்ந்துசென்று அம்மாவிடம் சொன்னான்.

அம்மா உடனே சேலையை மாற்றிக்கொண்டு ஒரு பையைக் கையில் எடுத்தபடி தெரு முக்குக்குச் சென்றாள். அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் கூடவே சென்று சுட்டிக்காட்டினான். 'சும்மா இருடா...யாராவது பார்த்துவிடுவார்கள்' என்றாள் அம்மா கோபத்துடன் . அசட்டையாக முகத்தை வைத்துக்கொண்டு அச்சுதன்மாமனிடம் தோட்டத்தை வெட்டிக்கொடுக்கும் ராமன் அங்கே வந்தானா என்று விசாரித்தாள். அவன் மெல்ல 'அம்மா இங்கே....இங்கபார்' என்றான். அவள் அவனைப்பார்க்காமல் கைநீட்டி அவன் கையைப்பிடித்துக் கிள்ளி இறுக்கினாள்.

அதன்பின் ஒரே வருடத்தில் எங்கும் அப்பாவின் படம் தென்பட ஆரம்பித்தது. பள்ளிக்கூடம் செல்லும்போதெல்லாம் அப்பாவின் போஸ்டரைப் பிள்ளைகளுக்குக் காட்டுவான். அதன்பின் அவர்கள் அவனுக்குக் காட்டினார்கள். ஒருகட்டத்தில் நகரில் எங்கு சென்றாலும் வெவ்வேறு

போஸ்டர்களில் அப்பா தெரிந்தார், 'கொன்றை பூத்ததுபோல' என்று அவன் அம்மாவிடம் சொன்னான். நகரமெங்கும் கொன்றைப்பூதான் அந்தக் காலகட்டத்தில். ஆனால் கடைசிவரை போஸ்டர்களில் அப்பாவைத் தேடிப்பார்க்கும் தேடல் அவன் கண்களில் இருந்துகொண்டுதான் இருந்தது. போஸ்டரில் இருக்கும் அப்பா அவனைப்பார்ப்பதில்லை. அவர் அவனிடமிருந்து வெகுதொலைவிலிருந்தார். அவன் சிலசமடம் பெரிய போஸ்டர்களின் முன்னால் தனியாக நின்றுகொண்டு அந்தரங்கமாக 'அப்பா' என்று கூப்பிடுவான். அப்பா கோயிலுக்குள் நிற்கும் தெய்வம்போல வெகுதொலைவுக்கு அப்பால் எதையோ நோக்கி நிலைத்த கண்களுடன் அவனுக்குச் சம்பந்தமில்லாத ஏதேதோ உணர்ச்சிகளுடன் இருப்பார்

அப்பா அவன் பார்த்திருக்கவே மாறிப்போனார். சாலையில் நடந்துபோகும் ஒருவரின் பிம்பம் உடைந்த கண்ணாடியில் பிரதிபலித்து இரண்டாக உடைவதுபோல. வெளியே படங்களில் தெரியும் அப்பா, எப்போதாவது திரையரங்குக்குச் சென்று பார்க்கும் படங்களில் வேறு எவரோ ஆக வாழும் அப்பா ஒருவர். இரவுநன்றாக தாழ்ந்தபிறகு வந்து நிற்கும் ஏதோ ஒரு காரில் இருந்து களைத்துப்போய் வியர்வை நாற்றத்துடன் இறங்கி வந்து சோம்பல்முறித்து அவன் பார்வையை அனிச்சையாகச் சந்தித்து 'என்னடா?' என்று கேட்கும் அப்பா இன்னொருவர். குளித்துவிட்டு ஈரத்துண்டுடன் தன் அறைக்குச்செல்லும்போது அவரது முன்வழுக்கைத்தலைக்குப்பின்னால் சுருண்ட கரிய கூந்தலிழைகள் ஈரமாகத் தோளில் விழுந்து புரளும். உள்ளே அவர் பீரோவைத்திறந்து துணிகளுக்கு நடுவே இருந்து கண்ணாடியாலான வாத்து போனற கழுத்து நீண்ட செந்நிற புட்டியை எடுத்து அதனுள்ளிருந்து தேங்காயெண்ணை போன்ற திரவத்தைக் கண்ணாடிக்கோப்பையில் விட்டுத் தண்ணீர் சேர்த்துக் கையில் ஏந்தியபடி நிலைக்கண்ணாடிமுன் நிற்பார். கண்ணாடிக்குள் அவரை நோக்கி நிற்கும் பிம்பத்தை நோக்கி புட்டியை நீட்டியபின் குடிப்பார். ஏதோ முனகியபடி வாய்க்குள் பாடியபடி குடித்துமுடித்தபின் வெளியே வருகையில் வாயை சப்புக்கொட்டுவார். தாடையை இறுக்கி இறுக்கி இலகுவாக்குவார். அவனிடம் 'சாப்பிட்டியாடா?' என்பார். அவன் தலையசைத்ததும் 'போய்ப்படு' என்று சொல்லிவிட்டு சென்று சாப்பாட்டுமேஜையில் அமர்வார்

அவன் கதை புரிந்து சினிமாப்பார்க்க ஆரம்பித்த பின்னர் வீட்டுக்குள் வரும் அப்பா கரைந்து இல்லாமலானார். அந்தக் கண்ணாடி அவரைப் பலநூறு

பிம்பங்களாக உடைத்துப் பரப்பிவிட்டது. பிறவிக்கிரிமினலான தபலிஸ்ட் மணிகண்டன், உருளிபோகுமிடத்தில் சாப்பாடு கிடைக்கும் என்பதற்கு அப்பால் வாழ்க்கையைப்பற்றி ஒன்றும்தெரியாத மாதவன்குட்டி, ரைஸ்மில்லைப் பெண்களைக் கவரும் யந்திரமாக மாற்ற முடிந்த லோனப்பன்,மனிதர்கள் எளிதாக வித்தை காட்டும் மிருகங்கள் மட்டுமே என்று கண்டுகொண்ட சர்க்கஸ் மானேஜரான உண்ணித்தான்...அவர்களுக்கும் அப்பாவுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. அவர் ஒரு வாசல்போல். அவர்கள் அதற்கு அப்பாலிருந்த எங்கிருந்தோ அவர் வழியாக வந்துகொண்டே இருந்தார்கள். ஒரு கட்டத்தில் அப்பா மெல்லிய பிராந்திவாசனையுடன் வீட்டுக்கு வரும்போது முற்றிலும் அன்னியமான எவரோ வீட்டுக்கு வந்துவிட்டதுபோன்ற சஞ்சலம் ஏற்பட்டது. அவருக்குள் இருந்து அப்போது வெளிப்பட்டுக்கொண்டிருப்பவர் யார்? எந்த மதத்தை எந்த சாதியை எந்த உணர்வுகளைத் தன் அடையாளம் கொண்டவர்?

ஆனால் அவன் அப்பாவிடமிருந்து ஒருகணம்கூட விலகியதில்லை. இரவில் தூக்கம் வந்து இமைகள் கனத்துச்சரிகையில் எப்போதும் கடைசி எண்ணமாக இருப்பவர் அவர்தான். அப்பாவின் பெயரைச்சொல்லி அவனை அறிமுகம்செய்வதைப்போல அவன் உவகை கொள்ளும் தருணம் வேறில்லை. அவன் பார்ப்பதற்கு அப்பாவின் சாயலில் இருக்கிறான் என்று சொல்லிக்கேட்கையில் உடம்பு மெல்ல அதிரும். ஃபாதர் ஈப்பன் '...அப்டீன்னா நீதான் சாலமோன் ராஜா வேஷம் செய்யணும்...மீன்குஞ்சுக்கு நீந்தத்தெரியுமான்னு பாப்போமே' என்றார். அவன் 'இல்லை...நான்..' என்றபோது 'நீதான்....' என்று சொல்லிவிட்டார். ...நீ நடிக்கலைன்னா அப்பாவுக்கு அவமானம்.' அவன் தலையசைத்தான். பயிற்சிகளில் அவன் மனம் படபடத்துக்கொண்டே இருந்தது. வசனங்கள் மறந்தன. அசைவுகள் தவறின. 'நீ உங்க அப்பா பேரை நாறடிச்சிருவே போல இருக்கே' என்றார் ஃபாதர். அவன் நெஞ்சுக்குள் கனமாக நிறைந்த குளிர்ந்த காற்றை அழுத்தி வெளியே விட்டான்

ஃபாதர் ஈப்பன் அப்பாவைப் பள்ளிக் கலைவிழாவுக்குக் கூட்டிக்கொண்டு வரமுடியுமா என்று கேட்டபோது அவன் நெஞ்சைக்கவ்வும் திகிலுடன் பேசாமல் நின்றான். இரண்டுநாள் தயங்கி அம்மாவிடம் சொன்னான். '...அப்பா எங்கே வரப்போகிறார்? ஜானு அக்காவின் மகள் கல்யாணத்துக்கு வரவேண்டுமென்று நான் காலில் விழுந்து கெஞ்சினேன். போடி என்று

சொல்லிவிட்டு எர்ணாகுளம் போய்விட்டார்....' என்றவள் 'நீ வேண்டுமென்றால் கேள்...நான் மாட்டேன்' என்று சொல்லிவிட்டாள். கெஞ்சிக்கெஞ்சிப்பார்த்தும் 'போடா பேசாமல்' என்றுதான் சொன்னாள்.

அப்பா வீட்டுக்கு வந்தபோது அவன் அவர் அருகே சென்று பேசாமல் நின்றான். 'ம்ம்?' என்றார் அப்பா.

'ஸ்கூலிலே வரச்சொன்னாங்க' என்றான்.

'என்ன பண்ணினே நீ? ஒழுங்குமரியாதையாப் படிக்க மாட்டியா?' என்று கோபத்துடன் திரும்பினார்.

'ஸ்கூல் ஆனிவர்சரி...அதுக்கு கெஸ்டா கூப்பிட்டாங்க' என்று அவசரமாகச் சொன்னான்.

அப்பா யோசித்து 'எத்தனாம் தேதி?' என்றார்.

அவன் மனம் மலர்ந்து 'மார்ச் ஏழு' என்றான்.

அப்படியே எழுந்து சென்று போனை எடுத்து எவரிடமோ பேசித் தேதிகளை மாற்றிவைக்கச் சொல்லிவிட்டு 'சரி வருகிறேன்...போய் ஃபாதரிடம் சொல்லு' என்றார்.

அவனால் நம்பவே முடியவில்லை. அப்பா அப்போது நடித்த அந்த கதாபாத்திரத்தை அதற்கு முன்னால் பார்த்தே இராததுபோலிருந்தது.

அப்பா பள்ளிக்கூடத்துக்கு நேராகக் காயங்குளத்திலிருந்தே வந்தார். அவரது கார் வந்ததும் யாரோ உள்ளே ஓடிவந்து சொல்ல கூடத்திலிருந்த எல்லாரும் முட்டிமோதி வெளியே சென்றார்கள்.ஃபாதர் ஈப்பன் கையில் ஒரு பெரிய பூச்செண்டுடன் சென்று அதை அப்பாவிடம் நீட்டி 'வாங்க..வாங்க 'என்றார். எல்லா ஆசிரியர்களும் கூட்டமாக அப்பாவைச்சூழ்ந்துகொண்டார்கள். அப்பா மிகுந்த கூச்சத்துடன் எல்லாரிடமும் ஓரிரு சொற்கள் சொன்னார். தேய்ந்த முன்பல் கொண்ட அந்தச்சிரிப்பை எத்தனையோ கதாபாத்திரங்களின் முகத்தில் அவன் கண்டிருக்கிறான். தன்னம்பிக்கையுடன், கொடூரத்துடன் ,காமத்துடன், அறியாமையுடன், அன்புடன்,நெகிழ்வுடன்.... ஆனால் அப்போதுபோல அது மங்கலாக எப்போதுமே இருந்ததில்லை. 'சாரி அப்பா....சாரி...' என்று அவன் மனதுக்குள் சொல்லிக்கொண்டே இருந்தான்

அரங்கின் முன்வரிசையில் அப்பா அமரச்செய்யப்பட்டார். ஃபாதர் ஈப்பன் ஓடிவந்து 'நாடகம் தொடங்கட்டும்...சீக்கிரம் ' என்றபின் அவனிடம் '..முன்வரிசையில் அப்பா உட்கார்ந்திருக்கிறார். அப்பா என்றால் அது ஒரு மனுஷன் இல்லை. கைனிக்கர குமாரபிள்ளையும் கலாமண்டலம் கிருஷ்ணன்நாயரும் டி.கெ.சோமன்நாயரும் எல்லாம் வந்து உட்கார்ந்திருக்கிற மாதிரி....எங்க மானத்தைக் காப்பாத்துணும்டா நீ' என்றார்.

ஆனால் ஆச்சரியமாக அப்போது அவனுக்கு எந்தப்பதற்றமும் தோன்றவில்லை. அவன் முழு ஒப்பனையுடன் படுதாவுக்கு அப்பால் தெரிந்த இருண்ட மேடைச்செவ்வகத்தை மட்டுமே பார்த்துக்கொண்டிருந்தான். அதுவன்றி அங்கே எதுவுமே இல்லை. எவருமே இல்லை. விசில் ஒலித்துத் திரை மேலெழுந்ததும் செங்கோலும் செம்பழுப்பாடையும் வைரமணிமுடியுமாக அவன் வெளிச்சத்தை நோக்கிச் சென்றான். அக்கணமே அவன் இரண்டாகப்பிரிந்தான். மேடையில் ஞானத்தின் மகத்தான துயரத்துடன் நின்ற சாலமோன்மகாராஜாவை அவன் பிரமிப்புடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

அப்பா பேசும்போது 'சாலமோன் மன்னனாகத் தோன்றியவர் சிறப்பாக நடித்திருந்தார்' என்று ஒரு வரி மட்டும் சொன்னார். அப்போது அரங்கு ஒட்டுமொத்தமாகப் பேரொலி எழுப்பியது. அவன் மனம் உணர்ச்சியற்றிருந்தது. எங்கோ ஏதோ நடந்துகொண்டிருப்பதை வேறெங்கோ இருந்து பார்த்துக்கொண்டிருப்பதைப்போல. அப்பா மிகச்சுருக்கமாகத்தான் பேசினார். அவருக்குள் அதிகச் சொற்கள் இருக்கவில்லை. உண்டியலுக்குள் கைவிட்டுக் காசு தேடுவது போல முகம் அதிலேயே கவனம் கொண்டிருந்தது.

அப்பா கிளம்பும்போது அவனும் தன் தோல்பையுடன் அந்தக்காரில் ஏறச்சென்றான். ஃபாதர் ஈப்பன் 'எங்களுக்கு நம்பிக்கை இருந்தது, புலிக்குப் புலிக்குட்டிதான் பிறக்கும் என்று' என்று சொல்லி அவன் தலைமேல் கையை வைத்தார். சூழ நின்றிருந்த ஆசிரியர்கள் அவனைப்பற்றிப் பேசிக்கொண்டே இருந்தார்கள். அவன் அங்கிருந்து உடனே விலகிவிடவேண்டுமென்று விரும்பினான்.

கார் கிளம்பியதும் அவன் விரும்பியது ஒன்றே ஒன்றுதான், அப்பா அதைப்பற்றி எதுவுமே பேசக்கூடாது. அதை அப்பா நிறைவேற்றினார்.

அமைதியாக வெளியே பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தார். விஜெடி ஹால் அருகே வண்டி சென்றதும் டிரைவரிடம் 'நிறுத்து...' என்றார். வண்டி நின்றது. அவனைப்பார்க்காமல் '...இது விக்டோரியா ஜூபிலி ஹால்...தெரியுமே?' என்றார். அவன் 'ஆமாம்' என்றான். '...இங்கேதான் அந்தக்காலத்தில் சி.வி.ராமன்பிள்ளையின் நாடகங்களெல்லாம் போட்டிருக்கிறார்கள்...சிவியே நடித்திருக்கிறார்...' என்றார். அவன் பேசாமல் பார்த்துக்கொண்டிருந்தான். 'மனசில் தியானிச்சுக்கோ...' என்றபின் வண்டியை எடு என்று டிரைவரின் தோளில் தட்டினார்.

பறக்கும் சன்னலின் ஒளி அவர் முகத்தின்மீது மாறி மாறி அலையடித்துக்கொண்டே இருந்தது. அவன் அவரையே பார்த்துக்கொண்டு அமர்ந்திருப்பதை அவர் உணர்ந்ததாகவே தெரியவில்லை. ஐந்து வருடங்களுக்கு முன்னால் அவருக்குப்பக்கவாதம் வந்து இரண்டு வருடங்கள் படுத்த படுக்கையாக இருந்து அதிதீவிர சிகிழ்ச்சைக்குப்பின் மெல்ல மீண்டுவந்தாலும் அவரது பழைய முகம் இல்லாமலாகிவிட்டது. இடது கண்ணும் வாயின் இடது ஓரமும் லேசாகக் கீழிறங்கி இருக்கும். அது அவருக்கு எதன் மீதோ ஆழ்ந்த அவநம்பிக்கை இருப்பதைப்போன்ற பாவனையை அளித்தது. அவரது எல்லா சொற்களிலும் அந்த பாவனை வந்து கலந்துகொண்டது. அவரது தனிமையில் அது அவர் மீது கனமாகப் போர்த்தி மூடியிருந்தது. அடுத்தக்கணம் அவர் பெருமூச்சுவிடுவார் என்ற எண்ணத்தை உருவாக்கியது.

அவருக்குப் பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டிருப்பதை சினிமாவின் செய்தித்தொடர்பாளர் வேணுதான் கூப்பிட்டுச் சொன்னார். அப்பா அப்போது தூங்கிவிட்டிருந்தார். அவர் ஒன்பதுமணிக்கே தூங்கிவிடவேண்டும் என்பது டாக்டரின் கறாரான உத்தரவு. அவர் மெல்லமெல்ல அவரது உடல் சொல்வதற்கு செவிகொடுக்க ஆரம்பித்திருந்தார். உடல் ஒரு புதைசேறு போல அவரை உள்ளே இழுக்க பதைபதைக்கும் முகத்துடன் அவர் அதில் மூழ்கிக்கொண்டிருப்பதுபோல ஒரு மனப்பிம்பம் அவனில் இருந்தது. வேணு சொன்னது அவனுக்கு முதலில் சரியாக ஏறவில்லை. ''...முன்னாடியே சொல்லியிருந்தாங்க. ரெகெமெண்டேஷன் போயிருந்தது... இப்ப அறிவிப்பு வந்திருக்கு...முறையான அறிவிப்பு வந்தபிறகுதான் சொல்லணும்னு இருந்தேன்...'

என்ன சொல்வதென்று தெரியாமல் '...அப்படியா?' என்றான்.

'அனேகமா நாளைக்கு டிவியிலயும் சொல்லிடுவான்னு நினைக்கிறேன்' என்றார் வேணு.

'அப்பா தூங்கிட்டிருக்கார்...இனிமே எழுப்ப முடியாது...நான் நாளைக்கு எந்திரிச்சதும் சொல்லிடறேன்'

வேணு 'சரி' என்றார்.

அதன்பின் தொடர்ந்து தொலைபேசி அழைப்புகள் வந்துகொண்டே இருந்தன. அம்மாதான் பெரும்பாலும் பேசினாள். வாழ்த்துக்கள் சொன்னவர்கள் எல்லாம் மறுநாள் மீண்டும் கூப்பிடுவதாகச் சொன்னார்கள். அம்மா இரவு பன்னிரண்டுமணிக்குமேல்தான் தூங்கினாள். அவனுக்கு எந்த விதமான மனக்கிளர்ச்சியும் ஏற்படவில்லை. அப்பா அவரது இரண்டாவது படத்துக்கே தேசிய விருது பெற்றார். மாநில அரசு விருதுகளும், சர்வதேச விருதுகளும் பெற்றிருந்தார். அவர் மலையாளத்தின் மிகச்சிறந்த நடிகர் என்பதில் மேற்கொண்டு எந்த நிரூபணமும் எவருக்கும் தேவையிருக்கவில்லை. அவருக்குத் தன் முதல்படத்தில் நடிப்பதற்கு முன்பே அந்த உறுதி இருந்திருக்கவேண்டும். வழக்கம்போல அன்றும் அவன் அவரை நினைத்துக்கொண்டுதான் தூக்கத்தில் மூழ்கினான். தூக்கத்தில் விழுவதென்பது அப்பாவுக்குள் மூழ்குவதுதான். அப்பா அடியற்ற ஆழமுள்ள குளிர்ந்த ஒரு மலைச்சுனைபோல.

நினைத்ததுபோலவே அப்பா மறுநாள் செய்தியை வாங்கிக்கொள்கையில் எந்த சலனத்தையும் காட்டவில்லை. நிறைவின்மையாக மாறிவிட்டிருந்த முகம் மேலும் சற்று கோணலாகியது. அப்படியே உறைந்து கல்லாக ஆனவர் போலிருந்தார். கார்களில் நண்பர்கள் வந்துகொண்டே இருந்தார்கள். நடிகர்கள், இயக்குநர்கள், இதழாளர்கள். பிரபலநடிகர்கள் வந்தபோது சாலையில் மக்கள் கூடி நின்று கூச்சலிட்டார்கள். இரு இளம்நடிகர்கள் அப்பாவின் கால்களைத் தொட்டு ஆசீர்வாதம் வாங்கிக்கொண்டார்கள். அப்பாவின் முகத்தின் இடதுபக்கம் மேலும் மேலும் கீழிறங்கியபடியே செல்கிறது என்று அவனுக்குப்பட்டது. மதியம் அவரை சற்று ஓய்வெடுக்க விட்டிருக்கலாமென நினைத்தாலும் முடியவில்லை.

இரவு ஒன்பதரை மணிக்குத்தூங்கச்செல்லும்போது அவர் தள்ளாடிக்கொண்டிருந்தார். படுத்ததுமே தூங்கிவிடுவார் என்று

நினைத்தான். ஆனால் அவர் பீரோவைத் துழாவியபின் அம்மாவிடம் சத்தம் போட்டர். 'இங்கே வச்சிருந்ததை யார்டி எடுத்தது?'.

அம்மா 'டாக்டர் சொல்லியிருக்காரு...' என்றாள்.

'போடீ' என்றபின் அவர் 'டேய்' என்றார்.

அவன் சென்று நின்றான். 'போய் ஒரு பாட்டில் பிளாக்லேபில் வாங்கிட்டு வாடா'.

அந்த இரவில் அவன் மொபெட்டில் நகரத்துக்குச் சென்று மது வாங்கிவந்தான். அப்பாவின் நரம்புப்பிரச்சினைக்குக் குடிபோல ஆபத்தானது ஏதுமில்லை என்று டாக்டர் எச்சரித்திருந்தார். ஆனால் அந்த இரவில் அவருக்கு ஏன் அது தேவைப்படுகிறது என்று அவனுக்குப் புரிந்தது. அவனால் புரிந்துகொள்ளமுடியாத எதுவும் அப்பாவிடமில்லை என்றும் பட்டது. அப்பாவுக்குள் ஏறி அவன் நடிக்கமுடியும்.

அப்பா பிளாக் லேபிலை எரிச்சலுடன் பிடுங்கிக்கொண்டார். குடிப்பவர்களுக்கு அந்த புட்டி அளிக்கும் எந்த உற்சாகத்தையும் அவர் அடைவதில்லை. எரிச்சலுடன் மட்டுமே அவர் குடிக்க அமர்வார். தீயில் நீர் விட்டு அணைப்பதுபோலத்தான் குடிப்பார். அதனாலேயே அவரால் அளவைக் கட்டுப்படுத்த முடியாது. சட்டென்று போதையேறி நிலைதடுமாறிவிடுவார். நாற்காலியில் இருந்து சாதாரணமாக எழப்போனவர் தடுமாறிப் பக்கவாட்டில் படீரென உடல் நிலத்தை அறைய விழுந்திருக்கிறார். ஒட்டுமொத்தமாக டீபாய் மேலேயே வாந்தி எடுத்திருக்கிறார். விழிகள் கோணலாகத் தொய்ந்து அப்படியே நாற்காலியில் தூங்கியிருக்கிறார். அவருக்கு முதல் பக்கவாதத் தாக்குதல் வந்ததுகூட அப்படிப்பட்ட கட்டற்ற குடிக்குப்பின்னர்தான். விடுதியறையில் மறுநாள் அவரால் எழமுடியவில்லை. எழமுயன்றவர் பக்கவாட்டில் சரிந்து சரிந்து விழுந்தபின்னர்தான் தன் இடதுகாலும் கையும் செயலிழந்திருப்பதை உணர்ந்தார். பார்வை இரட்டைப்பிம்பங்களாகச் சிதறியிருந்தது. முப்பரிமாண சினிமாவை அதற்கான லென்ஸ் இல்லாமல் பார்ப்பதுபோல. வாயை அசைத்தபோது உதடுகள் கோணியபடி செல்வதை, எச்சில் வழிவதை உணரமுடிந்தது. ஒற்றைக்கையால் தொலைபேசியை எடுத்து வரவேற்பைக் கூப்பிட்டார். அவள் அவரது குழறலை மட்டும்தான் கேட்கமுடிந்தது

பத்மஸ்ரீ வாங்க டெல்லிக்குக் கிளம்பவேண்டுமா என்று அப்பா கடைசிவரை தயங்கினார். உடம்புக்கு முடியவில்லை என்றார். 'இல்லை இது பெரிய கௌரவம், உங்களுக்கு மட்டும் அல்ல, மலையாள சினிமாவுக்கே கௌரவம். நீங்கள் அதை உதாசீனம் செய்யக்கூடாது' என்று லால் கூப்பிட்டுச் சொன்னார். எல்லாரும் சொன்னபோது அவரால் விலகமுடியவில்லை. ஆனால் பயணம் நெருங்க நெருங்க தேவையில்லாமல் பதற்றம் கொள்ள ஆரம்பித்தார். சின்னச்சின்ன விஷயங்களை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்தார். ஆனால் அவை அவரது பிரக்ஞையில் நிற்கின்றனவா என்றும் சந்தேகமாக இருந்தது. ஒருமுறை சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்லவேண்டியிருந்தது. ஒருகட்டத்தில் அவர் எதற்கெடுத்தாலும் எரிந்துவிழ ஆரம்பித்தார். அவருடன் டெல்லி செல்வதுபற்றி அவனுக்குக் கொஞ்சம் உற்சாகம் ஆரம்பத்தில் இருந்தது அதெல்லாம் வடிந்து எப்படியாவது கொண்டுபோய்விட்டுத் திரும்பிவந்தால்போதும் என்று ஆயிற்று.

ரயிலில் செல்லும்போது கூடவே இரண்டுபேர் இருந்தார்கள். இருவரும் டெல்லி செல்லும் பத்திரிகையாளர்கள். ஆகவே அப்பா கொஞ்சம் எளிதாக இருந்தார். அவர்கள் அவரது பழையபடங்களைப்பற்றிப் பேசிக்கொண்டே வந்தார்கள். டெல்லியில் கேரளா ஹவுஸில் தன் அறைக்குச் சென்றதும் அப்பா கனத்தபோர்வைபோல ஒரு மௌனத்தை இழுத்துப்போர்த்திக்கொண்டார். அவன் அவருடன்தான் இருந்தான். ஆனால் அவர் அவனுடன் இல்லை என்று தோன்றியது. டெல்லி மலையாளி சமாஜத்திலும் மாத்ருபூமியிலும் இரு வரவேற்புநிகழ்ச்சிகளுக்கு அவரை அழைக்க வந்தார்கள். அவரது நெடுநாள் நண்பரான இதழாளர் மாதவன்குட்டிதான் வந்தார். அப்பா திட்டவட்டமாக மறுத்துவிட்டார். 'என்னால் முடியவில்லை...என்னால் முடியவில்லை...என்னை விட்டுவிட்டு மாதவா' என்று திரும்பத்திரும்பச் சொன்னார். ஒருகட்டத்தில் அவர்களும் விட்டுவிட்டார்கள். அப்பா பகல் முழுக்க எங்குமே செல்லவில்லை. அவரைப்பார்க்க வந்தவர்களுடன் கேரளாஹவுசின் வரவேற்புக் கூடத்திலேயே அமர்ந்திருந்தார். வந்தவர்கள் அவரிடம் கேட்டவற்றுக்கு மட்டும் ஒருசில சொற்களில் பதில் சொன்னார். சிலசமயம் அப்படியே ஆழ்ந்த மௌனத்திற்குள் சென்று அமர்ந்திருந்தார்.

அப்பாவை அவர்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை. அதை அவர்கள் அவரது உடல்நலச்சிக்கல் என்றே விளக்கிக்கொண்டார்கள். திரும்பத்திரும்ப அவரது சிகிழ்ச்சை விஷயங்களைக் கேட்டார்கள். அவருக்குக் கடந்த இரண்டாண்டுகளாக எந்தப்பிரச்சினையுமில்லை என்று அவன் சொன்னான். அவரது உடல்நிலை எவ்வளவு முடியுமோ அவ்வளவு சரியாகிவிட்டது. மேற்கொண்டு எந்த சிகிழ்ச்சையும் அதற்குத் தேவை இல்லை. ஆனால் அப்பா திரும்பி வர மனமில்லாதவராக இருந்தார். பின்பக்கம் கதவுகளை மூடியபடி அவர் சென்றுகொண்டே இருந்தார்.

விழாவுக்கு முந்தையநாள் ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து கூப்பிட்டார்கள். பரிசுவாங்குபவர்கள் வந்து ஒரு போலி நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவேண்டும். பரிசு வழங்கும் நிகழ்ச்சியை அபப்டியே நடிப்பார்கள். அப்பா ‘என்னால் முடியாது...நான் காமிரா இல்லாமல் நடிப்பதில்லை...போய்ச்சொல்’ என்று சொல்லிவிட்டார்.‘இல்லை இது கட்டாயம்’ என்றார் ஷர்மா என்ற சீனியர் பாதுகாப்பு அதிகாரி. அவன் மாதவன்குட்டி வழியாக அப்பாவின் உடல்நிலைபற்றிச் சொல்லிப்பார்த்தான். ‘அப்படியென்றால் அவரது மகன் வந்து நடிக்கட்டும். அதை அவருக்கு நன்றாகச் சொல்லிக்கொடுத்து அவர் கூட்டிவந்தால்போதும் ’ என்றார் ஷர்மா.

விருதை ஷர்மாதான் வழங்கினார். ஆறடிக்குமேல் உயரமான ஐபிஎஸ் ஆபிசர். அவரது உதவியாளர்கள் ஜனாதிபதியின் அதிகாரிகளாக நடித்தனர். விருதுபெற்றவர்களில் கவிஞர்களும் பரதநாட்டியக்கலைஞர்களும் பாடகர்களும் சமூகசேவையாளர்களும் பத்திரிகையாளர்களும் இருந்தார்கள். அவர்களில் பலர் விருதுவாங்கும்போது அணியவேண்டிய அதே உடையுடன் உற்சாகமாக வந்திருந்தனர். அந்தப் போலி நிகழ்ச்சியில் இருந்த சின்ன சங்கடத்தை வெல்ல அதை அவர்கள் உற்சாகமான ஒரு வேடிக்கையாக மாற்றிக்கொண்டார்கள். ஒருகவிஞர் சின்னச்சின்ன நகைச்சுவைகளாக உதிர்த்துக்கொண்டே இருந்ந்தார். ‘இந்நிகழ்ச்சியை வெள்ளைக்காரர்களைக்கொண்டு நடத்தவேண்டும். அதைத்தானே நம் ஜனாதிபதியும் பிரதமரும் நகல்செய்யவேண்டும்’ என்றார். ஒரியமொழி நடிகை எதற்கெடுத்தாலும் கூந்தலை உதறித் தலையைப்பின்னால் சரித்து உரக்கச்சிரித்தாள். விருது பெற முன்னால் சென்றபின் ஒரடி தூரத்தில் நின்று ஜனாதிபதியை வணங்கவேண்டும். கைகுலுக்கக் கூடாது. முதுகைக்காட்டித்

திரும்பக்கூடாது. இரண்டடி தூரம் பின்னால் நகர்ந்து பக்கவாட்டில் விலகிவிடவேண்டும். இரு அதிகாரிகள் அதை நடித்துக்காட்டினார்கள்

அவன் முறைவந்தது. அப்பாவின் பெயர் அழைக்கப்பட்டபோது அவன் பிரமித்து நின்றான். வங்காளிக் கவிஞர் அவனை உசுப்பி அவன்தான் என்றதும் திடுக்கிட்டு எழுந்து நடந்தான். சட்டென்று அவனுக்குத் தன்னுடைய உடல் இடப்பக்கமாக இழுப்பது போலிருந்தது. இடப்பக்கம் வலுவில்லாமல் துடுப்பு போடப்பட்ட படகுபோல உடல் அப்பக்கமாக அவனை மீறி வளைந்தது. விழுந்துவிடுவோம் என அஞ்சினான். நடந்துசென்று ஷர்மா முன் நின்றான். ஷர்மா தீவிரமான முகத்துடன் ஒரு புத்தகத்தை அவனுக்கு நீட்டினார். அவன் அதை வாங்கியபோது இடது கை பலவீனமாக இருந்தது. அவன் தன்முகமும் ஆழ்ந்த அவநம்பிக்கையைக் காட்டுவதாக ஆகிவிட்டிருக்குமோ என்று எண்ணிக்கொண்டான்.

அப்பாவிடம் அவன் அந்நிகழ்ச்சியை சுருக்கமாகச் சொன்னான். அப்பா அதைக் கவனித்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை. தொலைக்காட்சியில் ஓடிக்கொண்டிருந்த ஏதோ அபத்தமான நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவரது கண்களுக்குள் வண்ணங்கள் சுருண்டுசுருண்டு குவிந்துகொண்டிருந்தன. ஆனால் மறுநாள் நிகழ்ச்சியில் அப்பாதான் அந்த சடங்கை எந்தவிதமான பிசிறும் இல்லாமல் செய்தார். வங்காளக்கவிஞர் ஜனாதிபதியின் கைகளைப்பற்றிக் குலுக்கிவிட்டார். ஒரியநடனக்கலைஞர் ஜனாதிபதிக்கு சமானமாக நின்று கொண்டார்.அவரைப் பாதுகாவலர்கள் மெல்லத்தொட்டு விலக்கினர். கன்னட எழுத்தாளரின் கையிலிருந்த கைத்தடி மேடையில் ஓசையுடன் விழுந்தது. அப்பா நிதானமாகப் பரிசை வாங்கிக்கொண்டு வந்து அமர்ந்துகொண்டார். அவரது முகம் அதே பாவனையுடன் இருந்தது

ஜனாதிபதி தன் உரையை எழுத்தெழுத்தாக வாசித்தார். வயதான தமிழ்பிராமணர். ஒருகாலத்தில் பொருளாதார மேதையாக அறியப்பட்டவர். முதுமை அவரது கவனத்தை முழுமையாகவே சிதறடித்திருந்தது. எங்கே என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்று அவருக்குத் தெரியுமா என்றே அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. அதன்பின் நான்கு அமைச்சர்கள் பேசினார்கள். எல்லாமே எழுதித் தயாரிக்கப்பட்ட உரைகள். எழுதி வைக்கப்பட்ட சில்லறை சொல்வேடிக்கைகள். அதற்கு முன்னதாகப் பயிற்சி எடுத்துக்கொண்டவர்கள் போல சபையினர் கைதட்டிச் சிரித்தார்கள்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏதோ சொன்னபோது முன்வரிசையில் அமர்ந்திருந்த வெள்ளைவெளேரென்ற சருமமும் சிவப்புச்சாயமிட்ட தலைமுடியும் கொண்ட மாது மிகையுணர்ச்சியுடன் கைநீட்டி ஏதோ சொல்லி உருகினாள். கலாச்சாரச்செயலர் உரையில் அமைச்சர்களைப்புகழ்ந்து சொன்ன ஏதோ வரிக்கு மொத்த அரங்கும் கைதட்டியபோது 'இல்லை இல்லை' என்று அவர் கைவீசிக்காட்டினார்.

நிகழ்ச்சிக்குப்பின் விருந்து ஆரம்பித்தது. அந்த வெள்ளைவெளேர் பெண்மணி சாயம்பூசிய கூந்தலுடன் ரத்தச்சிவப்பு உதடுகளுடன் ஒவ்வொருவரையாகக் கட்டிப்பிடித்துப் பேசிக்கொண்டிருந்தார். அவரது முகத்தசைகள் தளர்ந்துவிட்டிருப்பதனால் அந்த மிகையுணர்ச்சி தோன்றுகிறதா இல்லை அந்தமாதிரி மிகையுணர்ச்சிகளால் மெல்லமெல்ல அவை அப்படி ஆகிவிட்டனவா என்று அவன் யோசித்தான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் செயற்கையாகப்பேசிக்கொண்டிருந்தார்கள். எவரும் எவர் முகத்தையும் கவனிக்கவில்லை என்று தோன்றியது. சுற்றிவந்தவர்கள் மீண்டும் சந்தித்துக்கொண்டபோது மீண்டும் அறிமுகம் செய்துகொண்டார்கள். குல்லாய் வைத்த வெயிட்டர்கள் சத்தமில்லாமல் பானங்களுடன் நடந்துகொண்டிருந்தார்கள். ஷெர்வானிகள் கோட்டுகள் கதர்ச்சட்டைகள் தொப்பிகள் மெல்லிய மூக்குக் கண்ணாடிகள்....'நீங்கள் கண்டிப்பாக மிஸ்டர் கேயைச் சந்திக்கவேண்டும்...அவர் ஒரு ஜீனியஸ்' 'கலம்ஹாரியிலே புதிசாக ஏதோ செய்கிறார்...மார்வலஸ்' , 'ஈரானிய நாடகங்களில் இப்போது ஃப்ராய்டிய-லக்கானியத் த்தாக்கம் நிறையவே இருக்கிறதென்றாலும்...'

அப்பா 'களைப்பாக இருக்கிறது...அறைக்குப்போகலாம்' என்றார். போகலாமா என்று அவன் மாதவன்குட்டியிடம் கேட்டான். அவர் 'ஒன்றுமில்லை...ஆனால் சிலர் எங்கே என்றுகேட்பார்கள்...' என்றார்.

அவன் அப்பாவைக் காரில் ஏற்றிக்கொண்டு கேரளா ஹவுஸுக்கு வந்தான். அப்பா வந்ததுமே பேரரைக்கூப்பிட்டு பிளாக் லேபிலுக்கு ஆணையிட்டார். அன்று அவரை அவன் நாற்காலியில் இருந்து தூக்கிக் கட்டிலில் படுக்க வைக்கவேண்டியிருந்தது. அவர் தூக்கம் கலைந்து அசைந்து 'யார்டா அது?' என்றார். பின்னர் வாய் கோணலாக இழுபட 'நாயின் பிள்ளைகளே' என்று குழறிவிட்டுத் திரும்பிப்படுத்தார். 'நாயின் மகன்' என்று மெல்ல முனகிக்கொண்டதுமே குறட்டை அவர் உதடுகளைத் துடிக்கச்செய்தது

அப்பா அப்படியே தூங்கிவிட்டிருப்பதைக் கண்டான். அவரது நீண்டபிடரிமயிர் தோளில் சரிந்து கிடக்க தலையைச்சரித்தவராக ரயிலின் ஆட்டத்தைத் தானும் ஆடிக்கொண்டிருந்தார். அவன் எழுந்து கழிப்பறைக்குச்சென்றுவிட்டு வந்தான். ஒருவர் சிரித்துக்கொண்டு 'நீ அவரது மகன்தானே?' என்றார். ரயில்வே சீருடை அணிந்திருந்தார்.

'ஆமாம்...' என்றான்.

'எந்த கிளாஸில் படிக்கிறாய்?'

'பத்தாம் வகுப்பு' அவர் சிரித்து '

'அப்பாவுடன் டெல்லிபோனாயா?' என்றார்.

'ஆமாம்'

'அப்பா இப்போது என்ன செய்கிறார்?'.

அவன் தயங்கிவிட்டு 'தூங்கிக்கொண்டிருக்கிறார்' என்றான்.

'நான் அப்பாவின் பெரிய ரசிகன்...அவரது எல்லாப் படங்களையும் பலதடவை பார்த்திருக்கிறேன்..'

அவன் தலையசைத்தான்.

'அப்பாவிடம் என்னைக் கூட்டிக்கொண்டு போகிறாயா? நான் அவரைத் தொந்தரவு செய்யமாட்டேன். சும்மா கும்பிட்டுவிட்டு உடனே திரும்பிவிடுவேன்...என் பெயர் ஷண்முகன்' என்றார்.

அவன் சரி எனத் தலையசைத்தான்.

'நான் அரைமணி நேரம் கழித்து வந்து கதவைத்தட்டுகிறேன்'

திரும்ப வந்து அமர்ந்தபோது கதவு திறந்து மூடிய ஒலி கேட்டு அப்பா கண்விழித்தார். அவனைக் கூர்ந்து பார்த்துக்கொண்டே இருந்தார், அவரது மனதில் அவன் யாரென்பது இன்னும் பதிவாகவில்லை என்பது போலத் தோன்றியது. பின்பு வாயைத்துடைத்துக்கொண்டு நிமிர்ந்து அமர்ந்தார். 'நீ கடைசியாக எந்த நாடகத்தில் நடித்தாய்?' என்றார்'''

'நாற்றங்கால், பணிக்கர்சார் எழுதியது..' என்று சொன்னான்.

அப்பா அதை அர்த்தமில்லாத பார்வையுடன் கேட்டு அர்த்தப்படுத்திக்கொள்ளாதவர் போல வேறெங்கோ திரும்பினார். பின்பு

திரும்பி அவனிடம் ‘டேய், இங்கே பேரர் எவனாவது இருப்பான். கூட்டிக்கொண்டுவா’ என்றார்.

‘எதற்கு?’ என்று கேட்டதுமே அது புரிந்துவிட்டது. எழுந்து வெளியே வந்து இடுங்கிய வழியினூடாகச் சென்றான். இன்னொரு பெட்டியில் ஷண்முகன் சென்று கொண்டிருந்தார். ‘அப்பா கூப்பிடுகிறார்’ என்றான்.

‘என்னையா?’

‘ஆமாம்’

ஷண்முகன் கிட்டத்தட்ட ஓடி வந்தார். கதவைத்திறந்ததும் கைகளைக் கட்டிக்கொண்டு ‘பார்க்கவேண்டும் என்று நிறையநாளாக நினைத்துக்கொண்டிருந்தேன்’ என்றார்.

‘உன் பெயர் என்ன?’ .

ஷண்முகன் ‘ஷண்முகன்’ என்றபின் ‘பையனுக்கு உங்கள் பெயரைத்தான் வைத்தேன்.ஆறாம்கிளாஸ் படிக்கிறான்’ என்றார்.

அப்பா மெல்லத் தலையசைத்தார். ‘நன்றாகப்படிக்கவை…’சட்டைப்பையைத் துழாவி ஒரு நூறுரூபாய் எடுத்து நீட்டி ‘நான் கொடுத்தேன் என்று அவனுக்கு எதையாவது வாங்கிக்கொடு’ என்றார்.

ஷண்முகன் பணிவுடன் குனிந்து அதை வாங்கிக்கொண்டு கண்களில் ஒற்றிக்கொண்டார்.

‘நான் ஆசீர்வாதம்செய்து கொடுத்தேன் என்று சொல்லணும்’ என்றார் அப்பா.

‘கண்டிப்பாக…’ என்றார் ஷண்முகன், நெகிழ்ந்தவராக.

‘ஷண்முகன், எனக்கொரு உதவி செய்யவேண்டுமே’ என்றார் அப்பா.

‘சொல்லுங்கள்’

‘எனக்கு அவசியமாகக் குடிக்க ஏதாவது வேண்டும்…விஸ்கி பிராந்தி ரம்…எதுவானாலும்’

‘அய்யோ இங்கே எப்படி? ஒன்றும் கிடைக்காதே…’.

‘கேட்டுப்பார்…எப்படியாவது கொண்டுவா…நான் வைத்திருந்த எல்லாவற்றையும் குடித்துவிட்டேன்’

ஷண்முகன் 'இங்கே கிடைக்காது..ஹைதராபாத் தாண்டினால்தான்...' என இழுத்தார்

' எனக்கு இப்போதே வேண்டும்... '

ஷண்முகன் 'நான் கேட்டுப்பார்க்கிறேன்' என்று சொல்லிவிட்டு வெளியே சென்றார்

அப்பா சலிப்புடன் மீண்டும் கண்களை மூடிக்கொண்டார். அவரது தலை வண்டியின் ஆட்டத்திற்கு ஏற்ப ஆடியது. அவர் அதிகம் குடிக்கக்கூடியவரல்ல. அதிலும் கடந்த பல வருடங்களாக அனேகமாகக் குடியே இல்லை. என்ன ஆயிற்று என்று நினைத்துக்கொண்டான். ஷண்முகன் வருகிறானா என அப்பா அடிக்கடி கண்களைத் திறந்து பார்த்தார். ;டேய் நீ போய் அந்த ஷண்முகன் எங்கே நிற்கிறான் என்று பார்'

அவன் வெளியே சென்று நாலைந்து பெட்டிகள் வரை சென்று பார்த்தான். ஷண்முகன் இல்லை. திரும்பிவந்து காணவில்லை என்று சொன்னபோது அப்பா அதிருப்தியுடன் முகம்சுளித்தார்.

அரைமணிநேரத்துக்குள் ஷண்முகன் வந்துவிட்டார். கையில் ஒரு ஸ்காட்ச் புட்டி இருந்தது. அப்பா அதைக்கண்டதும் வேறு எதையுமே நினைக்காமல் அப்படியே பாய்ந்தெழுந்து வாங்கி விழுவதுபோல இருக்கையில் அமர்ந்து புட்டியைத்திறந்து நேரடியாக வாய்க்குள் விட்டுக்கொண்டு குடித்தார்.

ஷண்முகன் 'நான் மிக்ஸ் செய்து தருகிறேன் சார்' என்றார்.

அப்பா வேண்டாம் என்று கைகாட்டினார். மீண்டும் குடித்தார். அரைக்குப்பி வரை குடித்தபின் இருமுறை உடம்பை உலுக்கியபடி அமைதியானார். முன்வழுக்கைத்தலையில் மெலிதாக வியர்வை படர்ந்தது. குப்பியை மூடி அவனிடம் கொடுத்தார்

ஷண்முகன் 'பட்டாளத்துக்காரங்க கிட்ட ரம் இருக்கும்...அதைத்தேடித்தான் போனேன்...ஆனால் இது கிடைத்தது...'

அப்பா அப்போதுதான் அது ஸ்காட்ச் என்பதை உணர்ந்தார். 'எங்கே கிடைத்தது?'

'ஒரு பார்ட்டி எச் ஃபோரில் இருக்கிறது சார்... அவர்கள் குடிப்பதை அப்போதே பார்த்துவிட்டேன். உங்களுக்கு என்று சொன்னேன். கொடுத்துவிட்டார்கள். அவர்களில் ஒருவர் வயதானவர். கதகளி ஆடக்கூடியவர்

அப்பாவின் கண்கள் சுருங்கின. ‘கதகளி ஆடக்கூடியவரா?’

‘ஆமாம்…’

‘பெயர் என்ன சொன்னார்?’

‘தெரியவில்லை’

‘போய்ப்பார்த்துவிட்டு வா’

ஷண்முகன் தயங்கிவிட்டு சென்றார். உடனே வந்து ‘சதனம் ராமன் நாயர் என்று போட்டிருக்கிறது’

அதை கேட்பதற்குள் அப்பா எழுந்துவிட்டார். அதற்குள் அவருக்கு போதை ஏற ஆரம்பித்திருந்தது. அவரால் நிற்கமுடியவில்லை. மேல் பெர்த்தைப்பிடித்துக்கொண்டு தள்ளாடியபின் அமர்ந்துகொண்டார். வாந்திஎடுப்பவர் போல இருமுறை குமட்டினார். தலையை இல்லை இல்லை என்று அசைத்தார். பின்பு நிமிர்ந்தபோது உடம்புமுழுக்க வியர்வையால் நனைந்திருந்தது. வழுக்கையில் வியர்வைத்துளிகள் வழிந்தன

‘சதனம் ராமன் நாயரா?’ என்று அப்பா மீண்டும் கேட்டார்.

‘ஆமாம்’

அப்பா கும்பிடுவதுபோலக் கையை மார்பின் மீது வைத்தார். தலை முன்னால் சரிந்தது. ‘குருசான்னித்தியம்’ என்றார். மெல்லிய கேவல்போல ஓர் ஒலி அவரிடமிருந்து வந்தது.

‘டேய் பிடிடா’ என்றார் அப்பா.

அவன் பிடிப்பதற்குள் ஷண்முகன் அவரைத் தாங்கிக்கொண்டான்.

நீளமான இடைநாழி கிலோமீட்டர்கணக்கில் சென்றுகொண்டே இருப்பதுபோலத் தோன்றியது. அப்பா இரும்புச்சுவரையும் கம்பிகளையும் பிடித்துக்கொண்டு ஆங்காங்கே நின்று ஆடிக்கொண்டே வேட்டியைத் திரும்பக்கட்டினார். தலை நன்றாகவே துவண்டது. ஒரு இடத்தில் கால்கள் தளர்ந்து அமரப்போனார்.

அவனுக்கு பயம் வந்தது. அப்பா என்ன செய்யப்போகிறார் என்று அவனால் ஊகிக்க முடியவில்லை. சதனம் ராமன் நாயர் மிக ஆசாரமானவர் என்று கேள்விப்பட்டிருக்கிறான். அவரது பல கதகளி நிகழ்ச்சிகளுக்கு அப்பாவுடன்

அவனும் போனதுண்டு. ஆட்டத்துக்குப்பின் அப்பா அணியறைக்குச் சென்று வேடம் கலைத்துக்கொண்டிருக்கும் சதனம் ராமன் நாயருக்கு சற்றுத்தள்ளி சுவர் ஓரமாகக் கைகளைக் கட்டிக்கொண்டு நிற்பார்.

வேடத்துக்குள்ளிருந்து வெளிவரும் சதனம் ராமன் நாயர் பூவுக்குள்ளிருந்து வெளிவரும் வண்டுபோலத் தோன்றுவார். கனவிலிருந்து விழித்தெழுவதுபோன்ற கண்கள். ஒப்பனைக்காரர் தலையிலிருந்து கிரீடத்தை அகற்றியபின் முகத்திலிருந்து சுட்டியை மெல்ல உரித்தெடுக்கையில் அவரது தோல்களையே களைவதுபோலிருக்கும். அதன்பின் பஞ்சினால் சாயத்தைத் தேய்த்துத்தேய்த்தெடுப்பார்கள். அவர் எங்கோ நினைப்புக்கு அப்பாற்பட்ட புராணகாலத்தில் இருந்து நழுவிநழுவி விழுந்து வந்துகொண்டே இருப்பார். பசுவைப்பிளந்து கன்று சலமும்நீருமாக வந்து தொழுவத்தில் கிடப்பதுபோல. 'ம்' என்பார். அப்பா 'பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்' 'இருந்தாய் இல்லையா?' 'ஆமாம்' அவ்வளவுதான். அதற்குமேல் பேச்சு இல்லை. ஒருமுறைகூட கதகளியைப்பற்றி அல்லது நடிப்பைப்பற்றிப் பேசிக்கேட்டது இல்லை.

கூபேக்குள் சதனம் ராமன் நாயர் இருக்கையில் கம்பிளி விரித்துப் படுத்திருந்தார். ஒரு சீடன் எதையோ வாசிக்க கண்மூடிக் கேட்டுக்கொண்டிருந்தார். அப்பா ஆவேசமாகக் கூபே கதவை முழுக்கத்திறந்து உள்ளே சென்றார். சதனம் ராமன் நாயர் திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தார்.

அப்பா நடுநடுங்கியபடி அங்கேயே நின்றார். தலை ஒருபக்கமாக சரிந்து ஆடியது. பற்களைக் கிட்டிப்பதுபோலக் கடித்தபோது கழுத்து நரம்பு புடைத்துப்புடைத்துவந்தது.

'ம்ம்?' என்றபின் சதனம் ராமன் நாயர் எச்சிலை அங்கிருந்த கோளாம்பியில் துப்பி 'வா' என்றார்

அப்பா சட்டென்று அப்படியே முன்னால் சரிந்து விழுந்தார். சீடன் திடுக்கிட்டு எழுந்துவிட்டான். அப்பா இரு கைகளையும் நீட்டிக் சதனம் ராமன் நாயர் கால்களைப்பிடித்துக்கொண்டார்

'என்ன இது?சேச்சே ' என்றார் சதனம் ராமன் நாயர்

ஷண்முகன் 'கொஞ்சம் அதிகமாகப்போய்விட்டது' என்றான்

சதனம் ராமன் நாயர் சட்டென்று நிமிர்ந்து ஷண்முகனைப்பார்த்தார். ஒருகணம் சிவந்த பெரியகண்களில் அசுரபாவம் எரிந்து அணைந்தது.

அப்பா தலையைத் தரையில் முட்டி 'மன்னிக்கவேண்டும் மன்னிக்கவேண்டும்' என்று சொல்லிக்கொண்டிருந்தார்

தூக்கு என நாயர் சைகை காட்டினார். சீடனும்,ஷண்முகனும் அப்பாவைப்பிடித்துத் தூக்கினார்கள். சதனம் ராமன் நாயர்அப்பாவின் தலையை மெதுவாகத் தொட்டார்

கொண்டு போகச்சொல்லி நாயர் சைகை காட்டினார். எழுந்தபோது வேட்டி அவிழ்ந்தது. அதைக் கட்டிக்கொண்டு கதவைப்பிடித்துக்கொண்டு நின்றார். முகத்தில் இருந்தது திரைசரியும்நேரத்து மாபெரும் சாந்தம்

அப்பா 'மன்னிக்கவேண்டும்...மன்னிக்கவேண்டும்' என்று சொல்லிக்கொண்டே தலையை ஆட்டினார்

அவர்கள் அப்பாவை மெல்ல இழுத்தும் தூக்கியும் கொண்டு சென்றார்கள். அவன் பின்னால் சென்றான். கூபே வாசலுக்குச் சென்றதும் அப்பா சட்டென்று அவர்களை உதறிவிட்டுக் கதவை தடாலெனத் திறந்து உள்ளே சென்றார். அங்குமிங்கும் பார்த்துவிட்டுக் குனிந்து இருக்கைக்கு அடியிலிருந்து பெரியபெட்டியை இழுத்துத் திறந்தார். உள்ளே எதையோ தேடினார்

அவன் அவர்களிடம் நீங்கள் போகலாம் என்று சைகையால் சொன்னான். கூபேயைத் தாண்டிச்சென்ற ஒரு பெண்மணி சந்தேகத்துடன் பார்த்துக்கொண்டு சென்றாள். அவர்கள் உதடு அசைத்து வருகிறேன் என்று சொல்லி திரும்பிச்சென்றார்கள்.

அப்பா கறுப்புப்பெட்டியைத் தள்ளி விட்டு சிவப்புப் பெட்டியைத் திறந்தார். அதற்குள் அவருக்குக் கிடைத்த பத்மஸ்ரீயின் தங்கப்பதக்கம் இருந்தது அதை அவர் உருவி எடுத்தபோது அவரது சந்தனநிற ஜிப்பாவும் கூட வந்தது. அப்பா எழுந்து அந்த ஜிப்பாவை மிதித்தபடி நடந்து அதைத் தூக்கி இடைநாழியில் வீசினார். அவன் நின்றதை அவர் பார்க்கவில்லை என்று தோன்றியது. அப்பா கதவை வலுவாக இழுத்து மூடிக்கொண்டார்

அவன் சில கணங்கள் அசையாமல் நின்றான். பின்பு மெல்ல அந்தப் பதக்கத்தைக் கையில் எடுத்துக்கொண்டான்.கதவருகே சாய்ந்துகொண்டு நின்றான். ரயிலின் சீரான ஓசையை உடலால் கேட்டுக்கொண்டிருந்தான்.

பக்கத்து கூபே திறந்து ஒரு வழுக்கையான வெண்ணிற மனிதர் பைஜாமாவும் குர்த்தாவுமாக வெளிவந்தார். அவனைத் தாண்டிச்சென்றபோது யூடிகொலோன் மணம் வந்தது. பின் திரும்பிச் செல்லும்போது அவன் கையில் இருந்த பதக்கத்தை அவர் பார்த்துக்கொண்டு சென்றார்

அப்பா உள்ளே படுத்துக்கொண்டாரா ? எந்தச் சத்தமும் கேட்கவில்லை. அவன் கதவைத் தட்டுவதற்காக மெல்லத் தொட்டான். கதவு தாழிடப்படவில்லை என்று தெரிந்தது. மெல்லக் கதவைத் தள்ளினான். மிகமெல்லத் தள்ளியபோதும்கூட கிரீச் சத்தம் எழுந்தது.

அவன் உள்ளே சென்றபோது அப்பா ஏறிட்டுப்பார்த்தார். ஒரு புருவம் மட்டும் 'என்ன?' என மேலேறியது. அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவன் தன்னை அறியாமல் அந்தப்பதக்கத்தை முன்னால் நீட்டிக் காட்டினான்

அப்பா சற்றுத் திடுக்கிட்டவர் போலப் பார்த்தார். ஒரு கையை ஊன்றி எழுந்து அதேகையால் மேல் படுக்கையின் விளிம்பைப் பிடித்தபடி நின்றார். நிமிர்ந்து தலையைத் தூக்கி இரண்டடி முன்னால் வந்து இரு கைகளையும் நீட்டி அவனிடமிருந்து அந்தப் பதக்கத்தைப்பெற்றுக்கொண்டார்.

**********